# சர்வகக்ஷி மகாநாடு

## 1928.

இந்தியாவின் அரசியல் நியமங்களை
நிர்ணயம் செய்வதற்காக
மகாநாடு நியமனம் செய்த
கமிட்டியின் யாதர்ஸ்தும்,
லட்சுமணபுரி மகாநாட்டு நடவடிக்கைகளின்
ஸங்கிரகமும்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின்
பொதுக் காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது.

# பொருளடக்கம்.

தலைவருக்குக் கடிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பக்கம். |
| பூர்வபீடிகை | ... | ... | ... | 1 |

யாதாஸ்து

| | | | | |
|---|---|---|---|---|
| I. கமிட்டி நியமனம் | ... | ... | ... | 19 |
| II. வகுப்புப் பிரச்சினை | | ... | ... | 31 |
| III. வகுப்புப் பிரச்சினை (தொடர்ச்சி) | | ... | ... | 39 |
| IV. மாகாணங்களின் மறுபிரிவினை | | ... | ... | 77 |
| V. சுதேச சமஸ்தானங்களும் அன்னிய ராஜ்ய சம்பந்தமும் | | ... | ... | 89 |
| VI. இதர பிரேரணைகள் | | ... | ... | 113 |
| VII. சிபார்சுகள் | ... | ... | ... | 129 |

VIII. தலைவர்கள் மகாநாட்டைப் பற்றிய குறிப்பு.

IX. ஷெட்யூல் I. மத்திய கவர்ன்மெண்டு இலாகாக்கள்

X. ஷெட்யூல் II. மாகாண கவர்ன்மெண்டு இலாகாக்கள்

அநுபந்தங்கள்

ஏ. அநுபந்தம்: பஞ்சாப் ஜனத்தொகை விவரங்கள்

பி. அநுபந்தம்: வங்காள ஜனத்தொகை விவரங்கள்

ஸி. அநுபந்தம்: வங்காள ஜில்லா போர்டு தேர்தல் முடிவு விவரங்கள்

சர்வகக்ஷி மகாநாடு

லக்ஷ்மணபுரி நடவடிக்கைகளின் ஸங்கிரகம்.

## திருத்தம்.

இந்தப் புத்தகத்தின் 71, 75, 117, 118, 119, 120-ம் பக்கங்களில் "18 வயதுக்கு மேற்பட்ட" என்றிருக்குமிடங்களில் "21 வயதுக்கு மேற்பட்ட" என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

சர்வ கட்சி மகாநாட்டின் அக்கிராஸனாதிபதி

## டாக்டர் எம். ஏ. அன்ஸாரி

அவர்களுக்கு

அன்பார்ந்த அக்கிராஸனாதிபதி அவர்களே,

இந்தியாவின் அரசியல் அமைப்பை என்ன நியமங்களின் மேல் நிர்ணயிக்க வேண்டுமென்று யோசனை செய்து தீர்மானம் செய்யும்படி 1928ஹு மே மாதம் 19-ந்தேதி யன்று பம்பாயில் சர்வ கட்சி மகாநாட்டால் நியமிக்கப் பட்ட கமிட்டியின் யாதாஸ்தை நான் தங்களுக்கு சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன். இந்த யாதாஸ்தை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டு விட்டதற்கு வருந்துகிறேன். தாமதத்திற்குக் காரணங்கள் தங்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டன. யாதாஸ்தை அனுப்பவேண்டிய காலத்தைத் தாங்கள் தயவுசெய்து விஸ்தரித்துக் கொடுத்தீர்கள்.

தங்கள் அன்புள்ள,

மோதிலால் நேரு.

கமிட்டியின் தலைவர்.

அலகாபாத்,
1928ஹு ஆகஸ்டுமீ 10௳

# பூர்வ பீடிகை.

## எங்களுக்கிடப்பட்ட கட்டளை.

ஸர்வகட்சி மகாநாட்டால் நாங்கள் நியமிக்கப்பட்டோம். ஆகையால் இந்த யாதாஸ்தை அந்த மகாநாட்டிற்குச் சமர்ப்பிக்கிறோம். ஆரம்பத்திலேயே ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்த விரும்புகிறோம். அதாவது பூரா ஜவாப்தாரியான அரசியலை ஸ்தாபிக்கிறதற்கு ஒரு முறையைத் தயார் செய்யும்படி எங்களுக்குக் கட்டளை இடப்பட்டது. சுய ஆட்சி அதிகாரம் செலுத்தும் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் அனுஷ்டானத்திலுள்ள அரசியல் முறையைப் பின்பற்றி இந்திய அரசியல் முறையைத் தயார் செய்யும்படி எங்களுக்குக் கட்டளையிடப்பட்டதாக நாங்கள் அருத்தஞ்செய்து கொண்டதற்குக் காரணங்களைத் தனியாக ஒரு அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறோம். "ஜவாப்தாரியான அரசியல்", "குடியேற்ற நாட்டு அரசியல" என்பன ஒன்றென்றே நாங்கள் வைத்துக்கொண்டு இந்த யாதாஸ்தை எழுதியிருக்கிறோம். அவைகளுக்குள் வித்தியாசமிருப்பதாக நாங்கள் கருதவில்லை. ஜவாப்தாரியான அரசியல் முறை ஸ்தாபிக்கப்பட இந்தியா தகுதியுடையது அல்லது பாத்யமுடையதென்று வாதிக்கும்படி எங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப் படவில்லை; ஏனெனில் ஸர்வகட்சி மகாநாடு சம்பந்தப்பட்டமட்டில் அப்படி வாதம் செய்யவேண்டிய அவசியமில்லை. மகாநாட்டில் கூடியிருந்த ராஜீயக் கட்சியினர்களில் சிலர் பூரா சுவாதீனம் பெற்றுவிட வேண்டுமென்ற உயர்ந்த கருத்துள்ளவர்கள். ஆனால் பூராக் குடியேற்ற நாட்டு அரசியல் முறைக்குக் குறைவான எந்த முறையாலும் திருப்தியடையக்கூடிய கட்சியினர் எவரும் மகாநாட்டிலில்லை. பல தேசங்களின் சங்கமாகிய ப்ரிட்டிஷ் சம்ராஜ்யத்தில் ஒரு உறுப்பின் அந்தஸ்தை இந்தியா அடையவேண்டுமென்பதைப்பற்றி இந்திய ராஜீய கட்சிகளுக்குள் அபிப்ராயபேதமேயில்லை. இந்தியாவின் அந்தஸ்து கானடா, ஆஸ்டிரேலியா, தென் ஆபிரிக்கா, சுவாதீன அயர்லாந்து முதலிய தேசங்களின் அந்தஸ்துக்குக் குறைந்ததாக இருக்கக்கூடாதென்பதே இந்திய ராஜீயக்கட்சிகள் எல்லாவற்றாலும்

ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை. குடியேற்ற நாட்டு அந்தஸ்து வெகுகாலமான பிறகே இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய தென்று நினைப்போரேயில்லை. அடுத்தபடியாக அந்த அந்தஸ்து கிடைக்க வேண்டு மென்பதே பொது அபிப்பிராயம். ஆகையால் நாங்கள் செய்யப்போகிற சிபார்சுகளுக்கு நியாயங்கூற வேண்டியது அவசிய மில்லை.

## குதர்க்க வாதம்.

இந்தியாவில் எவ்வித ஜவாப்தாரியான முறையேனும் ஸ்தாபிக் கப்படக்கூடியதைத் தடுக்கவோ அல்லது தாமதப்படுத்தவோ உத்தே சங்கொண்டு உத்தியோகஸ்தர்களின் கோஷ்டிகள் சில குதர்க்க வாதங்களைக் கிளப்பி விட்டிருக்கின்றனர். இந்த வாதங்களை வேறு ரூபத்துடன் வேறு கோஷ்டிகள் சொல்லக்கூடும். ஆகை யால் அந்தக் குதர்க்க வாதங்களை முதலிலேயே அடித்துப்போட வேண்டு மென்று நாங்கள் கருதுகிறோம். இந்தக் குதர்க்க வாதங் களை முதலில் சுருக்கமாகச் சொல்லி விடுகிறோம்.—

1. ஜவாப்தாரியான ஆட்சி என்பது குடியேற்ற நாட்டு அரசி யல் முறை என்று பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஜவாப்தாரியான ஆட்சி குடியேற்ற நாட்டு அரசியலுக்குக் குறைந்த தாக இருக்கலாம்.

2. குடியேற்ற நாட்டு அரசியல் முறையை இந்தியாவில் ஏற் படுத்துவதாகப் பார்லிமெண்டு ஒப்புக் கொண்டதில்லை.

3. ஜனத்தொகையில் சிறு பான்மையோராக இருக்கிற வகுப்பு களைப் பற்றிய பிரச்சினையும், பூரா ஜவாப்தாரியான ஆட்சிக்கு இன்றி யமையாததான சமுதாய வாழ்வில்லாமையும் ஜவாப்தாரியான அர சியல் முறையைத் தடுக்கின்றன.

4. இந்தியர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சக்தி யற்ற வர்கள்.

5. சுதேச மன்னர்களால் ஆளப்படும் சமஸ்தானங்களைப் பற் றிய பிரச்சினை முடிவாக வில்லை.

6. ஐரோப்பிய வியாபார கோஷ்டிகளும் ஐரோப்பிய உத்தி யோக வருக்கங்களும் கவலைப்படுகின்றன.

## குடியேற்ற நாட்டு அந்தஸ்து.

ராஜாங்க அமைப்பைப் பற்றிய பாஷையில் "குடியேற்றநாட்டு அந்தஸ்து" என்பது எல்லோருக்கும் சந்தேகமறப் பொருள் தெரிந்த சொல் தொடரே. அது என்ன என்று சந்தேகமற வர்ணிப்பது சிரமமாக இருக்கலாம். ஆனால் குடியேற்ற நாடுகளில் அனுஷ்டானத்திலுள்ள ராஜீய ஸ்தாபனங்களின் சரித்திரங்களை அறிந்தவர்களுக்குக் "குடியேற்ற நாட்டு அந்தஸ்து" என்பது நன்ருகத் தெரிந்த விஷயமே.

1926-ம் வருஷத்தில் நடந்த ஏகாதிபத்ய மகாநாட்டில் இங்கிலாந்தும் குடியேற்ற நாடுகளுமாகிய சுயஆட்சி தேசங்களின் நிலைமை என்ன என்று பின் வருமாறு தெளிவாக வர்ணிக்கப்பட்டது.— "ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அவை சுயஆட்சி செலுத்தும் தேசங்கள். அந்தஸ்தில் ஒன்றுக்கொன்று சமமானவை. அவைகளுடைய உள்நாட்டு விஷயங்களிலும் அன்னிய நாட்டு சம்பந்தங்களிலும் ஒன்று மற்றொன்றுக்கு அடங்கியதல்ல. ஆயினும் அவை யெல்லாம் ஒன்றுபோல் அரசருக்குக் கட்டுப்பட்டவை. ப்ரிட்டிஷ் சமராஜ்யத்தின் அங்கத்தினர்கள் என்ற முறையில் அவை ஒன்றோடொன்று சம்பந்தமுடையவை" (என்று ஆசிரியர் கீத் ஜவாப்தாரியான ஆட்சி என்று தாம் எழுதிய புஸ்தகத்தில் எடுத்துக் காட்டியிருக்கிருர்.)

ப்ரிட்டிஷ் சமராஜ்ய அங்கத்தினர்களாகிய தேசங்களின் அந்தஸ்தைப் ப்ரிட்டிஷ் ஏகாதிபத்ய மகாநாடு வர்ணித்தபடி எடுத்துக் கூறியிருக்கிற மகா வித்வானுகிய ஆசிரியர் கீத் இந்த வர்ணனையானது மகாநாட்டின் கருத்தை விளக்குகிறதாயினும், உள்ள நிலைமையை உள்ளபடி தெரியப்படுத்தினதல்லவென்று சொல்லியிருக்கிருர். மகாநாட்டின் கருத்தை நாமும் எடுத்துக் கொள்வோம். குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அஸ்திவாரமாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட அரசியல் முறையை அநுஷ்டிக்கையில் ப்ரிட்டிஷ் சமராஜ்யத்தில் அடங்கியுள்ள மற்ற தேசங்களுடைய சம்பந்தத்தால் ஏதேனும் சிரமங்கள் ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட சிரமங்கள் மற்ற தேசங்களிலும் ஏற்படின் என்ன ராஜீய செல்வாக்குகளுக்குட்பட்டு அவைகள் சமாளிக்கப்படுமோ அப்படியே இந்தியா விஷயத்திலும் சமாளிக்கப் படட்டும்.

## ஜவாப்தாரியான ஆட்சி.

எல்லாக் குடியேற்ற நாடுகளின் அரசியலிலும் பொதுவாக உள்ள அம்சம் என்னவெனில், அவைகள் எல்லாம் ஜவாப்தாரியான ஆட்சியைப் பெற்றிருக்கின்றன. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களையே உடைய சட்ட சபைக்கு நிர்வாக கவர்ன்மெண்டு ஜவாப்தாரியாக இருக்கிறது. ஒவ்வொரு குடியேற்ற நாட்டின் சுய அதிகாரமும் வல்லமையும் இந்த முறையினாலேயே வெளிப்பட்டிருக்கிறது.

"ஜவாப்தாரியான ஆட்சி" என்ற சொல் தொடருக்கு வேறு விதமாக அர்த்தம் எங்கேயும் சொல்லப்பட்டிருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை; எங்கு அரசியலானது ஏகேச்சாதிகார முள்ளது என்று ஒப்புகொள்ளப் பட்டிருக்கிறதோ அங்குதான் சட்ட சபையானது நிர்வாக கவர்ன்மெண்டுக்குக் கீழ்ப்பட்டதாக இருக்கிறது; அதாவது சட்ட சபையின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் பட்டு அதற்கு விலங்குகள் போடப்பட்டிருக்கின்றன.

## 1917-ம் வருஷத்திய விளம்பரம்.

ஆனல் 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பார்லிமெண்டு வெளியிட்ட விளம்பரமானது "இந்தியாவில் ஜவாப்தாரியான ஆட்சி படிப்படியாக சித்திக்கும்படி செய்வதற்காக சுய ஆட்சி ஸ்தாபனங்கள் படிப்படியாக விருத்தி செய்யப்பட வேண்டு" மென்றுதான் சொல்லியது என்றும், இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் பூர்வ பீடிகையில் அந்த வாக்கியமே உபயோகப் படுத்தப்பட்டிருப்பதாகவும் எதிர்க் கக்ஷிபார் வாதிக்கிறார்கள். நம்மில் காங்கிரஸ் மகா சபையைச் சேர்ந்தவர்களாக வுள்ளவர்கள் அந்த வாக்கியத்தை ஒப்புக்கொண்டு கட்டுப்பட்டதில்லை; இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் பூர்வ பீடிகையை ஒப்புக்கொண்டவர்களாக நம்மில் இருப்பவர்களும் 1917-19-ம் வருஷங்களில் பார்லிமெண்டும், ப்ரிட்டிஷ் ராஜதந்திரிகளும் மனதில் ஒரு கருத்தை ஒளித்து வைத்துக்கொண்டு பேசினதாக நினைக்கக்கூடவில்லை; குடியேற்ற நாட்டு அந்தஸ்தை இந்தியாவுக்குப் பிறகு மறுக்க வேண்டிய உத்தேசத்துடன் பார்லிமெண்டும் ராஜ தந்திரிகளும் வார்த்தைகளைப் பொறுக்கி உபயோகப் படுத்தியதாகவும் நாங்கள் நினைக்கக் கூடவில்லை.

இந்தியாகவர்ண்மெண்டின் உள் நாட்டு அங்கத்தினராக விருந்த ஸர் மால்கம் ஹெய்லி 1924-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 8-ந் தேதி யன்று இந்தியா சட்டசபையில் பேசியபோது வெளியிட்ட கருத்தை இங்கு ஆராய்வோம்.—“ குடியேற்ற நாட்டுப் பூரா சுய ஆக்ஷி என்பது என்னவென்று கவனிப்போமாயின், அது விசாலமான பொருள் கொடுப்பது விளங்கும். நிர்வாக கவர்ன்மெண்டு சட்ட சபைக்கு ஜவாப்தாரியானதென்று அது பொருள் கொடுப்பதுடன், சட்டசபை பூரா அதிகாரமுடையதாக விருக்குமென்றும் பொருள் கொடுக்கும். இக்காலத்திய குடியேற்ற நாட்டு அரசியலில் இது முக்கியமான அம்சம். ஜவாப்தாரியான ஆட்சிக்கும் பூராக் குடியேற்ற நாட்டு சுய ஆட்சிக்கும் சிறிது வித்தியாச மிருப்பதாக நான் சொல்லுகிறேன் ; ஏனெனில் அதிகாரம் சிறிது மட்டுப்படுத்தப்பட்ட சட்ட சபைகள் ஜவாப்தாரியான ஆட்சிக்குப் பொருந்தாதவையல்ல. ஜவாப்தாரியான ஆட்சி குடியேற்ற நாட்டுப் பூரா சுய ஆட்சியில் கொண்டு போய் விடலாம்; அது மாத்திரமல்ல. ஜவாப்தாரியான ஆட்சி பூராக் குடியேற்ற நாட்டுச் சுய ஆட்சியில் கொண்டு போய்த்தான் விடுமென்றும் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அது பிறகு அல்லது கடைசியில் நடைபெறவேண்டிய காரியமேயாகும்,” என்று ஸர் மால்கம் ஹெய்லி பேசினர். இந்தியாவிலுள்ள உத்யோகஸ்தர்களுடைய கோஷ்டிகளின் யோசனை புதியதோர்வழியில் போவதை அவருடைய பேச்சு காட்டுகிறது. இந்தப்பாடத்தைப் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் சிலர் பிறகு ஒப்புவித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் பத்திரிகைகளிலும் சில பிரபலஸ்தர்கள் இம்மாதிரி எழுதி யிருக்கிறார்கள். இந்திய அதிகாரி வர்க்கத்தினர்களில் பென்ஷன் பெற்றுக்கொண்டு விலகினவர்கள் இந்தக்கருத்தை நிரூபணம் செய்து புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்தியா சட்டசபை அங்கத்தினர்கள் இந்த வியாக்கியானத்தை உடனேயே மறுத்துவிட்டார்கள்.

## ஜவாப்தாரியான ஆட்சிக்கும் குடியேற்ற நாட்டு ஆட்சிக்கும் வித்தியாசமில்லை.

ஜவாப்தாரியான ஆட்சிக்கும் குடியேற்ற நாட்டு ஆட்சிக்கும் இப்பொழுது கற்பிக்கப்படும் வித்தியாசம் 1917-ல் அல்லது 1919-ம் வருஷத்தில் சொல்லப்படவில்லை. ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவுக்கு வாக்குக்கொடுத்தது குடியேற்ற நாட்டு ஆட்சிக்குக் [illegible]ற

வானதென்ற கருத்துடன் 1917-ம் வருஷ ஆகஸ்டு மாத விளம்பரத்தை ஒப்புக்கொள்ளும்படி இந்தியா கேட்கப்படவுமில்லை. அதாவது மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமுடைய சட்ட சபை ஜவாப்தாரியான ஆட்சியின் முக்கிய அம்சமாக விருக்கு மென்று அப்பொழுது சொல்லப்படவேயில்லை. ப்ரிட்டிஷ் ராஜதந்திரிகள் உத்தேசித்தது அதுதான் என்று இப்பொழுது சொன்னால், மன திற்குள் ஒன்றை ஒளித்துக்கொண்டு இரு பொருள்படும்படி வேண்டு மென்று அவர்கள் பேசினார்கள் என்று ஏற்படும். அது உண்மை யானால், ப்ரிட்டிஷ் பார்லிமெண்டின் வாக்குறுதியை நம்பி இருந்திருக் கிறவர்களும் அந்த நம்பிக்கையை இழந்துவிடவேண்டியதுதான். இந்தியா குடியேற்ற நாட்டு அரசியல் முறையைப் பெறப்போவ தாகவே அவர்கள் நினைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். "நமது குடி யேற்ற நாடுகளில் இந்தியாவுக்குரிய அந்தஸ்தை அது அடைய வேண்டியதன் பொருட்டு" என்று அரசர்பெருமான் கவர்னர் ஜென ரலுக்குப் பிறப்பித்த ஆக்ஞைகளில் சொல்லியிருப்பது ஸர் மால்கம் ஹெய்லிக்குத் தெரிந்ததே. தம்முடைய வாதத்திற்கு அது பலம் கட்டும் என்ற உத்தேசத்துடன் அதை அவர் குறிப்பிட்டார். அரசர் பிறப்பித்த ஆக்ஞைகளிலிருந்து நாம் மேலே காட்டியுள்ள வாக்கியம் ஸர் மால்கம் ஹெய்லியின் வாதத்திற்கு ஆதாரவளிக்காத துடன், ப்ரிட்டிஷ் ராஜதந்திரிகள் 1917 அல்லது 1919-ம் வருஷத் தில் ஜவாப்தாரியான ஆட்சிக்கும் குடியேற்ற நாட்டு ஆட்சிக்கும் வித்தியாசம் கற்பிக்கவில்லை என்று விளக்குகிறது. ஸர் மால்கம் தான் 1924-ம் வருஷத்தில் இந்த வித்தியாசத்தைக் கற்பிக்க ஆரம் பித்தார்.

ஜவாப்தாரியான ஆட்சி என்பதற்கும் ஸர் மால்கம் ஹெய்லி சொல்லும் அர்த்தத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளமுடியாது. அப்ப டிப்பட்ட அரசியலைப்பெற சம்மதப்படவும் முடியாது.

## இந்தியாவின் நிலைமை.

ஜவாப்தாரியான சுய ஆட்சியை ஏற்படுத்தப் போகிறதாக ப்ரிட் டிஷ் கவர்ன்மெண்டார் சொன்ன உறுதிமொழிக்குத் தாராளமாய் பொருள் கொள்ளப்படுமென்று நாம் நினைக்கவேண்டும். இப்பொ ழுது அந்த உறுதிமொழிக்குச் சொல்லப்படும் பொருள் உண்மையா

னால், உறுதிமொழி கூறிபவர்களின் யோக்கியப் பொறுப்புக்கே பாதகமேற்படும். அந்தப் பொருளை இந்தியா ஒப்புக்கொள்ளமாட்டாது. எந்த நிலைமையில் பார்லிமெண்டு இந்த உறுதிமை மொழியைக் கூறியது, எந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலாக இந்த உறுதிமொழி கூறப்பட்டது என்பனவைகளை ஞாபகப்படுத்திக் கொண்டாலும், குடியேற்ற நாடுகளைப்போல் யுத்த சமாதான உடன்படிக்கையில் இந்தியாவும் கையெழுத்து செய்ததென்பதையும் குடியேற்ற நாடுகளைப்போல் அதுவும் ஸர்வ தேச சங்கத்தில் ஒரு அசல் அங்கத்தினராக இருந்து வருகிறதென்பதையும் ஞாபகப்படுத்திக் கொண்டாலும், ப்ரிட்டிஷ் சமராஜ்யத்தில் குடியேற்ற நாடுகளுக்குள்ள பதவியே இந்தியாவுக்கு முண்டென்று இங்கிலாந்து வாக்குறுதி கூறியிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. 1924-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டின் உள்நாட்டு மெம்பர் ஸர் மால்கம் ஹெய்லி கற்பித்த வித்தியாசத்தைக் கொண்டு இந்தியாவின் பாத்யத்தை மறுத்துவிட முடியாது. ஜவாப்தாரியான ஆட்சியில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமுடையதாக சட்டசபை இருக்கலாமென்று ஸர் மால்கம் ஹெய்லி சொன்னது உண்மையானால், குடியேற்ற நாட்டுச் சுய ஆட்சி ஜவாப்தாரியான ஆட்சியிலிருந்து வளரமுடியாது; சட்டசபைக்கு போடப்பட்ட நிர்ப்பந்தங்கள் ஒழிக்கப்பட்ட பிறகே குடியேற்ற நாட்டுச் சுய ஆட்சியாக அது வளரக்கூடும். இதெல்லாம் வீண்பேச்சு. இந்திப்போராட்டத்தையே இந்த வீண்பேச்சு பெருக்கும். அந்தப் போராட்டம் ஒழியும் வரையில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் கசப்பு பெருகும். அது ஒப்கிறவரையில் இந்தியர் சுய ஆட்சி முறையை அனுஷ்டானத்தில் கொண்டுவரவும், பொருளாதார நிலைமையை விருத்தி செய்யவும் உழைக்க முடியாது. ஸர் மால்கம் ஹெய்லியின் வியாக்கியானத்திற்கு விரோதமாக அரசரின் அறிக்கை இருப்பதைக் கவனிக்கவேண்டும். அது 1919-ம் வருஷம் டிசம்பர் மாதம் 23-ந்தேதியன்று பிறப்பிக்கப்பட்டது. "1919-ம் வருஷச் சட்டமானது பூரா ஜவாப்தாரியானஆட்சி இனிமேல் ஏற்பட வழிகாட்டுவதாக இருக்கிறதென்றும்" இந்தியாவின் காரியங்களை நடத்திவைக்கவும் அதன் நன்மைகளைப் பாதுகாக்கவும் இந்திய ஜனங்கள் உரிமையுடையவர்கள் என்றும் ராஜ சக்கரவர்த்தி சொல்லியிருக்கிறார்.

1920-ம் வருஷக் கோடியில் நடந்த இந்தியத் தேர்தல்களைப் பற்றி ஆசிரியர் கீத் எழுதியிருப்பதில் "குடியேற்ற நாடுகளுக்

குச் சமமான பதவியையும் இங்கிலாந்துக்குச் சமமான பதவியையும் பிரிட்டிஷ் சமாராஜ்யத்தில் இந்தியா அடையப்போகிற காலம் வரப் போகின்றதென்பதை இந்தத்தேர்தல்கள் குறிப்பிடுகின்றன'' என்று சொல்லி யிருக்கிறார். நாங்களும் அப்படியே அர்த்தம் கொள்ளு கிறோம். ஸர் ஹெய்லியின் வியாக்கியானம் பார்லிமெண்டு கம்பீரமாகச் சொன்ன உறுதி மொழியை அடித்துப் போடுவதாக இருக்கிறது. ஆகையால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகையால் (1) குடியேற்ற நாட்டு அரசியல் முறைக்குக் குறைந்த எந்த அரசியல் முறையும் இந்தியாவுக்குத்திருப்தி கொடாது என்பதும், (2) இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட வேண்டிய அரசியல் முறை சுய ஆட்சி நடத்தும் குடியேற்ற நாடுகளின் அரசியல் முறையைப் போன்றதாகவும் அதற்குக் குறைபாததாகவுமிருக்க வேண்டுமென்பதும் எல்லோருக்கும் சம்மத மென்று வைத்துக்கொண்டு ஒரு முறையை நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம்.

## ஆட்சேபங்கள்.

அப்படிப்பட்ட அரசியல் இந்தியாவில் நிலைத்திருக்க முடியாதென்று சொல்லப்படும் ஆட்சேபங்கள் எங்களுக்குத்தெரியும். ஓட்டு போடுவது இந்திய ஜனங்களின் சுபாவத்திற்குப் பொருந்தாதாம். ஜவாப்தாரியான ஆட்சி யன்னியிலேயே இந்தியா சுய ஆட்சி பெற முடியுமாம். இதனுடன் நம்முடைய எதிரிகள் நிற்கவில்லை. ஐரோப்பாவிலேயே இங்கிலாந்து தவிர வேறு எந்த தேசத்திலும் பார்லிமெண்டு அரசியல் முறை பலன் தரவில்லை என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படி அவர்கள் சொல்லுகிறார்க ளாயினும், ஏகதேசச் சாதிகாரத்தை ஒழித்துவிட்ட ஐரோப்பிய தேசம் எதுவும் ஏதோ ஒரு வகையான பார்லிமெண்டையுடைய முறையையே கைக்கொண்டிருக்கின்றது. இதாலியும் ருஷ்யாவும் ராஜீயப் பரீட்சையில் அதீதமான முறைகளைக் கைக்கொண்டவை. அவைகளின் முறையை நாம் பின்பற்ற வேண்டுமென்று நமது எதிரிகள் சொல்லக் கூடாது. ஐரோப்பாவே யல்லாமல், ஜப்பான், துருக்கி, பாரஸீகம் முதலிய கீழ்த்திசைத் தேசங்கள் கூட பார்லிமெண்டு முறையில் அரசியலை ஏற்படுத்தி யிருக்கின்றன. ஓட்டு போடுதல் இந்தியரின் சுபாவத்திற்குப் பொருத்தமில்லை என்றும் வைத்துக் கொள்வோம். அதற்குப் பதிலாக வேறு என்ன யோசனை சொல்லுகிறார்கள்? சில

விநோதமான யுக்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தியாவைத் துண்டு துண்டாகப் பிரித்து சுதேச சமஸ்தானங்கள் போல் ஒவ்வொன்றையும் ஒரு தனி ராஜ்யமாகச் செய்து விடலாமென்று ஒருவர் சொல்லியிருக்கிறார். ப்ரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுடைய கையிலிருந்தால் தான் பார்லிமெண்டு முறை பலன் தரக்கூடியதென்றும், அந்த முறையைக் கெடுத்து விடுவதைக் காட்டிலும் சுதேச சமஸ்தான முறையைக் கைக்கொள்வது சிலாக்யம் என்றும் ஸர் வால்டர் லாரென்ஸ் என்பவர் சொல்லியிருக்கிறார்.

## பிரிட்டிஷ் ஆட்சிக்கு சர்ம ஸ்லோகமா?

இம்மாதிரி குழப்பமான யோசனைகள் சொல்வதன் கருத்து இன்னதென்றே விளங்கவில்லை. இந்தியாவிலுள்ள சில மாகாணங்களையோ, அம்மாகாணங்களிலுள்ள சில பாகங்களையோ இந்திய மன்னர்கள் வசம் ஒப்படைத்துவிட வேண்டுமென்கிறார்களா? அல்லது பிரிட்டிஷ் இந்தியாவில் தங்களுக்கு வேண்டிய வகுப்புகளிலிருந்து ஒரு கோஷ்டி ராஜாக்களை சிருஷ்டிக்க உத்தேசமா? இந்தியாவுக்கேற்ற ராஜாங்க அமைப்பு இதுதானா? இந்திய மகா ஜனங்களின் விருப்பத்தையும், பார்லிமெண்டு கொடுத்துள்ள உறுதிமொழியையும், அனுசரித்ததாக அஃதிருக்கவேண்டியது அவசியமில்லையா? அப்படி இல்லையாயின், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அதையே சர்ம ஸ்லோகமாக எழுதி விடலாம்.

இன்னொரு விநோதமான யோசனை சில காலத்திற்குமுன் ஒரு கன்ஸர்வெடிவ் கட்சிப் பத்திரிகையால் சொல்லப்பட்டது. பழைய மொகலாய சக்கரவர்த்திகளின் சந்ததிகள் யாராவது எங்காவது அகப்பட்டால் அவர்களில் ஒருவரைப் பிடித்துவந்து டில்லி ராஜாவாகச் செய்துவிடலாமென்பது அப்பத்திரிகையின் யோசனை. இத்தகைய விளையாட்டு யோசனைகளை நாம் பொருட்படுத்தவேண்டியதே அனாவசியம்.

## இங்கிலாந்திலுள்ள சுகவாஸிகளின் யோசனை.

இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் பிரிட்டிஷாரும் இந்தியரும் பாகஸ்தர்கள் என்ற கருத்துடன் இங்கிலாந்திலுள்ள சில சுகவாஸிகளான மாஜி கவர்னர்கள் ஏதாவது சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

குறைந்த பட்சம் இந்தியாவில் பாதி உத்தியோகங்களை சாசுவதமாக பிரிட்டிஷாருக்கு ஒதுக்கி வைத்துவிட்டால் இவர்களுக்குத் திருப்தியாயிருக்கும். இவர்களுடைய அபிப்பிராயப்படி, இந்தியாவுக்கு வேண்டுவதெல்லாம் சொற்பந்தான். அதாவது (1) சட்டசபையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரிலிருந்து சில மந்திரிகளை நியமித்தல்; உத்தியோகஸ்தர்களைச் சட்ட சபைக்குப் ஜவாப்தாரியாக்காமல் அரசருக்கு நேரே ஜவாப்தாரியாக்கி, நியமனத்தையும் அரசரே செய்தல்; (2) மாகாணங்களில் சட்டசபைக்கு எதிரிடையாக மற்றொரு சபை அமைத்து, சட்டசபையின் காரியங்களை அது கவிழ்க்கவோ கண்டிக்கவோசெய்தல்; (3) இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பை இப்பொழுதுள்ளபடியே வைத்து விடுதல்; (4) மாகாண சட்டசபையிலுள்ளவர்கள் இந்தியா சட்ட சபையிலுள்ளவர்களை விட நல்ல ஜனப்பிரதிநிதிகள் என்று கருதி, இந்தியா சட்டசபை எவ்வித விஷமத்தனமான வேலையும்செய்ய முடியாதபடி அதன்பல்லைத் தட்டிவிடுதல்; இவை தான் இக்கனவான்கள் சொல்லும் யோசனைகளாகும். ஆனால் ஜவாப்தாரியான ஆட்சிக்கும் இந்த யோசனைகளுக்கும் வெகுதூரம் என்பதுதான் எங்கள் அபிப்பிராயம்.

## த்ருசங்கு ஸ்வர்க்கம் வேண்டாம்.

இந்தியாவில் பூரண ஜவாப்தாரியான ஆட்சி ஏற்படுத்துவதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருப்பதாகக் கூறக்கூடும். ஆனாலும், இப்பொழுது தாண்டவமாடுகிற இரண்டுங் கெட்டான் ஆட்சி முறைக்கும் உண்மையான ஜவாப்தாரியான ஆட்சிக்கும் பாதி வழியென்று சொல்லக்கூடிய ஒரு முறை கிடையாது. அது த்ரிசங்கு ஸ்வர்க்கமாகவே யிருக்கும். நிர்வாகத்தை யார் நடத்துகிறார்கள் அல்லது கவர்ன்மெண்டு இயந்திரத்தை ஓட்டுகிறவர் யார் என்பதைப் பற்றிக் கவலைப்படுவதை விட, எந்தக் கொள்கையின் பேரில் வருங்கால ஆட்சிமுறையை நிர்ணயிப்பது என்பது தான் முக்கியமான பிரச்னை. ராஜப் பிரதிநிதி நிர்வாக சபை மெம்பர்கள் எல்லாரும் இந்தியர்களாயிருந்து, மாகாணங்களிலும் இந்தியரே அதிகாரி வர்க்கத்தினராயிருந்தால் கூட பிரயோஜனமில்லை. இப்போதிருக்கும் வெள்ளை அதிகாரி வர்க்கத்துக்குப் பதிலாக ஒரு கறுப்பு அதிகாரிவர்க்கம் ஏற்படுவதால் அனுகூலமில்லை. இங்கிலாந்திலுள்ள ஜனங்களின் கையிலிருந்து இந்திய மக்களுக்கு ராஜீய அதிகாரமும் எல்லாப் பொறுப்பும் மாறவேண்டுமென்பது தான் நமது கோரிக்கை,

## இந்தியா மந்திரி.

தற்சமயம் இங்கிலாந்திலுள்ள பொது ஜனங்களுக்கு இந்தியாவைப் பற்றி ஒன்றும் தெரியாது. இந்தியாவைப்பற்றி நினைக்க அவர்களுக்கு சாவகாசமும் இல்லை. அவர்களால் பார்லிமெண்டுக் கனுப்பப்படுகிற பிரதிநிதிகளுக்கும் இந்தியாவைப்பற்றி ஒன்றுந்தெரியாது. இந்தியா மந்திரி எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்பது அவர்கள் நம்பிக்கை. இந்தியா மந்திரியோ நேரான அனுபோகம் இல்லாதவராயும், இந்தியா மந்திரி சபை அல்லது இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவராயும் இருக்கிறார். முடிவில் பார்லிமெண்ட் ஆட்சி இந்தியா மந்திரி சபையின் ஆக்ஷிபாக மாறி விடுகிறது. இந்தக் கோஷ்டியின் ஆட்சி இந்தியாவுக்குப் பரம அனர்த்தமாக முடிகிறது. இந்தியா கவர்ன்மெண்டுக்குக் கூட ஸ்வாதீனமில்லாமல் இச் சபையார் செய்து விடுகிறார்கள். எனவே இப்போது முதலாகச் செய்ய வேண்டிய திருத்தம், இந்தியா மந்திரியின் கையிலிருந்து இந்தியா கவர்ன்மெண்டை விடுவிப்பதுதான். அப்படிச் செய்துவிட்டால் ராஜீய அதிகாரம் பிரிட்டிஷ் ஓட்டர்களின் கையிலிருந்து இந்திய ஓட்டர்களுக்கு மாற, ஏற்பாடு செய்தாகிவிடும். சுயமரியாதை உணர்ச்சியும் தேசாபிமானமும் அதிகமாகத் தோன்றியுள்ள இச் சமயத்தில் இந்தியர்களை வெகு தூரத்திலிருந்து ஒரு சிறு கோஷ்டியார் ஆட்டி வைப்பது அநாகரீகமான முறையாகும். அதை நெடுங்காலம் சகித்திருந்தாகி விட்டது. இனி இந்தியரின் கையில் ராஜீய ஆதிக்கம் வந்து, பூரா ஜவாப்தாரியான ஆட்சி ஏற்பட்டாலன்றி இந்தியர் திருப்தி யடைய மாட்டார்கள்.

## ஒரு சந்தேகம்.

குடியேற்ற நாட்டு சுய ஆட்சிமுறைக்கு ஸர் மால்கம் ஹெயிலி சொல்லியுள்ள ஆட்சேபங்கள்தான் முக்கியமானவை. பொதுவாக அந்த ஆட்சேபங்களையே நமது விரோதிகள் சொல்லி வருகிறார்கள். குடியேற்ற நாட்டு சுய ஆட்சி முறையை பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டும் ஸ்தாபிப்பதா அல்லது சுதேச சமஸ்தானங்களுக்கும் அது பொருந்துமாவென்பது ஸர் மால்கம் ஹெயிலியின் பிரதானமான கேள்வி. அதற்கு வேறொரு அத்தியாயத்தில் நாங்கள் சரியான விடையளித்திருக்கிறோம்.

## சிறுபான்மை சமூகங்கள்.

தொகையில் சிறுபான்மையாகவுள்ள சமூகத்தினருக்குப் பாது காப்பு வேண்டாமாவென்று ஸர் மால்கம் ஹெயிலி போன்றவர்கள் இன்னொரு கேள்வி கேட்கின்றனர். பிரஜைகளின் ஜீவாதாரமான சுதந்தரங்களைப்பற்றி எழுதும்போது இந்த அம்சத்தை நாங்கள் முக்கியமாக கவனித்திருக்கிறோம். சிறுபான்மையோருக்குத் தக்க பாதுகாப்பு அளித்திருக்கிறோம். சட்டசபைகளில் அவர்களுக்கு எப்படி பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக்கொடுப்பது என்பதைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறோம். யுத்தத்திற்குப் பிறகு பிறநாடு களில் இதேமாதிரி பிரச்சினை இருந்ததில்லையா? அதற்காக சுய ஆட்சி அந்த நாடுகளுக்கு மறுக்கப் பட்டதா? எங்களுடைய சிபார்சு கள் போதாவென்று ஸர்வகட்சி மகாநாட்டுக்குப் பட்டால் இன் னும் திறமையான ஏற்பாடுகளை இந்த விஷயத்தில் செய்து, தேசத் தின் சாசுவதமான நன்மைக்குக் கூடுமான ஏற்பாடுகள் செய்துவிடு வது நலம்.

## சமூக, ராஜீய நிலைமை.

சுய ஆட்சிக்குத் தகுதியான ராஜீய நிலைமையும் சமூக நிலைமை யும் இந்தியாவில் இருக்கின்றனவா வென்று ஸர் மால்கம் ஹெயிலி மற்றோர் கேள்வி கேட்கிறார். எல்லா மக்களும் படித்தவர்களாகும் வரையில் தேசம் சுய ஆட்சிக்குக் காத்திருக்கவேண்டுமென்று அவ ரும் சொல்லவில்லை. இங்கிலாந்தில் அவ்வாறு காத்திருக்கவில்லை என்பதை அவரே ஒப்புக்கொள்ளுகிறார். படித்தவர்களுக்கு மகா ஜனங்களிடையே விசேஷச் செல்வாக்கிருப்பதையும் அவர் ஒப்புக் கொள்ளுகிறார். ஆனால் சமூக ஆசார விஷயத்தில் போதிய அபி விருத்தி ஏற்படுமுன் ராஜீயத்துறையில் அபார அபிவிருத்தி ஏற்பட் டிருப்பதாக அவர் புகார் கூறுகிறார். நாங்கள் என்ன சொல்லுகிறோ மென்றால், இந்த அதிகாரி வர்க்கத்தினர்தான் அவ்விஷயத்தில் அசி ரத்தையா யிருந்திருக்கிறார்கள். ஜனநாயக ஆட்சி ஏற்பட்டிருந்தால் சமூக அபிவிருத்தி இவ்வளவு மோசமாக இருந்திராதென் பது நிச்சயம். இந்தியாவில் சமூக அபிவிருத்தி பலமாகி விட்டால் ராஜீயத்துறையிலும் இந்தியர் களுக்கு அதிக பலம் ஏற்பட்டு விடுமென்று அதிகார வர்க்கத்திற்குப் பயமுண்டு. சமூக ஆசாரத் திருத்த விஷயத்தில் பிரவேசித்தால் அன்னிய

ராகிய தங்களிடத்தில் ஜனங்களுக்கு வெறுப்பு ஏற்படுமென்ற மற்ருெரு பயமும் அவர்களுக்குண்டு. சமூக ஆசாரத்துறையில் அபிவிருத்தி ஏற்படவேண்டியது அவசரமும் அவசியமுமாகும். அதற்குத்தான் ஜவாப்தாரியான ஆட்சி வேண்டு மென்கிருேம். உண்மையான ராஜீய அதிகாரம் ஜனங்களின் கைக்கு வந்தாலன்றி சமூக மறு அமைப்பு சாத்தியமில்லே. எத்தனேயோ ஸ்தாபனங்கள் பல ஆண்டுகளாகப் படித்தவர்களால் நடத்தப்பட்டு, ஆசாரச் சீர் திருத்தத்திற்காக உழைத்துப் பயனுமடைந்திருக்கின்றன. கண்டனக் காரர்களின் கண்ணில் இதெல்லாம் படுவதில்லே. ஜவாப்தாரியான ஆட்சி ஏற்பட்டால் பாமரர் கல்வியிலும், தாழ்ந்தவர்களே உயர்த்துவதிலும், சமூக செல்வ நிலே அபிவிருத்தியிலும், கண்டிப்பாகக் கவனம் செலுத்தப்படும். தற்போது அரைகுறையான அதிகாரம் பெற்றுள்ள சட்டசபைகள் கூட ஆரம்பக் கல்வி போன்ற துறைகளில் எவ்வளவோ வேலே செய்திருக்கின்றன.

## ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும் வர்த்தகர்களும்.

ஐரோப்பிய வர்த்தகர்கள் இந்தியாவில் ஏராளமான முதல் போட்டு, தினே தினே தங்கள் வர்த்தகத்தைப் பெருக்கி வருகிருர்கள். அவர்களுக்கென்ன செய்வது என்றும், கவர்ன்மெண்டில் மாறுதலேற்படுவதா யிருந்தால் அது அவர்களுக்குத் தெரியவேண்டு மென்றும் சொல்லப்படுகிறது. அதேமாதிரி, உத்தியோகத்தில் இருக்கிற சிவில் ராணுவ உத்தியோகஸ்தர்கள் பலரும் கேட்கிருர்களாம். சட்ட சம்மதமான முறையில் இந்தியாவில் தொழில்செய்யும் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு விரோதமாக ஒருக்காலும் சட்டம் செய்யப்படமாட்டாது. பெருத்த மூலதனம் போடுவோர் இயற்கையாகத் தங்களுக்கேற்படக்கூடிய நஷ்டம் பொறுப்பு முதலியவற்றை ஏற்றுக்கொள்ளாமலும் முடியாது. முதலாளி தொழிலாளர் சச்சரவை சாசுவதமாய் எந்த கவர்ன்மெண்டும் இன்னும் தீர்த்து விடவில்லே. ஐரோப்பிய வர்த்தகர்கள் தங்களுக்கு ஏதாவது பிரத்தியேகமான நன்மை வேண்டியிருந்தால் அதைத் தெரியப்படுத்தலாம். அக்குறைகளேக் கவனிக்கத் தயார். ராஜீயப் பிரச்சினே எப்படியாவது சமாதானமாகத் தீரவேண்டும். ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் சுதந்தரங்களேப் பாதுகாக்கவும் எங்கள் திட்டத்தில் வகை சொல்லியிருக்கிருேம். லீ கமிஷன் சிபார்சுகள் இந்தியாவின் ஆட்சே

பத்தைப் பொருட்படுத்தாமல் செய்யப்பட்டு நிறைவேற்றப் பட்டவையாகையால், புதிய ராஜீய நிலைமையில் உத்தியோகங்கட்கு ஆள் சேர்த்தல், சம்பளம் உம்பளங்கள் முதலிய விஷயங்களைப் பற்றிப் புதிதாக பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாயிருக்கும். இப்படிச் செய்வதால் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு செல்வாக்கோ அந்தஸ்தோ குறைந்துவிடாது.

## ராணுவம்.

குடியேற்ற நாட்டு சுய ஆக்ஷிக்கு வேண்டிய சைன்யபலம் இந்தியா வைத்திருக்கிறதா அல்லது சமீபத்தில் வைத்துக் கொள்ளத் தான் சாத்தியமா, யோசனையுள்ள எந்த இந்தியரும் அவ்வாறு சொல்ல வில்லையேயென்று ஸர் மால்காம் ஹெய்லி கேட்கிறார். ஆனால் ராணுவ உத்தியோகங்களை இந்திய மயமாக்கி, உள்நாட்டுப் பாதுகாப்பு, எல்லைப் புறப் பாதுகாப்பு, முதலிய பொறுப்புகளை இந்தியரிடத்தில் ஒப்படைத்துவிட முடியும் என்று ஆசிரியர் கீத் ஒப்புக்கொண்டிருக்கிறார். "உத்தியோகங்களை இந்திய மயமாக்கும் வேலை மிகவும் தரித்திர பட்சமாக நடந்து வருகிறது. ராணுவத்தைவிட சிவில் உத்தியோகங்களே மேலானவை யென்று கருதும்படியா யிருப்பதாலும், உத்தியோகங்களை இந்திய மயமாக்குவது பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்குப் பிடிக்கவில்லை யாதலாலும், போதிய இந்தியர் ராணுவ உத்தியோகத்தை நாடிச் செல்வதில்லை. ஆயினும், திறமையான இந்திய ஸைன்யம் ஒன்றில்லாமல் சுயஆட்சி யென்பது சாத்தியமில்லை" யென்று ஆசிரியர் கீத் முடிவு கட்டுகிறார். அவர் சொல்லியுள்ள இதர விஷயங்களை நாம் ஒப்புக்கொண்ட போதிலும், போதிய ஸைன்ய மில்லாவிடில் சுய ஆக்ஷியில்லை' யென்ற தத்துவத்தை ஒப்புக்கொள்ள முடியாது. சைனியம் ஏற்கனவே இருக்கிறது. புதிதாக அதை சிருஷ்டிக்க வேண்டியது மில்லை. கண்டனக் காரர்களின் கூற்று சரித்திர உண்மைக்கும் விரோதமா யிருக்கிறது.

இந்த ஸைன்ய விஷயத்தில் ஸர் சிவஸ்வாமி ஐயர் தீரர். அவர் 1924 பிப்ரவரி 18-ந்தேதி இந்தியா சட்டசபையில் இதைப்பற்றி விஸ்தாரமாகப் பேசினார். "எந்த பிரிட்டிஷ் குடியேற்றநாடும் சுய ஆக்ஷி பெற்றபோது தற்காப்பு செய்துகொள்ளத் தயாரான நிலைமையில் இருந்ததில்லை; அதன் பொருட்டு செலவழிக்கவும் சக்தியற்றிருந்

தது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு தான் குடியேற்ற நாடுகளின் ராணுவச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இந்தியர் வெகுகாலமாக ராணுவத்தை வைத்து சம்ரட்சித்து வருகிறார்கள். ராணுவ சேவை செய்யக்கூடிய இந்தியர்களுக்கும் பஞ்சமில்லை. பிரிட்டிஷ் துருப்புகளை வைத்துக்கொண்டு அவர்களுக்கும் இந்தியா பணம் கொடுத்து வருகிறது. ஸர் மால்கம் ஹெயிலி இப்போது சொல்லும் நிபந்தனைகளைக் குடியேற்ற நாடுகள் சுயஆட்சி பெற்றபோது நிறைவேற்றி வைத்திருக்கவில்லை. உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மட்டும் குடியேற்ற நாட்டு கவர்ன்மெண்டுகள் மீது பொறுப்புக் கட்டப்பட்டதேயன்றி, தற்காப்பு படையெடுப்பு விஷயங்களில் எவ்வித நிபந்தனையும் ஏற்படுவதில்லை. இப்போதும் அந்நிபந்தனைகள் இருப்பதாகத்தெரியவில்லை. கடற்படை விஷயத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் எல்லா பந்தோபஸ்தையும் செய்து வருகின்றனர்'' என்று ஸ்ரீமான் சிவஸ்வாமி ஐயர் அச்சமயம் பேசினர்.

உத்தியோகஸ்தர்களின் சம்பளம், படி, பென்ஷன் ஆகியவற்றிற்கும் போதிய பாதுகாப்புகள் செய்துவிட்டு, இந்திய சைன்யத்தின் மேற்பார்வையை இந்தியருக்கு மாற்றிவிட வேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். ஒரு பொறுப்பு வாய்ந்த மந்திரி ராணுவத்தின் சார்பாக சட்டசபைகளில் இருந்துகொண்டு தக்க நிபுணர்களின் ஆலோசனையின்பேரில் நிர்வாகம் நடத்திவந்தால், சட்டசபைக்கும் ராணுவத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படுவதோடு, ராணுவச் செலவிற்குப் பணங்கொடுக்க சௌகரியமாயிருக்கும். தற்சமயம் ராணுவ வரவு செலவு திட்டத்தில் சட்ட சபை கை வைக்கக் கூடாது; அனுமதியின்றி விவாதிக்கக் கூடாது என்றிருக்கிறது. இப்போதுள்ள ஏற்பாட்டின்படி சைன்யத்தை இந்திய மயமாக்க ஒரு நூற்றாண்டு சென்றாலும் போதாது. இங்கிலாந்தில் ராணுவப் பயிற்சிக்கு ஆள் சேர்க்கும் முறையும், ஸ்கீன் கமிட்டி சிபார்சுகள் கண்டிக்கப்பட்டதும், நம்பிக்கையை யுண்டுபண்ணவில்லை. பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் ராணுவப் பயிற்சி செய்விக்க வேண்டியது கவர்ன்மெண்டின் சட்ட பூர்வமான கடமையென்று பாவித்து அங்ஙனமே நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். அதோடு தேசக் காப்புக் கமிட்டியொன்றும் அமைக்க வகை சொல்லியிருக்கிறோம்.

# யாதாஸ்து.

அத்தியாயம் 1

## கமிட்டி நியமனம்.

சென்ற மே மாதம் 19-ந்தேதி பம்பாயில் நடந்த சர்வகக்ஷி மகாநாடு அடியிற்கண்ட தீர்மானத்தின் மூலமாக இந்தக் கமிட்டியை நியமனம் செய்தது.

> "இந்தியாவின் அரசியல் எத்தகைபதாக இருக்க வேண்டுமென்பதைப் பரிசீலனை செய்து அதன் அடிப்படையான தர்மங்கள் எவெவைகளாக இருக்கவேண்டுமென்பதை நிர்ணயம் செய்வதற்காகபண்டித மோதிலால் நேரு (தலைவர்), ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ, ஸர் அலி இமாம், ஸ்ரீமான்களான பிரதானி, ஷ்வாப்குரைஷி, சுபாஷ் சந்திரபோஸ், ஆனே, எம். ஆர். ஜெயகர், என். எம். ஜோஷி, ஸர்தார் மங்களசிங் இவர்களடங்கிய கமிட்டியை இந்த மகாநாடு நியமனம் செய்கிறது. இந்தக் கமிட்டியானது ஜூலை மாதம் முதல் தேதிக்குள் ரிபோர்ட்டு செய்து விடவேண்டும். இந்தக் கமிட்டியானது தனது யாதாஸ்தை இந்தியாவிலுள்ள பல பொது ஸ்தாபனங்களுக்கும் அனுப்பி வைக்கவேண்டும். வகுப்பு ஒற்றுமை விஷயமாக சென்னைக் காங்கிரஸ் செய்திருக்கும் தீர்மானத்தையும், ஹிந்துமகா சபை, முஸ்லீம் லீக், சீக்கியர் லீக், இதர பொது ஸ்தாபனங்கள் இவைகள் செய்திருக்கும் தீர்மானங்களையும், இனி அனுப்பப்படும் விஞ்ஞாபனங்களையும் பூரணமாகக் கவனிக்க வேண்டும். சர்வ சக்ஷிமகாநாட்டின் பல சப் கமிட்டிகள் செய்திருக்கும் சிபார்சுகளுக்கும் இந்தக் கமிட்டி தகுந்த மதிப்புக் கொடுக்க வேண்டும். இந்தக் கமிட்டியின் யாதாஸ்தைப்பற்றி யோசிப்பதற்காக சர்வகக்ஷி மகாநாடு மறுபடியும் ஆகஸ்டு மாதத்தில் கூடும்."

இந்தக் கமிட்டியின் வேலையைப்பற்றி பிரஸ்தாபிக்கு முன் இந்தக் கமிட்டியின் நியமனத்திற்குக் காரணமாகவிருந்த சில அம்சங்களைக் குறிப்பிடுவது உபயோகமாக இருக்கும்.

## கௌஹாதி தீர்மானம்.

கௌஹாதி காங்கிரஸானது மிருந்ததுக்ககரமான சம்பவம் நடந்த பிறகும், ஹிந்து முஸ்லீம் வேற்றுமை அதிகமாக இருந்துவரும் சந்தர்ப்பத்திலும் 1926-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கூடியது. "இப்பொழுது ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இருந்துவரும் மனக்கசப்பை நிவர்த்தி செய்வதற்கு ஹிந்து முஸ்லீம் தலைவர்களுடன் கலந்து கொண்டு 1927-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம்தேதிக்குள் தகுந்த சிபார்சுகளைச் செய்யும்படி இந்தக் காங்கிரசானது காரியக் கமிட்டியைக் கேட்டுக்கொள்கிறது" என்று தீர்மானம்செய்தது.

இந்தத் தீர்மானத்தை அனுசரித்துக் காரியக் கமிட்டியினரும், அந்த வருஷத்திய காங்கிரஸ் தலைவரும் ஹிந்து முஸ்லீம் தலைவர்களுடனும், மத்திய சட்டசபை அங்கத்தினர்களுடனும் கலந்து யோசித்தார்கள்.

## முஸ்லீம் பிரேரணைகள்.

1927-ம் வருஷம் மார்ச்சுமாதம் 20-ம் தேதி சில பிரபல முஸ்லீம் தலைவர்கள் டில்லியில் ஹிந்து முஸ்லீம் பிரச்சினை சம்பந்தமாக ஹிந்துக்களும் தேசத்தினரும் அங்கீகாரம் செய்வதற்காக சில யோசனைகளைச் சொன்னார்கள். அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு எல்லா மாகாணங்களிலும் கலப்புத்தொகுதிகளை ஏற்படுத்துவதற்கு முஸ்லீம்கள் சம்மதப்படுவதாக அந்தப் பிரேரணைகளில் சொல்லப்பட்டது. அந்த நிபந்தனைகளாவன:—

1. ஸிந்துப் பிரதேசத்தைத் தனி மாகாணமாகச் செய்துவிட வேண்டும்.

2. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தையும், பெலுஜிஸ்தானத்தையும் இதர மாகாணங்களைப் போல் பாவிக்க வேண்டும்.

2. பஞ்சாபிலும் வங்காளத்திலும் ஜனத்தொகைக்குத் தகுந்தபடி பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தவேண்டும்.

4. மத்திய சட்டசபையில் முஸ்லீம்களுக்கு மொத்த ஸ்தானங்களில் மூன்றிலொரு பங்குக்குக் குறைவாகப் பிரதிநிதித்துவம் இருக்கக்கூடாது.

இந்தப் பிரேரணைகள் காங்கிரஸுக்கு அனுப்பப்பட்டன. காங்கிரஸ் காரியக் கமிட்டியார் மறுதினம் கூடி கலப்புத் தொகுதிகளை ஒப்புக் கொள்ளுவதாக முஸ்லீம்கள் சொல்லியிருப்பதைப் பாராட்டியும், இந்தப் பிரேரணைகளை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு ஒரு ராஜி ஏற்படுமென்று நப்புவதாகவும் ஒரு தீர்மானத்தைச் செய்தனர். ஹிந்து, முஸ்லீம் தலைவர்களுடன் கலந்து பேசுவதற்காக ஒரு சப் கமிட்டியும் நியமிக்கப்பட்டது.

## காங்கிரஸ் காரியக் கமிட்டி.

காங்கிரஸ் காரியக் கமிட்டியானது 1927-ம் வருஷம் மேமாதம் 15-ந் தேதி முதல் 18-ம் தேதி வரையில் பம்பாயில் கூடி ஹிந்து—முஸ்லீம் பிரச்சினை சம்பந்தமாக நீண்டதொரு தீர்மானத்தைச் செய்தது. முஸ்லீம் பிரேரணைகளை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு இந்தத் தீர்மானம் செய்யப்பட்டபோதிலும், வேறு பல விஷயங்களும் இதில் சேர்க்கப்பட்டிருந்தன.

## அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி.

அந்தத் தேதிகளிலேயே பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் சில சில்லரை மாறுதல்களுடன் இந்தத் தீர்மானத்தை ஒப்புக் கொண்டார்கள். ஸிந்துப் பிரதேசத்தை வகுப்புக் கொள்கை காரணமாகப் பிரிவினை செய்யக் கூடாதென்றும், எல்லா மாகாணங்களுக்கும் பிரயோகிக்கப்படக் கூடிய தர்மங்களை அனுசரித்தே ஸிந்துப் பிரதேசத்தைப் பிரிவினை செய்வதாயின் அவ்விதம் செய்யவேண்டுமென்றும் ஹிந்துத் தலைவர்கள் சார்பாக யோசனை சொல்லப்பட்டது. தீர்மானத்தின் வாசகத்தில் சிறிது மாறுதல் செய்ததால் அவர்களுடைய ஆட்சேபம் நிவர்த்தியாகி, தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது.

## ஸ்வராஜ்ய அமைப்பு.

மத்திய சட்ட சபைகள், மாகாண சட்ட சபைகள் இவைகளிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள், இதர ராஜீயக் கக்ஷிகளின் தலைவர்கள் இவர்களைக் கலந்து கொண்டு, ஜீவாதாரமான உரிமைகளை அஸ்திவாரமாகக் கொண்டதொரு ஸ்வராஜ்ய அமைப்பைத் தயார் செய்யும்படி காரியக் கமிட்டியைக் கேட்டுக் கொள்வதாக மற்

றொரு தீர்மானத்தையும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியது.

1927-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை சம்பந்தமாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மற்றொரு தீர்மானம் செய்தது. ஆனால் இது மத, சமூக விஷயங்களைப் பொறுத்ததாக இருந்தது.

## சென்னைக் காங்கிரஸ்.

சென்னைக் காங்கிரஸானது ஹிந்து-முஸ்லீம் பிரச்சினையைப் பற்றிய எல்லா அம்சங்களையும் கவனித்தும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முன்னதாகச் செய்திருந்த தீர்மானத்தை அனுசரித்தும், ராஜீய, மத, இதர உரிமைகள் சம்பந்தமாக நீண்டதொரு தீர்மானத்தைச் செய்தது.

## ஸ்வராஜ்யத்திட்டம்.

ஸ்வராஜ்யத் திட்டம் சம்பந்தமாக காங்கிரஸானது அடியிற் கண்ட தீர்மானத்தையும் நிறைவேற்றியது.—

"ஸ்வராஜ்யத் திட்டத்தைத் தயாரிக்கும் விஷயத்தில் ஒன்று சேர்ந்துகொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி எல்லா ராஜீயக் கக்ஷியினருக்கும் இருந்து வருவதை உத்தேசித்தும், தனக்கு அனுப்பப்பட்டுள்ள பல ஸ்வராஜ்ய அமைப்புகளையும் காரியக் கமிட்டியின் சுற்றுக் கடிதத்திற்கிணங்க தெரிவிக்கப்பட்டுள்ள பல யோசனைகளையும் கவனித்தும், இதரர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ள உரிமையுடனும், இதர ராஜீய, தொழிலாள, வர்த்தக, சமூக ஸ்தாபனங்களால் நியமிக்கப்படும் கமிட்டிகளைக் கலந்துகொண்டும் ஜீவாதாரமான உரிமைகளை அஸ்திவாரமாகக் கொண்டதொரு சுயராஜ்யத் திட்டத்தைத் தயார்செய்து, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களும், மேலே குறிப்பிட்ட இதர ஸ்தாபனங்களின் தலைவர்களும், பிரதிநிதிகளும், மத்திய, மாகாண சட்ட சபைகளிலிருக்கும் ஜனப்பிரதிகளும் அடங்கிய கூட்டமொன்றின் முன் ஆஜர்செய்வதற்கு இந்தக் காங்

கிரஸானது காரியக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கிறது. இந்தக் கூட்டமானது மார்ச்சு மாதத்திற்கு முன் கூட்டப் படவேண்டும்.''

இதைத் தொடர்ந்தாற்போல் லிபரல்பெடரேஷனின் வருஷாந்தக் கூட்டம் பம்பாயில் நடைபெற்றது. ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகளைப் போக்கும் விஷயத்தில் சிரத்தையுடன் முஸ்லீம் தலைவர்கள் சொல்லியுள்ள யோசனைகளைப் பாராட்டியும் அதில் அடங்கியுள்ள பல ஷரத்துகளையும் பல சமூகங்களின் பிரதி நிதிகளும் கூடிய சீக்கிரத்தில் ராஜிஏற்படக்கூடிய வழியில் நல்லுணர்ச்சியுடன் பரிசிலனை செய்யவேண்டுமென்று கோரியும் அதில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு முஸ்லீம் லீக் மகாசபை கல்கத்தாவில் கூடி காங்கிரஸ் காரியக் கமிட்டியுடனும், லீக் உசிதமென்று கருதுகிற இதர ஸ்தாபனங்களுடனும் கலந்துகொண்டு முஸ்லீம்களுடைய உரிமைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு இருந்து வரக்கூடிய சுயராஜ்பத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக ஒரு சப் கமிட்டியை நியமித்தது.

இந்தத் தீர்மானத்தில் இடப்பட்டிருந்த கட்டளையை அனுசரித்து காங்கிரஸ் காரியக் கமிட்டியினர் பல பொது ஸ்தாபனங்களுக்கும் அழைப்புக் கடிதங்களை அனுப்பினர். அவ்விதம் அழைக்கப் பட்டவைகளில் அடியிற்கண்ட ஸ்தாபனங்களும் அடங்கியிருந்தன.–

லிபரல் பெடரேஷன்.
ஹிந்துமகாசபை.
அகில இந்திய முஸ்லீம்லீக்.
மத்திய கிலாபத் கமிட்டி.
மத்திய சீக்கிய லீக்.
தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்.
அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ்.
பர்மிய பொதுச்சபை
ஹோம்ரூல் லீக்
குடியரசு லீக்
இந்தியா சட்டசபை சுயேச்சைக் கக்ஷி.

இந்தியா சட்ட சபை தேசியக் கக்ஷி.
சமஸ்தானப் பிரஜைகள் சங்கம்.
சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு.
சமஸ்தான ஜனங்கள் மகாநாடு.
ஆங்கிலோ இந்தியர் சங்கம்.
கல்கத்தா இந்தியன் அஸோஸியேஷன்,
மத்திய பார்ஸி சங்கம்,
ஸோராஸ்டிரியன் சங்கம்.
பார்ஸி ராஜகீய சபை.
பார்ஸி பஞ்சாயத்து.
அகில இந்திய கிறிஸ்தவர்கள் மகாநாடு.
தென்னிந்தியா வியாபாரச் சங்கம்.
திராவிட மகாஜன சபை

அயோத்தி, ஆக்ரா, பீஹார், வங்காளம், சென்னை இவைகளிலிருந்து வரும் நிலச் சுவான்தார் சங்கங்கள்.

பிறகு பம்பாயில் பம்மாய் பிராமண ரல்லாதார் கக்ஷி, தேசீய பிராமணரல்லாதார் கக்ஷி, பொது உடைமைக்கட்சி, பம்பாய் தொழிலாளர் விவசாயிகள் கக்ஷி இவைகளுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

## டில்லி சர்வ கக்ஷி மகாநாடு.

இவைகளில் பல ஸ்தாபனங்கள் 1928-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12-ந் தேதி டில்லியில் நடந்த சர்வகக்ஷி மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பின. தொடர்ச்சியாக 22-ந் தேதிவரையில் கூட்டம் நடந்தது.

அரசியல் அமைப்பு எத்தகைய நோக்க முடையதாக இருக்க வேண்டுமென்பதைப்பற்றி முதலில் விவாதம் நடந்தது. குடியேற்ற நாட்டு ஆட்சி யென்று அழைக்கப்படும் முறையே நோக்கமாக இருக்க வேண்டுமென்று பிரேரணை செய்யப்பட்டது. காங்கிரஸ் பூரண சுயேச்சையே நோக்கமென்று தீர்மானம் செய்திருப்பதால், அதற்குக் குறைவான லக்ஷியம் எதையும் ஒப்புக்கொள்ளக் கூடாதென்று ஆக்ஷேபம் சொல்லப்பட்டது. ஆனால் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த எல்லாக் கக்ஷியினரும் அவ்வளவு தூரம் போகத் தயாராக

இருக்கவில்லை. கடைசியாக இருதாத்தினருடைய நோக்கங்களையும் அடக்கிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு லக்ஷியத்தை வைத்துக்கொள்ளலாமென்று யோசனை சொல்லப்பட்டது. குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்பதில் அரசருடைய சம்பந்தம் இருப்பதைத் தவிர அதற்கும் பூரண சுயேச்சைக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. நிர்வாகிகளில் இருந்துவரும் வித்தியாசம் தான் இரண்டுக்குமுள்ள வித்தியாசம். நிர்வாகிகள் எத்தகையோராக இருக்க வேண்டுமென்பதை முடிவு செய்யாமல் எதிர்கால ஸ்வராஜ்ய அமைப்பு எத்தகையதாக இருக்கவேண்டுமென்று சொல்லிவிடக்கூடும். ஆகவே, சுயேச்சையை விரும்புவோர் அது சம்பந்தமாகப் பிரசாரம் செய்வதற்கும், வேறு வழிகளில் அதற்காக வேலை செய்வதற்கும் உரிமையுண்டென்ற நிபந்தனையின் பேரில் பூரண ஜவாப்தாரியான ஆட்சியை லக்ஷியமாக வைத்துக்கொள்ளுவதென்று முடிவு செய்யப்பட்டது. இந்த மகாநாட்டில்

பூரண ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்தும்
ஸ்வராஜ்ய அமைப்பைத் தயார்செய்யவேண்டும்

என்று முதன்மையாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

## முதல் கமிட்டி.

மாகாணங்களின் பிரிவினை, ஓட்டுத் தொகுதிகள், ஸ்தானங்களை ஒதுக்குதல் முதலியவைகள் சம்பந்தமாகவும் மகாநாடு தீர்மானங்களைச் செய்தது. பிப்ரவரி மாதம் 22-ந்தேதி அடியிற் கண்ட விஷயங்களைப் பற்றி ரிப்போர்ட்டு செய்வதற்காக மகாநாடு ஒரு கமிட்டியை நியமித்தது. எதிர்கால ஸ்வராஜ்ய அமைப்பில் இரண்டு சட்ட சபைகள் இருந்துவர வேண்டுமா அல்லது ஒரு சபை இருந்து வர வேண்டுமா; ஓட்டு சுதந்திரம்; ஜீவாதாரமான உரிமைகள்; தொழிலாளர், குடிகள் இவர்களுடைய பாத்தியம்; சுதேச சமஸ்தானங்கள். இந்தக் கமிட்டியை நியமித்து விட்டு மகாநாடு கலைந்தது. இந்தக் கமிட்டியானது குறிப்பிட்ட காலத்திற்குள் ரிப்போர்ட்டை அனுப்பிவைத்தது. மறுபடியும் 1928-ம் வருஷம் மார்ச்சுமாதம் 8-ந்தேதி மகாநாடு நடைபெற்றது. இதற்கிடையில் முஸ்லீம் லீக்கவுன்ஸில் கூடி சர்வகட்சி மகாநாட்டின் தீர்மானத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று தீர்மானம் செய்துவிட்டது. "1927-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில்நடந்த முஸ்லீம்லீக் சொல்லிய யோசனைகளை இதர கக்ஷி

யினர் ஒப்புக்கொள்ளும்படி முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் வற்புறுத்த வேண்டுமென்றும், ஸ்வராஜ்ய அமைப்பைத் தயாரிக்கு முன் அவசியமான மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்காக அதன் முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்றும்'' முஸ்லீம் லீக் கவுன்ஸில் தீர்மானம் செய்தது.

இந்தத் தீர்மானமானது மகாநாட்டில் ஒரு சங்கடத்தை விளைவித்தது. முஸ்லீம் லீக்கின் இதர பிரேரணைகளை அப்படியே ஒப்புக்கொள்ளும் வரையிலாவது, அல்லது லீக் கவுன்ஸிலை என்ன செய்வதென்று கேட்டுக்கொள்ளும் வரையிலாவது முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் கமிட்டிப் பிரேரணைகளைக் கவனிப்பதற்கில்லை.

இந்தச் சங்கடமான நிலைமையினிடையே மகாநாடு கூடிற்று. வகுப்புவாரிப் பிரச்சினைகளைப்பற்றி மிகுந்த விவாதம் நடைபெற்றது. ஸிந்து பிரிவினை விஷயத்திலும், மெஜாரிட்டியாயுள்ள சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் விஷயத்திலும் ஹிந்து மகாசபைப் பிரதிநிதிகளும் முஸ்லீம் லீக் பிரதிநிதிகளும் ஒத்துப்போகவில்லை யென்பது தெரிந்தது. மெஜாரிட்டி சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதை சீக்கியப் பிரதிநிதிகளும் பலமாக ஆட்சேபித்தனர். அதன்பேரில் மார்ச்சு மாதம் 11-ந்தேதி மகாநாடானது இரண்டு சப் கமிட்டிகளை நியமனம் செய்தது. ஒரு கமிட்டி ஸிந்து பிரிவினையால் ஏற்படக்கூடிய வரவு செலவுப் பிரச்சினையைப் பரிசீலனை செய்வதற்காகவும், மற்றொரு கமிட்டி வீதாசாரப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தலாமாவென்பதைப் பரிசீலனை செய்வதற்காகவும் நியமிக்கப்பட்டன.

முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் தங்களுடைய கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளும் வரை விவாதத்தில் கலந்துகொள்ள முடியாதென்று சொல்லிவிட்டதால் பிப்ரவரி மாதம் 22-ந்தேதி நியமித்த கமிட்டியின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்ய முடியவில்லை. கமிட்டியின் யாதாஸ்தைப் பிரசுரிக்க வேண்டுமென்று மகாநாடு முடிவு செய்துவிட்டு, மேமாதம் 19-ந் தேதிக்குக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ஏப்ரல் மாத ஆரம்பத்தில் ஹிந்து மகாசபை ஜபல்பூரில் கூடி, சில முஸ்லீம் பிரேரணைகளைப் பலமாக ஆட்சேபிப்பதாகத் தீர்மானம் செய்தது.

ஆகவே, மே மாதம் 19-ந் தேதி சர்வகட்சி மகாநாடு பம்பாயில் கூடியபொழுது சவுகரியமான நிலைமை இருந்து வரவில்லை. வகுப்புக் கக்ஷிகளுக்குள் அபிப்ராயபேதம் முற்றி யிருந்தது; ஒவ்வொன்றும் பிடிவாதம் காட்ட ஆரம்பித்து விட்டது. அந்த அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளவோ அல்லது திருத்திக் கொள்ளவோ அவைகள் தயாராக இருக்கவில்லை. டில்லியில் நியமித்த இரண்டு சப் கமிட்டிகளும் ரிபோர்ட்டு செய்யவில்லை. இந்த நிலைமையில் எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு திருப்திகரமான முடிவை ஏற்படுத்துவது சாத்தியமில்லை யாதலால் ஒரு சிறிய கமிட்டியை நியமிப்பின் அது எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து ஒரு வழியைக் கண்டு பிடிப்பது சாத்தியப்படலாமென்று கருதப்பட்டது. அதன்பேரில் தலைப்பில் குறிப்பிட்ட தீர்மானம் செய்யப்பட்டது.

## கமிட்டியின் அமைப்பு.

கமிட்டி சரியாக வேலை செய்யவேண்டுமானால் அது கூடியவரையில் சிறியதாகவே இருக்கவேண்டி யிருந்தது. எல்லாக் கக்ஷியினருக்கும் பிரதி நிதித்துவம் கொடுப்பது சாத்தியமில்லை. இருந்தாலும் முக்கியமான கக்ஷிகளுக்குப் பிரதி நிதித்துவம் கொடுக்கப்பட்டது. முஸ்லீம்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க ஸர் அலி இமாமும் ஜனாப்ஷ்வாப்குரேஷியும் நியமிக்கப்பட்டனர்; ஹிந்து மகா சபைக்காக ஸ்ரீமான்களான ஜெயகரும், ஆனேயும் நியமிக்கப்பட்டனர்; பிராமணரல்லாதார் பிரதிநிதியாக ஸ்ரீமான் பிரதானி நியமிக்கப்பட்டார்; சீக்கியர்கள் பிரதிநிதியாக ஸர்தார் மங்களசிங் நியமிக்கப்பட்டார்; மிதவாதிகள் கக்ஷிக்காக ஸர்டேஜ்பகதூர் ஸாப்ருவும், தொழிலாளர் பிரதிநிதியாக ஸ்ரீமான் எஸ். எம். ஜோஷியும் நியமிக்கப்பட்டனர்.

இவ்விதம் தெரிந்தெடுக்கப்பட்ட 10அங்கத்தினர்களில் ஸ்ரீமான் ஜெயகர்கமிட்டியில் தாம் ஸ்தானம்வகிக்கமுடியாதென்று தெரிவித்து விட்டார். தொழிலாளர் பிரச்சினைகளைக் கவனிக்கையில்தான் தாம் வர முடியுமென்று ஸ்ரீமான் ஜோஷி தெரிவித்து விட்டார். அவர் கமிட்டியின் ஒரு கூட்டத்திற்காவது வரமுடியவில்லை. தேகஅசௌக்கியம் காரணமாக ஸர்அலி இமாம் ஒரு கூட்டத்திற்குத்தான் மிகுந்த சிரமத்துடன் வருவது சாத்தியமாயிற்று. அன்று அவர் வந்தது மிகவும் உபகாரமாக விருந்தது. அடிக்கடி அவர் கலந்து

பேசுவதற்கும் தயாராக இருந்தார். ஜூன்மாதம் 12-ந்தேதி வரையில் ஸ்ரீமான் பிரதானி கூட்டங்களுக்கு வந்துகொண்டிருந்தார்.

## ரிபோர்ட்டு செய்வதில் தாமதம்.

ஜூலைமாதம் முதல்தேதிக்குள் கமிட்டி ரிபோர்ட்டு செய்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த கெடுவுக்குள் வேலையை முடித்துவிட கமிட்டிபிரயத்தனம் செய்தும் சாத்தியப்படவில்லை. ஜூன்மாதம் 5ந்தேதி முதல் தினந்தோறும் பலமணிநேரம் கமிட்டி கூடியோசனை செய்தது. சாதாரணமாகக் கலந்து பேசியதைத் தவிர, 25 நாட்கள் கமிட்டியின் கூட்டங்கள் நடைபெற்றன.

## அங்கத்தினர்களுக்குள் ஒற்றுமை.

கமிட்டி சிறியதாயினும் பல கக்ஷிபினரும்,பல சமூகப் பிரதிநிதிகளும் அடங்கியதாக இருந்தது. இந்தக் கமிட்டிக்கு இடப்பட்ட கட்டளையின்படி பல ஸ்தாபனங்கள் செய்திருந்த தீர்மானங்களைப் பற்றிக் கவனிக்க வேண்டியிருந்தது. இவைகளில் சில தீர்மானங்கள் ஒன்றுக் கொன்று விரோதமாக விருந்தன. பூரணமாகவாவது, அல்லது ஏகதேசமாகவாவது ஒற்றுமை ஏற்படுவதற்கு இரண்டு பெரிய இடையூறுகள் இருந்தன. முதலாவது, காங்கிரஸுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் லக்ஷியத்திலுள்ள வித்தியாசம். காங்கிரஸ் பூரண சுயேச்சைத் தீர்மானம் செய்திருக்கையில் இதர ஸ்தாபனங்கள் குடியேற்றநாட்டு அந்தஸ்தில் திருப்தியடையக் கூடியவைகளாக இருந்தன.இரண்டாவது, பல வகுப்புக் கக்ஷிகளும் ராஜீயஉரிமைகள் விஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராயமுடையவைகளாக இருந்தன.

## சுயேச்சையும், குடியேற்ற நாட்டு அந்தஸ்தும்.

முதல் சங்கடம் கமிட்டிக்கு ஆரம்பத்திலேயே ஏற்பட்டது. டில்லியில் இரண்டு அர்த்தங்களும் கொடுக்கும் பூரண ஜவாப்தாரியான ஆட்சி என்ற பதம் உபயோகப் படுத்தப்பட்டிருந்தது. நகல் அமைப்பைத் தயாரிப்பதற்கு இந்த விஷயத்தை ஒருவிதமாக முடிவு செய்து விடவேண்டுமென்று கமிட்டி அபிப்பிராயப்பட்டது. சிலர் டில்லி வாசகமே இருக்கலாமென்று அபிப்பிராயப் பட்டார்கள். பெரும்

பாலோர் இரண்டிலெது வென்று முடிவுசெய்துவிட வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். பல கக்ஷிகள் சேர்ந்து தயாரிக்கும் அமைப்பில் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை வைத்துக் கொள்ளுவதுதான் சாத்தியம். அதியாகப் போனால் ஒற்றுமை சாத்தியமில்லை. ஆகவே, "குடியேற்ற நாடுகளில் இருந்துவருவது போன்ற பூரண ஜவாப்தாரியான ஆட்சிதர்மங்களை நிர்ணயிக்கும்படி சர்வ கக்ஷி மகாநாடு கேட்டுக் கொண்டிருப்பதாகவே'' பெரும்பாலோர் அபிப்பிராயப் பட்டார்கள். நாங்கள் யோசனை சொல்லியிருக்கும் தர்மங்கள் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்குப் பொருத்தமானவை; இருந்தாலும் அவைகளில் பல பூரண சுயேச்சைக்கும் பொருத்தமானவைகளாகவிருக்கும். நாங்கள் ஒரு கமிட்டியாக இவ்வித லக்ஷியத்தை வைத்துக் கொள்ளுவதென்று முடிவு செய்திருப்பதிலிருந்து இந்த அஸ்திவாரத்தின் மேல் தான் அதிக ஒற்றுமை சாத்தியமென்பதே அர்த்தம். இதனால் தனிப்பட்ட காங்கிரஸ் வாதிகளாவது, காங்கிரஸாவது சுயேச்சைக் கோரிக்கையை விட்டுக் கொடுத்ததாகவாவது, அல்லது குறைத்துக்கொண்டு விட்டதாகவாவது ஆகிவிடாது. சுயேச்சையில் நம்பிக்கை யுடையவர்கள் அதற்காக வேலை செய்ய பூரண உரிமையுடையவர்கள். அதியான லக்ஷியத்தை நாடும் எந்தக் கக்ஷியாவது அல்லது நபராவது அதற்காக வேலை செய்யலாமாயினும் பெரும்பாலோர் ஒப்புக்கொண்டிருக்கும் இந்த லக்ஷியமானது எல்லாக் கக்ஷியினரும் சேர்ந்து வேலை செய்யக்கூடிய ஒரு திட்டத்திற்கு அஸ்திவாரமாக இருப்பதற்கு உதவியாக இருக்குமென்று நம்புகிறோம்.

## வகுப்புப் பிரச்சினை.

அரசியல் அமைப்பு சம்பந்தப் பட்டவரையில் வகுப்புவாரித் தகராறு பிரமாதமான தன்று. இருந்தாலும் ராஜீய லக்ஷியத்தைவிட அதிகமாக இது மனிதர்களுடைய மனதைக் கவர்ந்து வருகிறது. ஒன்றுக்கொன்று நேர் விரோதமான பல தீர்மானங்களை நாங்கள் கவனிக்க வேண்டியிருந்தது. ஒவ்வொன்றுக்கும் நாங்கள் மதிப்பு வைக்கக் கடமைப்பட்டிருந்தோம். சென்னை காங்கிரஸும் முஸ்லீம் லீகும் செய்திருந்த தீர்மானங்கள் ஹிந்து மகாசபையும் சீக்கிய லீகும் செய்திருந்த தீர்மானங்களுக்கு நேர் விரோதமாக விருக்கையில் இரண்டில் எதையும் அப்படியே நாங்கள் ஒப்புக் கொள்வதற்கில்லை.

எல்லா அபிப்பிராயங்களையும் யோசித்து ஒரு முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று எங்களைக் கேட்டுக்கொண்டிருந்ததிலிருந்தே தேசத்தின்முற்போக்குக்கு எது யுக்தமான முறை யென்று தெரிவிக்கும்படி எங்களைக் கேட்டுக்கொண்டிருப்பதாக நாங்கள் கருதினேம். எங்களுடைய சிபார்சுகள் எவ்வளவு நேர்மையானவைகளாக இருந்தபோதிலும், அந்தந்தக் கக்ஷியினருக்குத் திருப்தியைக் கொடுக்கும் அளவுதான் அவைகளால் அங்கீகரிக்கப் படத்தக்கவைகளாக இருக்கும். எல்லா விஷயங்களையும் கவனித்து தர்ம நியாயமான வழிகளை ஒப்புக்கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. அத்தகைய வழியைக் கண்டுபிடிக்கக் கமிட்டி மிகவும் சிரமப்பட்டிருக்கிறது. பல ஹிந்து முஸ்லீம் தலைவர்களையும் கலந்துகொண்டோம். இவைகளின் பலனாக நாங்கள் செய்திருக்கும் சிபார்சுகளை எல்லோரும் பெரும் புத்தியுடனும் பரஸ்பர நம்பிக்கையுடனும் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

சேர்மனுடைய அழைப்புக் கிணங்கி டாக்டர் அன்ஸாரி, பண்டித மதன்மோஹன மாளவியா, மௌலானா அபுல்கலாம் அஸாத், ஸி. ஒய். சிந்தாமணி, மௌல்வி ஷாபிதாவுதி, டாக்டர் கிச்லு, சச்சிதானந்த ஸின்ஹா, முன்ஷி ஈஸ்வர சாணர், டாக்டர் எஸ். முகம்மது சௌத்ரி கலிகுஸ்மான், டி. ஏ. கே ஷர்வானி முதலியவர்கள் வந்திருந்து உதவிசெய்தனர். அவர்களுடைய உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் நாங்கள் மிகுந்த நன்றி யுடையவர்களாக் இருக்கிறோம். காங்கிரஸ் தலைவர் மும்முறை வந்ததுடன், சங்கடமான சமயங்களில் வந்து உதவி செய்ததற்கு நாங்கள் மிகுந்த நன்றி யுடையவர்களாக இருக்கிறோம். காங்கிரஸ் பொதுக் காரியதரிசி பண்டித ஜவஹரிலால் நேரு செய்த உதவியையும் நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்.

2-வது அத்தியாயம்.

---

## வகுப்புப் பிரச்சினை

இந்தியாவில் வகுப்பு வேற்றுமைப் பிரச்சினையானது ஹிந்து-முஸ்லீம் பிரச்சினையாகவே இருந்துவருகிறது. இதர சமூகத்தினரும் சிறிது காலமாக முரட்டு சுபாவத்தைக் காட்டி வருவதுடன், விசேஷ உரிமைகளும் சலுகைகளும் கோரிவருகின்றனர். பஞ்சாபில் சீக்கியர் கட்டுப்பாடாகவுள்ள மைனாரிட்டி கோஷ்டியினர். அந்த சமூகத்தை அலக்ஷியம் செய்து விடுவதற்கில்லை. ஹிந்துக்களுக்குள்ளேயே தென்னிந்தியாவில் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் சில சந்தர்ப்பங்களில் தகராறு ஏற்படுகிறது. இருந்தாலும் ஹிந்து-முஸ்லீம் பிரச்சினையை எவ்விதம் தீர்த்து வைப்பதென்பதே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். இவ்விரு சமூகத்தினரும் மொத்த ஜனத்தொகையில் 90 % இருந்து வருகின்றனர். 1911-ம் வருஷத்திய ஜன கணிதிபின்படி பல சமூகங்களின் விகிதாசாரமாவது:—

| | |
|---|---|
| ஹிந்துக்கள் | 65.9 % |
| முகம்மதியர்கள் | 24.1 ,, |
| புத்தர்கள் | 4.6 ,, |
| எல்லைப்புற ஜாதியினர் | 2.8 ,, |
| கிறிஸ்தவர்கள் | 1.2 ,, |
| சீக்கியர்கள் | 1.0 ,, |
| ஜெயினர்கள் | .2 ,, |
| இதரர்கள் | .2 ,, |
| | 100.0 % |

இதற்கு முந்தின ஜன கணிதிக் கணக்குகளைப் பரிசீலனை செய்ததில் ஹிந்துக்கள், ஜெயினர்கள் இவர்களுடைய தொகை குறைந்து வருகையில் இதர சமூகங்களின் தொகை அதிகரித்து வந்திருக்கிறதென்று தெரிகிறது. முஸ்லீம்களின் தொகை அதிகமாகப் பெருகிவிடாத போதிலும், அவர்களுடைய தொகை உயர்ந்துகொண்டே

வருகிறது. 1881-ம் வருஷம் முதல் எடுத்திருக்கும் ஜன கணிதிகளின் விதாசாரத்திலிருந்து ஹிந்து, முஸ்லீம்களின் மொத்தத் தொகை இருந்துவந்திருக்கும் விவரத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

| | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | |
|---|---|---|---|---|---|---|
| ஹிந்துக்கள் | 72.0 | 70.1 | 68.3 | 66.9 | 65 9 | = —6.1 |
| முஸ்லீம்கள் | 22.6 | 22 4 | 23.2 | 23.5 | 24.1 | = ÷1.5 |

இது இந்தியாவின் மொத்தத் தொகையாகும். முஸ்லீம்களைத் தனியாக எடுத்துக் கொள்ளுகையில் சென்ற ஒரு தலைமுறையில் அவர்களுடைய ஜனத்தொகை 3.1% உயர்ந்திருக்கிறதென்று தெரிகிறது. ஹிந்துக்களின் தொகை இந்தக் காலத்தில் குறைந்திருக்கிறது.

எல்லைப்புற மாகாணங்கள், வங்காளம், பஞ்சாப் இவைகளைத் தவிர மற்ற இடங்களில் முஸ்லீம்களின் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஐக்கியமாகாணங்களில்தான் அவர்களுடைய ஜனத்தொகை அதிகக் குறைவாக இருக்கிறது. இங்கு 15-%க்குக் குறைவாக இருக்கிறது. இந்த 15% தொகையினரும் மாகாண மெங்கும் நிரவி யிருக்கவில்லை. நகர்ப்புறங்களிலும், முக்கியமாக மாகாணத்தின் வடபுறத்திலுமே, இவர்கள் இருந்து வருகிறார்கள்.

பஞ்சாபில் முஸ்லீம்கள் 53%ம், வங்காளத்தில் 54-0-ம் இருந்து வருகின்றனர். ஸிந்துப் பிரதேசத்தில் அவர்கள் 73.4% இருந்து வருகின்றனர். பெலுஜிஸ்தானத்திலும், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் அவர்கள் பெரும்பான்மையோராக இருந்து வருகின்றனர்.

## சமூகப் பாதுகாப்பு.

புதிதாக இந்தியாவுக்கு வந்த, முஸ்லீம் சமூகத்தின் பலத்தைக் கவனிக்கிறவர்கள் அது வலுவுடைய சமூகமென்றும், அதற்கு எவ்விதப் பாதுகாப்பும் வேண்டியதில்லை யென்றும் நினைக்கக் கூடும். இந்தியாவில் எந்த சமூகத்தினருக்கேனும் பாதுபாப்பு ஏற்படுத்துவது அவசியமாயின், ஹிந்துக்களையும், முஸ்லீம்களையும் அந்தக் கோஷ்டியி லிருந்து விலக்கு செய்துவிடலாம். மொத்தத்தில் 10% இருக்கும் இதர சமூகத்தினருக்கே பாதுகாப்பு அவசியமாக இருக்கலாம்.

ஆனால் வகுப்பு உணர்ச்சி யுள்ளவர்கள் நியாயா நியாயத்தைக் கவனிப்பதில்லை. இப்பொழுது ஒரு சமூகத்தினர்மேல் மற்றொரு சமூகத்தினருக்கு இருந்துவரும் அவநம்பிக்கையைப் போக்கி எல்லா சமூகத்தினர் மனதிலும் நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டியது தான் முக்கியமான பிரச்சினை. இவ்வித பந்தோபஸ்தை ஏற்படுத்து வதில் ஒவ்வொரு சமூகமும் தனக்குச் செல்வாக்கை ஏற் படுத்திக்கொள்ள விரும்புகிறது. வகுப்பு வாதிகள் சிலர் பேசும் தோரணையிலிருந்து பிற சமூகங்கள் வாழ்வதை அவர்கள் விரும்ப வில்லையென்று நினைக்கவேண்டி வருகிறது. தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்துவதாலும், அவரவர்களுடைய வழியில் கல்விபெறச் செய்வதாலுமே நம்பிக்கையை அவர்களுடைய மனதில் ஏற்படுத்த லாம். அருவருக்கத் தக்கதும், ஆட்சேபகரமானதுமான தனித் தொகுதிகள், ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல் இவைகளால் இந்த நம் பிக்கை ஏற்படும்படி செய்துவிடமுடியாது. இது ஆயுதந்தாங்கியவர் கள் சிறிதுகாலம் யுத்தத்தை நிறுத்தியிருப்பது போலவே இருக்கும்.

முஸ்லீம்கள் இந்தியாவில் மொத்தத்தில் மைனாரிட்டியாக இருப் பதால் மெஜாரிட்டி சமூகத்தினர் தங்களை உபத்திரவிக்கக் கூடு மென்று நினைக்கின்றனர். இந்த சங்கடத்தை நிவர்த்தி செய்துகொள் ளுவதற்காக இந்தியாவின் சில பாகங்களிலேனும் தாங்கள் செல்வாக் குடையவர்களாக இருக்கவேண்டுமென்ற அபூர்வ யோசனையை அவர் கள் சொல்லுகின்றனர். அவர்களுடைய கோரிக்கையின்மீது நாங்கள் இங்கு தோஷங்கூறவில்லை. இப்பொழுது வகுப்பு உணர்ச்சி இருந்து வரும் நிலைமையில் இவ்விதம் அவர்கள் கோருவதற்குச் சிறிது ஆதா ரம் இருந்து வரலாம். ஆனால் நாங்கள் அஸ்திவாரமாக வைத்துக் கொண்ட விஷயத்திற்கும் இதற்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை. ஹிந்துக்கள் இந்தியாவில் மொத்தத்தில் மெஜாரிட்டியாக இருந்த போதிலும் வங்காளம், பஞ்சாப், ஸிந்து, பெலுஜிஸ்தானம், வட மேற்கு எல்லைப்புறமாகாணம் இவைகளில அவர்கள் சிறுபான்மை யோராக இருந்து வருகின்றனர். மொத்தத்தில் அவர்கள் பெரும் பான்மையாகவுள்ள சமூகத்தினராக இருந்தபோதிலும் இந்த மாகா ணங்களில் முஸ்லீம்களால் தங்களுக்குக் கஷ்டம் ஏற்படக்கூடு மென்று அவர்கள் பயப்படுகிறார்கள்.

ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் மீது செல்வாக்குடையதாக இருக்கும்படி விட்டுவைக்க முடியாது. இவ்வித நிலைமை ஏற்படாமல் தடுக்க முடியாமலிருக்கலாம். இருந்தாலும் ஒரு சமூகத்தினர் மீது மற்றொரு சமூகத்தினர் ஆதிக்கம் வகிக்கவாவது, அவர்களை உபத்திரவிக்கவாவது இடமில்லாமற் செய்வதே நமது முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். மத விஷயங்களிலும் படிப்பு விஷயத்திலும் பூரண சுதந்திரத்தைக்கொடுத்துவிடின், வகுப்புப் பிரச்சினை தீர்ந்து போய்விடும். ஆனால் அது சிலருக்குப் புலப்படாமலிருக்கலாம்.

## வகுப்புச் சபைகள்.

இந்த உத்தேசத்துடன் ஜீவாதாரமான உரிமைகள் சம்பந்தமான அத்தியாயத்தில் மனச்சாக்ஷி, மத விஷயங்களில் ஒவ்வொருவருக்கும் பூரண சுதந்திரத்தைக் கொடுப்பதற்காக 7 பிரிவுகளைச் சேர்த்திருக்கிறோம். அதிகப்படியாயுள்ள ஒவ்வொரு சமூகத்தின் கல்வி முதலியவைகளின் அபிவிருத்தி விஷயத்தில் வகுப்புச் சபைகளை ஏற்படுத்தலாமா வென்பதையும் நாங்கள் யோசித்தோம். எந்த மாகாணத்திலேனும் எந்த சமூகத்தினரேனும் 10 லக்ஷத்திற்கு அதிகமாக இருந்தால் சில காரியங்களை உத்தேசித்து அவர்கள் தனி வகுப்புச் சபையை வைத்துக் கொள்ளலாமா வென்பதுதான் அந்த யோசனை. அந்தந்தச் சமூகத்தினர் அந்தந்தச் சபைக்குப் பிரதிநிதிகளை எவ்விதம் தெரிந்தெடுக்க வேண்டு மென்பதை ஒவ்வொரு மாகாண சபையும் முடிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு சபையிலும் 25 அங்கத்தினர்களுக்கு அதிகப்படாமல் இருந்துவர வேண்டும். இந்த வகுப்புச் சபைகளின் ஜோலிகளாவன.—

1. ஆரம்பக் கல்வி, பாடசாலைகள், அனாதை விடுதிகள், தர்மசாலைகள், விதவாசிரமங்கள், விடுதலை ஆசிரமங்கள் இவைகளை மேன்பார்வை பார்த்தல்.

2. லிபிகளுக்கும் பாஷைகளுக்கும் ஆதரவளித்தல்.

இந்த ஸ்தாபனங்களுக்குக் கிராண்டுகள் கொடுக்க வேண்டுமென்றோ அல்லது ஸ்காலர் ஷிப்புகள் கொடுக்க வேண்டு மென்றோ

இந்த வகுப்புச் சபைகள் சிபார்சு செய்யலாம். சபையின் அனுமதியின்பேரில் இந்திய சட்ட சபையோ மாகாண சட்ட சபையோ இதைக் கொடுக்கலாம்.

இவைகள்தான் வகுப்புச் சபைகள் சம்பந்தமான யோசனைகள். இதர ஆபாஸமான வகுப்புவாரி யோசனைகளைக் காட்டிலும் இது சிறந்ததென்று நாங்கள் நினைத்தோம். ஆனால் இத்தகைய சபைகளை ஏற்படுத்துவது கூடாதென்று எங்களுடைய சகாக்களில் சிலரும் நாங்கள் கலந்து யோசித்த வேறு சிலரும் அபிப்பிராயப் பட்டார்கள். இந்தச் சபைகள் வகுப்பு வேற்றுமை உணர்ச்சி நீடித்திருக்கும்படி செய்து விடுமென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆகவே நாங்கள் இந்தப் பிரேரணையை நிராகரித்து விட்டோம். வகுப்புப் பிரச்சினையானது ராஜீயத் துறை சம்பந்தப்பட்ட வரையில் ஓட்டுத் தொகுதிகள், ஸ்தானங்களை ஒதுக்கி வைத்தல், ஸிந்துப் பிரிவினை, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பெலுஜிஸ்தானம் இவைகளில் ஏற்படுத்த வேண்டிய ஆட்சி முறை இவைகளைப் பொறுத்ததாகவே இருக்கிறது.

## வகுப்புவாரி ஓட்டுத் தொகுதிகள்.

தனித் தொகுதிகள் கெடுதலானவை யென்றும், அவைகளை ஒழித்துவிட வேண்டுமென்றும் எல்லோரும் அபிப்பிராயப் படுகின்றனர். வேறு சில அனுகூலங்களை உத்தேசித்து வகுப்புத்தொகுதிகளை விட்டுவிடச் சில முஸ்லீம்கள் சம்மத முடையவர்களாக இருந்த போதிலும் வகுப்புத்தொகுதிகள் இருந்து வருவது பெரிய அனுகூலமென்ற உணர்ச்சி முஸ்லீம்களுக்குப் பொதுவாக இருந்து வருகிறது. தேசீய உணர்ச்சி வளருவதற்கு தனித் தொகுதிகள் இடையூறானவை யென்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் சிறு பான்மையோராக உள்ள சமூகத்தினருக்குத் தனித் தொகுதிகள் இன்னும் கெடுதலானவை யென்பது பலருக்குத் தெரியவில்லை. இந்த முறையினால் மெஜாரிட்டி சமூகத்தினர் மைனாரிட்டி சமூகத்தை லக்ஷியம் செய்யவேண்டாத நிலைமையை அடைந்து விடுகின்றனர். தனித்தொகுதிகள் இருந்துவரின் சிறுபான்மையோர் பெரும்பான்மையோருடைய தயவை நம்பியிருக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விடுகிறார்கள். பெருப்பான்மையோர் ஜனத்தொகை

பல்த்தால் சிறுபான்மையோருடைய அபிப்பிராயத்தை உதாசீனம்செய்துவிடலாம். இப்பொழுது மூன்றுவது கக்ஷியினர் ஒருவர் இருந்து வருவதால் குழப்பமான நிலைமை ஏற்படுகிறதாயினும் தனித்தொகுதிகளில் இந்த அபாயம் இருந்துவருவது இப்பொழுது அனுபவத்திலேயே தெரிந்திருக்கிறது. ஆகவே தனித்தொகுதிகள் மெஜாரிட்டி சமூகத்திற்கே அனுகூலத்தை விளைவிக்கின்றன. அதே வகுப்புவாதிகள் இதன் மூலமாகக் கொழிக்கிறார்கள். மெஜாரிட்டி சமூகத்தினருக்கு இதனால் அனுகூலமேற்படுகிறது. ஆகவே சரியான பிரதிநிதித்துவ முறை ஏற்படுவதற்கு தனித் தொகுதி முறையை ஒழிக்க வேண்டும். கலப்புத் தொகுதிகளைத்தான் நாம் வைத்துக் கொள்ளலாம். ஸிலோன் அரசியல் கமிஷனும் அந்த தீவு முழுவதும் வகுப்புத் தொகுதிகளை ஒழித்து விடவேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

## எல்லைப்புற மாகாணமும் பெலுஜிஸ்தானமும்.

இந்த இரண்டு பிரதேசங்களையும் இதர பிரதேசங்களுக்குச் சரிமத்துவமான அந்தஸ்தில் வைக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தியாவின் எந்தப் பாகமும் ஜவாப்தாரியான ஆட்சிக்கு அருகதையுடையதல்லவென்று நாங்கள் சொல்ல முடியாது. சர்வகக்ஷி மகாநாடும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது. இதை ஆட்சேபிப்போர்களும் அதிகமாக இல்லை.

ஸிந்து பிரதேசப் பிரிவினையும், சட்டசபைகளில் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதும்தான் பாக்கியிலிருக்கின்றன. இவைகள் சமூக, ராஜீய சம்பந்தமுடைய கலப்புப் பிரச்சினைகளாக இருக்கின்றன. ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் விஷயத்தைப் பற்றி இன்னொரு அத்தியாயத்தில் பிரஸ்தாபித்திருக்கிறோம். ஸிந்து பிரிவினையையும், வகுப்பு சம்பந்தமாகவுள்ள பிரச்சினையையும் இங்கு ஆராய்ச்சி செய்கிறோம்.

## ஸிந்து பிரிவினை.

பல சம்பவங்களால் ஸிந்து பிரிவினை விஷயமானது ஒரு முக்கிய பிரச்சினையாகி விட்டது. அதைப் பிரிவினை செய்வதைச் சில வருஷங்கள் முன் ஆதரித்தவர்கள் அதை இப்பொழுது ஆட்சேபிப்

பதும், அதை அப்பொழுது ஆட்சேபித்தவர்கள் இப்பொழுது ஆத்ரிப்பதும் அதிசயமாக இருக்கிறது. இந்தச் சில்லரை விஷயத்தில் அகில இந்தியாவின் கவனமும் திரும்பியிருக்கிறது. இவ்விதம் திடீரென்று தகுந்த காரணமில்லாமல் பலருடைய மனோபாவம் மாறுதலடைந் திருப்பதிலிருந்து வகுப்பு உணர்ச்சியானது எவ்விதம் மனிதர்களுடைய புத்தி பேதளிக்கும்படி செய்து விடுகிற தென்பது வெளிப்படுகிறது. காங்கிரஸானது ஸிந்து பிரதேசத்தை தனி மாகாணமாகப் பிரித்து 8-வருஷ காலமாகிறது. இந்த எட்டு வருஷகாலத்தில் எவரும் இந்தப் பிரிவினையை ஆட்சேபிக்க வில்லை. வகுப்புக் காணங்களை இருதாத்தினரும் கூறுகையில் இருதரத்தினருடைய வாதங்களையும் உதறித் தள்ளி விட்டு நிஷ்பக்ஷபாதமாக இந்தப் பிரச்சினையைக் கவனிப்பதுதான் உசிதம். இருந்தாலும் துரதிர்ஷ்டவசத்தினால் இந்தப் பிரச்சினையானது ஜனங்களுடைய உணர்ச்சியைப் பொறுத்ததாகி விட்டது. அந்த உணர்ச்சியை அலக்ஷியம் செய்து விடுவதற்கில்லை. வகுப்பு வாரியாக மாகாணங்களை ஏற்படுத்துவதைத் தாங்கள் ஆட்சேபிப்பதாக ஸிந்து ஹிந்துக்களும் மற்றவர்களும் சொல்லுகிறார்கள். ஸிந்து பிரதேசத்தைப் பிரிவினை செய்யவேண்டு மென்று முஸ்லீம்கள் செய்துகொண்ட கோரிக்கையானது சந்துஷ்டிகரமான வழியில் செய்து கொள்ளப்படவில்லை யென்பது வாஸ்தவமே. வகுப்பு உணர்ச்சி காரணமாகவே இந்தக் கோரிக்கை செய்து கொள்ளப்பட்டு, இதற்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத வேறு பிரச்சினைகளுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஹிந்துக்களுடைய மனதில் இது சந்தேகத்தை யெழுப்பியிருப்பது நியாயமே. ஆனால் சரியான வழியில் ஒரு பிரேரணையைச் செய்யாததால் அதற்குள்ள மதிப்புப் போய்விடாது. வகுப்புக்கொள்கையை உத்தேசித்து ஸிந்து பிரதேசத்தைத் தனிமாகாணமாகப் பிரிவினை செய்யவில்லை. உள்ள நிலைமையையே நாங்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவானது இப்பொழுது இருந்துவருவதுபோல் பிரிவினை செய்யப்பட்டதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கின்றன. ஸிந்துப் பிரதேசத்தில் முஸ்லீம்கள் பெரும்பாலோராக இருந்து வருகின்றனர். அதைத் தனி மாகாணமாகப் பிரித்தாலும் பிரிக்காவிடினும் அது முஸ்லீம்கள் அதிகமாகவுள்ள பிரதேசமாகவே இருக்கும். பெரும்பான்மையோருடைய அபிப்பிராயத்தை மதிக்க முடியாதென்பது

சிய நிர்ணய சுதந்திரத்திற்கு விரோதமாக இருப்பதோடு, அந்த சமூகத்தினரின் துவேஷத்தையும் உண்டுபண்ணுவதாக இருக்கிறது. இந்தியா சமாதானமான வழியில் விடுதலை பெறவேண்டுமென்று விரும்பும் எந்த இந்தியரும் இத்தகைய நிலைமை ஏற்படுவதை ஆதரிப்பதற்கில்லை. வகுப்பு வாரியான மாகாணங்கள் இருக்கக் கூடாதென்று சொல்லும் கொள்கையை விரிவுப் படுத்திப் பார்க்கின் தனி தேசங்களே இருந்துவர முடியாதென்று சொல்ல வேண்டி வரும். ஸிந்து பிரதேசத்தைப் பிரிவினை செய்யக் கூடாதென்று சொல்லுவதற்கு பொருளாதார அம்சங்களே காரணங்களென்று நாங்கள் சந்தேகப் படுகிறோம். முஸ்லீம்களுக்கு ஆதிக்கம் ஏற்பட்டு விடின் தங்களுடைய பொருளாதார நிலைமை பாதிக்கப் படுமென்று ஹிந்துக்கள் பயப்படுகிறார்கள். இந்தப் பயத்திற்குக் காரணமில்லை. மற்ற இடங்களிலிருப்பவர்களைவிட ஸிந்துப் பிரதேச ஹிந்துக்கள் கெட்டிக் காரர்கள். அவர்கள் திரைகடலோடியும் திரவியம் தேடுவதை எல்லோரும் பார்க்கலாம். அவ்வித சுபாவ முள்ளவர்களுக்கு ஒருக்காலும் பயமில்லை. தவிரவும், மாகாண கவர்ன்மெண்டுக்கு ஒருவரை யறைக்குட்பட்டே அதிகாரமுண் டென்பதையும் மத்திய கவர்ன்மெண்டு இருந்து வருகிற தென்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்குப் பிறகும் பயமிருந்தால் அதற்குத் தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்துவதே பரிகார மாகும்.

ஆகவே, வகுப்புக் காரணங்களை உத்தேசித்தும் ஸிந்துப் பிரதேசத்தைப் பிரிவினை செய்ய வேண்டியது அவசியமென்று நாங்கள் நினைக்கிறோம். இதனால் ஒருவருக்குக் கஷ்டமும் மற்றொருவருக்கு லாபமும் ஏற்படுவதாக இருந்தாலும், அதை உத்தேசித்து தேசியப் பிரச்சினைக்கு எவ்வித இடையூறையும் விளைவிப்பது உசிதமாகாது. இதன் பொதுப்படையான அம்சங்களைப்பற்றி பிறகு விவாதிக்கிறோம். நாங்கள் மேலே குறிப்பிட்டுள்ள அபிப்பிராயங்களை ஸ்ரீமான் ஆனே ஒப்புக்கொள்ளாத போதிலும், நாங்கள் செய்திருக்கும் முடிவை ஒப்புக் கொள்ளுகிறார்.

## 3-வது அத்தியாயம்.

### வகுப்புப் பிரச்சினை (தொடர்ச்சி)

இனி ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் விஷயத்திற்கு வருகிறோம். இவ்விஷயத்தில் ஒவ்வொரு கக்ஷியினரும் பலமான உணர்ச்சியுடையவர்களாக இருந்துவந்தார்கள். அவர்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. பஞ்சாபிலும், வங்காளத்திலும் தாங்கள் மெஜாரிட்டியாக இருந்துவந்த போதிலும் தங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று முஸ்லீம்கள் வற்புறுத்தினர்கள். ஹிந்து மகாசபையும், சீக்கியர் லீக்கும் அவ்விதம் செய்வதை பலமாக ஆட்சேபித்தன. கமிட்டியார் கீழே குறிப்பிட்டுள்ளவைகள் உள்பட பலயோசனைகளைக் கவனித்தார்கள்:—

1. பெரும்பான்மையோருக்கும் சிறு பான்மையோருக்கும் ஜனத்தொகையின் பேரில் ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல்.

2. இதர ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களாக நிற்பதற்கு உரிமையுடன் பெரும்பான்மை சமூகத்தினருக்கு ஓரளவு ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல்.

3. வீதாசாரப் பிரதிநிதித்துவம்.

4. பஞ்சாபையும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தையும் ஒன்று சேர்த்து, ஸ்தானங்களை ஒதுக்கி வைக்காமலிருத்தல்.

5. ஒரு சமூகத்தினருக்கும் ஸ்தானங்களை ஒதுக்கி வைக்காமல், பிற்போக்காகவுள்ளசமூகத்தினர் கல்வித்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அபிவிருத்தி அடைவதற்கு அரசியல் அமைப்பிலேயே தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்தி விடுதல்.

புதிதாகச் சொல்லப்பட்ட சில யோசனைகள் உள்ளிட்டவைகளாக இருந்த இந்தப் பிரேரணைகளைப் பரிசீலனை செய்யுமுன் முக்கிய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளலாமென்று கமிட்டியார் அபிப்பிராயப்பட்டனர். ஜூன்மாதம் 21-ம் தேதி கமிட்டி அங்கத்தினர்களைச் சந்திப்பதற்கு இரண்டொரு பிரதிநிதி

களை அனுப்பிவைக்கும்படி ஜுன் மாதம் 11-ம் தேதி ஹிந்து மகா சபை, முஸ்லீம் லீக், சீக்கியர் லீக் இவைகளுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இந்த அழைப்புக்குத் திருப்திகரமான பலன் கிடைக்கவில்லை. அந்தத் தேதியில் எந்தப் பிரதிநிதியையும் அனுப்ப முடியாதென்று ஹிந்து மகாசபையின் காரியதரிசி எழுதி விட்டார். முஸ்லீம் லீகின் காரியதரிசி பதிலே எழுதவில்லை. சீக்கிய லீக் பிரதிநிதியை அனுப்பத் தயாராக இருந்தது. ஆனால் முஸ்லீம் லீகும் ஹிந்து மகாசபையும் பிரதிநிதிகளை அனுப்பாததால் சீக்கியர் லீக் பிரதிநிதியை அனுப்பவேண்டியதில்லையென்று எங்களுடைய சகாவான ஸர்தார் மங்களசிங் அபிப்பிராயப்பட்டார். நாங்கள் நேராக அழைத்திருந்த சிலரும் வரமுடியவில்லை. இருந்தாலும் டாக்டர் அன்ஸாரியை நாங்கள் கலந்து கொண்டோம்.

மேலே கண்ட பிரேரணைகளைப் பற்றி தொடர்ச்சியாக இரண்டு கூட்டங்களில் விவாதித்தோம். டாக்டர் அன்ஸாரியும் அந்தக் கூட்டங்களில் பிரசன்னமாக இருந்தார். முதலாவது யோசனை விஷயத்தில் ஒற்றுமையான அபிப்பிராயம் ஏற்பட முடியவில்லை. இதர நான்கு யோசனைகள் சம்பந்தமாக முடிவு செய்யப்பட்டது. எங்களுடைய சிபார்சைப் பற்றிப் பிரஸ்தாபிக்கு முன் இந்த நான்கு விஷயங்களையும் பற்றிப் பிரஸ்தாபிப்பது சவுகரியமாக இருக்கும்.

## ஸ்தானங்களை ஒதுக்கி வைத்தல்.

பஞ்சாபிலும், வங்காளத்திலும் மெஜாரிட்டியாக இருந்துவரும் சமூகத்தினருக்கு ஓரளவு ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, பாக்கி ஸ்தானங்களுக்கும் அவர்கள் அபேக்ஷகர்களை நிறுத்துவதற்கு அனுமதி கொடுக்கலாமென்று சொல்லப்பட்டது. இவ்விதம் சென்னையில் பிராமணரல்லாதாருக்காக ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த முறை இப்பொழுதும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. தங்களுடைய ஓட்டுப் பலத்தினால் சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதார் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டிருப்பதாலும், ஒதுக்குப் பிரிவை உபயோகிக்கவேண்டிய அவசியம் ஏற்படாததாலும், இவ்விதம் ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தது அனாவசியமென்று கருதப்படுகிறது. வங்காளத்திலாவது, பஞ்சாபிலாவது முஸ்லீம்கள் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்ற முடி

யாதென்று ஒருவரும் சொல்லவில்லை. இருந்தாலும் முஸ்லீம்கள் பெரும்பான்மையான ஸ்தானங்களைத் தாங்கள் கைப்பற்ற முடியாமற் போய்விடு மென்று பயப்படுகின்றனர். இந்தப் பயத்திற்கு ஆதார மிருப்பதாக நாங்கள் நினைக்கவில்லை. மெஜாரிட்டி ஸ்தானங்களை அவர்கள் கைப்பற்ற முடியாதபோதிலும், அவர்கள் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மொத்த ஸ்தானங்களில் 100க்கு 45-ஐ அவர்கள் கைப்பற்றிவிடக் கூடுமாயின், அவர்களுக்காக சில ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டிய அவசிய மில்லாமற் போய்விடுகிறது. இதர ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களை நிறுத்துவதற்கு உரிமையுடன் மெஜாரிட்டி சமூகங்களுக்கும் மைனாரிட்டி சமூகங்களுக்கும் சில ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை. ஆனால் வங்காளத்திலும், பஞ்சாபிலும் அவ்விதம் செய்ய வேண்டியது அவசியமில்லை யென்றும், அவ்விதம் செய்வதால் நிலைமை எவ்விதத்திலும் மாறுதலடைந்துவிட வில்லை யென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

## வீதாசாரப் பிரதிநிதித்துவம்.

அடுத்த பிரேரணை வீதாசாரப் பிரதிநிதித்துவம். இது சம்பந்தமாக யோசனை சொல்லுவதற்கு சர்வ கக்ஷி மகாநாடு நியமித்த கமிட்டியானது ரிபோர்ட்டு செய்யவில்லை. சில தனிப்பட்ட நபர்கள் மட்டில் குறிப்புகளை அனுப்பியிருந்தார்கள். ஸர்தார் மங்களசிங் இந்தப் பிரேரணையை ஆதரித்தார். மற்றவர்கள் இந்த முறையை ஆதரித்த போதிலும், இந்தியாவின் தற்போதைய நிலைமையில் அனுபவத்தில் இது சாத்தியமானதாக இராதென்று அபிப்பிராயப் பட்டார்கள். இந்த முறை எங்களுக்குப் பிடித்த மானதாகவே இருக்கிறது. பல சமூகங்களின் பயத்தைப் போக்குவதற்கு இதுவே திருப்திகரமான ஏற்பாடென்று நாங்கள் கருதுகிறோம். சிறுபான்மையினதாகவுள்ள ஒவ்வொரு சமூகத்திற்கும் இதில் இடம்ஏற்படுகிறது. நாளடைவில் எல்லாம் சரிப்பட்டு விடும். எதிர்காலத்தில் வீதாசாரப் பிரதிநிதித்துவமே திருப்தி கரமான ஏற்பாடாக இருக்கும்.

ஆனால் இப்பொழுதே இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவது எந்த அளவு சாத்தியம்? இது சிக்கலானதென்றும், ஒட்டர்களில் பெரும்பாலோர் படிப்பறிவு இல்லாதவர்களாக இருக்

கிருர்களென்றும் சொல்லப்படுகிறது. இது விரும்பத்தக்க முறையாக இருந்த போதிலும், ஓட்டர்கள் இந்த முறையின் விசேஷத்தைத் தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமையை அடையும் வரையில் இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது அசாத்திய மென்றும் சொல்லப்படுகிறது. இதை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம். இதில் கஷ்டம் அதிகமிருக்கிறது. இருந்தாலும் இதிலுள்ள கஷ்டம் மிகைப்படுத்திக் கூறப்படுகிறதென்றே நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். வீதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் ஓட்டர்கள் அதிமேதாவிகளாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. தேர்தல் முடிவை வெளியிடும் உத்தியோகஸ்தர்களும் ஓட்டுகளை ஒரு தலைப்பிலிருந்து மற்றொரு தலைப்புக்கு மாற்றுகிறவர்களும் புத்திசாலிகளாகவும் விஷயமறிந்தவர்களாகவு மிருக்கவேண்டும். இவ்விதம் ஓட்டுகளைத் திருப்திகரமாக மாற்றி எண்ணக்கூடிய இந்தியர்கள் பலர் இருப்பது வாஸ்தவமே. ஓட்டர்கள் சம்பந்தப் பட்டவரையில் யோக்கியதைக்குத் தகுந்தபடி வரிசைக் கிரமமாக ஓட்டுக்கொடுக்க அவர்களுக்கு புத்திசாலித்தனம் வேண்டுமென்பது வாஸ்தவமே. ஒரு அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க வேண்டும் தொகுதியிலும் ஓட்டர்களுக்கு ஓரளவு புத்திசாலித்தனம் வேண்டும். ஜனநாயக முறை அதிக செல்வாக்குடையதாக இருந்துவரும் இங்கிலாந்திலும் இந்த சாமர்த்தியம் ஓட்டர்களிடம் இல்லாமல் தானிருக்கிறது. கொள்கைகளை அனுசரித்து ஓட்டுக்கொடுக்காமல் சில்லறைக் காரணங்களையும், ஆட்சேபகரமான காரணங்களையும் உத்தேசித்து ஓட்டுக்கொடுத்து விடுகிருர்கள். சமீபத்தில் அங்கு மாஜி கெயிஸரைத் தூக்கிலிடவேண்டுமா வென்பதைப் பற்றியாவது, தப்புக் கையெழுத்திட்ட கடிதத்தைக்கொண்டாவது தேர்தல் நடந்திருக்கிறது. ஒரு ஏகாதிபத்தியத்தை ஆளவேண்டியவர்கள் இத்தகைய பிரச்சினைகளின்பேரில் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பது ஜனநாயக முறையைப்பற்றி அதைரியத்தை உண்டுபண்ணக் கூடியதாக இருக்கிறது. இந்திய ஓட்டர்களுக்கு, ஆங்கில ஓட்டர்களுக்கு இருந்துவரும் அவ்வளவு அனுபவம் இருந்துவரவில்லை. இவைகள் ஜனநாயக ஆட்சிக்கு விரோதமான காரணங்களேயன்றி வீதாசாரப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதமானவைகளன்று.

எழுதப்படிக்கத் தெரியாத ஓட்டர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்த முறையில் ரகசியம் இல்லாமற் போய்விடுமென்று சொல்லப்படு

கிறது. ஒரே நிறமுள்ள மூன்று பெட்டிகளில் பிரத்தியேக அடையாளங்களைப்போட்டு, அதில் வரிசைக் கிரமத்தை ஏற்படுத்தி விடுவது இந்த ஆட்சேபத்தைப் போக்கிவிடும். இப்போது நடந்து வரும் தேர்தல்களிலும் எழுதப்படிக்கத் தெரியாத ஓட்டர்கள் விஷயத்தில் இந்த ஆட்சேபம் பொருத்த முடையதாக இருக்கிறது. மால்டாவில் எழுதப் படிக்கத்தெரியாத ஓட்டர்கள் பெரும்பாலோராக இருந்தும் வீதாசாரப் பிரதிநிதித்துவ முறை அங்கு திருப்திகரமாக அமுலிலிருந்து வருகிறது. ஆனால் சிறிய தீவாகிய மால்டாவையும் கோடிக்கணக்கான ஜனங்களுள்ள இந்தியாவையும் ஒப்பிடுவது பொருத்தமாக இராது.

இந்தியாவில் வீதாசார முறையைப் பரீக்ஷை செய்து பார்ப்பதில் அதிகக் கஷ்டங்களில்லை யென்று கமிட்டி அங்கத்தினர்களில் பெரும்பாலோர் அபிப்பிராயப் படுகின்றனர். இதற்கு சில ஆட்சேபங்கள் இருப்பது வாஸ்தவமே. ஆனால் நாங்கள் பரிசிலனை செய்த முறையிலும் ஆக்ஷேபகரமான அம்சம் இல்லாமலிருக்க வில்லை. இவைகளில் சிலவற்றை அனுஷ்டிப்பதால் அதிக சங்கடங்கள் விளையக் கூடும். எங்களுடைய சகாக்களில் பலர் இப்பொழுது வீதாசாரப் பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்துவது உசிதமாக இராதென்று அபிப்பிராயப்படுகின்றனர். ஆகவே அதை நாங்கள் இப்பொழுது சிபார்சு செய்யவில்லை.

## பஞ்சாபையும் எல்லைபுற மாகாணத்தையும் இணைத்தல்.

பஞ்சாபுடன் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தை இணைத்துவிடலா மென்றும், அவ்விதம் செய்துவிடின் ஸ்தானங்களை ஒதுக்க வேண்டியது அவசியமில்லை யென்றும் சொல்லப் படுகிறது. இந்தப் பிரேரேபணையில் எங்களுக்கு எவ்வித ஆக்ஷேபமு மில்லை, ஆனால் பல கக்ஷியினருக்கும் இது திருப்திகரமானதாக இருக்குமா வென்பது எங்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் ஒப்புக்கொள்வதாக இருந்தால் எங்களுக்கு ஆக்ஷேபமில்லை. இதில் விசேஷ தர்மம் எதுவுமில்லை. இதை அங்கீகரிப்பதோ நிராகரிப்பதோ பல சமூகங்களின் அபிப்பிராயத்தைப் பொறுத்திருக்கிறது. எங்களுடைய சகாவான ஸர்தார் மங்களசிங் இந்தப் பிரேரணையை ஒப்புக்கொள்ள

வில்லை. வேறு சிலரும் இதை ஒப்புக்கொள்ள வில்லை. ஆகவே இது சம்பந்தமாக நாங்கள் எவ்விதச் சிபார்சும் செய்யவில்லை.

## மற்றொரு யோசனை.

பஞ்சாப், எல்லைப்புற மகாணம், பெலுஜிஸ்தானம், ஸிந்து இவைகளை ஒன்று சேர்த்து விடலாமென்றும், சிறுபான்மையோர் விரும்பினாலன்றி ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டியதில்லை யென்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பிரேரணையை நாங்கள் கவனிக்க முடியாது. இவ்விதம் செய்துவிடின் ஒரு பெரிய மாகாணம் ஏற்படுவதாக இருக்கும்.

பஞ்சாபில் எந்த சமூகத்தினருக்கும் ஸ்தானங்களை ஒதுக்கி வைக்க வேண்டியதில்லையென்றும், பிற்போக்கான வகுப்பினர் கல்வித்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் முற்போக்கடைவதற்கு அரசியல் அமைப்பிலேயே தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்தி விடவேண்டுமென்றும் மற்றொரு யோசனை சொல்லப்பட்டது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்வதாக இருந்தால் எங்களுக்கும் சம்மதமே. ஆனால் இந்த யோசனையை இப்பொழுது எல்லா சமூகங்களும் ஏகோபித்து ஒப்புக்கொள்ளுவது சாத்தியமில்லை. அவர்கள் இதை ஒப்புக்கொள்ளுவதாக இருந்தால் வகுப்புப் போராட்டமே இப்பொழுது இருந்துவராது. நாங்கள் தயாரித்திருக்கும் அரசியல் அமைப்பில் சிறுபான்மையோராகவுள்ள சமூகத்தினருக்குத் தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்தி யிருப்பதுடன் பிற்போக்காகவுள்ள வகுப்பினர் கல்வித்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அபிவிருத்தி அடைவதற்கு பல வசதிகளையும் ஏற்படுத்தி யிருக்கிறோம். இத்தகைய ஏற்பாடுகளின் மூலமாக ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல், இதர வகுப்புச் சலுகைகள் இவைகளை ஒழித்து விடக்கூடுமாயின் இன்னும் சில பாதுகாப்புகளையும் ஏற்படுத்துவதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை.

## ஜனத்தொகையின்மேல் ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல்.

மெஜாரிட்டிகளுக்கும் மைனாரிட்டிகளுக்கும் ஜனத் தொகைக்குத் தகுந்தபடி ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் முக்கியமான பிரச்

சினையை இனிக் கவனிப்போம். எவ்விதம் வகுப்பு வாரி ஓட்டுத் தொகுதிகள் ஆட்சேபகரமானவைகளோ அவ்விதமே எந்த சமூகத்திற்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதும் ஆட்சேபகரமானதென்பதை ஒருவரும் எப்பொழுதும் ஆட்சேபித்ததில்லை. ஆனல் உசிதா உசிதத்தை அனுசரித்த பல்வேறு காரணங்களால் மத்திய கால ஏற்பாடாக அது சிபார்சு செய்யப்பட்டது. இந்த மத்திய காலத்திற்குள் ஒரு சமூகத்தினருக்கு மற்றொரு சமூகத்தினரிடம் இருந்துவரும் அவ நம்பிக்கை அறவே ஒழிந்துவிடா விடினும் ஓரளவாவது குறைந்து விடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. லக்ஷ்மண புரி ஒப்பந்தத்தை ஏற்பாடு செய்கையிலும் இத்தகைய வாதம் உபயோகிக்கப்பட்டது. அப்பொழுது இருந்துவந்த நம்பிக்கைக்கு ஆதாரமில்லையென்பது 12 வருஷ அனுபவத்தில் தெரிந்துவிட்டது. சென்ற சில வருஷங்களாக ஏற்பட்டிருக்கும் வகுப்புத் துவேஷங்களுக்கு வகுப்புத் தொகுதிகளை வைத்துக்கொண்டிருப்பது காரணமாக இருக்கலாம்; அல்லது காரணமாக இல்லாமலிருக்கலாம். ஆனல் ஆதியில் எதிர்பார்த்தபடி பல சமூகங்களுக்குள்ளும் ஒற்றுமை ஏற்படுவதற்கு அது உதவியாக இருக்கவில்லை. மைனரிட்டியாகவோ அல்லது மெஜாரிட்டியாகவோவுள்ள எந்த சமூகத்திற்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பது வகுப்பு வாதமாகும். அதற்கும் வகுப்புவாரி ஓட்டுத் தொகுதிகளை வைத்திருப்பதற்கும் எவ்வித வித்தியாசமுமில்லை.

## மெஜாரிட்டி சமூகங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைத்தல்.

மெஜாரிட்டியாகவுள்ள சமூகங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதை விவகாரத்தை ஒட்டியும், அனுபவத்தை அனுசரித்தும் பலமாக ஆட்சேபிக்கப்படுகிறது. மற்ற சமூகங்களைவிட சிறிது ஜனத்தொகையில் முஸ்லீம்கள் அதிகமாக இருக்கும் பஞ்சாபிலும், வங்காளத்திலும் தான் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. வேறு எந்த மாகாணத்திலும் இருந்துவரும் எந்த மெஜாரிட்டி சமூகத்தினருக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று கேட்கப்படவில்லை. ஆகவே பஞ்சாப், வங்காளம் இவைகளைப்பற்றிய பிரச்சினையையே நாங்கள் கவனிக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களைக் காட்டிலும் பஞ்சாபிலும் வங்காளத்திலும் எந்த சமூகத்தினரும் பிற சமூகத்தினர்மீது ஆதிக்கம் பெறமுடியாதபடி எல்லா சமூகங்களும் நிரவியிருப்பது சந்தோஷகரமான காரியமென்று நாங்கள் நினைக்கிறோம். ஒரு சமூகமானது இரண்டு மாகாணங்களிலும் மெஜாரிட்டியாக இருந்தபோதிலும், பிற சமூகங்கள் அந்த மாகாணங்களில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு சக்தியுடையவைகளாக இருக்கின்றன.

மெஜாரிட்டி சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பது விவகாரத்திற்கு ஒத்ததன்று. அது மெஜாரிட்டியும் மைனாரிட்டியும் அபிவிருத்தி அடைய முடியாமல் ஏற்படுத்தும் தடையாகும். ஆகவே, தேசீய முற்போக்கும் அதனால் அந்த அளவு தடைப்படும். தவிரவும், மெஜாரிட்டி சமூகத்தினருக்கும் இது கெடுதலை விளைவிக்கும். அவர்கள் தங்களுடைய சொந்த சக்தியைக் கொண்டு தங்களுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளாமல் சட்டத்தின் மூலமாக அதைக் காப்பாற்றிக் கொள்ளுவது விரும்பத்தக்கதன்று. இவ்விதம் சிறிது காலம் மெஜாரிட்டி சமூகத்திற்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைத்திருந்தால், அந்த சமூகத்திற்கு தன் நம்பிக்கையும், அது அபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய ஊக்கமும் இல்லாமற் போய்விடும். விதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அனுஷ்டித்தாலன்றி சாதாரணமாக மெஜாரிட்டியாகவுள்ள சமூகத்தினர் தங்களுடைய ஜனத்தொகையை அனுசரித்துக் கிடைக்கவேண்டியதைவிட அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றிவிடுகிறார்கள். மெஜாரிட்டி சமூகத்தினர் பல தொகுதிகளில் செல்வாக்கான நிலைமையில் இருந்து வருவதால் அவர்கள் இவ்விதம் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றுவது சாத்தியமாகிறது. இவ்விதம் மெஜாரிட்டி சமூகத்தினர் தங்களுக்குரியதைவிட அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றி மைனாரிட்டி சமூகங்களின் உரிமையில் ஆக்கிரமித்து விடுவதாலேயே மைனாரிட்டி சமூகங்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

மெஜாரிட்டியாகவுள்ள சமூகத்தினருக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதோ, அல்லது அவர்களுக்கு எத்தனை ஸ்தானங்களென்று வரையறுப்பதோ, உண்மையான பிரதிநிதித்துவ ஆட்சி முறைக்குப் பொருத்தமானதாகாது. இதனால் வாக்காளர்கள் தங்க

ளுடைய நம்பிக்கைக்குப் பாத்திர மானவர்களைத் தெரிந்தெடுக்க முடியாமற் போய்விடுகிறது. தவிரவும், சட்ட சபைக்குள்ளும் புறம்பும் இதர சமூகங்கள் ஒன்று சேர்ந்து கொள்ளுவதற்கும் இது இடையூறாகி விடுகிறது. இதனால் வகுப்பு வேற்றுமைகளுக்கு அதிக ஜீவிய காலம் ஏற்பட்டு விடுகிறது. வகுப்பு உணர்ச்சி நாட்டில் தோன்றியிருப்பதற்கு எல்லோரும் வருந்துகிறார்கள். அதைக்கூடிய சீக்கிரத்தில் ஒழித்துவிடவேண்டுமென்றும்எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் ஒற்றுமையைப்பற்றி வெறும் பேச்சுப் பேசிக்கொண் டிருப்பதால் அது போய்விடாது. ஜனங்களுடைய கவனத்தை வேறு வழியில் திருப்பினால், அவர்களுடைய வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகளில் அவர்கள் கவனத்தைத் திருப்பினால் தான் வகுப்பு உணர்ச்சி ஒழியும். ஆகவே, இவ்விதம் புதிய வழிகளில் ஜனங்களுடைய கவனம் திரும்பும்படி செய்ய வேண்டும். அவ்விதம் திரும்புவதை வேறு எதுவும் வழி மறிக்காமலும் ஏற்பாடு செய்ய வேண்டும். மெஜாரிட்டி சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதும், அவர்களுக்கு இத்தனை ஸ்தானங்களென்று வரையறுப்பதும் வேறுவழியில் ஜனங்களுடைய கவனம் திரும்ப முடியாமற் செய்துவிடும்.

மெஜாரிட்டி சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கக் கூடிய முறைகளைப் பரிசீலனைசெய்து பார்ப்பின் அது பிரதிநிதித்துவ ஆட்சி முறைக்கு விரோதமாக இருப்பதோடு, ஜவாப்தாரியான ஆட்சி முறையின் அடிப்படையான தர்மத்திற்கும் விரோதமாக இருப்பது புலப்படும்.

## மாண்ட்போர்டு முறை.

சென்னையிலும், பம்பாயிலும் மிகப்பெரும் பான்மையோராக இருந்துவரும் பிராமணரல்லாத சமூகத்தினருக்கு மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தில் ஒரு வழியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஜனத்தொகையில் 2½%-க்கு அதிகமாக இல்லாத பிராமணர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக ஜனத்தொகையில் 96% சென்னை மாகாணத்தில் இருந்து வரும் பிராமணரல்லாதார் சவுத்பரோ கமிட்டியாருடைய சிபார்சின் பேரில் சென்னை சட்டசபையில் பிரதிநிதி ஸ்தானங்கள் 98-ல் தங்களுக்கு 28 ஸ்தானங்களைக் கவர்ன்மெண்டார் ஒதுக்கி வைக்கும்படி

செய்துகொண்டனர். இந்த 28 ஸ்தானங்களை அவர்களுக்கு ஒதுக்கி வைப்பதற்காக ஒரே ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுக்கும் இரண்டு பிராமணரல்லாதார் தொகுதிகளை ஏற்படுத்திவிட்டு, பாக்கி 25 தொகுதிகளும் ஒவ்வொன்றும் மூன்று பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். இந்தத் தொகுதிகளில் சென்னைத் தொகுதியில் இருவர் பிராமணரல்லாதாராக இருக்க வேண்டுமென்றும், மற்றத் தொகுதிகளில் ஒருவர் பிராமணரல்லாதாராக இருக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இது சம்பந்தமாகப் பின்வரும் விதி இயற்றப்பட்டது:—

"ஓட்டுகளைக் கணக்கிட்டு முடிந்ததும் ரிட்டர்னிங் ஆபீஸர் (தேர்தல் முடிவை அறிவிக்கும் உத்தியோகஸ்தர்) அதிகப்படியாக ஓட்டுப்பெற்றிருக்கும் அபேக்ஷகர் அல்லது அபேக்ஷகர்கள் தெரிந்தெடுக்கப் பட்டுவிட்டதாக அறிவிக்கவேண்டும். ஆனால் ஒரு ஸ்தானமோ அதற்கதிகமான ஸ்தானங்களோ எந்த சமூகத்தினருக்கேனும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அதிகப்படியாக ஓட்டுப் பெற்றுள்ள பிராமணரல்லாத அபேட்சகர் அல்லது அபேக்ஷகர்கள் தெரிந்தெடுக்கப் பட்டுவிட்டதாக அறிவிக்க வேண்டும்."

இதை நிரூபணம் செய்வதற்காக சென்னை நகரத் தொகுதியை எடுத்துக்கொள்ளுவோம். இந்தத் தொகுதிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள 6 (4) ஸ்தானங்களில் 2 ஸ்தானங்கள் பிராமணரல்லாதாருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. முதல் நான்குக்குள் வரக்கூடிய அளவு எந்த பிராமணரல்லாத அபேக்ஷகரும் ஓட்டுப் பெறவில்லை யென்று வைத்துக்கொள்ளுவோம். இந்த விதியின்படி இரண்டு பிராமணரல்லாத அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படும். இதற்காக ஓட்டுவரிசைக் கிரமத்தில் 3, 4-வதாக இருக்கும் அபேக்ஷகர்கள் இவர்களுக்காக விட்டுக் கொடுத்துவிட வேண்டியிருக்கும். ஆகவே, வாக்காளர்களில் பெரும்பாலோராகவுள்ள பிராமணரல்லாதாருக்கு அந்த இரண்டு பிராமணரல்லாத அபேக்ஷகர்களிடம் நம்பிக்கையில்லாத போதிலும் அவர்களுடைய அபிப் பிராயத்திற்கு விரோதமாக அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு விடுகிறார்கள். இந்த இரண்டு பிராமண ரல்லா

தாரும் யாருடைய பிரதிநிதிகள்? வாக்காளர்களில் பெரும்பாலோருடைய பிரதிநிதிகளாக அவர்கள் இருக்கவில்லை. பிராமணரல்லாத வாக்காளர்களில் பெரும்பாலோருடைய பிரதிநிதிகளாகவும் அவர்கள் இல்லாமலிருக்கலாம். எவ்வித தர்மத்தையும் அனுசரித்ததாக இல்லாத ஒரு விதியின் மூலமாக அவர்கள் சட்டசபையில் ஸ்தானங்கள் பெற்றுவிடுகிறார்கள். நல்ல வேளையாக சென்னை பிராமணரல்லாதார் பயந்ததற்கு ஆதாரமில்லை யென்பது அனுபவ பூர்வமாக வெளிப்பட்டுவிட்டது. இந்த விதியைப் பிரயோகிக்கவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

98 அங்கத்தினர்கள் அடங்கிய சபையில் இத்தகைய கோஷ்டியைச் சேர்ந்த 28 மெம்பர்கள் இருப்பதே கெடுதலானது. ஆனால் பெரும்பாலோர் இவ்விதம் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களிலிருந்து மந்திரி சபையும் அமைக்கப்பெறின் ஜவாப்தாரியான ஆட்சியானது வெறும் வேஷமாகிவிடும்.

## ஸிந்து ஒப்பந்த முறை.

ஸிந்து ஒப்பந்தத்தைத் தயார் செய்தவர்கள் மற்றொரு வழியில் மெஜாரிட்டி சமூகங்களுக்கும் மைனாரிட்டி சமூகங்களுக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதற்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையானது அவர்கள் தயாரித்துள்ள ஒப்பந்தத்தின் 5-வது ஷரத்தாக இருக்கிறது. அது வருமாறு:—

> "கலப்புத் தொகுதி முறை உண்மையில் பிரயோஜன முள்ளதாக இருக்கும்படி செய்வதற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் பொதுவானதாக ஒரு ஓட்டர் ஜாப்தா இருந்து வரவேண்டும். முஸ்லீம் பிரதிநிதிகளுக்கும் முஸ்லீம்கள் அல்லாதவர்கள் பிரதிநிதிகளுக்கும் வெவ்வேறாக ஒரே தேதியில் தேர்தல் நடைபெற வேண்டும். இதன் மூலமாக எல்லா வாக்காளர்களுக்கும் இரண்டு தேர்தல்களிலும் ஓட்டுக்கொடுக்க சுதந்திர மேற்படும். இதன் மூலமாகத் தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் அந்தத் தொகுதிவாக்காளர்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களாக இருப்பார்கள்."

இந்த முறையின் மூலமாகத் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அந்தத் தொகுதி வாக்காளர்கள் அனைவராலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருப்பார்களென்று சொல்லப்படுகிறது. இதற்காக வெவ்வேறாக தேர்தலை நடத்தவேண்டியதில்லை. ஒரே தேர்தலில் முஸ்லீம் ஓட்டர்களும் முஸ்லீம்களல்லாத ஓட்டர்களும் வாக்குக் கொடுக்கலாம். ஹிந்து, முஸ்லீம் அபேக்ஷகர்களுக்குள் போட்டி ஏற்படாமல் தடுத்து, அவர்களுடைய ஜனத்தொகைக்குத் தகுந்தபடி ஸ்தானங்கள் கிடைக்கும்படி செய்வது இதன் உத்தேசமென்று தெரிகிறது. இத்தகைய போட்டியானது ஒவ்வொரு வாக்காளரும் தமது அபிப்பிராயப்படி ஓட்டுச் செய்வதற்கு அவசியமாக இருப்பதோடு, ஒரு ஹிந்து ஓட்டர் இந்த ஏற்பாட்டினால் ஒரு முஸ்லீம் அபேக்ஷகருக்கு ஓட்டுக்கொடுக்க முடியாமற் போய்விடுகிறது.

ஒவ்வொரு வகுப்பு அபேக்ஷகருக்கும் தனித்தனியே ஓட்டு செய்வதானது இருதாத்தினருக்கும் ஏக காலத்தில் ஓட்டுக்கொடுப்பது போலாகாது. தவிரவும், மெஜாரிட்டி சமூகத்தினர் தங்களுடைய இஷ்டப்படி நடப்பதாகச் சொல்லும் மைனாரிட்டி சமூக அபேக்ஷகர் தெரிந்தெடுக்கப்படும்படி செய்வதும் சாத்தியப்பட்டுவிடும்.

## இரண்டு முறைகளும் அதிருப்திகரமானவைகளே.

ஆகவே, மேலே குறிப்பிட்ட இரண்டு முறைகளும் திருப்திகரமானவைகளன்று. மூன்றாவது வழி தனி வகுப்புத் தொகுதிகளை ஏற்படுத்துவது. இதைப்பற்றி ஏற்கெனவே எங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறோம். தேர்தல் காலத்தில் ஒரு சமூகமானது மற்றொரு சமூகத்தை நம்பியிருக்கும்படி செய்வதற்காக வகுப்புத் தொகுதிகளை ஒழித்து விடுவதன் மூலமாக சமூக ஒற்றுமையை வளர்த்துவர உத்தேசிக்கப்படுகிறது. கலப்புத் தொகுதியில் பெரும்பான்மையான சமூகத்திற்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பின் வகுப்பு ஒற்றுமை வளருவதற்கு இடமில்லாமற் போய்விடும். ஏனெனில், மெஜாரிட்டி சமூகங்களுக்கு எப்பொழுதும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஸ்தானங்கள் கிடைக்குமென்ற நம்பிக்கை இருந்துகொண்டிருக்கும். எந்த சமூகத்தையேனும் சேர்ந்த அபேக்ஷகர் மற்றொரு சமூகத்தினர் தமக்கு ஓட்டுக் கொடுக்கும்படி கேட்

பதில் சிறிது அனுகூலம் விளையலாம். ஆனால் வகுப்புத் துவேஷம் அதிகமாக இருக்கும் சமயத்தில் இது சாத்தியப்படாது.

மெஜாரிட்டி சமூகத்திற்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதே மூச்சில் ஜவாப்தாரியான ஆட்சியையும் கேட்பது சாத்தியமில்லை. ஜவாப்தாரியான ஆட்சிமுறையில் நிர்வாகிகள் சட்ட சபைகளுக்கு ஜவாப்தாரிகளாகவும், சட்ட சபை அங்கத்தினர்கள் வாக்காளர்களுக்கு ஜவாப்தாரிகளாகவு மிருக்க வேண்டும். நிர்வாகிகளுக்கு ஆதரவாகவுள்ள மெஜாரிட்டியார் ஸ்தானங்களை ஒதுக்கி வைத்ததன் மூலமாக இடம் பெற்றவர்களாக இருந்தால் அவர்கள் ஜனங்களின் பிரதி நிதிகளாக இருக்க மாட்டார்கள். அவர்கள் நடத்திவைக்கும் ஆட்சி ஜனநாயக ஆட்சியாகவுமிருக்க முடியாது. மெஜாரிட்டி சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பது வாக்காளர்களுடைய அபிப்பிராயத்தை லக்ஷியம் செய்யாமல் தங்களுடைய மனம்போல் ஆட்சியை நடத்தி வருவதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுப்பதாகிவிடும். இது ஜனநாயக ஆட்சி முறைக்கு விரோதமானது. மைனாரிட்டி சமூகத்தினர் இதனால் செல்வாக்கடைய முடியாமற் போய்விடும்.

## தேர்தல்களிலுள்ள குறைகள்.

பிரதி நிதித்துவ ஆட்சி முறையை அனுசரித்த தர்மங்களை ஒட்டி மேலேகண்ட அபிப்பிராயத்தை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அந்த தர்மங்களில் பல குறைகளிருப்பது அனுஷ்டானத்தில் தெரிந்திருப்பதையும், ஜனநாயக முறையையே பலர் ஆட்சேபிப்பதையும் நாங்கள் அறிவோம். இந்தக் கமிட்டியில் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி கவனிப்பதற்கில்லை. இப்பொழுது இருந்துவரும் நிலைமையில் முற்போக் கடைந்துள்ள தேசங்களில் அனுஷ்டானத்தி லிருந்து வரும் தேர்தல் தர்மங்களையே அங்கீகரிக்க வேண்டும். நாங்கள் சிபார்சு செய்திருக்கும் தேர்தல் முறையானது மெஜாரிட்டியாருடைய ஆட்சியை ஏற்படுத்தாம லிருப்பதையும் நாங்கள் அறிவோம். சமீபத்தில் நடந்த பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் மைனாரிட்டியாருடைய ஆதரவுள்ளவர்கள் பெரும்பான்மையோராகத் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். ஓட்டுப் பலத்தில் உள்ள பிசகுகளும், வேண்டாதவர்கள்மீது ஓட்டுகளை வியர்த்தம் செய்ததுமே இதற்குக் காரணம். வீதாசாரப் பிரதி நிதித்துவ முறைதான் சரியான பரிகாரம். ஆனால்

நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள காரணங்களை உத்தேசித்து அந்த முறையை இப்பொழுது சிபார்சு செய்யவில்லை.

## சில புள்ளி விவரங்கள்.

மெஜாரிட்டி சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பது சரியான கொள்கையாகுமா வென்பதை இதுவரையில் பரிசீலனை செய்தோம். ஆனால் இப்பொழுது இருந்துவரும் நிலைமையானது அவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டியதில்லை. யென் பதற்குத் தகுந்த காரணமாக இருக்கிறது. சென்ற ஜனகணிதக் கணக்கிலிருந்து முஸ்லீம்கள் பெரும்பான்மையோராக இருந்து வரும் பஞ்சாப், வங்காளம் இந்த இரண்டு மாகாணங்கள் சம்பந்தமாக பண்டித ஜவஹரிலால் நேரு மிகுந்த சிரமப்பட்டு எடுத்திருக்கும் புள்ளி விவரங்களை 1, 2, அனுபந்தங்களாக இந்த யாதாஸ்துடன் சேர்த்திருக்கிறோம். இந்த இரண்டு மாகாணங்களிலுமிருந்துவரும் முஸ்லீம்கள் பயப்படுவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை யென்றும், அவர்களுடைய மெஜாரிட்டி பலத்திற்குத் தகுந்த பிரதிநிதித்துவம் ஏற்படுவதற்கு இதரவழிகளைக் கற்பித்துக்கொடுக்க வேண்டியது அவசியமில்லை யென்றும், இந்தப் புள்ளி விவரங்கள் நிரூபணம் செய் கின்றன. முஸ்லீம்களுக்குப் போதிய பிரதிநிதித்வம் கிடைக்கா தென்றும், அவர்கள் ஜனத்தொகையில் சிறிது அதிகமாக இருந்து வருவதால் ஏற்படக்கூடிய அனுகூலமானது கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அவர்கள் பின்னடைந்திருப்பதால் அடிபட்டுப் போய்விடு மென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் நிர் வாகத் துறையில் டிவிஷன்கள் பிரிவினை செய்யப்பட்டிருப்பதை யும் அவைகளில் சேர்ந்திருக்கும் ஜில்லாக்களையும் கவனிக்கையில் அவர்களுடைய வாதம் அடிபட்டுப் போய்விடுகிறது.

பஞ்சாப், வங்காளம் இவைகளின் ஜனத்தொகை சம்பந்தமான புள்ளி விவரங்களைப் பரிசோதனை செய்கையில், கலப்புத் தொகுதி யில் அவர்களுக்கு எவ்விதப் பிரதிகூலமு மேற்படாதென்றும், அவர் களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டியது அவசியமில்லை யென்றும் வெளிப்படுகிறது. அனுபந்தங்களில் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து இவ்விரண்டு மாகாணங்களிலும் ஜனத் தொகையின் விநியோகமானது முஸ்லீம்களுக்கு அனுகூல மானதாக

இருக்கிறதென்பது வெளிப்படுகிறது. சில இடங்களில் ஸ்தானங்களை ஒதுக்கி வைக்காமலே முஸ்லீம்கள் பிரதிநிதித்வம் பெறக்கூடிய நிலைமையிலிருந்து வருகிறார்கள்.

## பஞ்சாபின் நிலைமை.

பஞ்சாபின் வடபாகத்திலும், வடமேற்குப் பாகத்திலும், முஸ்லீம்கள் அதிக ஜனத்தொகையினராக இருந்து வருகிறார்கள். வேறு எந்த சமூகத்தினரும் அவர்களுடைய உரிமையில் ஆக்கிரமிப்பது சாத்தியமில்லை. அதே விதமாகத் தென்பாகத்தில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் ஜனத்தொகையில் அதிகப் பேர்களாக இருக்கிறார்கள். இரண்டு இடங்களுக்கும் மத்தியமான பிரதேசத்தில் முஸ்லீம்களின் தொகை அதிகமாக இருந்து வருகிறது. இதிலிருந்து முஸ்லீம்கள் பெரும்பாலோராக இருந்துவரும் பிரதேசங்களி லிருந்து மொத்த ஸ்தானங்களில் 100-க்கு 47-ஐ அவர்கள் கைப்பற்றிக் கொண்டு விடுவார்களென்று நாங்கள் நினைக்கிறோம். ஹிந்துக்களும், சீக்கியர்களும் அதிகத் தொகையினராக இருந்து வரும் பிரதேசங்களிலிருந்து அவர்கள் 100-க்கு 30 ஸ்தானங்களைக் கைப்பற்றுவார்கள். பாக்கி 23% ஸ்தானங்களுக்கும் முஸ்லீம்கள் அதிகமாக இருந்து வரும் பிரதேசங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இந்தப் பிரதேசங்களிலிருந்து முஸ்லீம்கள் சட்ட சபையில் மொத்தத்தில் மெஜாரிட்டியாக இருந்து வருவதற்கு வேண்டிய ஸ்தானங்களைக் கைப்பற்றி விடுவார்கள்.

எங்களுடைய குறிப்பில் ஜில்லா வாரியாகப் பல சமூகங்களின் ஜனத்தொகையையும் குறிப்பிட்டிருக்கிறோம். இவைகளில் சில விவரங்களை இங்கே குறிப்பிடுகிறோம். 1921-ம் வருஷத்திய ஜன கணிதியின்படி பஞ்சாபின் ஜனத்தொகை சமூகவாரியாகப் பின் வருமாறு:—

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 11,444, 321 | 55. 3% |
| ஹிந்துக்கள் | 6,579, 260 | 31. 8% |
| சீக்கியர்கள் | 2,294,207 | 11. 1% |
| இதரர்கள் (பெரும்பாலும் கிறிஸ்தவர்கள்) | 367,236 | 1. 8% |
| மொத்தம் | 20,685,024 | 160 % |

பஞ்சாபில் 29-ஜில்லாக்கள் இருந்து வருகின்றன. இவைகளை நான்கு பகுதிகளாக நாங்கள் பிரிவினை செய்திருக்கிறோம்.

1. 15 ஜில்லாக்கள் முஸ்லீம்கள் பெரும்பான்மையோராக வுள்ள பகுதியில் இருக்கின்றன. ஒரு ஜில்லாவின் ஜனத்தொகையில் 100-க்கு 91 பேர்கள் முஸ்லீம்கள். 9 ஜில்லாக்களில் அவர்கள் 80% முதல் 90% வரையில் இருந்து வருகின்றனர். இரண்டு ஜில்லாக்களில் அவர்களின் ஜனத்தொகை 71%இருந்து வருகிறது. 3-ஜில்லாக்களில் அவர்களுடைய ஜனத்தொகை முறையே 63.3, 61.9, 60·7% ஆக இருந்து வருகிறது. பக்கங்களிலுள்ள ஜில்லாக்களிலிருந்து வருவது போல் முஸ்லீம்கள் இந்த மூன்று ஜில்லாக்களிலும் பெரும்பான்மையோராக இருந்து வராதபோதிலும், ஹிந்துக்கள் சீக்கியர்கள் இவர்களைவிட முஸ்லீம்கள் இந்த ஜில்லாக்களில் அதிகமாக இருப்பதால் இந்தப் பிரதேசத்தை இந்தப்பகுதியில் சேர்த்திருக்கிறோம். ஷேக்புரா ஜில்லாவில் முஸ்லீம்கள் 63.3%ம், ஹிந்துக்கள் 16%ம், சீக்கியர்கள் 15. 9%ம் இருந்து வருகின்றனர்; ஸியால்கோட் ஜில்லாவில் முஸ்லீம்கள் 61. 9%ம், ஹிந்துக்கள் 19. 5%ம், சீக்கியர்கள் 8%ம் இருந்து வருகின்றனர்; ஃபியால்பூர் ஜில்லாவில் முஸ்லீம்கள் 60. 7%ம், ஹிந்துக்கள் 18.1%ம், சீக்கியர்கள் 16.4%ம் இருந்துவருகின்றனர்.

தவிரவும் முஸ்லீம்களில்லாதவர்கள் இந்த ஜில்லாக்களில் பல சமூகத்தினராக இருந்து வருவதையும் ஞாபகத்தி லிருத்திக்கொள்ள வேண்டும்.

லட்சம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதி ஸ்தானத்தைக் கொடுத்தால் முஸ்லீம்கள் அதிகமாகவுள்ள பிரதேசத்திலிருந்து மட்டில் 98 பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப் படுவார்கள். இதனால் மொத்த ஸ்தானங்களில் 47.3% அவர்களுக்குக் கிடைத்துவிடும்.

2. லாகூரும், குருதாஸ்பூரும் முஸ்லீம்கள் அதிகமாக இருந்து வரும் ஜில்லாக்களென்று சொல்ல வேண்டும். இந்த ஜில்லாக்களில் ஹிந்துக்கள், சீக்கியர்கள் இவர்களுடைய தொகையைவிட முஸ்லீம்களின் தொகை அதிகமாக இருந்து வருகிறது. லாகூரில் அவர்கள் 57. 3% இருந்து வருகிறார்கள். ஆனால் முதலாவது தொகுதிப் பிரதேசத்திலிருந்து வருவதுபோல் அவ்வளவு அதிகமாக முஸ்லீம்கள்

இங்கு இருந்துவர வில்லை. இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் சட்ட சபையில் $19\frac{1}{2}$ அல்லது 9. 4% ஸ்தானங்கள் கிடைக்கும்.

3. மூன்று ஜில்லாக்களில் எந்த சமூகத்தினரும் அதிகப் பெரும்பான்மையினராக இருந்துவரவில்லை. இருந்தாலும் இந்த ஜில்லாக்களிலும் முஸ்லீம் சமூகமே அதிகமாக இருந்து வருகிறது. இந்த மூன்று ஜில்லாக்களுக்கும் மொத்த ஸ்தனங்களில் $27\frac{1}{2}$, அதாவது 13.3% கிடைக்கும்.

4. ஒன்பது ஜில்லாக்களில் ஹிந்துக்களும், சீக்கியர்களும் அதிகமாக இருந்துவருகிறார்களென்று சொல்லலாம். இந்தப் பிரதேசத்திற்கு மொத்த ஸ்தானங்களில் $61\frac{1}{2}$, அதாவது 29. 7% தான் கிடைக்கும்.

ஆகவே மொத்த ஸ்தானங்களில் 47. 3% முஸ்லீம்களுக்குக் கிடைக்கும். இரண்டாவது பகுதியிலும் 9. 4%ல் அவர்களுக்கு மெஜாரிட்டி ஸ்தானங்கள் கிடைக்கும். மூன்றாவது பகுதியிலும் 13.3%ல் அவர்கள் சில ஸ்தானங்களைக் கைப்பற்றலாம். இவ்விதமாக அவர்களுக்கு மெஜாரிட்டி ஸ்தானங்கள் கிடைக்கும்

## வங்காளம்.

வங்காளத்தின் நிலைமை இன்னும் தெளிவாக இருக்கிறது. இந்த விவரங்கள் பி. அநுபந்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறன. அவைகளின் சங்கிரகத்தை இங்கு குறிப்பிடுகிறோம். வங்காள ஜனத்தொகையில் பல சமூகத்தினரும் இருந்துவரும் வீதாசாரமாவது:—

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 25,210,802 | 54% |
| ஹிந்துக்கள் | 20,203,527 | 43.3% |
| இதரர்கள் | 1,281,207 | 2.7% |
| மொத்தம். | 46,695,536 | 100.0% |

இங்கும் பஞ்சாபைப்போல் ஒரு சமூகத்தினர் அதிகமாக இருந்துவரும் பிரதேசங்கள் இருந்து வருகின்றன.

1. முஸ்லீம்கள் அதிகமாக இருந்துவரும் பிரதேசம். 13-ஜில்லாக்களில் முஸ்லீம்கள் அதிகத் தொகையினராக இருந்து வருகிறார்

கள். இந்த ஜில்லாக்களுக்கு சட்ட சபையில் மொத்த ஸ்தானங்களில் 60%க்கு மேல், அதாவது 282 ஸ்தானங்கள் கிடைக்கும்.

2. முஸ்லீம்கள் அதிகமாக உள்ள இரண்டு ஜில்லாக்களுக்கு 23 ஸ்தானங்கள், அதாவது மொத்த ஸ்தானங்களில் 5% கிடைக்கும்.

3. ஹிந்துக்கள் அதிகமாக இருந்து வரும் பிரதேசங்கள். 4 ஜில்லாக்களில் ஹிந்துக்கள் பெரும்பான்மையோராக இருந்து வருகின்றனர். அந்த ஜில்லாக்களுக்கு மொத்த ஸ்தானங்களில் 9%, அதாவது 42 ஸ்தானங்கள் கிடைக்கும்.

4. 9 ஜில்லாக்களில் ஹிந்துக்கள் மிகப்பெரும் பான்மையோராக இருந்து வருகின்றனர். இந்த ஜில்லாக்களுக்கு மொத்த ஸ்தானங்களில் 25%, அதாவது 118 ஸ்தானங்கள் கிடைக்கும்.

இவ்விதமாக வங்காளத்தில் முஸ்லீம்கள்பெரும்பான்மையோராக இருந்துவரும் பிரதேசங்களை நீக்கி அவர்கள் மிகப் பெரும்பான்மையோராக இருந்து வரும் பிரதேசங்களிலிருந்து மட்டில் அவர்களுக்கு சட்டசபை ஸ்தானங்களில் 60% கிடைத்துவிடும். ஹிந்து மைனுரிட்டியானது பெரிய மைனுரிட்டியாக இருந்தபோதிலும் பொதுத் தேர்தலில் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்காத நிலைமையில் மிகவும் நஷ்டப்பட நேரிடும்.

## வங்காள ஜில்லாபோர்டு தேர்தல்கள்.

சமீபத்தில் நடந்த ஜில்லாபோர்டு தேர்தல்கள் முடிவிலிருந்து இதன் உண்மை வெளிப்பட்டிருக்கிறது. அந்தப் புள்ளி விவரங்களை ஸி. அநுபந்தத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இவர்களைத் தெரிந்தெடுக்கும் தொகுதிகள் கலப்புத் தொகுதிகளாக இருந்துவருகின்றன. ஆனுல் சொத்து அல்லது தொழில்வரியைச் செலுத்துகிறவர்களே ஓட்டர்களாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதால், இரு சமூகத்தினரின் விகிதாசாரப்படி ஓட்டர்கள் சங்கியை இருந்துவரவில்லை. பொதுவாக ஏழைகளாக இருந்துவரும் முஸ்லீம்களில் ஓட்டர்களின் தொகை ஹிந்து ஓட்டர்களின் தொகையை விடக் குறைவாகவே இருக்க வேண்டும். இருந்தாலு், மைமன் சிங், சிட்டகாங், ஜெஸ்ஸூர் இந்த ஜில்லாக்களில் அவர்கள் ஹிந்து மைனுரிட்டிக்கு ஸ்தானங்கள் கிடைக்காமற் செய்து விட்டார்கள். முதல் இரண்டு ஜில்லாக்களிலும் ஹிந்துக்

கள் மொத்த ஜனத்தொகையில் 24% இருந்துவந்தும் அவர்களுக்கு ஒரு ஸ்தானம் கூடக் கிடைக்கவில்லை. மூன்ருவது ஜில்லாவில் ஹிந்துக்கள் மொத்த ஜனத்தொகையில் 38. 2% இருந்தும் அவர்களுக்கு ஒரு ஸ்தானம்தான் கிடைத்திருக்கிறது. ஆனல் முஸ்லீம்களின் ஜனத்தொகை 3 அல்லது 4% இருந்துவரும் சில ஜில்லாக்களில் ஒன்று முதல் மூன்று ஸ்தானங்கள் வரையில் முஸ்லீம்களுக்குக் கிடைத்திருக்கின்றன. இரு சமூகத்தினரும் சரி சமத்துவமான தொகையினராக இருந்து வருகையிலும் என்ன நேருகிறதென்பதற்குத் தகுந்த உதாரணங்கள் கிடைத்திருக்கின்றன. குல்னு, டிஞஜ்பூர் இந்த ஜில்லாக்களில் நடந்திருப்பதை உதாரணங்களாக எடுத்துக் கொள்ளலாம். முந்தின ஜில்லாவில் முஸ்லீம்களல்லாதவர்கள் 50% இருந்தும் அவர்களுக்கு 11-ஸ்தானங்களும் 49.8% உள்ள முஸ்லீம்களுக்கு 5-ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன. பிந்தின ஜில்லாவில் முஸ்லீம்கள் 49% இருந்தும் அவர்களுக்கு 14-ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. ஹிந்துக்கள் 44% இருந்தும் அவர்களுக்கு 4-ஸ்தானங்களே கிடைத்திருக்கின்றன. இரு சமூகங்களின் ஓட்டர்களின் தொகை தெரியாதவரையில் ஜனத்தொகையைக் கொண்டு முடிவு செய்வது சரியானதன்று. இருந்தாலும் முஸ்லீம்களை முஸ்லீம்களல்லாத இதர சமூகங்களிலிருந்து பாதுகாப்பதற்கு எவ்வித விசேஷ ஏற்பாடுகளையும் செய்யவேண்டியதில்லை யென்பதற்கு இது போதியதாகும். ஜஸ்ஸூர் ஜில்லா விஷயம் வெகு ரஸமானதாக இருக்கிறது. முஸ்லீம் மெஜாரிட்டியார் ஸ்தல ஸ்தாபன விஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொள்ளாமலிருந்து வந்தவரையில் மைனரிட்டியாக விருக்கும் ஹிந்து சமூகத்தினர் தங்களுடைய இஷ்டம்போல் நடந்துகொள்ளுவது சாத்தியமாயிற்று. ஆனல் அவர்களைக் கிளப்பி விட்டதும், பிரசிடெண்டு ஸ்தானம், வைஸ் பிரசிடெண்டு ஸ்தானம் இரண்டும் முஸ்லீம்களுக்கே கிடைக்கும்படி அவர்கள் செய்து விட்டனர். கடைசியாக வங்காளத்தில் நடந்த ஜில்லாபோர்டு தேர்தலானது இரு சமூகங்களும் விழித்துக்கொள்ளும்படி செய்திருக்கிறதென்றும், முஸ்லீம்கள் கலப்புத் தொகுதிகளே விசேஷமானவை யென்று கருதுவதாகவும் சொல்லப்படுகிறது. உள்ள நிலைமையைக் கவனிக்காமல் சிலர் குருட்டுத் தனமாக தங்களுக்கே கெடுதலைத் தேடிக்கொள்ளுவது துக்கிக்கத் தக்கதாக இருக்கிறது. பஞ்சா

8

பிலும், வங்காளத்திலும் தனித் தொகுதிகளை ஏற்படுத்தவேண்டு மென்று பலமாகப் பிரசாரம் செய்துவருவோர் ஏ., பி., ஸி., அநுபந்தங்களில் நாங்கள் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களை ஊன்றிக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

## பொருளாதார, கல்விப் பரீட்சைகள்.

உண்மையான புள்ளி விவரங்களை அலசிப் பார்த்ததிலிருந்து பஞ்சாபிலும், வங்காளத்திலும் முஸ்லீம்கள் பயப்படுவது வெறும் பிரமையே யென்பது வெளிப்படுகிறது. ஹிந்துக்களும், சீக்கியர்களும் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் மேம்பாடடைந்திருப்பதைக் கண்டு இந்தப் பயம் அவர்களுக்கு ஏற் ட்டிருக்கிறது. இந்த மேம்பாட்டினுல் வங்காளத்தில் நடந்த ஜில்லா போர்டு தேர்தல்களில் ஹிந்துக்கள் அனுகூல மடைந்துவிடவில்லை யென்பதை நாம் தெரிந்துகொண்டுவிட்டோம். சட்ட சபைத் தேர்தல்களின் முடிவானது முஸ்லீம்களுக்கு அதிக அனுகூலமாக விருப்பது வெளிப்படும். ஆனுல், வங்காளத்தில் கல்வியிலும், செல்வத்திலும் முஸ்லீம்கள் இதர சமூகத்தினரைவிடப் பின்னடைந்தவர்களாக இருக்கிறுர்களென்பது வாஸ்தவமே. நவீன கால நாகரீகங்களில் பணத்திற்கு அதிகச் செல்வாக்கு இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. அது அதிகச் செல்வாக்குடையதாக இருப்பதால் பணக்காரர்கள் நேரடியாக சட்ட சபைத் தேர்தல்களில் அபேட்சகர்களாக நிற்காமல் திரை மறைவிலிருந்து வேலை செய்கின்றனர். ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதாலாவது, தனித் தொகுதிகளாலாவது, வேறு தந்திரங்களாலாவது இந்த சக்தியைக் குறைத்துவிடமுடியாது. ஜனங்கள் வகுப்பு உணர்ச்சியே யுடையவர்களாக இருந்துவரும்வரையில் உண்மையான பிரச்சினையை உணரமாட்டார்கள். உண்மையான பிரச்சினையை உணராதவரையில் அதை அவர்கள் பரிகரிக்கவும் மாட்டார்கள்.

பொருளாதார சக்தியானது ஒரு சிலரிடம் அடங்கியிருந்துவிட முடியாதபடி சமூக வாழ்வையே திருத்தி அமைத்து விடுவதற்கு யோசனை சொல்லும்படி நாங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தங்கள் சமூகங்களுக்கு விசேஷ சலுகைகளையும், விசேஷ உரிமைகளையும் கோரும் சமூக ஸ்தாபனங்களும் தற்கால சமூக வாழ்வைத் தகர்த் தெறிந்துவிட விரும்பவில்லை. இதை ஒப்புக்கொள்

ளுவதாவின், நாங்கள் சில பாதுகாப்புகளை ஏற்படுத்தி, முக்கியமாக பிற்போக்காகவுள்ள தொகுதிகளுக்கும் வகுப்புகளுக்கும் கல்வி அபி விருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திகளுக்கும் சில ஏற்பாடுகளைத்தான் செய்யலாம்.

## சுதந்திர இந்தியாவில் கக்ஷிகள்.

இந்தியா சுதந்திரம் பெற்று, தன்னுடைய பிரச்சினைகளை அந்நிய நாட்டினரின் தலையிடாவது, ஆதிக்கமாவது இல்லாமல் தீர்த்துக் கொள்ளக்கூடிய நிலைமையை அடைகையில், ஜனங்களுடைய மனதானது முக்கியமான பிரச்சினைகளில் திரும்பும். எதிர் காலத்தில் சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்கும் நமது பிரதிநிதிகளால் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினைகளில் எத்தனைதான் வகுப்புப் பிரச்சினைகளாக இருக்க முடியும்? இடையிடையே சில பிரச்சினைகள் ஏற்படலாம். ஆனால் பெரும்பாலான பிரச்சினைகள் வகுப்பு சம்பந்தமில்லாதவைகளாகவே இருக்கும். இதன் பலனாக தேசத்திலும், சட்ட சபையிலும் வேறு காரணங்களை அஸ்திவாரமாகக் கொண்ட கக்ஷிகள் ஏற்படும். அந்தக் காரணம் பொருளாதார சம்பந்தமானதாக இருக்கலாம். அப்பொழுது ஒரு கக்ஷியைச் சேர்ந்த ஹிந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களும் ஒன்றுசேர்ந்துகொண்டு ஹிந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களுமடங்கிய மற்றொரு கக்ஷியை எதிர்ப்பார்கள். அந்த வழியில் திரும்பிவிடின் தானாகவே அவ்வித நிலைமை ஏற்படும்.

## ஹிந்து, சீக்கிய மைனாரிட்டிகள்.

ஹிந்துக்களுக்கு எது நன்மையான தென்பதையே நோக்கமாகக் கவனிப்பின், பஞ்சாபிலும், வங்காளத்திலும் மெஜாரிட்டியாக விருந்து வரும் முஸ்லீம்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்காமலிருப்பதால் விளையக்கூடியதை விட அதிக அனுகூலம் அந்த சமூகத்தினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதால் ஹிந்துக்களுக்கு ஏற்படலாம். இவ்விதமே சீக்கியர்களுக்கு மேற்படலாம். நாங்கள் தெரிவித்திருக்கும் தகவல்களிலிருந்தும், புள்ளி விவரங்களிலிருந்தும் முஸ்லீம்கள் பஞ்சாபிலும் வங்காளத்திலும் அதிக சக்தியுடையவர்களாக இருப்பதால் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்காமல் கலப்புத் தொகுதிகளின் மூலமாகத் தேர்தல்களை நடத்துவதில் அவர்களு

ிடைய ஜனத்தொகைக்குரியதைவிட அதிக ஸ்தானங்களை அவர்கள் பெற்றுவிடக் கூடுமென்பது நிரூபணமாகிவிட்டது. இதனால் மைனாரிட்டிபாசவுள்ள ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் அவர்களுடைய ஜனத்தொகையின் விதாசாரப்படி கிடைக்கவேண்டிய ஸ்தானங்கள் கிடைக்காமற் போய்விடலாம். இவ்வித நிலைமை அநேகமாக ஏற்படக் கூடியது. ஆனால் இவ்வித நிலைமைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்துவது சாத்தியமில்லை. சாத்தியமான பாதுகாப்புகளை ஏற்படுத்தி, பஹிரங்கமாகத் தேர்தலை நடத்துவது தான் சரியான வழி.

## தலைவர்கள் சம்பாஷணை.

நாங்கள் மேலே குறிப்பிட்ட தலைவர்கள் சம்பாஷணையில் இந்த விஷயம் பூராவாக விவாதிக்கப்பட்டு அடியிற்கண்ட தீர்மானம் ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது. எங்களுடைய சகாவான ஸர்தார் மங்களசிங் தீர்மானத்தின் இரண்டாவது பாகத்தைப் பற்றி பின்வரும் குறிப்பை எழுதியிருக்கிறார்:—*

"மெஜாரிட்டிகளுக்காவது, மைனாரிட்டிகளுக்காவது சட்டசபைகளில் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதற்கு நாங்கள் அனைவரும் எதிரிடையாக இருக்கிறோம். அரசியல் அமைப்பில் அவ்விதம் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கக் கூடாதென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். ஆனால் இந்தச் சிபார்சு ஒப்புக் கொள்ளப்படாமல் ஜனத் தொகையின் வீதாசாரப்படி ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதன் மூலமாகவே ராஜி ஏற்படுவது சாத்தியமாக விருக்கும் பக்ஷத்தில் மெஜாரிட்டிகளுக்கோ, மைனாரிட்டிகளுக்கோ, அவர்களுடைய ஜனத் தொகையின் வீதாசாரப்படி ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும், ஒருவருக்கும் அவர்களுக் குரியதைவிட அதிக ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கக் கூடாதென்றும், 10 வருஷங்களுக்குப் பிறகோ அல்லது அதற்குட்பட்ட காலத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சம்மதத்தின் பேரிலோ அது தானகப் போய்விட வேண்டுமென்ற தெளிவாக ஒரு பிரிவைச் சேர்த்துவிட வேண்டுமென்றும் நாங்கள் சிபார்சு செய்கிறோம்.

---

* இந்த தீர்மானத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறவர்களின் விவரம் கடைசியில் ஒரு குறிப்பில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ர்தார் மங்களசிங்கின் குறிப்பு பின் வருமாறு:—

"இந்ததேசத்திலுள்ள சட்ட சபைகளில் மெஜாரிட்டிகளுக்கோ, மைனுரிட்டிகளுக்கோ ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கக் கூடாதென்று சொல்லும் தீர்மானத்தின் முதல் பகுதியை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனுல் சட்ட பூர்வமாக எவ்விதத்திலேனுமோ அல்லது சொற்ப காலத்திற்கோ மெஜாரிட்டி சமூகங்களுக்கு வகுப்பு மெஜாரிட்டிகளை சட்ட சபைகளில் ஏற்படுத்தி விடுவதை நான் பலமாக ஆக்ஷேபிக்கிறேன். ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதன் மூலமாகவே ராஜி ஏற்படுவது சாத்தியமாயின் சீக்கியர்கள் ஒரு முக்கியமான மைனுரிட்டியாக இருந்துவருவதைக் கவனிக்க வேண்டுமென்றும், லட்சுமணபுரி ஒப்பந்தத்தின்படி பீஹாரிலும் இதர இடங்களிலும் முஸ்லீம்களுக்கு அதிக ஸ்தானங்களைக் கொடுத்திருப்பது போல பஞ்சாபில் சீக்கியர்களுக்கும் அவர்களுடைய ஜனத்தொகையின் வீதாசாரப்படி அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதை விட அதிக ஸ்தானங்களை அவர்களுக்கு ஒதுக்கி வைப்பதன் மூலமாக அவர்களுக்குப் போதியதாகவும் திறமையானதாகவு மிருக்கக் கூடிய பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் நான் சிபார்சு செய்கிறேன்."

தீர்மானத்தின் முதல் பாகத்தில் தலைவர்கள் சம்பாஷணையின்போது நிறைவேறிய தீர்மானம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது பாகத்தில் ஜனத்தொகையின் வீதாசாரப்படி ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கவேண்டு மென்று எல்லாக் கக்ஷியினரும் ஒத்துப்போவதன் மூலமாக முதல்பாகம் நிராகரிக்கப்பட்டுவிடின் என்ன செய்ய வேண்டுமென்று வழி சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய ஏற்பாடு எதுவும் கமிட்டி மெம்பர்களுக்குள் செய்துகொள்ளப் படாததோடு, முதல் பாகத்தில் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதற்குத் தாங்கள் எதிரிடையாக இருப்பதாக ஏகோபித்துத் தெரிவித்துக் கொண்டிருக்கிறுர்கள். தீர்மானத்தின் இரண்டாவது பாகத்தில் கண்ட ஏற்பாடு சர்வகக்ஷி மகாநாட்டில் ஏற்படுவது சாத்தியமில்லை. ஒருவேளை அவ்வித ஏற்பாடு செய்து கொள்ளப்படின் அதில் சம்பந்தப்படும் எல்லாரையும் அது கட்டுப்படுத்தும். அவ்வித நிலைமையில் இரண்டாவது பகுதியானது 10 வருஷங்களுக்கு அதிகமாக அந்த ஏற்பாடு அனுஷ்டானத்திலிருந்து வரக் கூடாதென்று குறிப்பிடுகிறது. நாங்கள் பட்டவர்த்தனமாக ஆக்ஷேபித்திருப்பதை நாங்கள் சிபார்சு செய்திருப்பதாக நினைத்துக் கொள்ளக்கூடாது.

ஆனால் எந்த உடம்படிக்கையேனும் கொள்கைக்கு விரோதமாக் விருந்தபோதிலும் கக்ஷிகளுக்குள்ளும், வகுப்புகளுக்குள்ளும் உடம் படிக்கை ஏற்படுவதன் விசேஷத்தை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். எங்களுடைய அபிப்பிராயத்திற்கும் விரோதமாக அவ்வித உடம் படிக்கை ஏற்படுவதாக விருந்தால், இதன் கெடுவை வரையறுப்ப தைத் தவிர வேறு எதையும் நாங்கள் செய்வதற்கில்லை. இதைத் தான் நாங்கள் செய்திருக்கிறோம். சீக்கியர்களும், முஸ்லீம்களும் தங்களுடைய ஜனத்தொகையின்படி தங்களுக்குரியதை விட அதிக ஸ்தானங்களைக் கொடுக்கவேண்டுமென்று பாத்தியம் கொண்டாடும் விஷயத்தில், நாங்கள் மேலே தெரிவித்திருக்கும் அபிப்பிராயத்தை உத்தேசித்து, எந்த சமூகமும், அது எவ்வளவு முக்கியமானதாக இருந்த போதிலும், அவ்வித பாத்தியத்தைக் கொண்டாடுவதற் கில்லை.

மைனாரிட்டி சமூகங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும் விஷயத்தைக் கவனிக்கையில் தலைவர்கள் சம்பாஷணை முடிவுக்குத் திரும்பவேண்டி யிருக்கிறது. அதில் இப்பொழுது இறங்குகிறோம்.

## மைனாரிட்டிகளுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைத்தல்.

பஞ்சாப், வங்காளம் இந்த இரண்டு மாகாணங்களையும் தவிர மற்ற மாகாணங்களில் முஸ்லீம்கள் மைனாரிட்டியாக இருந்து வரு கின்றனர். மொத்த ஜனத்தொகையில் அவர்கள் 24% இருந்தும், சில மாகாணங்களில் அவர்கள் மிகச் சிறுபான்மையோராக இருந்து வருகிறார்கள்.

மேலே குறிப்பிட்ட தலைவர்கள் சம்பாஷணையில் தீர்மானம் நிறைவேறிய பிறகு முஸ்லீம் மைனாரிட்டிகளுக்கு அது மிகுந்த கஷ்டத்தை விளைவிக்குமென்றும், 500 அங்கத்தினர்களடங்கிய மத்திய சபைக்கு பஞ்சாப், வங்காளம் இந்த இடங்களிலிருந்து 30 அல்லது 40 முஸ்லீம்களையும், ஐக்கியமாகாணங்கள், பீஹார் இவை களிலிருந்து ஒன்று அல்லது இரண்டுபேர்களையும்தான் தெரிந்தெ டுக்க முடியுமென்றும், 7%க்குக் குறைவாக முஸ்லீம்கள் இருந்து வரும் மாகாணங்களிலிருந்து ஒரு முஸ்லீமைக்கூடத் தெரிந்தெடுக்க முடியாதென்றும் எங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. இதன் பலனாக ஜனத்தொகையில் கிட்டத்தட்ட நான்கிலொரு பாகத்

தினராக இருந்துவரும் முஸ்லீம்கள் மத்திய சட்ட சபையில் பத்தி லொருபாகம் ஸ்தானங்களைத் தான் பெற முடியுமென்றும் வாதிக்கப் பட்டது. முஸ்லீம்கள் சிறுபான்மையோராக இருந்துவரும் மாகாணங்களில் மாகாண சட்டசபைத் தேர்தல்களிலும் இவ்வித நிலைமையே ஏற்படுமென்று சொல்லப்பட்டது. இந்த வாதத்தில் அர்த்தபுஷ்டி யிருப்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். இந்த சங்கடத்தாலேயே தாற்காலீகமாக வகுப்புப் பிரதிநிதித்துவத்தை தேர்தல் முறையில் நாங்கள் புகுத்தவேண்டி வருகிறது. ஆகவே தலைவர்கள் ஜூலை மாதம் ?-ந்தேதி சம்பாஷணை செய்த காலத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை அப்படியே எங்களுடைய சிபார்சாக நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பஞ்சாப், வங்காளம் இந்த இரண்டு மாகாணங்கள் தவிர மற்ற இடங்களில் முஸ்லீம் மைனரிட் டிகள் விரும்பும் பக்ஷத்தில் அவர்களுடைய ஜனத் தொகையின் வீதா சாரப்படி மத்திய சட்டசபையிலும் மாகாண சட்டசபைகளிலும் அவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டியிருக்கிறது. இந்த அளவு சிறிது காலம் வரையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்து வத்தை வைத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. முஸ்லீம் மைனரிட்டிகளுக்காக இந்தச் சலுகையைக் காட்டுவதால், மெஜாரிட் டிகளுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதன் மூலமாக ஏற்படக் கூடிய சங்கடங்களுக்கு நாங்கள் இடம் கொடுக்கவில்லை. மைனரிட்டி சமூகமானது, அதற்காக ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப் பட்டாலும், ஒதுக்கி வைக்கப்படா விட்டாலும், மைனரிட்டியாகவே இருந்துவர வேண்டும். மெஜாரிட்டி சமூகத்தின் மீது அது ஆதிக்கம் பெற்று விட முடியாது.

லட்சுமணபுரி ஒப்பந்தத்தின்படியும், மாண்டேகு செம்ஸ் போர்டு சீர் திருத்தத்தின்படியும் பல மாகாணங்களில் முஸ்லீம்களுக்கு அவர்களுடைய ஜனத் தொகை வீதாசாரத்திற்கு அதிகமாகப் பிரதி நிதித்துவம் கொடுபட்டிருப்பது எங்களுடைய திட்டத்தின்படி போய்விடும்; தனித் தொகுதிகளின் மூலமாகத்தான் அந்தப் பிரதி நிதித்துவம் கிடைக்கும்படி செய்வது சாத்தியம்; கூட்டு அல்லது கலப்புத் தொகுதிகளில் அது சாத்தியமில்லை. முஸ்லீம் சமூகத்தின ருடைய ஜனத்தொகை எவ்வளவோ அதற்குரியதைவிட அதிகமான ஸ்தானங்களை அவர்களுக்கு ஒதுக்கிவைப்பது அசாத்தியமானதன்று. ஆனால் அவ்விதம் செய்வது மெஜாரிட்டியாக விருந்துவரும் சமூகத்தி

னருக்கும் மைனாரிட்டியாக விருந்துவரும் இதர சமூகத்தினருக்கும் அநீதியை விளைவிப்பதோடு, முஸ்லீம்களும் தேசிய வழியில் அபி விருத்தி அடைந்து வருவதற்கு அது இடையூறாக இருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். அவர்களுடைய ஜனத்தொகைக் குத் தகுந்தபடி அவர்களுக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைக்க வேண்டுமோ அத்தனை ஸ்தானங்களை நாங்கள் அவர்களுக்கு ஒதுக்கி வைத்திருக்கிறோம். அந்த வீதாசாரத்தை விட அதிகமாக ஸ்தா னங்களை அவர்களுடைய முயற்சியினாலேயே அவர்கள் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். அவர்களுக்காக ஒதுக்கிவைத்திருக்கும் ஸ்தா னங்களைத் தவிர இதர ஸ்தானங்களுக்கும் அவர்கள் போட்டி போடு வதில் எவ்வித நிர்ப்பந்தத்தையும் நாங்கள் ஏற்படுத்தப் போவதில்லை. மைனாரிட்டியாக விருந்துவரும் முஸ்லீம் சமூகத்தினருக்கு ஸ்தானங் களை ஒதுக்கி வைப்பதன் மூலமாக அவர்கள் அதிகப்படி ஸ்தானங் களைப் பெறுவதற்குச் சக்தியுடையவர்களாக விருந்தும் அந்த ஸ்தா னங்களை அவர்கள் பெற முடியாமல் எவ்வித வேலியையும் நாங்கள் போட்டுவிடாம விருந்திருப்பதை முக்கியமாக உத்தேசித்தே அவர் களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைததிருப்பதை நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறோம். சிறுபான்மையினராகவோ, பெரும் பான்மை யினராகவோ இருந்துவரும் எந்த சமூகத்தினருக்கும் அவர்களு டைய ஜனத்தொகையின் வீதாசாரத்திற்குரியதைக் காட்டிலும் அதிக ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதைவிட அவர்கள் எந்த ஸ்தா னத்திற்கும் அபேக்ஷகராக நிற்பதற்கு இடம் கொடுப்பதுதான் அந்த சமூகங்களின் ராஜீயமுயற்சி அபிவிருத்தி அடைவதற்குத்தகுந்தமார் க்க மாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அவர்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துவிடின் இதர சமூகங்களுடன் போட்டி போடுவதற்கு அவர்களுக்கு இடமில்லாது போய்விடும். அதன்பல னாக அவர்களுடைய ராஜீயமுயற்சி ஒரு எல்லைக்குள் அடங்கிப்போய் விடும். ஒரு முஸ்லீம் அபேக்ஷகர் தமக்குப்போட்டியாக நிற்கும் மற்றொரு முஸ்லீம் அபேக்ஷகரைத் தோற்கடிப்பதற்காக முஸ்லீம் களல்லாதவர்களுடைய ஓட்டுகளையும் சேகரிக்க வேண்டி யிருக்கு மென்பது வாஸ்தவமே. ஆனால் இது முஸ்லீம்கள் தேசிய வழியில் அபிவிருத்தி அடைந்து வருவதற்கு அனுகூலமானதாக இராது. இவ்விதப் போட்டி ஏற்படுகையில் இரண்டு முஸ்லீம் அபேக்ஷகர் களை விட முஸ்லீம் அல்லாத ஒரு அபேக்ஷகர் தகுதி

யுடையவரா அல்லது தகுதியில்லாதவரா வென்பதற்குப் பதிலாக இந்த இரண்டு முஸ்லீம் அபேக்ஷகர்களுக்குள் எவர் மேலானவரென்ற கேள்வியே ஏற்படும்.

தங்களுடைய ஜனத்தொகைக்கு உரியதை விட அதிக ஸ்தானங்களைத் தங்களுக்கு ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும், அந்த ஸ்தானங்களைத் தவிர இதர ஸ்தானங்களுக்கும் தாங்கள் அபேக்ஷகர்களாக நிற்பதற்கு சுதந்திரம் இருக்கவேண்டு மென்றும் முஸ்லீம்கள் நியாயமாகக் கேட்கமுடியாது. ஆகவே இந்த இரண்டு ஏற்பாடுகளில் எது தங்களுக்கு அனுகூலமான தென்பதையே அவர்கள் கவனிக்கவேண்டும். தங்களுடைய ஜனத்தொகைக் குரியதைவிட அதிக ஸ்தானங்களை ஒதுக்கிவைத்து, இதர ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களாக நிற்க முடியாமலிருப்பதற்கும், தங்களுடைய ஜனத்தொகைக்குரிய ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துவிட்டு இதர எந்த ஸ்தானத்திற்கும் அபேக்ஷகர்களாக நிற்பதற்கு உரிமை பெறுவதற்கும் உள்ள சாதக பாதகங்களை அவர்கள் பரிசீலனை செய்துபார்த்தால், பிந்தின முறையே தங்களுக்கு அனுகூலமான தென்பதை அவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். நாங்கள் மேலே எடுத்துக் காட்டியபடி, பூரணமான அளவு ஸ்தானங்களை ஒதுக்கிவைத்துவிடின், கலப்புத் தொகுதிகளின் மூலமாக எதிர்பார்க்கும் தேசிய ஒற்றுமையானது உத்தேச பலனைக் கொடுக்க முடியாமற் போய்விடும். ஒரு முஸ்லீம் அபேக்ஷகர் தமக்குப் போட்டியாக நிற்கும் மற்றொரு முஸ்லீம் அபேக்ஷகரைத் தோற்கடிப்பதற்காக முஸ்லீம்களல்லாத ஒட்டர்களுக்கு வேறு விதமான தூண்டுதலை ஏற்படுத்தவேண்டி யிருக்கலாமாயினும், முஸ்லீம்களல்லாத ஒட்டர்களுடைய ஆதரவின்றியே அவருடைய சமூகத்தினருடைய ஆதரவு அவருக்குப் பூரணமாக இருக்கும். வகுப்புக் கசப்பு அதிகமாக இருந்துவரும் சந்தர்ப்பங்களில முஸ்லீம்களும் ஹிந்துக்களும் தனித்தனியே யுள்ள ஒரு ஸ்தானத்தையும் இழக்காமலும் தேர்தலை நடத்திக் கொள்ளுவது சாத்தியமாகிவிடும். ஒரு சமூகத்தினர் மற்றொரு சமூகத்தினரை நம்பியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் தான் அவர்களுக்குள் இருந்து வரும் வேற்றுமைகள் குறையுமென்று நாங்கள் எதிர்பார்க்கலாம்.

## ஐக்கியமாகாணங்களில் முஸ்லீம்கள்.

ஐக்கிய மாகாணங்களில் இருந்துவரும் மைனாரிட்டி சமூகங்களில் முஸ்லீம் சமூகமானது அதிக ஜனத்தொகை யுடையதாகவிருந்து வருகிறது. தற்கால ஏற்பாட்டின்படி அவர்களுக்கென சில ஸ்தானங்களை ஒதுக்கி வைத்திருக்கும் முறையினால் ஏற்படுவதைக் காட்டிலும் அதிக அனுகூலம் எங்களுடைய திட்டத்தினால் அந்த சமூகத்திற்கு ஏற்படும். ஐக்கிய மாகாணங்களிலுள்ள பல நகரங்களில் அவர்கள் மெஜாரிட்டியாக இருந்து வருகின்றனர். இதர சில நகரங்களில் அவர்கள் மிகுந்த செல்வாக்குள்ள மைனாரிட்டியாக இருந்து வருகின்றனர். வேறு சில மாகாணங்களில் அவர்கள் சில ஸ்தானங்களை இழந்துவிடலாம். ஆனால் பொதுத் தேர்தலின் மொத்த முடிவானது எல்லாருக்கும் கூடியவரையில் திருப்திகரமானதாக இருக்கும்.

## மத்திய சட்டசபையும் முஸ்லீம்களும்.

முஸ்லீம்களுடைய கோரிக்கைகளில் மத்திய சட்டசபையிலிருந்து வரும் ஸ்தானங்களில் மூன்றிலொருபாகத்தைத் தங்களுடைய சமூகத்தினருக்காக ஒதுக்கிவைக்க வேண்டுமென்று அவர்கள் கோருவது தான் பாக்கியிலிருக்கிறது. எல்லோரும் கலந்து பேசிய பொழுது இந்த விஷயம் நேர்முகமாக எழுப்பப்படவில்லை. ஆனால் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் விஷயத்தில் நாங்கள் பொதுப்படையாகச் செய்திருக்கும் சிபார்சுகளின் மூலமாக இந்த விஷயமும் பைசலாகி விட்டதென்றே நாங்கள் நினைக்கிறோம். முஸ்லீம் மைனாரிட்டிக்காக ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டியிருப்பின், அவ்விதம் ஒதுக்கி வைக்கும் ஸ்தானங்களின் தொகையானது அவர்களுடைய ஜனத்தொகையின் விகிதாசாரத்தை அனுசரித்ததாக இருக்க வேண்டுமென்றதர்மத்தை நாங்கள் அனுஷ்டித்திருக்கிறோம். பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த ஜனத் தொகையில் நான்கிலொரு பாகத்திற்குச் சிறிது குறைவாக முஸ்லீம்கள் இருந்து வருகின்றனர். அந்த விகிதாசாரத்திற்குஅதிகமாக அவர்களுக்கு மத்திய சட்டசபையில் பிரதிநிதித்வம்கொடுப்பதற்கில்லை. பஞ்சாப், வங்காளம் இந்த இரண்டு மாகாணங்களைத்தவிர இதரமாகாணங்களில் மாகாண சட்டசபையிலும், மத்திய சட்டசபையிலும், அவர்களுக்கு ஒதுக்கிவைத்திருப்பதைவிட அதிக

ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களாக நிற்பதற்கு அவர்களுக்கு பாத்திய மிருக்கிறதென்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு மாகாணங்களிலும் எவ்வித வரையறையு மில்லாமல் இரண்டு சட்டசபைகளிலும் எத்தனை ஸ்தானங்களுக்கும் அபேக்ஷகர்களாகநிற்க அவர்களுக்கு பாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. மாகாண சட்டசபைகள் சம்பந்தபட்ட வரையில் அவர்களுடைய ஜனத்தொகையின் வீதாசாரத்திற்கு அதிகமாக அவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைத்திருக்கும் தற்கால ஏற்பாட்டுக்குப் பதிலாக இந்த பாத்தியத்தை அவர்களுக்கு ஏற்படுத்தி யிருக்கிறோம். மத்திய சட்டசபை சம்பந்தப்பட்ட வரையில் இப்பொழுது அவர்களுடைய ஜனத்தொகையின்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதை விட அதிக ஸ்தானங்களை அவர்களுக்காக ஒதுக்கி வைக்காமல், ஒவ்வொரு மாகாணத்தி லிருந்தும் அவர்கள் எத்தனை பிரதி நிதிகளைத் தெரிந்தெடுத்தனுப்பலாமென்று பெரும்போக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்தியா சட்ட சபையிலிருந்து வரும் மொத்த அங்கத்தினர்களில் மூன்றிலொரு பாகத்திற்குக் குறைவாகவே முஸ்லீம்கள் இருந்து வருகின்றனர். ஆகவே, அவர்களுடைய கோரிக்கையை தற்கால மிருந்துவரும் நிலைமையும் ஆதரிக்க வில்லை. மூன்றிலொரு பாகமா, நான்கிலொரு பாகமா வென்று ஒருவரையறையை ஏற்படுத்திக்கொண்டு விடுவதைக் காட்டிலும், பூரண சுதந்திரத்தை வைத்துக் கொள்ளுவது மேலான தென்பது சிறிது யோசித்தால் புலப்படும். ஆனல் நாங்கள் ஏற்கெனவே சொல்லியபடி மாகாண சட்டசபை சம்பந்தப்பட்டமட்டில் முஸ்லீம் மைனாரிட்டிக்காக நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் தர்மத்திலிருந்து பிறழ்ந்து விடுவதற்கில்லை. இவ்விதம் ஒரு பொது தர்மம் என்பதைத் தவிர, கிரியாம்சையிலும் வேறு பல கஷ்டங்களிருக்கின்றன. பஞ்சாபிலும், வங்காளத்திலும் மெஜாரிட்டியாக இருந்து வருகிறவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் தானென்று வரையறுக்காமலும், இதர எல்லா மாகாணங்களிலும் முஸ்லீம்களுக்கு அவர்களுடைய ஜனத்தொகைக்குரியதை விட அதிக ஸ்தானங்களை ஒதுக்கி வைக்காமலும், மத்திய சட்டசபையில் அவர்களுக்கு மூன்றிலொரு பாக ஸ்தானங்கள் கிடைக்கும்படி எவ்விதம் செய்ய முடியும்? ஒவ்வொரு மாகாணத்திலும் எந்த தர்மத்தை அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு அவர்களுக்கு அதிக ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பது?

இந்த விஷயத்தை நாங்கள் மிகுந்த சிரத்தையுடன் கவனித்தோம். ஆயினும் முஸ்லீம் சமூகத்தினருக்கு மத்திய சட்டசபையில் மூன்றி லொரு பங்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று சிபார்சு செய்ய முடியாததற்கு நாங்கள் வருந்துகிறோம்.

### சிபார்சு.

இத்தியாதி காரணங்களால் முஸ்லீம் மைனாரிட்டியார் தங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டு மென்று கேட்கும் இடங்களில் அவர்களுக்காக மத்திய சட்ட சபையிலும், மாகாண சட்டசபையிலும் அவர்களுடைய ஜனத்தொகையின் விதாசாரத்திற்குத் தகுந்தபடி அவர்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும், 10 வருஷ கெடுவரையில் அதிகப்படி ஸ்தானங்களுக்கும் அபேக்ஷகர்களாக நிற்க அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்றும் நாங்கள் சிபார்சு செய்கிறோம். ஆனால் நாங்கள் சொல்லியுள்ள சில வாதங்களையும் நாங்கள் செய்திருக்கும் சில முடிவுகளையும் எங்களுடைய சகாவான மிஸ்டர் ஷ்வாயிப் குரேஷி ஒப்புக்கொள்ளவில்லையென்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தலைவர்கள் மகாநாட்டில் செய்த முடிவை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவர் அபிப்பிராயப் படுகிறார். மத்திய சட்டசபை ஸ்தானங்களில் மூன்றிலொரு பாகத்தை முஸ்லீம்களுக்காக ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார்.

## வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் பெலுஜிஸ்தானத்திலும் இருந்துவரும் முஸ்லீம்களல்லாத மைனாரிட்டிகள்.

முஸ்லீம்களல்லாதவர்கள் மைனாரிட்டியாக இருந்து வருவதன் சம்பந்தமாக வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பெலுஜிஸ்தானம் இவைகள் விஷயத்தையே கவனிக்கவேண்டும். சென்னையிலும், மத்திய மாகாணத்திலும் முஸ்லீம்கள் மைனாரிட்டியாக இருந்து வருவது போலவே அவ்விரண்டு பிரதேசங்களிலும் முஸ்லீம்களல்லாதவர்கள் மைனாரிட்டியாக இருந்து வருகின்றனர். பஞ்சாப், வங்காளம் அல்லாத இதர மாகாணங்களில் முஸ்லீம்களுக்குச் செய்து

கொடுத்திருக்கும் சவுகரியங்களை அவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

## முஸ்லீம்களல்லாத மைனுரிட்டி சமூகத்தினர்.

இதர முஸ்லீம்களல்லாத மைனுரிட்டிசமூகங்கள் சம்பந்தப்பட்ட வரையில், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் துரதிர்ஷ்ட வசத்தினுல் இருந்துவருவது போல் அவர்களுக்கும் அவர்கள் வசித்துவரும் இடங்களிலிருந்து வரும் மெஜாரிட்டி சமூகங்களுக்கும் அதிக வேற்றுமை இருந்துவரவில்லை. அவர்கள் விஷயத்தில் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதன் மூலமாகப் பாதுகாப்பை ஏற்படுத்துவது அவசியமென்ருவது, விரும்பத்தக்கதென்ருவது நாங்கள் நினைக்கவில்லை. முஸ்லீம் மைனுரிட்டிகளுக்கு அத்தகைய பாதுகாப்பை விசேஷ காரணங்களை உத்தேசித்தும், சொற்பகாலம் வரையிலுமே ஏற்படுத்தியிருக்கிறோமென்பதை அவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். முஸ்லீம்கள் சீக்கிரத்திலோ, பிறகோ தங்களையே நம்பிக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்படவேண்டியிருக்கும். ஆரம்பம் முதலே ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டியதில்லையென்று அவர்கள் சொன்னுல் எங்களுக்குத் திருப்தியாக இருக்கும்.

முஸ்லீம் மைனுரிட்டிகளுக்கும் முஸ்லீம்கள் அல்லாத மைனுரிட்டிகளுக்கும் எவ்வித உவமையுமிருந்து வரவில்லை. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையைக் கவனிக்கையில் முஸ்லீம்களல்லாத மைனுரிட்டி சமூகத்தினர் சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயத்தைப் போன்றிருப்பார்கள். பர்மாவிலேயே பெரும்பாலும் இருந்துவருகிறவர்களாகவும், அங்கு பெரும்பான்மையோராக இருந்து வருகிறவர்களாகவும் இருந்து வரும் புத்தமதத்தினர் விஷயத்தைக் கணக்கிலிருந்து விலக்கிவிடின், இதர முஸ்லீம்களல்லாத மைனுரிட்டி சமூகத்தினர் பின் கண்ட விகிதாசாரப்படி இருந்து வருகின்றனர்:—

| | |
|---|---|
| கிறிஸ்தவர்கள் | 1.2% |
| சீக்கியர்கள் | 1.0% |
| ஜெயினர்கள் | .2% |
| இதரர்கள் (மலைஜாதியினர் நீங்கலாக) | ·2% |

ஆகவே, மத்திய சட்டசபை சம்பந்தப்பட்ட வரையில் முஸ்லீம்களல்லாத மைனுரிட்டி சமூகங்களுக்கு ஜனத்தொகையின் பேரில் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதால் எவ்வித அனுகூலமுமேற்படாது. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் பெலுஜி ஸ்தானத்திலும் சிறுபான்மையோராக இருந்துவரும் சமூகத்தினரைத் தவிர மற்ற இடங்களில் இருந்துவரும் சிறுபான்மையோரான சமூகத்தினருக்கு மாகாண சட்டசபையில் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதற்கு அவசியமில்லை. அவர்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பது குழப்பத்தை உண்டுபண்ணும். தவிரவும், அந்த சமூகங்களுக்கு அதனால் அனுகூலம் ஏற்படுமா வென்பது எங்களுக்கே சந்தேகமாக இருக்கிறது.

பஞ்சாபிலும், வங்காளத்திலும் ஹிந்துக்கள் முறையே 32%ம், 45%-ம் இருந்து வருகின்றனர். இவர்கள் மிகச் சிறுபான்மையோரென்று எவரும் சொல்லமுடியாது. ஆகையால் அவர்களைப் பற்றி நாங்கள் பிரஸ்தாபிக்கவில்லை,

## சீக்கியர்கள்.

முஸ்லீம்களல்லாத மைனுரிட்டி சமூகங்களில் சீக்கியர்கள் விசேஷ கவனத்தைக் கவரவேண்டிய நிலைமையிலிருந்து வருகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் பஞ்சாபிலேயே இருந்து வருகிறார்கள். ஐக்கிய மாகாணங்களில் முஸ்லீம்கள் இருந்துவரும் நிலைமையிலேயே அவர்கள் அங்கு இருந்துவருகிறார்கள். ஐக்கியமாகாணங்களிலேனும் முஸ்லீம்கள் 15% இருந்து வருவதால் பஞ்சாபில் 11% இருந்து வரும் சீக்கியர்களை விட அவர்களுடைய தொகை அதிக மென்றே சொல்லவேண்டும். இப்பொழுது இருந்து வரும் ஏற்பாட்டில் அவர்களுக்கு தனித் தொகுதிகள் இருந்து வருகின்றன. அவர்களுடைய ஜனத்தொகையின் வீதாசாரப்படி அவர்களுக்குக் கிடைக்கவேண்டியதை விட அதிக ஸ்தானங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சீக்கியர்கள் ஒரு தனிப்பட்ட முக்கிய மைனுரிட்டி சமூகத்தினரென்றும், அவர்களை அலக்ஷியம் செய்துவிட முடியாதென்றும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். எங்களுடைய சகாவான ஸர்தார் மங்களசிங் தெரிவித்துக்கொண்டு வந்திருக்கும் சீக்கிய சமூகத்தினரின் அபிப்பிராயத்தை நாங்கள் சிரத்தையுடன்

கவனித்து வந்திருக்கிறோம். தேசத்தின் பொது நன்மையை உத்தேசித்து வகுப்புச் சலுகைகளை விட்டுக்கொடுத்ததன் மூலமாக அவர்கள் தங்களுடைய மேலான தியாக புத்தியைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற சில வருஷங்களாக சட்டசபைப் பிரதிநிதித்வ விஷயமாக நடந்துவந்திருக்கும் விவாதங்களில் கலப்புத் தொகுதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒருவருக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டியதில்லையென்றும் அவர்கள் சொல்லிவந்திருக்கிறார்கள். பஞ்சாபில் எந்த ஜில்லாவிலும் சீக்கியர்கள் பெரும்பான்மையோராக இருந்துவரவில்லையென்றும், அவர்கள் அதிகமாக இருந்துவரும் லூடியானா ஜில்லாவில் இருந்துவரும் பல சமூகத்தினரில் அவர்களுடைய சமூகத்தினர் அதிகத் தொகையினர் தானென்றும் எங்களுடைய சகாவான ஸர்தார் மங்களசிங் எங்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். இந்த ஜில்லாவிலும் அவர்கள் மெஜாரிட்டியாக இருந்துவரவில்லை; மொத்த ஜனத் தொகையில் 41·5% தான் இருந்து வருகின்றனர். இதர ஒவ்வொரு ஜில்லாவிலும் முஸ்லீம்களோ, ஹிந்துக்களோ, அல்லது இருவருமோ அவர்களைவிட அதிகமாக இருக்கின்றனர். இவ்வித நிலைமையில் சீக்கியர்கள் இருந்துவருவதால் 18-வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீ புருஷர்களுக்கு ஓட்டு சுதந்திர மேற்படுகையில் மைனாரிட்டி சமூகத்தினருக்கு விளையக் கூடிய பல பிரதி கூலங்களும் அவர்களுக்கு ஏற்படக்கூடும். ஆகவே, ஐக்கிய மாகாணங்களில் முகம்மதியர்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைத்திருப்பது போலவே பஞ்சாபிலும் அவர்களுக்கு மாகாண சட்ட சபையிலும், மத்திய சட்டசபையிலும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கவேண்டுமென்று கேட்க அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் மூன்றாவதாக வேறொரு அம்சமிருந்து வருவதைக் கவனிக்க வேண்டும். முஸ்லீம்கள் மெஜாரிட்டியாகவும், சீக்கியர்கள் மைனாரிட்டியாகவும் இருந்து வந்தபோதிலும் ஹிந்துக்கள் மிகுந்த சக்தியுள்ள மைனாரிட்டியாகவிருந்துவருகின்றனர். ஆகவேதான் பஞ்சாபில் பல சமூகங்களுக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதென்ற தர்மத்தின்மேல் எவ்விதத் திருப்திகரமான ஏற்பாட்டையும் செய்ய முடியாமலிருந்திருக்கிறது. பஞ்சாப் பிரச்சினையானது அகில இந்திய முக்கியத்தைப் பெற்றுவிட்டது. இது ஒரு மாகாணத்தில் ஏற்படும் தனிப் பிரச்

சினை யென்று நாங்கள் நினைத்துவிடுவதற்கில்லை. சிக்கலான நிலைமைகளை நிவர்த்தி செய்து, தேசீயத்திற்கு அதிக செல்வாக்கு ஏற்படும்படி செய்வதற்கு பஞ்சாபிலிருந்து வகுப்பு உணர்ச்சியை அடியோடு வெருட்டி அடிப்பதே பரிகாரமாகும். எங்களுடன் இந்த விஷயத்தைப் பூராவாகவும் பட்டவர்த்தனமாகவும் விவாதித்த எங்களுடைய சகாவான ஸர்தார் மங்கள சிங்கும் எங்களைப்போலவே இந்தக் கஷ்டத்தை உணர்ந்திருக்கிறார். வகுப்புப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் விஷயத்தில் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ எவ்விதச் சிக்கலையும் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் சீக்கிய சமூகத்திற்கு இருந்து வரவில்லை யென்றும் நாங்கள் நம்புகிறோம். அவர்கள் விசேஷச் சலுகைகளைக் கோருவதாயின், ஒரே வழியான பிரதி நிதித்துவ முறையை ஏற்படுத்துவது அசாத்திய மானதாகும்படி செய்துவிடக் கூடிய பல சங்கடங்களைக் கிளப்பிவிடலாம். இதை அவர்கள் உணர்ந்து, எவ்விதக்கஷ்டமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு வலுவில் தங்களுடைய பாத்தியங்களை யெல்லாம் விட்டுக்கொடுத்திருக்கின்றனர். அவர்களுடைய நல்லுணர்ச்சியை நாங்கள் மதித்து, அவர்கள் தேசாபிமானத்துடன் செய்துகொண்டிருக்கும் முடிவைப் பாராட்டுகிறோம்.

## வேறு ஒரு வழி.

நாங்கள் சொல்லியிருக்கும் யோசனைக்குப் பதிலாக, தலைவர்கள் மகாநாட்டில் செய்த முடிவை அனுசரித்து, எந்த சட்ட சபையிலும் எந்த சிறுபான்மையோரான சமூகத்தினருக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் வழியொன்றுதானிருக்கிறது. இதனால் முஸ்லீம்களல்லாதவர்களுக்கு எவ்வித நன்மையு மேற்படாத போதிலும் முஸ்லீம்களுக்கு மிகுந்த அதிருப்தி ஏற்படும். வகுப்பு ஓட்டுத் தொகுதிகள் மூலமாக இப்பொழுது முஸ்லீம்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதுடன், ஒவ்வொரு மாகாணத்திலும் அவர்களுடைய ஜனத்தொகையின்படி அவர்களுக்குரியதைவிட அதிக ஸ்தானங்கள் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன வென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் அதிக ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதற்குப் பதிலாக அதிக ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களாக நிற்பதற்கு அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்கிறோம். அவர்கள் விஷயத்தில் ஸ்தானங்களை ஒதுக்கிவைத்திருக்கும்

ஏற்பாட்டை நாங்கள் விட்டுவிடுவது சாத்தியமில்லை. முஸ்லீம்களல்லாத மெஜாரிட்டி சமூகங்களுக்காவது, மைனாரிட்டி சமூகங்களுக்காவது இதனால் எவ்விதக்கஷ்டமும் ஏற்படாது. எல்லாமைனரிட்டிகளுக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று நாங்கள் பிரார்சு செய்தால், ஓய்வொழிவில்லாமல் பல சங்கடங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இப்பொழுது இருந்துவரும் மைனாரிட்டி சமூகத்தினரான கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், யூதர்கள் இவர்களைத் தவிர, ஹிந்துக்களுக்குள்ளேயே புதிய தொகுதியினரும், ஜாதியினரும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று கேட்பார்கள். இது ஓயாத் தொல்லையாக விருக்கும்.

வகுப்புப் பிரச்னையானது ஹிந்து-முஸ்லீம் பிரச்னைதான். அந்த அஸ்திவாரத்தின் பேரிலேயே அதைப் பைசல் செய்துவிட வேண்டும். அதைத் தீர்த்துவைப்பதற்காக நாங்கள் முயற்சிசெய்கையில், இதுவரையில், தனிப்பிரதிநிதித்துவம் கேட்காமலிருந்து வரும் வகுப்புகளுக்கும் உள் வகுப்புகளுக்கும் வகுப்பு உணர்ச்சி ஏற்படும்படி செய்துவிடுவது தேசத்திற்குக் கைங்கர்யம் செய்வதாகாது.

## பிராமணரல்லாதார்.

ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த பிராமணரல்லாதார், தாழ்ந்த வகுப்பினர் ஆகிய இரண்டு முக்கிய சமூகத்தினர்களுடைய விஷயம் பாக்கியிலிருக்கிறது. பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்கும் வேற்றுமை தென்னிந்தியாவில்தானிருந்து வருகிறது. மற்ற இடங்களில் அது இருந்துவரவில்லை. பிராமணரல்லாதார் இருந்து வரும் இடங்களில் அவர்கள் சென்னையிலிருந்து வருவதுபோல் மிகப் பெரும்பான்மை யினராகவோ, அல்லது பம்பாயில் சில பாகங்களிலிருந்து வருவதுபோல் மிகுந்த சக்தியுள்ள மைனாரிட்டியாகவோ இருந்துவருகின்றனர்; சமீபகாலத்தில் நடந்திருக்கும் தேர்தல்களின் முடிவிலிருந்து சட்டசபைப் பிரதிநிதித்துவ விஷயத்தில் அவர்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் அவசியமில்லை யென்பது வெளிப்பட்டுவிட்டது. தேசத்தின் ராஜீய, சமூக வாழ்வில் பிராமணர்கள் செல்வாக்கடைந்து விட்டதுதான் அவர்களுடைய முக்கிய குறை. கல்வித்துறையில் அவர்கள் மேம்பாடடைந்திருந்ததால் அவர்கள் செல்வாக்குப் பெற்றுவிட்டனர். இப்பொழுது பிராமணரல்லாதார் முன்னேற்ற மடைந்து வருவதால் அவர்களுடைய செல்வாக்குக்கு அபாயம் விளைந்துகொண்டிருக்கிறது.

## "தாழ்ந்த" வகுப்பினர்.

"தாழ்த்தப்பட்ட அல்லது "ஒடுக்கப்பட்ட" சமூகத்தினர் பிரச்சினை சில வருஷங்களாக அதிக கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. அவர்கள் இப்பொழுது இருந்துவரும் நிலைமையை இந்தியாவின் ராஜீய அபிவிருத்திக்கு எதிரிடையாகச் சொல்லப்படுகிறது. இவ விதம் ஒரு பெரிய வகுப்பினரை ஒடுக்கி வைத்ததற்கு ஹிந்துக்கள் தான் ஜவாப்தாரி யென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இருந் தாலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இவர்களிடம் அதிகக் கருணை யிருப்பதாகக் காட்டிக் கொள்ளுவதற்கு அவர்களுடைய ஜீவகா ருண்ய புத்தியாவது, அல்லது அவர்களுக்கு இந்த வகுப்பினரிடத்தி லிருந்து வரும் அன்பாவது காரணமல்லவென்றும் நாங்கள் நிச்சய மாக அபிப்பிராயப்படுகிறோம். இந்தப் பாசமானது சமீபத்தில் தான் முளைத்திருக்கிறது. இந்த தேசத்தில் ராஜீய இயக்கம் வலுத்துவிட்டதால், தாழ்ந்த வகுப்பினருடைய ஆதரவைப் பெறு வதற்காக அவர்களிடத்தில் தங்களுக்கு மிகுந்தபாச மிருப்பதுபோல் காட்டிக்கொள்ளுகின்றனர்.

1917-ம் வருஷத்திற்குப் பிறகுதான் கல்வி இலாகா யாதாஸ்து களில் இவர்களுடைய ஜனசங்கியையும், இவர்களுடைய கல்வி அபி விருத்திக்காகச் செய்துவரும் ஏற்பாடுகளும் குறிப்பிடப்பட்டு வரு கின்றன. கவர்ன்மெண்டின் கருணையால் இந்த வகுப்பினருக்கு இதுவரை எவ்வித விசேஷ அனுகூலமும் ஏற்பட்டுவிடவில்லை. இவர்களுடைய சமூகத்தினரில் சிலரை சட்ட சபைகளுக்கு நியமித் திருக்கிறார்கள்; இவர்களுடைய வகுப்புப் பாடசாலைகளுக்கு சொற்ப திரவிய சகாயம் செய்திருக்கிறார்கள்.

இந்த வகுப்பினரை முன்னுக்குக் கொண்டுவரும் உத்தியோ கஸ்தர்களல்லாத இந்தியர்கள் அதிக சிரத்தையுடன் பிரயோஜனப் படத் தக்க முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். கிறிஸ்தவப் பாதிரிகளும் இத்துறையில் உதவி செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் மகாசபையா னது 1920-ம் வருஷத்தில் தீண்டாமையைப் போக்குவதைத் தனது முக்கிய வேலையாக ஏற்றுக்கொண்டது. மகாத்மா காந்தி இந்த இயக்கத்தில் மிகுந்த சிரத்தையுடன் இறங்கியிருப்பது எல் லோருக்கும் தெரிந்த விஷயம். இதர ராஜீய ஸ்தாபனங்களும் மிகுந்த உறுதியுடன் தீண்டாமையைப் போக்கிவிட வேண்டு மென்று சொல்லியிருக்கின்றன. சில வகுப்பு ஸ்தாபனங்களும் இவ் விதம் செய்திருப்பதற்கு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். இது

வரையில் செய்து வரப்பட்டிருக்கும் வேலையிலிருந்தும், அதனால் விளைந்திருக்கும் அனுகூலத்திலிருந்தும், இந்த ஸ்தாபனங்களின் சிரத்தையானது வாசாசைங்காரியத்துடன் நின்றுவிடவில்லையென்பது வெளிப்பட்டுவிட்டது. இருந்தாலும் இந்த முயற்சியைத் தடைப் படுத்தக்கூடிய குறுகிய புத்தியுள்ளவர்கள் இந்த தேசத்திலிருந்து வருவது எங்களுக்குத் தெரியும். எனினும், தீண்டாமைக்குச் சாவுமணி அடித்தாகிவிட்டதென்றே நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

அரசியல் அமைப்பு சம்பந்தமாக நாங்கள் சொல்லியுள்ள யோசனைகளில் "தாழ்ந்த" வகுப்பினரின் பிரதிநிதித்துவத்திற்காகப் பிரத்தியேக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. தனித் தொகுதிகள் மூலமாகவோ, அல்லது நியமன மூலமாகவோதான் இது சாத்தியப்படும். இன்னொரு இடத்தில் தனித் தொகுதிகளைப் பற்றியும், ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் விஷயத்தைப்பற்றியும் விவரித்திருக்கிறோம். இந்த நேர்மைபற்றதும் கெடுதலானதுமான ஏற்பாட்டை இவர்கள் விஷயத்திலும் பிரயோகத்திற்குக் கொண்டுவருவதை சாத்தியமானால் நாங்கள் விரும்பவில்லை. இந்த வழியில் இவர்களுக்குப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதால் இந்த சமூகத்தினருக்கு நன்மைசெய்து விடக் கூடுமென்றும் நாங்கள் நினைக்கவில்லை. இவ்விதம் செய்வதால் தங்களுக்குச் சாதகமாக இருக்கக் கூடியவர்களாகவும், ஒருவருக்கும் பிரதிநிதியாக இருக்கத் தகுதியற்றவராகவும் இருக்கிறவர்களையே கவர்ன்மெண்டார் நியமிக்க நேரிடும். இவ்விதமே இப்பொழுது நடந்து வருகிறது.

இருந்தாலும் "தாழ்ந்த" வகுப்பு என்பது ஒழிந்து போகவேண்டுமென்றோ, அல்லது சமூகத்தில் தங்களுக்குரிய அந்தஸ்தை இவர்கள் வகிக்கும்படி சமூக, பொருளாதாரத் துறைகளில் இவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டு மென்றோ நாங்கள் பலமாக அபிப்பிராயப்படுகிறோம். இதைச் செய்வதற்கு கல்வி முதலிய வசதிகளை இவர்களுக்குக் கொடுப்பதும் இவர்களுடைய முற்போக்குக்கு இருந்துவரும் இடையூறுகளை நிவர்த்தி செய்வதுமே திறமையான வழியென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஜீவாதாரமான உரிமைகள் சம்பந்தமாக நாங்கள் குறிப்பிட்டிருக்கும் சில ஷரத்துகளின் மூலமாக இந்த வகுப்பினருக்கு இப்பொழுது இருந்துவரும் அசௌகரியங்கள் நிவர்த்தியாகி, இவர்கள் முன்னேற்றமடைவதற்கு இடமேற்படும். 18-வயதுக்கு மேற்பட்டவர்க

ளுக்கு ஒட்டு சுதந்திரம் ஏற்படுவதால் இவர்களுடைய அந்தஸ்து உயர்ந்து, ராஜீயத் துறையிலும் இவர்களுடைய செல்வாக்கு அதிகரிக்கும். முடிவாக, பிற்போக்கான நிலைமையிலிருந்து வரும் எல்லா சமூகத்தினருக்கும் கல்வி அறிவைப் புகட்ட வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாக இருந்துவர வேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். இந்தச் சிபார்சுகளையெல்லாம் நிறைவேற்றி வைக்கும் பக்ஷத்தில் "தாழ்ந்த" வகுப்புகள் என்பவை மறைந்து, அவைகளுக்குப் பதிலாக தன்னம்பிக்கையும், முற்போக்கான புத்தியுமுள்ள வகுப்புகள் முளைத்து அவைகள் பொது சமூகத்தின் நன்மைக்காக இதர வகுப்புகளுடன் ஒத்துழைத்துவருமென்று நாங்கள் நிச்சயம க நப்புகிறோம்.

## அத்தியாயம் IV.

### மாகாணங்களின் மறுபிரிவினை

வகுப்புவாரிப் பிரச்சினைகளிடமிருந்து நாங்கள் சந்தோஷத்துடன் செலவு பெற்றுக்கொண்டு, அரசியல் அமைப்புக்கு நெருங்கிய சம்பந்தமுள்ள பிரச்சினைகளில் பிரவேசிக்கிறோம். அரசியல் அமைப்பின் ஒரு பாகமாக மாகாணங்களை மறு பிரிவினை செய்யும் விஷயத்தை எல்லா இடங்களுக்கும் பொருத்தமான சில பொதுவிதிகளை அனுசரித்து சாமான்யமாக முடிவு செய்யவேண்டும். ஆனால் வெகு சாமான்யமான பிரச்சினையையும் சரியான உணர்ச்சியுடன் பரிசிலனை செய்யாமல் வேறு ஒரு பிரச்சினையின் அங்கமாக அதைக் கருதிவிடும் பொழுது அது மிகவும் கஷ்டமானதாகவும், சவுஜன்யமாகத் தீர்த்து வைக்க முடியாததாகவுமாகி விடுகிறதென்பதை நாங்கள் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஸிந்து பிரதேசத்தை பம்பாய் மாகாணத்திலிருந்து பிரித்து விடுவதைப்பற்றிய வகுப்பு உணர்ச்சியை நாங்கள் ஏற்கெனவே விவரித்து, எவ்விதம் ஒரு சாமான்ய விஷயமானது ராஜீய வாழ்வில் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றுவிட்டதென்பதை எடுத்துக்காட்டியிருக்கிறோம். இப்பொழுது பொதுப் படையான மாகாண மறு பிரிவினைப் பிரச்சினையை வகுப்பு வாதங்கள் சம்பந்தமில்லாத பொதுப் படையான தர்மங்களை அனுசரித்து நாங்கள் பரிசிலனை செய்கிறோம்.

### தற்போதைய பிரிவினை.

இப்பொழுது இந்தியாவில் மாகாணங்கள் பிரிவினை செய்யப்பட்டிருப்பது எந்த முக்கியமான தர்மத்தையும் அனுசரித்ததாக இருக்கவில்லையென்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்தவிஷயம். அகஸ்மாத்தாகவும், இந்தியாவில் பிரிட்டிஷாரின் அதிகாரம் வளர்ச்சியடைந்து வந்திருப்பதை அனுசரித்துமே இப்பொழுது இருந்துவரும் மாகாணப் பிரிவினை ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இந்த பிரிவினையானது இயற்கை வசதியையாவது, சரித்திரத்தையாவது, பொருளாதார காரணங்களையாவது, அல்லது வழங்கிவரும் பாஷைகளை அனுசரித்தாவது ஏற்பட்டிருக்கவில்லை. நிர்வாக சம்பந்தமாகவும் தற்போதைய ஏற்பாடானது திருப்திகரமான பலனைக் கொடுக்கவில்லை. ஆகவே, மாகாணங்களை மறுபிரிவினை செய்யவேண்டியது அவசியமா

கிறது. எங்களிற்சிலர் சிறிய மாகாணங்களாக இந்தியாவை உடைக்க வேண்டுமென்று நினைக்கின்றனர்; வேறு சிலர் பெரிய மாகாணங்களை ஏற்படுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றனர். மாகாணங்கள் சிறியவைகளாக இருக்கவேண்டுமோ, அல்லது பெரியவைகளாக இருக்கவேண்டுமா, அவைகளை மறு பிரிவினை செய்யும் விஷயத்தைப் பைசல் செய்ய வேண்டியிருக்கிறது.

## மறு பிரிவினையில் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள்.

எங்கெந்த தர்மங்களை அனுசரித்து இவ்விதம் மாகாணங்களை மறுபிரிவினைசெய்யவேண்டும்? ஓரளவு இயற்கை அமைப்பையும், ஓரளவு பொருளாதார, செல்வ நிலைகளையும் அனுசரித்து இது செய்யப்பட வேண்டுமாயினும், பொதுவாக ஜனங்களுடைய அபிப்பிராயமும் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின்பாஷா ஒற்றுமையுமே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும். கல்வியிலும், இதர துறைகளிலும், வாழ்வின் இதர அம்சங்களிலும் அபிவிருத்தியடைவது பாஷையைப் பொறுத்திருக்கிற தென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அந்நிய நாட்டு பாஷையின் மூலமாக் கல்வி போதிக்கப்படின் தேசத்தின் வளர்ச்சியானது பல துறைகளிலும் தடைபட்டுப் போய்விடும். இந்தக் காரியங்களுக்காக அந்நிய நாட்டினருடைய பாஷை உபயோகிக்கப்படுமிடங்களில் ஜனநாயக முறை இருந்துவர முடியாது. ஜனநாயக முறையில் ஜனங்கள் விஷயங்களை நன்கறிந்தவர்களாகவும், பொது வாழ்வில் தங்களுக்குரிய பங்கை எடுத்துக் கொள்ளுவதற்காக என்னென்ன காரியங்கள் நடந்து வருகின்றன வென்பதைத் தெரிந்துகொண்டு அவைகளில் ஈடுபட சக்தியுடையவர்களாகவும் இருக்கவேண்டும். ஒரு அந்நிய பாஷை உபயோகிக்கப்பட்டு வரின் ஜனங்கள் இவ்விதம் செய்ய முடியுமென்று எதிர்பார்ப்பது சாத்திய மில்லை. ஆகவே, ஒரு தேசத்தின் காரியங்களையும், ராஜீயவேலைகளையும் சாமான்ய ஜனங்கள் அறிந்து கொள்ளக் கூடிய பாஷையில் நடத்த வேண்டியது அவசியமாகிறது. மாகாணங்கள் சம்பந்தப்பட்டவரையில் அந்தப் பாஷையானது அந்தந்த மாகாணத்தின் பாஷையாக இருக்க வேண்டும்.

## பாஷை.

ஆங்கில பாஷையை உபயோகிப்பதற்கு எதிரிடையாக நாங்கள் இருக்கவில்லை. இப்பொழுது இருந்துவரும் நிலைமையில் ஆங்கில

பாஷையானது இப்பொழுது இருந்து வரும் இந்தியா சட்டசபை யில் விவாதத்திற்கு உபயோகிக்கப்படும் பாஷையாக இருக்கவேண்டு மென்று நாங்கள் நினைக்கிறோம். இதர தேசங்களின் அபிப்பிராயங் களிலும் சாஸ்திர அபிவிருத்திகளிலும் சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு ஒரு அங்கிய பாஷை தெரிய வேண்டியது அவ சியமென்றும் நாங்கள் நினைக்கிறோம். அந்த பாஷை இப்பொழுது ஆங்கிலமாகவே இருக்கக்கூடும். ஆயினும் இந்தியாவின் ஒரு பாதி யில் இப்பொழுது வழங்கிவரும் ஹிந்துஸ்தானியை இந்தியாவின் பொதுப் பாஷையாகச் செய்து விடுவதற்கு விசேஷ முயற்சி செய்ய வேண்டு மென்று நாங்கள் பலமாக அபிப்பிராயப்படுகிறோம். இவை களெல்லாம் அவசியமென்று வைத்துக்கொண்ட பிறகும், மாகாண பாஷைகளை அபிவிருத்தி செய்யவேண்டும். மாகாணங்கள் ஜனுராக அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் ஒவ்வொரு மாகாணமும் தன் னுடைய சுய பாஷையின் மூலமாகவே தன்னுடைய காரியங்களை நடத்தி வரும்படி செய்யவேண்டும்.

ஒரு மாகாணமானது தன்னுடைய பாஷையின் மூலமாகவே கல்வி அறிவைப் பெற்று, தன்னுடைய காரியங்களை அந்தப் பாஷை யின் மூலமாகவே செய்துவர வேண்டுமாயின், அது ஒரே பாஷை வழங்கும் பிரதேசமாக இருந்துவர வேண்டும். அது பல பாஷைகள் வழங்கிவரும் பிரதேசமாக இருந்து வந்தால் பல சங்கடங்கள் ஏற்பட்டுக்கொண் டிருக்கும்; கல்வி போதிக்கவும், இதர காரியங்களைச் செய்யவும் பல பாஷைகளை உபயோகப் படுத்த வேண்டி யிருக்கும். ஆகவே மாகாணங்களை பாஷாவாரியாக ஒன்று சேர்த்து விடுவது விரும்பத்தக்கதாக விருக்கிறது. ஒவ்வொரு பாஷை வழங்கிவரும் இடத்திலும் பழக்கங்களும், சம்பிரதாயங்களும், கிரந்தங்களும் வெவ்வேறாக இருந்துவருகின்றன. ஒரே பாஷை வழங்கிவரும் பிரதேசத்தில் அந்தப் பிரதேசம் அபிவிருத்தி அடைவ தற்கு இவை உபயோகமாக இருக்கும்.

இவ்விதம் பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிவினை செய்ய வேண்டு மென்பதை காங்கிரஸ் மகாசபை 8 வருஷ காலத்திற்கு முன்பே தெரிவித்துக் கொண்டு விட்டது. அதுமுதல் காங்கிரஸ் ஸ்தாபனம் சம்பந்தப் பட்டமட்டில் இந்தியாவானது பாஷாவாரியான மாகாணங்களாகப் பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது.

## ஜனங்களின் விருப்பம்.

மாகாணங்களின் மறு பிரிவினையில் கவனிக்க வேண்டிய அம்சங்களில் ஜனங்களுடைய அபிப்பிராயமும் முக்கியமானதொரு அம்சமாகும். இந்தியாவுக்கே சுய நிர்ணய தந்திரத்தைக் கோரும் நாம் ஒரு சிறிய பிரதேசத்திற்கு அந்த சுதந்திர மில்லை யென்று சொல்ல முடியாது. ஆனால் அவ்விதம் சுய நிர்ணய சுதந்திரத்தைக் கொடுப்பதானது வேறு எந்த தர்மத்தை யாவது, முக்கியமான கொள்கையை யாவது பாதிக்காம லிருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிக்கும் ஜனங்கள் ஒருமாகாணத்தினராக இருந்துவர வேண்டுமென்று சொல்லுவதற்கு சரித்திர பூர்வமாகவும், பழக்க வழக்கங்களை ஒட்டியும் ஆதாரமிருந்து வந்தபோதிலும், அவர்கள் தாங்கள் ஒன்றுபட்டவர்களென்றும், தங்களுடைய வித்தையை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்றும் நினைப்பின் அதுவே நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான அம்சமாகும். இந்த விஷயத்தில் ஜனங்களுடைய உணர்ச்சியே முக்கியமானது.

ஆகவே, மாகாணங்களின் மறு பிரிவினை விஷயத்தில் பாஷையின் வியாபகமும், ஜனங்களுடைய அபிப்பிராயமுமே முக்கியமான அம்சங்களென்று ஏற்படுகிறது. அவ்வளவு முக்கியமானதாக இல்லாவிடினும், நிர்வாக சவுகரியமும் இது சம்பந்தமாகக் கவனிக்கப் படவேண்டிய மூன்றாவது அம்சமாகும். இது அந்தப் பிரதேசத்தின் இயற்கை அமைப்பு, பொருளாதார மூலங்கள், செல்வநிலை இவைகளைப் பொறுத்தது. இருந்தாலும் நிர்வாக சவுகரியமானது எப்பொழுதும் நாமாகச் செய்துகொள்ளக்கூடிய ஏற்பாடு. பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு இது தலைகுனியவேண்டும்.

## பாஷாவாரியான பிரதேசங்கள்.

இந்தியாவின் படத்தைப் பார்க்கையில், பாஷாவாரியாக இருந்து வரும் சில குறிப்பான பிரதேசங்களைக் காண்கிறோம். வட இந்தியா முழுவதும் ஹிந்துஸ்தானி வழங்கிவரும் பிரதேசமாக இருந்து வருகிறது. பஞ்சாபில்தான் ஹிந்துஸ்தானி பஞ்சாபி பாஷையாக மருவி வழங்கி வருகிறது. வங்காள பாஷை வழங்கும் பிரதேசங்களும், அஸ்ஸாமிய பாஷை வழங்கிவரும் பிரதேசங்களும், ஒரியா பாஷை வழங்கிவரும் பிரதேசங்களும், தெலுங்கு பாஷை வழங்கி வரும் பிரதேசங்களும், தமிழ் பாஷை வழங்கி வரும் பிரதேசங்களும், மலையாளம் பாஷை வழங்கிவரும் பிரதேசங்களும், கன்

னட பாஷை வழங்கி வரும் பிரதேசங்களும், மராத்தி பாஷை வழங்கிவரும் பிரதேசங்களும், குஜராத்தி பாஷை வழங்கிவரும் பிரதேசங்களும், ஸிந்தி பாஷை வழங்கிவரும் பிரதேசங்களும் இருந்து வருகின்றன. வங்காளக் குடாக்கடலுக்கப்பால் பர்மிய பாஷை வழங்கிவருகிறது. தெலுங்கு பாஷை வழங்கி வரும் ஆந்திர பிரதேசத்தையும், ஒரியா பாஷை வழங்கிவரும் உத்கலேயும், கன்னட பாஷை வழங்கும் கர்ணாடகத்தையும், மலையாளம் வழங்கிவரும் கேரளத்தையும், ஸிந்தி பாஷை வழங்கும் ஸிந்தையும், ஹிந்தி பாஷை வழங்கும் மத்திய மாகாணங்களின் பாகத்தையும், இதர பிரதேசங்களையும் பிரிவினை செய்துவிட வேண்டுமென்று அடிக்கடி கோரப்பட்டு வந்திருக்கிறது. மாகாணங்களை மறு பிரிவினை செய்யும் விஷயத்தை ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளுகையில் இவைகளெல்லாவற்றையும் பற்றி விசாரித்து முடிவு செய்ய வேண்டும். இவைகளில் பல பிரதேசங்களின் பிரிவினையைப்பற்றி எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவிப்பதற்கு வேண்டிய தகவல்கள் எங்களிடத்தி லில்லை. கர்ணாடகம், ஸிந்து இவைகளைத் தவிர மற்றவைகளின் பிரிவினை சம்பந்தமாக எங்களுக்கு எவ்வித விஞ்ஞாபனமும் கிடைக்க வில்லை. உத்கலின் பிரிவினை விஷயமாக ஒரு சிறிய புத்தகம் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனல் ஸ்பெஷல் விஞ்ஞாபன மில்லாமலும், இதைப் பற்றி எவரும் எவ்வித விஷயத்தையும் தெரிவித்துக் கொள்ளாமலும் நாங்கள் ஒருவித முடிவுக்கும் வருவதற்கில்லை. ஒரியா வழங்கும் பிரதேசங்களை ஒன்றுபடுத்துவதற்குச் செல்வ நிலைமை இடங்கொடுக்குமாயின் அந்தப் பிரதேசங்களை ஒன்று சேர்த்து, அவைகளை ஒரு தனி மாகாணமாகச் செய்துவிட வேண்டுமென்று எங்களுடைய சகாவான ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் அபிப்பிராயப்படுகிறார். அஸ்ஸாம், பீஹார், ஒரிஸா இந்த மாகாணங்களில் வங்காளி பாஷை வழங்கிவரும் பிரதேசங்களை ஒன்றுபடுத்திவிட வேண்டுமென்று கேட்கப்படுவதும் நியாயமானதென்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

## கேரளம்.

கேரளம் சம்பந்தப்பட்ட வரையில் மலையாளம் வழங்கும் பிரதேசங்களை ஒன்றுபடுத்தி, இதர பிரதேசங்களிலிருந்து அவைகளைப் பிரித்து விடவேண்டுமென்று கேரள மாகாண மகாநாடு செய்திருக்கும் தீர்மானம் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. கேரளப்பிரதே

சத்தில் பெரும் பாகம் திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களில் அடங்கியிருப்பதால், அந்தப்பிரதேசங்களை ஒன்றுபடுத்துவதில் பலவித சங்கடங்கள் இருந்துவருகின்றன. இப்பொழுது இருந்துவரும் நிலைமையை உத்தேசித்து சுதேச சமஸ்தானங்களை விட்டு விடுவதாயின், சிறிய பிரதேசமே பாக்கியிருக்கும். ஆகவே, கேரளம் சம்பந்தமாக அதிகத் தகவல்கள் இல்லாத நிலைமையில் இப்பொழுது நாங்கள் எவ்விதச் சிபார்சையும் செய்யத் தயாராக இருக்கவில்லை.

## கர்னாடகம்.

கர்னாடகத்தைப் பிரிவினை செய்து விடவேண்டிய அவசியத்தைப்பற்றி கர்னாடகத்தை ஒன்றுபடுத்துவதற்கான சங்கம், கர்னாடக மாகாண காங்கிரஸ் கமிட்டி இவைகளின் பிரதிநிதி எங்கள் முன் ஒரு விஞ்ஞாபனத்தை ஆஜர் செய்தார். அந்த விஞ்ஞாபனமானது மிகத் திறமையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சரித்திர பூர்வமாகவும், புள்ளி விவரங்கள் மூலமாகவும் பல விஷயங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. எங்களுடைய கேள்விகளுக்கெல்லாம் திருப்திகரமான பதில் கொடுக்கப்பட்டது. கர்னாடகத்தை ஒன்றுபடுத்தி, அதைத் தனிமாகாணமாகச் செய்து விடவேண்டிய அவசியம் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதாகவே நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

கர்னாடக பாஷை வழங்கிவரும் பிரதேசங்களில் சில பாகங்கள் சுதேச சமஸ்தானங்களிலும், மைசூர் சமஸ்தானத்திலும் இருந்து வருகின்றன. இவைகளை மற்றப் பிரதேசங்களுடன் சேர்ப்பதில் அனுபவத்தில் பல சங்கடங்கள் ஏற்படும். மைசூர் சமஸ்தானத்திற்கு அப்பால் இருந்துவரும் கர்னாடக பாஷை வழங்கிவருபதான தீவுகளை ஒன்றுபடுத்துவது சவுகரியமானதாக இல்லாமலிருக்கலாம். இந்தப் பிரதேசங்களை ஒதுக்கினாலும், விஸ்தாரமான பிரதேசம் பாக்கியிருக்கிறது.

இவ்விதம் கன்னட பாஷை வழங்கி வரும் பிரதேசங்களை ஒன்றுபடுத்த வேண்டுமென்று எல்லா ஜனங்களும் விரும்புகிறார்களென்று எங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. இங்கு ஹிந்து-முஸ்லீம் பிரச்சினை இருந்துவரவில்லை; பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்சினை இருந்து வருகிறது. இது ஒன்றுபடுத்தும்

பிரச்சினையைப் பாதிக்காது. ஒரு சில பிராமணர்கள் ஆட்சேபித்த போதிலும், கட்டுப்பாடான எதிர்ப்பு இருந்து வரவில்லை. இந்தப் பிரதேசங்களின் எல்லைப் புறங்களிலிருந்து வரும் சில ஜில்லாக்களிலுள்ள மகாராஷ்டிரர்கள் சார்பாக இந்தப் பிரிவினையால் தங்களுடைய பாஷைக்குக் கஷ்ட மேற்படுமென்று தெரிவித்துக் கொள்ளப் பட்டது. ஆனால் இவ்வித நிலைமை உண்டாகாமல் தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்திவிடலாம்.

செல்வ நிலை விஷயத்திலும் கர்னாடகமானது சவுகரியமான நிலைமையிலிருந்து வருகிறது. இப்பொழுதும் பிரிட்டிஷ் இந்தியாவுக்குட்பட்ட கர்னாடகத்தில் அதிகப்பணம் உபரியாக இருந்துவருகிறது.

கர்னாடக விஷயத்தில் எங்களுக்கு இருந்துவரும் அபிப்பிராயத்தை எங்களுடைய சகாவான ஸ்ரீமான் ஆனே ஒப்புக்கொள்ளவில்லை. கர்னாடகத்திலிருந்து வந்திருந்த பிரதிநிதியுடன் இந்த விஷயத்தை விவாதித்தபோது அவர் துரதிஷ்டவசத்தினால் பிரசன்னமாக இருக்கவில்லை. நாங்கள் எதிர்பார்ப்பதைவிட இதற்கு எதிர்ப்பு அதிகமாக இருக்குமென்றும், நாங்கள் இந்த விஷயத்தை ஆலோசிக்கப் போவது தெரியாததால் அவர்கள் எங்களிடத்தில் வராமலிருந்திருக்கலாமென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார். இவ்வித நிலைமையிருந்து வருமென்று நாங்கள் நினைக்கவில்லை. கர்னாடகத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் இந்த விஷயத்தைப்பற்றி வெகுவாக எழுதப்பட்டு வருகிறது. கர்னாடகத்தார் எங்களுக்கு அனுப்பியுள்ள விஞ்ஞாபனமும் பிரபல்யப்படுத்தப்பட்டிருக்கிறது. யாதேனும் ஒரு தொகுதியினர் இந்தக்கோரிக்கைக்கு எதிரிடையாக இருந்தால் அவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை எங்களுக்குத் தெரிவித்திருப்பார்கள்.

இருந்தாலும் இந்த விஷயத்தை நாங்கள் முடிவாக தீர்த்துவிடுவதற்கில்லை. எனினும், கர்னாடக பிரதேசத்தை ஒன்றுபடுத்தி விடவேண்டுமென்று விரும்புவோர் அவ்விதம் செய்யவேண்டிய அவசியத்தை மெய்ப்பித்து விட்டதாகவே நாங்கள் நினைக்கிறோம். எல்லைப்புறங்களில் இரண்டு பாஷைகள் வழங்கிவரலாம். இதைப்பற்றி ஸ்தலத்தில் விசாரணை செய்யவேண்டும். இந்த விசாரணையை நிபுணர்களடங்கிய கமிட்டி நடத்தவேண்டும். ஸ்ரீமான்களான ஆனேயும்,

பிரதானியும் இது சம்பந்தமாக எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவித்துக்கொள்ள இஷ்டப்படவில்லை.

## ஸிந்து.

ஸிந்து பிரிவினை விஷயமானது உக்ரமான விவாதத்திற்கு இடங் கொடுத்திருந்த போதிலும், கர்னாடகப் பிரதிநிதி எல்லாத் தகவல்களையும் எங்களுக்குத் தெரிவித்ததுபோல் ஸிந்து பிரதேசத்தின் சார்பாக எல்லாத் தகவல்களையும் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை. ஸிந்து பிரதேசத்தைப் பிரிவினை செய்ய வேண்டுமென்று கோருவோரும் கர்னாடக பிரதேசத்தினரைப் போல் பொறுமையுடன் படங்களையும், புள்ளி விவரங்களையும், இதர தகவல்களையும் கொடுப்பது சவுகரியமாக இருக்கும். நாங்கள் ஏற்கெனவே எடுத்துக் காட்டியபடி, ஸிந்து பிரிவினையால் செல்வ நிலையில் ஏற்படக்கூடிய நிலைமையைப் பரிசீலனை செய்வதற்காக சர்வகக்ஷி மகாநாடு டில்லியில் ஒரு சப் கமிட்டியை நியமனம் செய்தது. ஆனால் பிரிவினையை விரும்புவோர் இந்தக் கமிட்டிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. ஆகையால் இந்தக் கமிட்டி ரிபோர்ட்டு செய்யவில்லை. கூடிய சீக்கிரத்திலாவது இந்தக் கமிட்டி ரிபோர்ட்டு செய்யுமா வென்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, இப்பொழுது எவ்வித ஆதாரங்களுமில்லாத நிலைமையில் பொதுப்படையான தர்மங்களை அனுசரித்தே இந்தப் பிரச்சினையை நாங்கள் சர்ச்சை செய்ய வேண்டியிருக்கிறது.

மாகாணங்களின் மறு பிரிவினை விஷயத்தில் பாஷை, பொது ஜனங்களின் அபிப்பிராயம் ஆகிய இரண்டு பொது தர்மங்களையுமே முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்று நாங்கள் முதலிலேயே சொல்லியிருக்கிறோம். இந்த இரண்டு பரீக்ஷைகளிலும் ஸிந்து தேறுகிறது. அது ஒரு தனிபாஷை வழங்கும் பிரதேசமாக இருந்து வருகிறது. அந்தப் பிரதேச வாசிகளில் பெரும்பாலோர் பிரிவினையை விரும்புகிறார்களென்றும் வைத்துக் கொள்ளலாம். இருந்தாலும் அந்தப் பிரதேசவாசிகளில் எத்தனை பேர் பிரிவினையை விரும்புகிறார்களென்பதற்கு எங்களிடத்தில் எவ்விதத் தகவலுமில்லை. ஆனால் ஒரு முஸ்லீமாவது பிரிவினையை ஆக்ஷேபிப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. அந்தப் பிரதேசத்தின் ஜனத் தொகையில் 74% முஸ்லீம்கள். அந்தப் பிரதேசத்தில் வசித்து

வரும் இதர சமூகத்தினராகிய ஹிந்துக்கள், பார்ஸிகள் இவர்களி லும் சிலர் பிரிவினையை ஆதரிப்பதை நாங்கள் அறிவோம். ஆகவே அந்தப் பிரதேசவாசிகளில் பெரும்பாலோர் பிரிவினையை விரும்பு வதாக வைத்துக்கொள்ளலாம். ஹிந்துக்களில் ஒரு சாரார், அதா வது ஸிந்துவிலிருந்து வரும் ஹிந்துக்களில் பெரும்பாலோர் பிரி வினைக்கு எதிரிடையாக இருப்பதும் எங்களுக்குத் தெரியும். ஒரு மாகாணத்தைப் பிரிவினை செய்யுமுன் மைனுரிட்டி சமூகத்தினரில் மூன்றிலொரு பாகத்தினரேனும் பிரிவினையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது தவறான கொள்கையென் றும், சுய நிர்ணய சுதந்திரத்தைப் பாதிப்பதுடன் மெஜாரிட்டி யாருடைய அபிப்பிராயத்திற்குச் செல்வாக்கு இல்லாமற் செய்கிற தென்றும், விபரீத பலன்களை விளைவிக்குமென்றும் நாங்கள் நினைக்கிறோம். இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்வதாக இருந்தால் ஜனத்தொகையில் 10-அல்லது 15% இருந்து வருகிறவர்கள் 90 அல் லது 85% ஜனங்களுடைய அபிப்பிராயம் நிறைவேறாமற் செய்து விடலாம். இது ஜனநாயக முறையாகாது.

இவ்வித நிலைமையில் மைனுரிட்டி சமூகமென்பது என்ன? சாதாரணமாக, மாகாணங்களில் மறுபிரிவினை விஷயமானது ஹிந்து-முஸ்லீம் பிரச்னையாகவாவது; வகுப்புப் பிரச்சினையாகவாவது இருப்பதற்கில்லை. பிரிவினையை ஆக்ஷேபிக்கும் மைனுரிட்டி சமூகத் தினர் பிரிவினைக்கு ஆதாரமில்லையென்று சொல்லி ஆட்சேபிப்பார் களேயன்றி வகுப்புக் காரணங்களைச் சொல்லி ஆட்சேபிக்க மாட் டார்கள். இந்த மைனுரிட்டி கோஷ்டியைச் சேர்ந்த ஒருவருடைய அபிப்பிராயத்தை எவ்விதம் மாற்றிவிட முடியும்? சிலருடைய அபிப் பிராயத்தை மாற்றி விடுவதாக வைத்துக்கொள்ளுவோம். மற்றொரு மைனுரிட்டி இருக்கிறது. அவர்களிலும் மூன்றிலொரு பாகத்தி னரைச் சரிப்படுத்த வேண்டுமென்று சொல்லப்படலாம்.

ஸிந்து பிரதேசமானது இரண்டு பரீக்ஷைகளிலும் தேறுவதாக இருக்கிறது. தவிரவும், அது தனிப் பிரதேசமாகவும் இருக்கிறது. பம்பாய்க்கும் அதற்கும் ஏற்படுத்தியிருக்கும் சம்பந்தம் இயற்கை க்கு விரோதமானதாக இருக்கிறது. பம்பாயிலிருந்து அங்கு சுலப மாகவும் போக முடியாது. ஆகவே, நிர்வாக சவுகரியத்தை உத்தே சித்தும் அதைப் பிரிவினை செய்து விடுவது விரும்பத் தக்கதாக இருக்கிறது.

ஸிந்து பிரதேசத்தைத் தனி மாகாணமாகச் செய்துவிடின் அதன் மூலமாக ஏற்படும் பொருளாதார, பணப்பொறுப்புகளை அது தாங்கிக்கொள்ள முடியாதென்று சொல்லப்படுகிறது. தவிரவும், ஸிந்து பிரதேசத்தில் பிரதி வருஷமும் பெருந்தொகை துண்டு விழு கிறதென்றும், பம்பாய் மாகாணத்தின் இதர பாகங்களி லிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து அது ஈடுசெய்து கொள்ளப் படுகிற தென்றும் சொல்லப்படுகிறது. சாதாரணமாக ஒவ்வொரு மாகாண மும் தன் செலவைத்தானே சமாளித்துக்கொள்ளக் கூடியதாகவும், மத்திய கவர்ன்மெண்டின் பிச்சையை நம்பியதாக இல்லாததாகவும் இருக்க வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அபூர் வமான சில கேஸ்களில் ஒருமாகாணம் தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்து வைத்துக்கொள்ள கூடிய நிலைமையை அடையும் வரையில் மத்திய கவர்ன்மெண்டார் உதவிசெய்ய வேண் டிய நிலைமை இருந்துவரலாம். அத்தகைய உதவி அவசியமான வேறு சில ஸ்பெஷல் கேஸ்களும் இருக்கலாம். ஆனால் பிரிவினையை விரும்பும் பிரதேசமானது நிர்வாகச் செலவுக்கே வெளியிடங்களி லிருந்து பணம் வந்து விழுமென்று நம்பிக்கொண்டிருப்பதற்கில்லை. எவ்வளவு பளு தன்மீது சுமருமென்பதை அது தெரிந்துகொண்டு, அதைத்தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

வெளிப்பணத்தைக் கொண்டு ஸிந்தில் இப்பொழுது ஆட்சி நடந்துவருகிறதென்றே வைத்துக்கொள்ளுவோம். இதனால் நிலை மை தெளிவுபட்டுவிடவில்லை. செலவைக் குறைத்துக் கொள்ளுவ தால் வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டிக்கொள்ளுவது சாத்தியமாக லாம். புதிதாக நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவருவதாலோ, அல்லது வேறு வழிகளாலோ வருமானம் பெருகலாம். நாம் சுதந் திர மடைந்தபிறகு முழு இந்தியா சம்பந்தமாகவும் இந்தப் பிரச்சி னையை நாம் பரிசிலனை செய்யவேண்டும். அப்பொழுது தேசத்தின் அபிவிருத்திக்காகவும், தேசோத்தாரண இலாகாக்களுக்காவும் பணச் செலவு செய்ய வேண்டுமென்பதே நம்முடைய முக்கிய நோக்கமாக இருக்கும். மாகாணங்களின் செலவைக் குறைத்துக் கொள்வதாலும், புதிய வருமான இனங்களைத் தேடிக் கொள்ளுவதாலுமே இது சாத் தியப்படும்.

ஸிந்து பிரதேசமானது அதிக அபிவிருத்தி அடையக் கூடிய நிலைமையிலிருந்து வருகிறது. கராச்சியானது பெரிய துறைமுகமாகி

விடக்கூடும். ஏராளமான பிரதேசங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப் படாமலோ, அல்லது அதிகமாக அபிவிருத்தி செய்யப்படாமலோ இருந்து வருகின்றன. நாளடைவில் ஸிந்து மாகாணமானது வரவு செலவை சரிக் கட்டிக்கொள்ளக் கூடியதாகவும், செழிப்பானதாகவுமாகிவிடலாம்.

பண காரணத்தைத் தவிர வேறு எக்காரணத்தைக் கொண்டும் ஸிந்து பிரிவினையை ஆக்ஷேபிப்பதற்கில்லை. அந்தக் காரணத்தைச் சொல்லி சுயநிர்ணய சுதந்திரத்தை மறுப்பது மிகுந்த அதிருப்திக்கு இடங்கொடுப்பதுடன், ஸிந்தின் அபிவிருத்தியையும் தடைப்படுத்தும். அந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காகச் செலவிடவேண்டிய சக்தி முழுவதும் வீண் வாதத்தில் வியர்த்தமாகிவிடும். ஸிந்து பிரதேசவாசிகள் பணப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டு இந்தப் பாத்தியத்தை அவர்களுக்குக் கொடுத்து விட்டால், இதர மாகாணங்களுடன் போட்டி போடுவதற்கு வேண்டிய ஊக்கம் அவர்களுக்கு ஏற்படும்.

ஆகவே, ஸிந்து பிரிவினை சம்பந்தமாகச் சொல்லப்படும் வாதம் அசைக்க முடியாததென்று நாங்கள் நினைக்கிறோம். பண சம்பந்தமாகப் போதிய தகவல்கள் இல்லாத நிலைமையில் அதைப்பற்றி நாங்கள் எவ்வித அபிப்பிராயமும் தெரிவிப்பதற்கில்லை. ஆனால் நாங்கள் குறிப்பிட்டுள்ள இதர சவுகரியங்களை யெல்லாம் அடித்துவிடக் கூடிய அவ்வளவு பலமுடையதாக பணசம்பந்தமான காரணம் இருக்கக் கூடுமென்று நாங்கள் நினைக்கவில்லை. வேறு தவிர்த்துக்கொள்ள முடியாத கஷ்டங்கள் முளைப்பதாக இருந்தாலன்றி ஸிந்து பிரதேசத்தைப் பிரிவினை செய்துவிடவேண்டுமென்றே நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அவ்விதக் கஷ்டம் எதுவும் இருப்பதாக இப்பொழுது எங்களுக்குத் தெரியவில்லை.

நாங்கள் சொல்லியுள்ள வாதங்களை எங்களுடைய சகாக்களான ஸ்ரீமான் ஆனேயும், ஸ்ரீமான் பிரதானியும் ஒப்புக்கொள்ளவில்லை. ஸிந்து பிரதேசமானது ஒரு தனி பாஷை வழங்கிவரும் பிரதேசமென்றும், ஜனத் தொகையில் பெரும்பாலோர் பிரிவினையை விரும்புகிறார்களென்றும் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஒரு முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமுன் பண, நிர்வாக சம்பந்தமான விஷயங்களை விசாரிக்கவேண்டுமென்று

அவர்கள் சொல்லுகிறார்கள். பிரிவினை செய்யுமுன் பணவிஷயத்தைப் பற்றி விசாரணை செய்யவேண்டுமென்றே நாங்களும் அபிப்பிராயப் படுகிறோம்.

ஒரு பிரதேசத்தைப் பிரிவினை செய்வதாலும், புதிய மாகாணத்தை ஏற்படுத்துவதாலும் புதிய பொருளாதார வாழ்வு ஏற்பட்டு விடுமென்பதில்லை. இதனால் கவர்ன்மெண்டு ஸ்தாபனங்கள் இரட்டித்துப்போக வேண்டுமென்பதுமில்லை உதாரணமாக, ஒரு மாகாணத்திற்கு அதிகப்பட்ட பிரதேசத்திற்கு ஒரு ஹைகோர்ட்டு போதியதாக இருக்கலாம்.

ஸிந்து விஷயத்தை விட்டகலுமுன் ஸிந்து நாஷனல் லீக் அனுப்பியிருக்கும் "ஸிந்து ஒப்பந்த"த்தைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. இது பல விஷயங்களைப் பற்றிய 10-பிரிவுகள் அடங்கியதாக இருக்கிறது. ஹிந்துக்கள், முஸ்லீம்கள், பார்ஸிகள் ஆகிய 31-பேர்கள் இதில் கையெழுத்து செய்திருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தை ஆக்ஷேபித்தும், இதைத் தயாரித்தவர்கள் ஜனப் பிரதிநிதிகளல்லவென்று சொல்லியும் ஸிந்து ஆரியஸம்மேளனப், ஸிந்து மாகாண ஹிந்துசபை இவைகளிடமிருந்து விஞ்ஞாபனங்களும், தனிப்பட்ட பல ஸிந்து ஹிந்துக்களிடமிருந்து தந்திகளும் கிடைத்திருக்கின்றன. இவர்களில் யார்தான் உண்மைப் பிரதிநிதிகள் என்று முடிவு செய்வதற்கு வேண்டிய தகவல்கள் எங்களிடத்தில் இல்லை; அது எங்களுடைய ஜோலியென்றும் நாங்கள் நினைக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தை அப்படியே இந்தக் கமிட்டி ஒப்புக்கொண்டு விடக் கூடிய விதமாக ஸிந்து வாசிகளுக்குள் இதைப்பற்றி ஒற்றுமை இருந்து வருகிறதென்று தெரியவில்லை. இந்த ஒப்பந்தம் பொறுப்பு வாய்ந்த பல கனவான்களால் அனுப்பப்பட்டதென்பதை மதித்து, அதை நாங்கள் சிரத்தையுடன் கவனித்தோம். ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் விஷயமாக இதில் அடங்கியுள்ள ஷரத்தை ஏற்கெனவே குறிப்பிட்டு, அதை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாதென்பதைத் தெரிவித்திருக்கிறோம். பம்பாயிலிருந்து ஸிந்து பிரதேசத்தைப் பிரிவினை செய்து விடவேண்டுமென்பதில் அவர்களுக்கும் எங்களுக்கும் அபிப்பிராயபேதமில்லை. ஆனால் "துணிக்குத் தகுந்தபடி கத்தரித்துக் கொள்ளுவதாக" அவர்கள் சொல்லுவதே முடிவான பரிகாரமென்று நாங்கள் நினைக்கவில்லை. இந்த விஷயம் நாங்கள் விட்டிருக்கிற இடத்திலேயே சிறிது காலம் இருக்கவேண்டும். இந்த ஒப்பந்தத்தின் இதர ஷரத்துகளை நாங்கள் பரிசீலனை செய்யவேண்டியது அவசியமில்லை.

---

## அத்தியாயம் V.

---

## சுதேச சமஸ்தானங்களும் அன்னியராஜ்ய சம்பந்தமும்.

### இந்திய சமஸ்தானங்களைப்பற்றிப் பொதுஜனப்பிரமுகர்களுடையவும் ஸ்தாபனங்களுடையவும் மனப்போக்கு.

இந்திய சமஸ்தானங்களைப்பற்றிய மகா முக்கியமான பிரச்சினையை இனிமேல் எடுத்துக்கொள்ளுகிறோம். இவ்விஷயத்தைப் பற்றி நாங்கள் எழுத ஆரம்பிக்கையிலேயே ஒரு அபவாதத்தைக் கண்டிக்க விரும்புகிறோம். ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள பொதுஜன பிரமுகர்களின் மீது இந்த அபவாதத்தைச் சொல்வது இப்பொழுது மாமூலாகிவிட்டது. இந்திய ஸமஸ்தானாதிபதிகளால் ஆளப்படும் நாடுகள் இந்தியாவில் இருப்பதையே அவர்கள் கவனிக்கிற தில்லையாம்; அந்த சமஸ்தானங்களுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இப்பொழுதுள்ள சம்பந்தத்தையோ இனிமேல் இருக்கவேண்டிய சம்பந்தத்தையோ பிரமுகர்கள் கவனிக்காமலேயே இந்தியாவின் பிற்கால அரசியல் முறையை நிர்ணயம் செய்கிறார்களென்றும், அதைப்பற்றி விவாதம் செய்கிறார்களென்றும் அபவாதம் சொல்லப்பட்டு வருகிறது. பொதுப் பிரசங்கங்களிலும் ராஜீய மகாநாடுகளிலும் ராஜீயப் பிரமுகர்கள் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களிலும் இந்திய சமஸ்தானங்களையோ அவைகளைப் பற்றிய பிரச்சினைகளையோ அவைகளுக்கும் இந்திய கவர்ன்மெண்டுக்குமுள்ள சம்பந்தம் எப்படித் தீர்க்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியோ கவனிக்கவில்லை என்று சொல்வது பிசகென்று நாங்கள் அழுத்தமாகச் சொல்லுகிறோம். இந்திய சமஸ்தானங்களைப் பற்றிய விஷயங்களோ அல்லது அவைகளுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்குமுள்ள சம்பந்தத்தின் தன்மையோ இந்தியா சட்ட சபையில் விவாதிக்கப் பட்டதில்லை என்பது அபவாதம் கூறுகிறவர்களின் கருத்தானால், அதற்கு ராஜீயப் பிரமுகர்கள் ஜவாப்தாரியல்ல. அப்படிப்பட்ட விவாதம் அச்சபையின் நிரந்தர விதிகளால் தடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அப்படிப்பட்ட விஷயத்தைப்பற்றி விவாதத்தைக் கிளப்ப ஒரு பொழுதும் அனுமதிக்கப்படுவதில்லை. இதற்கு ராஜீயத் தலைவர்கள்மீது பொறுப்பைச் சுமத்தக் கூடாதென்பது நாங்கள் சொல்லா

மலே விளங்கும். இதல்லாமல், இந்திய சமஸ்தானங்களைப்பற்றிச் சென்ற சில வருஷங்களில் ஏதோ ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவிக்காத செல்வாக்குள்ள எந்த ஸ்தாபனமுமில்லை. காங்கிரஸ் மகாசபை, மிதவாதிகள் மகாசபை, ஹிந்து மகாசபை, எங்களை ஒரு கமிட்டியாக நியமித்த ஸர்வகட்சி மகாநாடு முதலிய ஸ்தாபனங்கள் சுதேச சமஸ்தானப் பிரச்சினைகளை அலட்சியம் செய்ததில்லை என்பதல்லாமல் அவ்விஷயத்தைப்பற்றி வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றன. சமஸ்தானங்களின் பிரஜைகளும் தங்கள் தங்களுடைய சமஸ்தானத்தின் உள் வியவகாரங்களில் விசேஷ சிரத்தைக்காட்டி வந்திருப்பதல்லாமல், சமஸ்தான ஜனங்களுடைய பாத்யங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள் சமஸ்தானப் பிரஜைகளின் மகாநாடுகள் இரண்டு நடந்திருக்கின்றன. சென்னையில் நடந்த இரண்டாவது மகாநாட்டால் நியமிக்கப்பட்ட கமிட்டி சுராஜ்ய திட்டமொன்றைத் தயார்செய்து எங்களுக்கு அனுப்பியிருக்கிறது. ப்ரிட்டிஷ் இந்தியா, சுதேச சமஸ்தானங்கள் ஆகிய எல்லாவற்றின் சுராஜ்ய முறை பிற்காலத்தில் எப்படியிருக்க வேண்டுமென்று அதில் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இந்த முறையைப் பற்றி நாங்கள் பிறகு பிரஸ்தாபிப்போம். இந்தியப் பிரமுகர்கள் அனுவசியமாகத் தங்களுடைய விஷயங்களைப்பற்றிச் சில வருஷங்களாகச் சிரத்தை பாராட்டுவதாக சில சமஸ்தானாதிபதிகள் வருத்தப்பட்டிருப்பது எங்களுக்குத் தெரியும். விஷய ஞானமிராமலோ, ராஜீய முன்யோசனை யிராமலோ, அல்லது தங்களிடத்தில் அனுதாப மிராமலோ அவர்கள் தங்களுடைய விஷயங்களில் சிரத்தை காட்டுவதாகவும் அவர்கள் குறை கூறியிருக்கிறார்கள். ஆகையால் ப்ரிட்டிஷ் இந்தியாவின் பொது ஜனங்கள் ப்ரிட்டிஷ் இந்திய விஷயங்களிலேயே மூழ்கிக் கிடக்கின்றனென்றும், அதன் எல்லையைக் கடந்து அப்பால் பார்க்கிறதில்லை என்றும், இந்திய சமஸ்தானாதிபதிகள், அவர்களுடைய பிரஜைகள் ஆகியவர்களின் மனோவிருத்தியைத் தெரிந்துகொள்ள இஷ்டப்படவில்லை என்றும், அந்த மனோ விருத்தியில் அனுதாபங் காட்டுவது சாத்தியப்படினும் அப்படி அனுதாபங் காட்ட இஷ்டப்பட வில்லை என்றும் ஆதாரமன்னியில் சொல்லப்படும் புகார்களை நாங்கள் பலமாக ஆட்சேபிக்கிறோம். இந்திய சமஸ்தானாதிபதிகள் கொண்டாடும் சில பாத்தியங்களை அவர்கள் சில சமயங்களில் அலசிச் சோதித்திருப்பினும் அல்லது சமஸ்தானங்களின் உள் வியவகாரங்களைப் பற்றியோ அல்லது சமஸ்தானங்களுக்கும் சுராஜ்ய இந்தியாவுக்கும் பிற்காலத்தி

லிருக்க வேண்டிய சம்பந்தங்களைப்பற்றியோ சமஸ்தானாதிபதிகளின் மனோபாவத்தி லிருந்து வேறுபட்ட மனோபாவத்துடன் அவர்கள் பரிசீலனை செய்திருப்பினும், அப்படிச் செய்ய அவர்களுக்குப் பாத்தியமுண்டு. ப்ரிட்டிஷ் இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடைவது அசாத்தியமாகும்படி சமஸ்தானங்களைப் பற்றிய பிரச்சினை வழி மறிக்கும்படி அதை வற்புறுத்துவது இக்காலத்தில் வழக்கமாகிவிட்டது. அப்படிச் செய்வது இருவருக்கும் தீங்கையும் மனஸ்தாபங்களையும் விளைவிக்கக் கூடியது. ப்ரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தான இந்தியாவும் நெருங்கிவரும்படி செய்ய வேண்டியதே நியாயம்.

## பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சமஸ்தானங்களுக்கும் பந்தங்கள்.

சமஸ்தான இந்தியா என்பதில் பல சமஸ்தானங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளில் சில, ஐரோப்பாவிலுள்ள சில ராஜ்யங்களைவிடப் பெரிதானவை. சில உள்நாட்டு ஆட்சியைப்பற்றின வரையில் ஒருவித ஸர்வாதிகாரமும், சுவாதீனமும், கௌரவமும் உடையவைகளாக இருக்கின்றன. இப்படிப்பட்ட இந்தியா ஒன்றிருப்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் ப்ரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளுக்கும் சமஸ்தானப் பிரஜைகளுக்கும் சரித்திர பூர்வமாகவும், மத சம்பந்தமாகவும், சமூக வாழ்வு சம்பந்தமாகவும், பொருளாதார மூலங்கள் சம்பந்தமாகவுமுள்ள பந்தங்களை அசட்டை செய்வது சரியன்று. இந்த இரண்டு இந்தியாவுக்கு மிடையில் சுவர் எடுத்து விடுவது சாத்தியப்படாது. அறுபது எழுபது வருஷங்களுக்கு முன் எண்ணங்களும் அபிப்பிராயங்களும் தேசத்தின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு சஞ்சாரஞ் செய்ததைக் காட்டிலும் விரைவாக இப்பொழுது சஞ்சாரம் செய்கின்றன. இப்பொழுது இந்தியாவில் ஜனங்களை ஆட்டிவைக்கும் சக்திகள் ப்ரிட்டிஷ் இந்தியாவின் எல்லையிலேயே நின்றுவிடுமென்றும், அதைக் கடந்து அப்பால் செல்லமாட்டா என்றும் வைத்துக்கொண்டு இந்திய சமஸ்தானங்களைப் பற்றிய பிரச்சினைகளுக்கு முடிவு தேடுவது மூடத்தனமாக இருக்கும். ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஜனங்களுக்குள்ள ஆசைகளும் அபிலாஷைகளும் சமஸ்தானப் பிரஜைகளுக்கு மிருக்கின்றன. இப்பொழுதுள்ள நிலைமையிலேயே எந்நாளுமிருக்க அவர்கள் உடன்படுவார்களா? இந்தியாவின் ஜனங்களோ குடும்ப பந்தங்களாலும் மத பந்தங்களாலும்

ஜாதி பந்தங்களாலும் கட்டுப்பட்டவர்களாக இருக்கையில் ப்ரிட்டிஷ் இந்தியப் பிரஜைகள் சமஸ்தானப் பிரஜைகளுடன் சேர்ந்துகொண்டு போராட மாட்டார்களா? ஆகையால் இந்தப் பிரச்சினையைப் பற்றி நாங்கள் எழுதுகையில், இரண்டு ஜனங்களுக்குமுள்ள ஸ்தூல வித்தியாசத்தைக் கவனிக்காமல் அவர்களுக்குள்ள பந்தங்களை உத்தேசித்து முடிவு கூறுவோம். பரஸ்பர அபிவிருத்தியையும் சகாயத்தையும் உத்தேசித்து அவர்கள் ஒன்றுபட்டு வேலை செய்யக் கூடியதே சகஜமென்பது அவர்களுக்குள் உள்ள பந்தங்களால் விளங்குகிறது. பலவகைப்பட்ட கட்சிக்காரர்களும் ஒரே மகாநாட்டில் கூடி ராஜிக்கு வரக்கூடு மென்பது உண்மையானால், ப்ரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளும் சுதேச சமஸ்தானப் பிரஜைகளும் சமஸ்தானாதிபதிகளும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் தங்கள் தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாக ஒரு மகாநாட்டில் கூடி பரஸ்பர நல்லெண்ணத்துடன் தங்களுக்குள்ள கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ள ராஜிசெய்து கொள்வது சாத்தியம். ஆனால் சமஸ்தானாதிபதிகளில் பெரும்பாலோர் முக்கியமான இரண்டு கட்சிக்காரர்களை அசட்டை செய்து விட்டார்கள்; அதாவது தங்களுடைய பிரஜைகளையும் ப்ரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளையும் அவர்கள் அலட்சியம் செய்துவிட்டு, பட்லர் கமிட்டியை நியமிக்கும்படி கேட்டுக் கொண்டதாகவோ அல்லது அதை நியமிக்க சம்மதப் பட்டதாகவோ தெரிகிறது. அந்தக் கமிட்டிக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆக்ஞைகளை நாம் படித்துப் பார்த்தால் சமஸ்தானங்களின் ராஜ்ய முறையைப் பற்றி விசாரிக்காமல் அது தடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கமிட்டி இரகஸ்யத்தில் விசாரணையை நடத்தி வருகிறது; ஆயினும் இதுவரையில் வெளியாகி இருக்கிற கூற்றுகளைக் கவனித்தால், அரசியல் முறை சம்பந்தமான சித்தாந்தங்களை உபயோகப்படுத்தி இந்தியாவின் சுராஜ்யக் கோரிக்கையை வழிமறிக்க சமஸ்தானங்களைக் கிளப்பிவிடப் போவதாகத் தெரிகிறது. அயர்லாந்தில் அதன் சுராஜ்யக் கோரிக்கையை அல்ஸ்டர் மாகாணம் எதிர்த்தது போல் ப்ரிட்டிஷ் இந்தியாவின் சுராஜ்யக் கோரிக்கையை சமஸ்தானங்கள் எதிர்க்கும்படி செய்யச் சூழ்ச்சிகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அரசியல் முறையை ஆதாரமாகக்கொண்டதோர் ஆட்சேபத்தை 1924-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் இந்தியா சட்ட சபையில் ஸர் மால்கம் ஹெய்லி கிளப்பியதை நாங்கள் எங்களுடைய பூர்வ பீடிகை

யில் சொல்லி யிருக்கிறோம். அவர் சொன்ன ஆட்சேபத்தை அப்படியே வேறு சிலரும் சொல்லி வருகிறார்கள். அவர் சொன்னது போன்ற ஆட்சேபங்களை மற்றும் சிலர் சொல்லி வருகிறார்கள். அந்த வாதங்களை நாங்கள் இங்கு ஆராயப் போகிறோம். அரசியல் முறை சம்பந்தமான பிரச்சினை தெளிவற்றதாக இருப்பினும் அறிந்து கொள்ளக்கூடாததல்ல. இந்திய சமஸ்தானங்கள் ஈஸ்டு இந்தியா கம்பெனியுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டனவாயினும், ப்ரிட்டிஷ் க்ரீடாதிபதியுடன் செய்து கொண்டனவாயினும், அல்லது 1858-ம் வருஷத்திற்குப் பிறகு இந்தியா கவர்ன்மெண்டுடன் செய்துகொண்டனவாயினும் ராஜாங்க சாஸ்திர சித்தாந்தங்களின்படி அவைகள் அரசருடனேயே சம்பந்தமுள்ளவைகளாக இருந்திருக்கின்றன என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். ராஜாங்க அமைப்பின்படி க்ரீடாதிபதி என்ற சொல் அரசரை மாத்திரம் குறிப்பிடவில்லை. பார்லிமெண்டுடன் கூடிய அரசரைக் குறிப்பிட அந்தச்சொல் உபயோகிக்கப்படுகிறது. "க்ரீடாதிபதி"யால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு 1858-ம் வருஷத்திற்கு முன் ஈஸ்டு இந்தியா கம்பெனி ஸர்வாதிகாரம் செலுத்தி வந்தது. 1858-ம் வருஷத்திலிருந்து அந்த அதிகாரங்கள் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இந்தியா மந்திரிக்கும் கொடுக்கப்பட்டு அவர்களால் அனுபவிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்தியாவின் அரசியலை நடத்தப் பார்லிமெண்டால் நிர்மாணிக்கப்பட்ட கருவியில் இந்தியா மந்திரி ஒரு உறுப்பாக இருக்கிறார். 1858-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் 67-வது பிரிவின்படி "ஈஸ்டு இந்தியா கம்பெனியால் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் எல்லாம் மாட்சிமை தங்கிய அரசரைக் கட்டுப்படுத்தும்". அப்படியே இப்பொழுது அனுஷ்டானத்திலுள்ள சட்டத்தின் 132-வது பிரிவின்படி "ஈஸ்டு இந்தியா கம்பெனியால் செய்துகொள்ளப்பட்டு இந்தச்சட்டத்தின் ஆரம்ப காலத்தில் அனுஷ்டானத்திலுள்ள உடன்படிக்கைகள் மாட்சிமை தங்கிய அரசரைக் கட்டுப்படுத்தும்." காரியங்கள் அனுஷ்டானத்தில் எப்படி நடந்து வருகின்றனவென்றால், அந்த உடன்படிக்கைகளின்படி நடக்கும்படி செய்வதும், அந்த உடன்படிக்கைகளின்படி ஏற்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றி வைப்பதும், அந்த உடன்படிக்கைகளுக்கு வியாக்கியானம் செய்வதும் இந்தியா கவர்ன்மெண்டின் சாதாரணக் கடமைகளாகவே இருந்திருக்கின்றன; இந்தியா மந்திரிக்குள்ள மேலதிகாரத்திற்குட்பட்டு அந்தக் கடமைகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இப்பொழுதுள்ள ராஜாங்க அமைப்

பில் எந்த சமஸ்தாளுதிபதியாவது இந்தியா கவர்ன்மெண்டையர்வது இந்தியா மந்திரியையாவது அசட்டை செய்துவிட்டுத் தம்முடைய வியவகாரத்தை நேராக அரசரிடமோ ப்ரிட்டிஷ் கவர்ண் மெண்டிடமோ கொண்டுபோக முடியுமென்று தோன்றவில்லை. மேலும், உடன்படிக்கைகளுக்குப் புறம்பான வெறும் வழக்கத்தின் பலனாக இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சில அதிகாரங்கள் உண்டாகி விட்டன. 1890ம் வருஷத்திய அன்னிய அதிகாரச் சட்டம், 1879ம் வருஷத்திய அன்னிய அதிகாரச்சட்டம் ஆகியவை இந்தியா கவர்ன் மெண்டின் அதிகாரத்தை விஸ்தாரப்படுத்திக் கொள்ள அடிக்கடி உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. மாண்டேகு செம்ஸ்போர்டு யாதாஸ்தில் 309-வது பாராவில் "ஒருமுக்கியமான சமஸ்தானத்தின் அதிபதியினுடைய பாத்யங்களையும் கௌரவங்களையும் சாசுவத்தாக வோ தற்கால ஏற்பாடாகவோ பறிக்க வேண்டியதற்கும், ஒரு சமஸ் தானத்தின் சட்டப்படியோ வழக்கப்படியோ அந்த சமஸ்தானதிபதி யாகப் பாத்யமுடைய வார்ஸின் பாத்யங்களைப் பறிப்பதற்கும்'' இன் னின்னபடி நடவடிக்கை நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறது. 1920ம் வருஷம் அக்டோபர்மாதம் 29ந்தேதி யன்று இந்தியா கவர்ன்மெண்டார் பிறப்பித்த தீர்மானத்தில் அந்த முறை யை அனுஷ்டானத்தில் கொண்டுவர ஏற்றுக்கொண்டனர்.

1926-ம் வருஷம் மார்ச்சு மாதம் 27-ந்தேதியன்று லார்டு ரீடிங் எழுதிய கடிதத்தில் சமஸ்தானுதிபதிகளின் நிலைமையைப்பற் றிப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—(1) இந்தியாவில் ப்ரிட்டிஷ் க்ரீடாதிபதியின் அதிகாரத்திற்கு மேற்பட்ட அதிகாரமில்லை. ஆகையால் அவருடன் சமத்துவமாகப் பேச்சு வார்த்தை நடத்த எந்த சமஸ்தானுதிபதியும் கிரமமாக பாத்யங் கொண்டாட முடி யாது. ப்ரிட்டிஷ் கிரீடத்தின் ஸர்வாதிகாரம் உடன்படிக்கைகளையே பொறுத்ததல்ல. உடன்படிக்கைகள் அன்னியிலும் அந்த அதிகா ரம் அதற்கு சுயமாக இருக்கிறது. உடன்படிக்கைகளை மதித்து நட க்க வேண்டுமாயினும், இந்தியா முழுமையிலும் அமைதியையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டியது அந்தக் கிரீடத்தின் கடமை. (2) சமஸ்தானங்களின் உள் வியவகாரங்களில் குறுக்கிட ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு அதிகார மிருப்பதிலிருந்தே ப்ரிட்டிஷ் க்ரீடத்தின் மேலதிகாரம் விளங்குகிறது. (3) ஸர்வாதிகார பீடத் திற்குள்ள இந்த மேலதிகாரத்திற் குள்பட்டே பல சமஸ்தானுதிபதி களும் பலதரப்பட்ட ராஜ்யாதி காரமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.''

இப்படிப்பட்ட விஸ்தாரமான அதிகாரங்களை உபயோகப்படுத்த இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்து சென்ற சில வருஷங்களில் சில சமஸ்தானாதிபதிகளின்மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் மேலும், லார்டு ரீடிங் மகா மேன்மை தங்கிய நிஜாம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் மேலும், சமஸ்தானாதிபதிகள் அதிருப்தி அடைந்து யோசனை செய்ய ஆரம்பித்தனர் என்பது பலர் அறிந்த விஷயம். லார்டு ரீடிங் மகா மேன்மை தங்கிய நிஜாம் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்தே மேல் பாராவில் சில வாக்கியங்களை நாம் காட்டி யிருக்கிறோம். லார்டு ரீடிங் கொண்டாடியிருக்கிற பாத்யங்களைப் பற்றி விவாதிக்க நாம் விரும்பவில்லை. அவர் கொண்டாடியுள்ள ஏராளமான அதிகாரங்களையும் இந்தியா கவர்ன் மெண்டார் தங்களுடைய இஷ்டப்படி செலுத்தக்கூடும் என்பதை மாத்திரம் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

வழக்கத்தின்படியோ அல்லது ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஸர்வாதிகாரத்தை அனுசரித்தோ இந்தியா கவர்ன்மெண்டார் மேற்சொன்ன அதிகாரங்களைச் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

(1) சமஸ்தானாதிபதிகளைப் பட்டத்திலமர்த்தி வந்திருக்கிறார்கள். (2) சமஸ்தானாதிபதி பால்யமாக இருக்கையில் சமஸ்தானத்தை ஆண்டு வந்திருக்கிறார்கள், (3) சமஸ்தானாதிபதிகளுக்கும் அவர்களுடைய ஜாகீர்தார்களுக்கு மேற்பட்ட தகராறுகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள், (4) விசேஷ துஷ்பரிபாலனம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் குறுக்கிட்டிருக்கிறார்கள். இவ்விஷயங்களைப் பற்றினவரையில் சமஸ்தானாதிபதிகளுக்குள்ள கிரமமான குறைகளை நிவர்த்தி செய்யவேண்டிய விஷயத்தில் ஸர்வஜன ஆட்சியை விரும்பும் ப்ரிட்டிஷ் இந்தியாவும் அனுதாபப்படக் கூடும். இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளபடி இருக்கும் இந்தியா கவர்ன்மெண்டோ இனி அமைக்கப்படக் கூடியபடி இருக்கக்கூடிய இந்தியா கவர்ன் மெண்டோ இன்ன எல்லையைக் கடந்து சமஸ்தானங்களில் குறுக்கிடக் கூடாதென்று எல்லை கட்டிவிடுவது சிரமமாக விராது. ஆயினும் ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. இப்பொழுதுள்ள இந்தியா கவர்ன்மெண்டானது எப்படி அ சர் பொருட்டு ஆட்சியை நடத்துகிறதோ அப்படியே இனிமேல் குடியேற்ற நாட்டு அரசியல் முறைப்படி அமைக்கப்படப் போகிற இந்தியா கவர்ன்மெண்டும் அரசர் பொருட்டு ஆட்சியை நடத்திவைக்கு மென்பதையும், இப்பொழுதுள்ள கவர்ன்மெண்டின் ஸ்தானத்தை அது வகிக்க ராஜாங்க

சாஸ்திரப்படி ஒரு ஆட்சேபமுமில்லை என்பதையும் மறந்துவிடக் கூடாது. அரசர் பெருமானிடத்திலோ அல்லது அவரது குடும்பத்திடத்திலோ அல்லது அவரது சிம்மாசனத்தினிடத்திலோ சமஸ்தானாதிபதிகளைப் பிணைக்கும் அன்பு மயமான பந்தங்கள் இருப்பின், இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடையும்போது இந்தியாவின் அரசியல் முறையில் ஏற்படக்கூடிய மாறுதல்களால் அந்த பந்தங்களின் வலு குறையமுடியாது. சமஸ்தானாதிபதிக்கும் அரசர் பெருமானுக்கும் இருந்திருக்கக் கூடிய சம்பந்தங்களின் பலனாக அவர்கள்அவருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவும், அவர் அவர்களுக்கு கௌரவம் செய்யவும் ஏராளமாக இடமிருக்கும்.

## ஸர் லெஸ்லி ஸ்காட்டின் அபிப்பிராயம்.

இனிமேல், இவ்விஷயமாகச் சமீபத்தில் சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தைக் கவனிக்கிறோம். சமஸ்தானாதிபதிகளால் அமர்த்தப்பட்டிருக்கிற மகா மேதாவியாகிய ஸர் லெஸ்லி ஸ்காட் என்பவர் "லா க்வார்ட்டர்லி ரிவ்யூ" என்ற பத்திரிகையில் வெளியாகி யிருக்கிற அவருடைய கடிதத்தின் மூலம் அவர் தமது அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தி யிருக்கிறார். வக்கீல் என்ற ஹோதாவில் அவர் பெரியவர் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு பட்சபாதமற்ற ஒரு நியாயஸ்தலம் அவருடைய அபிப்பிராயங்களைப்பற்றி என்ன சொல்லுமென்று இனிமேல் தான் தெரியவேண்டும். எங்களைப்பற்றினவரையில் அவருடைய அபிப்பிராயங்களை நாங்கள் ஒப்புக்கொள்ளக்கூடவில்லை. இந்திய சமஸ்தானங்களுக்கும் க்ரீடாதிபதிக்குமுள்ள சம்பந்தம் ஸர்வதேச சம்பந்தமான சட்டத்தையாவது ஸ்தல சட்டத்தையாவது ஆதாரமாகக் கொண்டதல்லவென்று அவர் சொல்லிவிட்டு, பின்வருமாறு எழுதுகிறார்:—"அப்படியானால் இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கும் அரசருக்குமுள்ள சம்பந்தத்திற்கு எந்த சட்ட நியமங்கள் ஆதாரமாக விருக்கின்றன? இதற்கு ஆதாரமான தீர்ப்பு ஒன்றுமில்லை. ஆகையால் சட்டத்திற்கு அஸ்திவாரமான நியமங்களையே கவனிக்கவேண்டும். நாமாக யோஜித்து முடிவுக்கு வரவேண்டியதுதான். இதற்கு முன் எவரும் காலடிவைக்காத பிரதேசமாக இவ்விஷயமிருக்கிறது" என்று அவர் சொல்லி யிருக்கிறார். அவரைப்பற்றினவரையில் இவ்விஷயம் யாரும் காலடிவைக்காத பிரதேசமென்று அவர் நினைக்கிறு

ராயினும், அது சரியல்ல. பிரஸ்தாபக் சரித்திரத்தில் அவர் தமது வாதங்களுக்கு ஆதாரமாக ஐந்து கூற்றுகளைச் சொல்லியிருக்கிறார். அவைகளில் சில சரியென்று நாங்கள் ஒப்புக்கொள்வோம். மற்றவை வெகு மொட்டையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதெப்படியாயினும், அவருடைய கூற்றுகளை ஆதாரமாகக்கொண்டு அவர் செய்கிற சித்தாந்தத்தை சமஸ்தானாதிபதிகள் ஒப்புக்கொண்டு அந்த சித்தாந்தப்படி தங்களுடைய நிலைமையை வற்புறுத்துவார்களானால், குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ப்ரிட்டிஷ் இந்தியா பெறுவதில் அவர்களுக்கு அனுதாப மிருப்பதாகவும், இந்தியா பிற்காலத்தில் பல ராஜ்யங்களின் சமஷ்டியாக இருக்கப்போகிறதென்று அவர்கள் நினைப்பதாகச் சொல்லிவந்திருப்பதும் வீண் சொற்கள் என்றே ப்ரிட்டிஷ் இந்தியா நினைக்கவேண்டியிருக்கும். ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்லியுள்ள முதல் கூற்று "முக்கியமான பந்தம் சம்மதம், அதை சந்தேகமற ப்ரிட்டன் ஒப்புக் கொண்டிருக்கிறது" என்பதே. இது சரியென்று வைத்துக் கொள்ளலாம். உடன்படிக்கைகளால் அல்லது பரஸ்பரப் பேச்சு வார்த்தைகளால் கட்டுப்பட்டுள்ள இரண்டு ராஜ்யங்களைப் பற்றிச் சொல்லக்கூடியதையே அவர் சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்லியுள்ள இரண்டாவது கூற்று என்னவென்றால்:— அந்த உடன்படிக்கைகள் சமஸ்தானாதிபதிகளும் ப்ரிட்டிஷ் அரசருமாகிய அரசர்களுக்குள் ஏற்பட்டவை. ஈஸ்டு இந்தியா கம்பெனி அல்லது இந்தியா கவர்ன்மெண்டுடன் ஏற்பட்டவையல்ல, என்கிறார். சரித்திரப்படியும் சட்டப்படியும் இந்தக்கூற்று அங்கீகரிக்கப்படக் கூடியதல்ல; சட்டத்தைப் பொறுத்த சித்தாந்தம் எப்படியிருப்பினும், அனுஷ்டானத்தைக் கவனித்தால், இந்திய சமஸ்தானாதிபதிகளும் அவர்களுடைய கவர்ன்மெண்டுகளும் இந்தியா கவர்ன்மெண்டுடன்தான் நடவடிக்கைகளை நடத்தியிருக்கிறார்கள். அந்தக் கவர்ன்மெண்டின் முடிவுகளுக்கு உட்பட்டிருக்கிறார்கள். அது சில சமயங்களில் உள்நாட்டு நிர்வாகத்தில் குறுக்கிட்டதற்கும் உட்பட்டிருக்கிறார்கள். அரசருடனாவது அவருடைய கவர்ன்மெண்டுடனாவது ஒரு பொழுதும் நடவடிக்கை நடத்தினதில்லை. மாட்சிமை தங்கிய அரசருக்கும் இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கும் ஒருவருக்கொருவர் சொந்த சம்பந்த மிருக்கலாம். அதிலிருந்து சட்டப்படி அவர்களுக்குள்ள நிலைமையாவது அனுஷ்டானத்திலிருந்து வரும் நிலைமையாவது மாறுதலடைய முடியாது.

ஸர் லெஸ்லி ஸ்காட் கூறும் மூன்ருவது கூற்று என்ன வென்ருல், "அவர்களுக்குள் உள்ள சம்பந்தம் சட்ட பூர்வமானது. பரஸ்பர பாத்யங்களையும் கடமைகளையும் விதித்திருப்பது; ஒரு கட்சியின் எதேச்சாதிகார இஷ்டப்படி ஏற்பட்ட சம்பந்தமல்ல". சட்டப்படியுள்ள எல்லையைக் கடந்து இந்தியா கவர்ன்மெண்டார் எதேச்சாதிகாரப்படி அவர்களுடைய அதிகாரத்தை விஸ்தாரப் படுத்திக் கொண்டு விட்டதாக சமஸ்தானுதிபதிகள் முறையிட்டு வந்திருப்பதாக நாங்கள் நினைக்க இடமுண்டு. இந்தியா கவர்ன்மெண்டின் எதேச்சாதிகாரத்தைப் பெருக்கக் கூடாதென்று அவர்கள் ஆட்சேபம் செய்கிருர்களாயின், அது விளங்கவில்லை. ஆனுல் ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்லி யிருக்கும் இந்தக் கூற்றின் முக்கியம் இப்பொழுதுள்ள நிலைமையைப் பொறுத்ததாக இருக்கவில்லை. ப்ரிட்டிஷ் இந்தியாவின் அரசியல் முறையில் இனி ஏற்படக்கூடிய மாறுதலை உத்தேசிக்கையிலேயே இந்தக் கூற்று முக்கியமானதாகும்.

சமஸ்தானுதிபதிகள் உடன்படிக்கைகளைச் செய்து கொண்ட போது ப்ரிட்டிஷ் அரசரையும் பிரிட்டிஷ் ஜாதியையும் நம்பினர் என்பது ஸர்லெஸ்லி ஸ்காட்டின் நான்காவது கூற்று. இந்த உடன்படிக்கைகளின்படி ஏற்படும் கடமைகளை அரசர் வேறு எவருக்கும் மாற்றக் கூடாது என்றும் அவர் சொல்லுகிருர். "ஸர்வ மேலதிகார பீடம் என்ற ஹோதாவில் எல்லா சமஸ்தானங்களின் பாதுகாப்பையும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஏற்றுக் கொண் டிருக்கிறது. ஆகையால் அந்தக் கடமையைச் செய்வதற்குப் போதுமான ராணுவ பலத்துடனும் கடற்படைப் பலத்துடனும் இந்தியாவிலிருக்க அது ஏற்றுக்கோண்டதாகும்.

"இந்தப் பலங்களை அது வேறு எந்தக் கவர்ன்மெண்டிடமும் ஒப்படைக்க முடியாது. பிரான்ஸ், ஜெப்பான் முதலிய அன்னிய தேசக் கவர்ன்மெண்டுகளிடமாவது, கனடா, ஆஸ்டிரேலியா முதலிய குடியேற்ற நாட்டுக் கவர்ன்மெண்டிடமாவது ஒப்படைக்க முடியாது. ப்ரிட்டிஷ் இந்தியா விடமும் ஒப்படைக்க முடியாது." (சில வரிகளைத் தடித்த எழுத்தில் நாங்கள் போட்டிருக்கிறோம்.)

இந்தக் கூற்றின் பலனுக அவர் ஒரு சித்தாந்தம் செய்கிருர்; அதாவது க்ரீடாதிபதி சாதாரணமாகத் தமது காரியஸ்தர் இன்னுரென்று நியமிக்கக் கூடும். ஆனுல் காரியஸ்தருடைய சொந்த நன்மை அவருடைய கடமையுடன் முரண்படும்போது அவர் காரி

டம் நடத்த முடியாது. சமஸ்தானங்களுக் கெல்லாம் பொதுவான விஷயங்களான கடற்சுங்கம், ரயில்பாதைகள், துறைமுகங்கள், உப்பு முதலியவைகளைப் பற்றின வரையில், ப்ரிட்டிஷ் இந்தியாவின் நன்மையும் ஒரு குறிப்பிட்ட சமஸ்தானத்தின் நன்மையும் ஒன்றாக இரா திருக்கக் கூடும். சமஸ்தானத்தின் நன்மையைப் பாதுகாப்பது க்ரீடாதிபதியின் கடமையாக இருக்கலாம். முக்கியமாக சமஸ்தானாதிபதி பால்யமாக இருக்கையில் அப்படிப் பாதுகாக்க வேண்டி யிருக்கும். எஜமானனுடைய கடமைக்கு முரணாகக் கார்யஸ்தர் நடக்கும்படி அவருக்குச் சந்தர்ப்பங் கொடுக்கலாமா என்று ஸர் லெஸ்லி ஸ்காட் கேட்கிறார். இந்தவாதம் சரியானால், இப்பொழுதும் சரி, பிறகு எக்காலத்திலும் சரி, ப்ரிட்டிஷ் இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடையக் கூடாமல வழி மறிக்கப்பட்டு விடும். பிரஸ்தாப ஒப்பந்தங்கள் சமஸ்தானாதிபதிகளால் அரசருடனும் ப்ரிட்டிஷ் ஜாதியுடனும் செய்து கொள்ளப் பட்டவைகளானால், இந்தியா எப்பொழுதும் ப்ரிட்டிஷ் இந்தியாவாகவும் சமஸ்தான இந்தியாவாகவும் பிரிக்கப்பட் டிருக்க வேண்டியதுதான்; சமஸ்தானாதிபதிகளின் பொருட்டு தங்களுக்குள்ள கடமைகளைச் செலுத்த ப்ரிட்டிஷ் ஜாதி எந்நாளும் போதுமான சேனா பலங்களுடன் இந்தியாவில் இருக்க வேண்டியது தான். இந்த வாதம் கேவலம் குயுக்தியாகவே எங்களுக்குப் படுகிறது. இந்த வாதத்திற்கு அஸ்திவாரமே தப்பானது. அது நடந்திருக்கிற விஷயங்களையும் அசட்டை செய்து விடுகிறது. சமஸ்தானாதிபதிகளுக்கும் அரசருக்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் இரண்டு சாமான்ய மனிதருக்குள் ஏற்படும் உடன்படிக்கைகள் போன்றவைகளே என்று வைத்துக்கொள்ள ஆதாரமேயில்லை. சமஸ்தானாதிபதிகள் தங்களுக்கிருந்த கடமைகளை அரசருக்குக் கொடுத்து விட்ட பிறகும் ராஜ பதவிக்குள்ள பெருமைகளுடன் விளங்கினார்கள் என்று ஸர் லெஸ்லி ஸ்காட்டே அந்தக் கடிதத்தில் வேறு ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட ராஜ ஹோதாவில்தான் அவர்கள் இன்னொரு ராஜாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாக நாம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒப்பந்தத்திற்கு மற்றொரு கட்சியினர் ஈஸ்டு இந்தியா கம்பெனியாக இருந்திருப்பினும், பார்லிமெண்டுடன் கூடின அரசராக இருந்திருப்பினும், அந்த மற்றக் கட்சியினர் அரசர் என்ற ஹோதாவிலேயே ஒப்பந்தம் செய்துகொண்டிருக்க வேண்டும். மேலும் இரண்டு சாமான்ய மனிதர்களுக்குள் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள் அவர்களையே பொறுத்தவையென்றும், வேறு எவராலும் நிறைவேற்றப்படக் கூடாதவையென்

தும் சொல்வதும் சரியல்ல. உடன்படிக்கையைச் செய்து கொண்ட இருவர்களில் ஒருவர் மற்றவரிடத்தில் விசேஷ நம்பிக்கையுள்ளவர் என்பதே பிசகு. இப்பொழுது உடன்படிக்கைகள் என்று சொல்லப்படுகிறவை சில நிலைமைகளின் நிர்ப்பந்தத்தால் செய்து கொள்ளப்பட்டவை; இந்தியாவில் அக்காலத்தில் ப்ரிட்டிஷார் வகித்த நிலைமையை வேறு எந்த வல்லரசு வகித்திருப்பினும், உடன்படிக்கைகள் அந்த மாதிரியே இருந்திருக்கும். இந்த வாதம் இந்தியா கவர்ன்மெண்டார் அனுஷ்டித்து வரும் முறையை அசட்டை செய்வதாக இருக்கிறது; இரண்டு பெயர்களுக்கும் "சட்டப்படியுள்ள சம்பந்தத்தை" நிர்ணயிப்பதற்காக சட்டத்திற்கு அடிப்படையான தத்துவங்களைக் குறிப்பிடுகையில், கம்பெனி காலமுதல் இந்தியா கவர்ன்மெண்டார்தான் சமஸ்தானாதிபதிகளுடன் நடவடிக்கை நடத்தி வந்திருக்கிறார்கள் என்ற விஷயம் மறந்து விடப்படுகிறது. சமஸ்தானாதிபதிகளுக்கும் ப்ரிட்டிஷ் ஜாதிக்கும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டதாக இந்த வாதம் புதிதாக ஒரு சமாச்சாரத்தைச் சொல்லுகிறது. அது என்னவென்று விளங்கவில்லை. இதுவரையில் அதிகாரத்தைச் செலுத்திவந்திருக்கிற இந்தியா கவர்ன்மெண்டு இந்திய சமஸ்தானாதிபதிகளுக்குப் பிடித்தமானதாக இருந்திருக்கிறதாம்; ஆனால் பிற்கால இந்தியா கவர்ன்மெண்டு குடியேற்ற நாட்டு முறையில் ஏற்படுமாயின், அது அவர்களால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாதாம். சாதாரணமாக இதற்கு என்ன அருத்தமென்றால், பழைய இந்தியா கவர்ன்மெண்டு அன்னியரைக் கொண்டு அமைக்கப்பட்டதாகையாலும் இந்திய ஓட்டர்களுக்கு ஜவாப்தாரியல்லவாகையாலும் அது சமஸ்தானாதிபதிகளுக்குப் பிடித்ததாக இருந்தது; பிற்கால இந்தியா கவர்ன்மெண்டோ சமஸ்தானாதிபதிகளின் தேச ஜனங்களால் அமைக்கப்பட்டதாகவும் அவர்களுடைய தேச ஜனங்களுக்கு ஜவாப்தாரியானதாகவும் இருக்குமாகையால் அது அவர்களால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது என்பதே ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்வதன் கருத்து. அவர்களுக்கு இஷ்டமில்லை என்றே வைத்துக்கொள்வோம். எஜமானனுடைய கடமையை காரியஸ்தர் செய்யக்கூடுமானால், காரியஸ்தர் இன்னாராகத்தான் இருக்கவேண்டுமென்று தீர்மானிக்க எஜமானுக்கு சுவாதீனமில்லையா? ஒப்பந்தம் செய்துகொண்ட மற்றக் கட்சியினருக்குத் தானா அந்த சுவாதீனமுண்டு? வெள்ளைக்காரக் காரியஸ்தர்கள் இதுவரையில் சமஸ்தானாதிபதிகளுக்குத் திருப்திகரமாக அரசருடைய ஸ்தானத்திலிருந்துகொண்டு வேலைசெய்து வந்திருக்கிறார்கள்; அதே சமஸ்தா

ஞ்திபதிகளுக்குத் திருப்திகரமாக இந்தியர்களாகிய காரியஸ்தர்கள் அக்கடமைகளைச் செய்யக்கூடாமல் சட்டத்தின் எந்த நியாயம் தடுக்கிறது?

ஒரு காரியஸ்தருடைய கடமையும் அவருடைய சொந்த நன்மையும் முரண்படுமானல் அப்படிப்பட்ட காரியஸ்தருக்கு எஜமான் தன்னுடைய அதிகாரத்தைக் கொடுத்துவிடக் கூடாதென்ற வாதத்தைக் கவனிப்போம். இங்கும் நடந்திருக்கிற விஷயங்களை மறந்து விட்டு அவர் பேசுகிறார். அரசருடைய காரியஸ்தராகவுள்ள தற்கால இந்தியா கவர்ன்மெண்டாரின் கடமையும் சொந்த நன்மையும் முரண்படும் போதெல்லாம் தங்களுடைய இஷ்டப்படி அவர்கள் காரியங்களைச் செய்துகொண்டு போயிருக்கிறார்கள். எஜமானருடைய மனச்சாட்சியாவது காரியஸ்தருடைய மனச்சாட்சியாவது அப்படிப்பட்ட சமயங்களில் கூசினதேயில்லை. சமஸ்தானுதிபதிகளும் இதுவரையில் பகிரங்கமாக ஒரு ஆட்சேபமும் செய்ததில்லை. (ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் அல்லது அரசருக்கும், சமஸ்தானுதி பதிகளுக்குமுள்ள சட்டரீதியான சம்பந்தம் இன்னதுதான் என்று விளக்கப்பட்டு விடின் அதாவது சட்ட ரீதியான சம்பந்தம் என்ன என்று ஸர் லெஸ்லி ஸ்காட் நினைக்கிறாரோ அந்த சம்பந்தம் விளக்கப்பட்டு விடின்) இரண்டு இந்தியாக்களும் அன்னியோன்னியமாக வேலை செய்யும்படி அரசியலை நடத்தவேண்டிய கருவியை அமைத்து விடலாமென்றும், அப்படிப்பட்ட கிரமமான வழியில் போகத் தாங்கள் இஷ்டப்படுவதாகவும் தயாராக இருப்பதாகவும் சமஸ்தானுதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள் என்றும் ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்லுகிறார். அதாவது அரசருக்கும் சமஸ்தானுதிபதிகளுக்கும் அவர்களுடைய சொந்த ஹோதாவில் பரஸ்பர நம்பிக்கையின் மேல் உடன்படிக்கைகள் ஏற்பட்டவை என்றும், ஆகையால் தங்களுடைய கடமைகளைச் செய்யவேண்டியதற்காக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவில் இருக்கவேண்டுமென்றும் ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்லும் சித்தாந்தம் ஒப்புக்கொள்ளப்படின், கிரமமான வழியில் ப்ரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்ந்துபோக சமஸ்தானுதிபதிகள் இஷ்டமுள்ளவர்களாக இருக்கிறார்களாம். இந்த சிந்தாந்தத்தை ஒப்புக்கொண்டு விடின், ப்ரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் அன்னியோன்னியமாக விருக்கும்படி அரசியலை நடத்த எப்படிப்பட்ட கருவியை அமைத்த போதிலும், இந்தியா குடியேற்ற

நாட்டு அந்தஸ்தை அதற்கப்புறம் எந்நாளும் அடையாது. இந்த வாதம் ஆதாரமே யற்றதென்று காட்டிவிட்டோம். தேசத்தின் நன்மைக்கு விரோதமாக யுக்தி வாதம் உபயோகிக்கப்பட மாட்டாது என்று நம்புகிறோம். சட்டப்படியுள்ள சம்பந்த மென்ன வென்று நிர்ணயிப்பதால் சமஸ்தானதிபதிகள் அடையக்கூடிய நன்மை எதுவுமில்லை. அப்படி நிர்ணயிப்பதால் அவர்களுக்கு அநர்த்தமே விளையும். ஆசையால் அவர்களுடைய தேசாபிமானத்தையும் ராஜ தந்திரத்தையும் உபயோகப் படுத்தியும், அவர்களுடைய பிரஜைகளின் தேசபக்தியையும் ராஜ தந்திரத்தையும் துணைக்கொண்டும், சட்ட சபைக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டிய இந்திய சம ராஜ்பக் கவர்ன்மெண்டுக்கும் அவர்களுக்கு மிருக்க வேண்டிய சம்பந்தத்தை நிர்ணயித்துக் கொள்ள முற்படுவார்கள் என்று நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம். பரஸ்பர சம்பந்தம் பரஸ்பர சம்மதத்தின் மேல்தான் நிர்ணயிக்கப்படக்கூடும். அப்படிச் செய்ய இன்னும் இட மிருப்பதாகவே நாங்கள் நினைக்கிறோம். ஆனல் ஒரு எச்சரிக்கை செய்ய வேண்டியிருக்கிறது. இயற்கையாகவும் கிரமமாகவும் இந்தியர்களுக்குள்ள அபிலாஷைகளை யுக்தி வாதங்களால் தடுத்துவிட முடியாது என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஸர் லெஸ்லி ஸ்காட் எழுதிய கடிதத்தில் அடியிற்காணும் பாகம் முக்கியமாகும்.—"பூரா இந்தியாவின் பிற்கால கதிக்கு இந்த ராஜீயப் பிரச்சினைகள் வெகு முக்கியமானவை. இந்தப் பிரச்சினைகளைப் புத்திசாலித் தனத்துடன் தீர்த்துவிட்டால், ப்ரிட்டிஷ் இந்தியாவைப் பற்றி ஸர் ஜான் ஸைமனுக்கும் அவருடைய சகாக்களுக்கும் பார்லிமெண்டால் இடப்பட்டிருக்கிற வேலை திருப்திகரமாக முடிவடையக் கூடும். ஏகாதிபத்ய நன்மையை உத்தேசித்து ராஜ தந்திரத்துடன் சமஸ்தானதிபதிகளிடத்தில் இப்பொழுது நடந்துகொண்டால், இந்தியா ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்திடத்தில் பிற்காலத்தில் வகிக்கவேண்டிய மனோபாவத்தை இப்பொழுது உருவாக்கி விடலாம்" என்றுஅவர் சொல்லியிருக்கிறார்.

அப்படியா! பட்லர் கமிட்டியோ இரகஸ்யத்தில் விசாரணை செய்து வருகிறது. அதன்முன் ப்ரிட்டிஷ் இந்தியாவின் ஜனங்கள் தோன்றித் தங்களுடைய கட்சியை எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. அப்படி விசாரணை செய்துவரும் கமிட்டி ப்ரிட்டிஷ் இந்தியாவின் தலையில் எழுதிவிடவா!

மேலும், ஸர் ஜான் ஸைமனும் அவருடைய சகாக்களும் சமஸ்தானங்களைப் பற்றிய பிரச்சினைகளில் சம்பந்தமுடையவர்களன்று; பார்லிமெண்டு அவர்களுக் கிட்டிருக்கிற வேலையை அவர்கள் திருப்திகரமாகச் செய்யவேண்டுமானால், பட்லர் கமிட்டி சமஸ்தானங்களைப் பற்றிய பிரச்சினைகளை புத்திசாலித் தனத்துடன் முடிவு செய்யக்கூடியதை அவர்கள் ஏற்றுக்கொண்டு அந்த வழியில் போகவேண்டுமா? இது இந்தியாவால் எதிர்பார்க்கப்பட்ட விஷயமே. பகிரங்கமாகவும் பலர் இதைச் சொன்னதுண்டு. ஸைமன் கமிஷன் என்ன செய்யப்போகிறதென்பது இப்பொழுது நன்றாகத் தெரிந்துவிட்டது. ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்லியுள்ள புத்திசாலித்தனமான யோசனை என்னவெனில், “ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்களுடைய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான சேனாபலத்துடனும் கடற்படைப் பலத்துடனும் இந்தியாவில் இருந்துகொண்டிருக்க வேண்டும்” என்பதே. ஸைமன் கமிஷன் செய்யப்போகிற சிபார்சு என்னவென்று இவ்வாறு ஸர் லெஸ்லி ஸ்காட் முன்னாடியே அறிவித்துவிட்டதற்கு நாங்கள் அவருக்கு வந்தனம் செய்கிறோம். இந்தியாவில் பிரஸித்தமாகவுள்ள எல்லாக் கட்சிகளும் ஸைமன் கமிஷனிடத்தில் கொண்ட மனோபாவம் சரியானது தானென்பது இப்பொழுது நிச்சயம்.

அரசருக்கும் சமஸ்தானாதிபதிகளுக்குமுள்ள சம்பந்தம் ஒருபுறமிருக்கட்டும். இப்பொழுதுள்ள நிலைமையைக் கவனிப்போம். இந்தியா கவர்ன்மெண்டிடத்தில்தான் சமஸ்தானாதிபதிகள் நேரான சம்பந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; தங்களைப்பற்றியும் தங்களுடைய சமஸ்தானங்களைப்பற்றியும் அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டுடன்தான் தீர்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டில் ராஜீயக் காரியதரிசிப் பதவியை வகிப்பவர் இந்த சமஸ்தானாதிபதிகளைப் பற்றின வரையில் ஏராளமான அதிகாரமுடையவராக இருக்கிறார். அவர் இந்தியா கவர்ன்மெண்டில் ஒரு அங்கத்தினரல்லவாயினும், ஒரு அங்கத்தினருக்குள்ள வேலைகளையெல்லாம் செய்கிறார். ஏனெனில் ராஜீய இலாகாவுக்காக ஒரு தனி அங்கத்தினர் இல்லை; ராஜீய இலாக்கா கவர்னர் ஜெனரலுடைய நேர் விசாரணையிலிருப்பதாகப் பெயர். இப்பொழுதுள்ள நிலைமை எப்படி இருக்கிறதெனில் ஒரு இந்திய சமஸ்தானத்திற்கு விரோதமாகவோ அல்லது ஒரு சமஸ்தானாதிபதிக்கு விரோதமாக

வோ இந்தியா கவர்ன்மெண்டின் ராஜீய இலாக்கா ஏதேனும் முடிவு செய்துவிடின், சில நிபந்தனைகளுக்குட்பட்டும் சில நிர்ப்பந்தங்களுக் குட்பட்டும் இந்தியா மந்திரிக்கு "அப்பீல்" செய்து கொள்வது ஒன்றுதான் சமஸ்தானாதிபதி செய்யக்கூடியது. இப்பொழுதுள்ள நிலைமையில் இந்த உரிமை பெரிதாகப் பாராட்டப்படுகிறது என் பது எங்களுக்குத் தெரியும்; ஆனால் பூர்வாங்க நடவடிக்கை வெகு அதிருப்திகரமாக இருப்பதே இதற்குக் காரணமாக இருக்க லாம். பிரதம விசாரணை சரியாக நடத்தப்படாதபோது அப்பீல் செய்து கொள்வதற்குள்ள பாத்யம் பிரயோஜனப் படுவதன்று. இந்த முறைக்குப் பதிலாக ராஜாங்க அமைப்பிலேயே சரியான ஏற் பாட்டைப் பிற்காலத்திற்குச் செய்து விடக் கூடுமென்று நாங்கள் கருதுகிறோம்.

சாதாரண அனுபோகமெப்படி இருக்கிறதென்பதைக் கவனிப் போம். இந்தியா கவர்ன்மெண்டுக்கும் சமஸ்தானங்களுக்கும் கடல் சுங்கம், கலால், ஒருவர் பிரஜையை மற்றொருவர் பிடித்துக் கொண்டு போவது, ரயில்வேக்கள், தபாலாபீஸ், துறைமுகங்கள் ஆகியவைக ளைப் பற்றியே முக்கியமாகத் தகராறு ஏற்படுகிறது. மன்னர்களின் சுயப் பாதுகாப்பைப் பற்றிய பெரிய பிரச்சினையும் இருக்கிறது. இவ் விஷயங்களைப்பற்றி சமஸ்தானங்களுக்குள்ள குறைகள் என்ன வென்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்தவர்களான சமஸ்தானாதிபதிகளும் சமஸ்தா னங்களின் மந்திரிகளும் இந்தியா கவர்ன்மெண்டார் தங்களை அதர் மமாக நடத்தி யிருப்பதாக பகிரங்கமாகப் புகார் செய்திருக்கிறார்கள். அந்தக் குறைகளை எவ்வளவு தூரம் நிவர்த்தி செய்யக்கூடும், எப் படி நிவர்த்தி செய்யலாம் என்ற விஷயங்களை அவர்களுடன் கலந்து பேசியும் ஆராய்ச்சி செய்தும் முடிவு செய்து கொள்ளலாம்; ஆனால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியா கவர்ன்மெண்டு இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறபடியே தான் இருக்க வேண்டுமென்பதில்லை; இந்த விஷயங்களைப் பைசல் செய்யப் பிரத்தியேகமாக ஒரு கருவி அமைக்கப்பட வேண்டியது மில்லை. இப்பொழுது அந்த விஷயத்தைப் பற்றி நாங்கள் விரிவாக எழுதாததற்கு ஒரே காரணமுண்டு; சென்ற சில மாதங்களாக ஏதோ ஒரு ஏற்பாடு முட்டையிடப் பட்டு அடைகாக்கப்பட்டு வருகிறது, அது இன்னதென்று எங்களுக்குத்

தகுந்தபடி தெரியாததே அந்தக் காரணம். ஆனால் சமஸ்தானாதி பதிகள் அமர்த்திக் கொண்டிருக்கிற வக்கீலான ஸர் லெஸ்லி ஸ்காட் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போனதற்கு முன் பகிரங்கமாகச் சொன்ன விஷயங்களிலிருந்து எங்களுக்குத் தோன்றுகிற யூகம் சரியாக இருக்குமானால், நாங்கள் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். கவர்னர் ஜெனரலுடன் சேர்ந்து வேலைசெய்ய மன்னர்சபை ஒன்றை ஏற்படுத்தி கவர்ன்மெண்டியந்திரத்தை இரண்டாக்கச் செய்யப்படும் முயற்சியைக் கண்டித்து நாங்கள் எச்சரிக்கை செய்கிறோம். வெகு சுமூலான ஏற்பாடாக அது இருக்குமென்பதல்லாமல், அந்தச்சபையானது மன்னர்களுக்கும் இப்பொழுதுள்ள இந்தியா கவர்ன்மெண்டுக்குமோ அல்லது பிற்கால சமராஜ்ய கவர்ன்மெண்டுக்குமோ உண்டாகக்கூடிய தகராறுகளைத்தீர்த்து வைத்துவிடாது. இரட்டை ஆட்சிக்கு இயற்கையாகவுள்ள அசௌகரியங்கள், அது விளைவிக்கும் அசந்தர்ப்ப நிலைமைகள், அரசியல் சிரமங்கள் முதலியவைகள் அனுபோகத்தினால் தெரிந்திருக்கையில், சமஸ்தானாதிபதிகளைப் பற்றியும் அதே முறையை ஏற்படுத்தவே இந்த யோசனை சொல்லப்படுவதாக நாங்கள் கருதுகிறோம்.

நாங்கள் ஏற்கனவே பிரஸ்தாபித்துள்ள ஸர் மால்கம் ஹெய்லியின் பிரசங்கத்தில் ஏதோ ஒரு விதமான ஸமஷ்டி அரசியல் முறை ஜாடையாகக் குறிப்பிடப்பட்டது. ஸர் லெஸ்லி ஸ்காட்டின் புத்தியிலும் அப்படிப்பட்டநினைப்பு பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதைப் பற்றிச் சந்தேகமில்லை. இந்தியாவின் அரசியல் முறை ஸமஷ்டிமுறையாக இருக்கலாமென்று நாங்களும் நினைக்கிறோம். அப்படிப் பட்ட அரசியல் முறையையே ஏற்படுத்த வேண்டுமானால், அந்த ஸமஷ்டி முறையில் சமஸ்தானங்களின் நிலைமை என்னதாக இருக்கவேண்டுமென்று சந்தேகமறத் தீர்மானித்துவிட வேண்டும். ஒரு சரியான ஸமஷ்டியில் சேர சமஸ்தானங்கள் இஷ்டப்படுகின்றனவா? தயாராக இருக்கின்றனவா? இந்தக் கேள்வியை நாங்கள் ஏன் கேட்கிறோமென்றால், சமஸ்தானாதிபதிகளும் ஸர் லெஸ்லி ஸ்காட்டும் போகிற வழியைப் பார்த்தால் அது ஸமஷ்டி முறையில் கொண்டுபோய் விடாதென்று தோன்றுகிறது. ஆசிரியர் நியூட்டன் என்பவர் ஸமஷ்டி முறையைப் பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறார்:—"ஸமஷ்டி அரசியல் என்பது ஸர்வாதிகாரமுள்ள பல ராஜ்யங்கள் ஒன்றாக எக்காலமும் சேர்ந்திருப்பதாகும். முதலில் அந்த ராஜ்யங்களுக்குள் ஒரு

உடன்படிக்கை ஏற்பட்டிருக்கவேண்டும். அந்த உடன்படிக்கையே ஸமஷ்டிக்கு ஆதாரம். அல்லது அவைகளுக்கெல்லாம் பொதுவான சரித்திர பூர்வமான ஒரு அந்தஸ்தை அஸ்திவாரமாக உடைத்தாயிருக்கவேண்டும். இரண்டாவது, ஸமஷ்டி ராஜாங்கத்தின் அமைப்பு எல்லாத் தேசங்களின் பிரஜைகளாலும் அங்கீகரிக்கப்பட் டிருக்க வேண்டும். மத்திய கவர்ன்மெண்டானது கூட்டுச் சேர்ந்துள்ள ராஜ்யங்களின்மீது அதிகாரமுடையதுடன், அவைகளின் பிரஜைகளின்மீதும் நேர் அதிகாரமுடையது. அந்த ராஜ்யங்களுக்குத் தங்களுடைய நாட்டின் உள் வியவகாரங்களைப் பற்றிய அதிகாரமும் அன்னிய நாடுகளைப் பற்றிய அதிகாரமும் இந்தக் கூட்டால் பாதிக்கப்படும். ஸமஷ்டி ராஜாங்கமொன்றுதான் அன்னிய ராஜ்யங்களுடன் சம்பந்தமுடையதாக இருக்கும்'' என்று ஆசிரியர் ந்யூட்டன் சொல்லுகிறார். இந்திய சமஸ்தானங்கள் ஸமஷ்டி கவர்ன்மெண்டில் சேர்ந்துவிடின் தீர்மானங்களையும் சட்டங்களையும் மத்ய சட்ட சபை செய்வதில் தங்களுடைய ஓட்டு பலத்தை உபயோகிக்கக் கூடியவைகளாக இருக்கும். ஆனால் அதே சட்டசபை செய்யக் கூடிய சட்டங்களால் கட்டுப்படாதிருக்கும். இது ஒரு தலைப்பட்சமான ஏற்பாடேயாகும்.

கூட்டுக்கு அடிப்படையான நியமத்தை இந்த ஏற்பாடு அலட்சியம் செய்துவிடும். கூட்டு நியமத்தைத் தெரிந்துகொண்டு கூட்டில் சேர சமஸ்தானங்கள் இஷ்டப்படின் இரு கைகொண்டு நாங்கள் அவைகளை எதிர்கொண்டழைப்போம். அவைகளுக்குள்ள பாத்யங்களை அவைகள் அனுபவிக்கிறதற்குத் தேவையான ஏற்பாடுகளையெல்லாம் செய்வோம். ஆனால் ஒரு விஷயத்தைக் கருத்தில் இறுத்திக் கொள்ளவேண்டும். ஸமஷ்டியில் சமஸ்தானாதிபதிகள் சேர்வதன்பலனாக அவர்களுடைய நாடுகளில் நடைபெறும் அரசியல் முறையில் கொஞ்சமாகவோ நிரம்பவோ மாறுதல் செய்ய வேண்டியிருக்கும். இதுவரையில் சமஸ்தானாதிபதிகள் அடைந்திருக்கிற அனுபோகத்தின் பலனாக அவர்கள் அப்படிப்பட்ட கூட்டில் சேரத் தீர்மானிக்கலாமென்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் சேரும்வரையில், நிர்வாக விஷயங்களைப்பற்றியும் வேறு விஷயங்களைப்பற்றியும் பரஸ்பரம் ஏற்படக்கூடிய அபிப்பிராய பேதங்களை நிவர்த்திசெய்யத் தகுந்த ஒரு கருவியை ஏற்படுத்துவது அசாத்திய

மன்று. உடன்படிக்கைகளின்படி அவர்களுக்குள்ள பாத்யங்களையும் இதுவரையில் அவர்கள் அனுபவித்திருக்கிற அல்லது கொண்டாடுகிற சுவாதீனத்தையும் காப்பாற்றிக்கொள்ள ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியது முக்கியமேயல்லாமல், அவர்கள் அரசருடன் சம்பந்த முடையவர்களா அல்லது இந்தியா கவர்ன்மெண்டுடன் சம்பந்த முடையவர்களா என்ற விவாதம் முக்கியமல்ல. அது தொண்டைக் குக் கேடு விளைவிக்கக்கூடியது தான்.

ஆகையால் (1) ஈஸ்டு இந்தியா கம்பெனிக்கும் இந்திய சமஸ் தானதிபதிகளுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைகளிலும், அவைகளுக் குப் பிற்பட்ட உடன்படிக்கைகளிலும், இந்தச்சட்டம் அனுஷ்டானத் தில் வருங்காலத்தில் அமுலிலுள்ளவை இந்திய சமராஜ்ய கவர்ன் மெண்டைக் கட்டுப் படுத்தும் என்றும், (2) இந்தச் சட்டம் இயற் றப்பட்டதற்குமுன் அந்த உடன்படிக்கைகளை அனுசரித்து இந்தியா கவர்ன்மெண்டு செலுத்திவந்திருக்கிற அதிகாரங்களையும் உரிமைகளை யும், நிறைவேற்றி வந்திருக்கிற கடமைகளையும் இந்திய சமராஜ்ய கவர்ன்மெண்டு முறையே செலுத்தும், நிறைவேற்றும் என்றும் நாங் கள் தயார் செய்துள்ள மசோதாவில் சொல்லி யிருக்கிறோம். தற் பெருமை உணர்ச்சியுடன் இந்த ஏற்பாடுகளை நாங்கள் சொல்லியிருக்க வில்லை. இந்த நிபந்தனைகளால் பிற்கால இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஏற்படக்கூடிய பொறுப்புகளை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். பிற் கால இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய கடமைகளைச் சரியாக நிறைவேற்றுவார்கள் என்றும், அன்னியோன்னியமான சம்பந் தங்கள் வளரும்படியும் மற்றவர்களுடைய உரிமைகள் அபிமா னங்கள் முதலியவைகளுக்குப் பங்கம் விளைவிக்காமலும் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வார்கள் என்றும் நாங்கள் நம்புகி றோம். "இந்திய சமராஜ்ய கவர்ன்மெண்டுக்கும் ஒரு சமஸ்தானத் திற்கும் உடன்படிக்கைகள், சன்னதுகள் முதலிய தஸ்தாவேஜிக ளில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றித் தகராறு ஏற்பட்டால் அந்த சமஸ்தானதிபதியின் சம்மதத்தின் மேல் கவர்னர் ஜெனரல் அந்தத் தகராறைத் தீர்த்துத் தீர்ப்பு கூறும்படி அதை ஸுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பலாம்" என்று எங்களுடைய மசோதாவில் சொல்லி யிருக்கிறோம். இப்பொழுதுள்ள ஏற்பாட்டில், இந்தியா கவர்ன்மெண்டாரே கட்சிக்காரர்களில் ஒருவராகவும் நியாயாதிபதி

யாகவுமிருக்கிறார்கள். அதைக் காட்டிலும் நாங்கள் சொல்லி யிருக்கிற ஏற்பாடு சிலாக்கியமானதென்று நினைக்கிறோம். ஸுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜுகள் சட்டத்தில் நிபுணர்களாகவும், குணக்கடலாகவும், சுவாதீன புத்தியுள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நீதி ஸ்தலத்திற்குப் போகவேண்டாத பணவிஷயங்கள், நிர்வாக விஷயங்களைப்பற்றி பரஸ்பரம்கூடிப்பேசி ராஜிக்கு வருவது சிரமமாக இராது. பிற்கால நிலைமை இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் கேவலமாக இராதென்றே நாங்கள் நினைக்கிறோம்; இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் சிலாக்கியமாகவே இருக்கலாம்; ஒரு சமஸ்தானத்திற்கும் மற்றொன்றுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்படின், அதைத் தீர்க்க ராஜி செய்து கொள்வது சுலபமாகவே இருக்கலாம். பொதுப் பாதுகாப்பு விஷயம் பிற்காலத்தில் மத்ய கவர்ன்மெண்டுக்கும் சமஸ்தானங்களுக்கும் பரஸ்பர சிரத்தையைக் கொடுக்கும். பொதுவான கடமைகள் முற்காலத்தில் அவர்களுக்கு ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்கி யிருக்குமானால், பிற்காலத்தில் அது அப்படிப்பட்ட உணர்ச்சியை உண்டாக்குமா என்று நாங்கள் கவலைப்படவேயில்லை. இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றி சமஸ்தானாதிபதிகளின் பிரதிநிதிகளுடன் நாங்கள் கலந்து பேசும் சௌகரியத்தைப் பெறவில்லை; அப்படிப் பேசும்போது, இப்பொழுது விளங்காத சில விஷயங்களைப் பற்றித் தெளிவான அறிவு உண்டாகக்கூடும். இந்திய ஸமஷ்டி கவர்ன்மெண்டுதான் ஜவாப்தாரியான ஆட்சிக்குச் சரியான அஸ்திவாரமாக இருக்கக்கூடும். அது மாகாணங்கள், சுதேச சமஸ்தானங்கள் ஆகியவைகளின் சுவாதீனத்திற்குப் பங்கம் விளைவிக்க மாட்டாது. இதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோமாயினும், அரசரோ இப்பொழுதுள்ள இந்தியா கவர்ன்மெண்டோ சமஸ்தானங்களின் பொருட்டு ஏற்றுக்கொண்டிருக்கிற கடமைகளை ஸர்வஜன ஆட்சியல்லாத அரசியல்தான் நிறைவேற்றக் கூடுமென்று சிலர் சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது. ஆகையால், மேற்சொன்ன கூட்டு அரசியலில் சமஸ்தானங்கள் சேர சம்மதப்படும் வரையில் ஜவாப்தாரியான முறை அல்லது குடியேற்ற நாட்டு அரசியல் முறை ப்ரிட்டிஷ் இந்தியாவுக்குக் கொடுக்கப்படக்கூடாதென்பதை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. இந்திய சமஸ்தானங்கள் எங்களுடைய அபிலாஷைகளில் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றனவா

யினும், எங்களுடைய லட்சியங்கள் நிறைவேறுமற் செய்யவேண்டிய வைகளாகவும், எங்களுடைய லட்சியங்களுக்கு விரோதமானவைக ளாகவு மிருக்கின்றன என்பதே ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்லும வாதத்தின் கருத்தாகும்.

சமஸ்தானுதிபதிகள் எங்களுடன் கலந்து பேசவில்லையாயினும், அவர்களுடைய பிரஜைகளின் பிரதிநிதிகள் சர்வகட்சி மகாநாட் டிற்கு வந்து அவர்களுடைய கட்சியை வெகு சாமர்த்தியத்துடன் எடுத்துச் சொன்னுர்கள். இந்திய சமஸ்தானங்களைப் பற்றி சர்வகட்சி மகாநாட்டின் முதல் கமிட்டி செய்த சிபார்சுகளை மைசூர் ஜனப் பிரதிநிதிச் சபையின் அங்கத்தினரான ஸ்ரீமான் ஹோஸப்பா கிருஷ்ணராவ் வெகுபலமாகக்கண்டித்தார். அவர் ஒரு சுயராஜ்ய அரசி யல் முறையைத் தயார் செய்திருக்கிறுர். சென்னையில் நடை பெற்ற அகில இந்திய சமஸ்தானப்பிரஜைகளின் மகா நாட்டால் நியமிக்கப் பட்ட கமிட்டியால் அந்த முறை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்ன கண்டனங்களை நாங்கள் வெகு ஜாக்கிரதையுடன் கவ னித்தோம். ஸ்ரீமான் கிருஷ்ணராவின் சுராஜ்ய முறையையும் கவ னித்தோம். ஆனல் மேலே நாங்கள் சொல்லியுள்ள நிலைமைகளை உத்தேசித்து ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கும் சமஸ்தானங்களுக்கும் பொ துவான ஒரு அரசியல் முறையைச் சிபார்சு செய்ய நாங்கள் அசக்தர் களாக இருக்கிறேம்.

"இந்திய சமஸ்தானங்கள்" என்ற சொல் தொடர் எவ்வகை அரசியலையும் குறிப்பிடவில்லை. அரசியல் திருத்த யாதாஸ்தின் கர்த்தாக்களாகிய மிஸ்டர் மாண்டேகுவும் லார்டு செம்ஸ்போர்டும் சமஸ்தானங்களைப்பற்றிப் பின்வருமாறு சொல்லியிருக்கிறுர்கள்:— "சமஸ்தானங்கள் பலவகை அபிவிருத்தியிலும் இருக்கின்றன. மன் னன் பிதாவாக பாவிக்கப்படும் நாடுகள் இருக்கின்றன. அவைகளைக் காட்டிலும் அபிவிருத்தி அடைந்திருக்கிற நாடுகளுமிருக்கின்றன. சில நாடுகளில் பிரதிநிதி ஸ்தாபனங்களின் ஆரம்பமும் காணப்படு கிறது. விசேஷ அபிவிருத்தி அடைந்துள்ளவைகள் உள்பட எல்லா வற்றிற்கும் ஒரு குணம் பொதுவாக இருக்கிறது. அதாவது சமஸ் தானுதிபதி தானே ஆட்சியை நடத்துகிறுர்; சட்டமியற்றலும், நீதி பரிபாலனமும் அவருடைய மேலதிகாரத்திற்குட்பட்டிருக்கின்றன." இப்படி சமஸ்தானுதிபதி தானே ஆள்வது யாறினுலொழிய "சமஸ்

தானம்'' என்ற சொல் சமஸ்தானத்தைஆளும் மன்னரையே குறிப்பிடும்; அரசியல் முறைக்கும் அந்த சொல்லுக்கும் சம்பந்தமில்லை. சமஸ்தானாதிபதிகளின் சம்மதமன்னியில் அரசியல் முறையில் மாறுதல் செய்யமுடியாது. "பரம்பரையாக வந்துள்ள விருத்தாந்தங்களும், அபிமானமும், அசைக்கமுடியாத ராஜபக்தியும் பிரஜைகளை சமஸ்தானாதிபதியின் குடும்பத்துடன் பிணைத்திருக்கின்றன. ஆகையால் ப்ரிட்டிஷ் இந்தியாவுடன் கலந்துவிட அவர்கள் இஷ்டப்படவில்லை. ப்ரிட்டிஷ் இந்தியாவின் உறவையே அவர்கள் விரும்புகிறார்கள்'' என்று ஸ்ரீமான் ஹோஸப்பா கிருஷ்ணராவ் சொல்லுகிறார். இவ்வளவு அபிமானமும் ராஜபக்தியும் பரம்பரையாக சமஸ்தானப் பிரஜைகளுக்கு இருக்கிறதாயினும், சமஸ்தானாதிபதிகளின் இஷ்டத்தை ஸ்ரீமான் கிருஷ்ணராவ் அசட்டை செய்கிறதுடன், "மாட்சிமை தங்கிய அரசருடனே பார்லிமெண்டுடன் கூடிய அரசருடனே இந்தியா மந்திரியுடனே இந்தியா கவர்ன்மெண்டுடனே'' அவர்கள் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகளையெல்லாம் ரத்துசெய்துவிட வேண்டுமென்றும், புதிய அரசியல் முறை அமுலில் வருந்தினத்தில் இந்த உடன்படிக்கைகள் எல்லாம் செல்லக்கூடாமற் செய்துவிட வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். சமஸ்தானங்களின் விஸ்தீரணத்துக்குப் பங்கம் விளையாதென்றும், உள்நாட்டு நிர்வாகத்தில் சுவாதீனமிருக்குமென்றும் பிரஜைகளுக்கு ஜீவாதாரமான உரிமைகள் இருக்குமென்றும் உறுதி கூறப்படவேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். சமஸ்தானாதிபதிகள் அவர் சொல்லும் நிபந்தனைகளை மீறி நடந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் பந்தோபஸ்தை நீக்கிவிட வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். இந்த நிபந்தனைகளை சமஸ்தானாதிபதிகள் ஒப்புக்கொள்ளாவிடில் என்ன செய்கிறதென்று அவர் குறிப்பிடவில்லை. சமஸ்தானாதிபதி பரம்பரை பாத்யமுடையவராக இருக்கவேண்டுமாம். அவர் ஒரு கவர்னர்போல் இருந்து கொண்டு ஜனப்பிரதிநிதிச் சபையையும் அதற்கு ஜவாப்தாரியான நிர்வாக சபையையுங் கொண்டு ஆட்சியை நடத்தவேண்டுமாம். தேசத்திற்குப் பொதுவான ஸமஷ்டி ராஜாங்கமானது ப்ரிட்டிஷ் சம்பந்தமேயிராமல் கத்தரித்துக்கொள்ள சுவாதீனமுடையதாக இருக்கவேண்டுமென்றும் சொல்லி அவர் முடித்திருக்கிறார்.

அவர் சொல்லியுள்ள பிரேரணைகள் முன்னுக்குப் பின் விரோதமாக இருப்பதைக் குறிப்பிடவேண்டியதில்லை. ராஜீய சாஸ்திர

ரீதியில் அதைக் கண்டிக்கவும் தேவையில்லை. அந்த சாஸ்திர எல்லையைக் கடந்துசெல்ல எங்களுக்குச் சுவாதீனமில்லை.

## அன்னிய ராஜ்ய சம்பந்தப்போக்கு.

இதுவரையில் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் சுதேச சமஸ்தானாதிபதிகளுக்குமுள்ள சப்பந்தத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தோம். இனிமேல் இந்தியா கவர்ண்மெண்டுக்கும் அன்னிய ராஜ்யங்களுக்குமுள்ள சம்பந்தத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறோம். சில குடியேற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியாவின் நிலைமை விசேஷமாக இருப்பது எங்களுக்குத் தெரியும். வட மேற்கிலும் வட கிழக்கிலும் இந்தியாவின் எல்லைகள் விசாலமாகவும் வேறு தேசங்களை அடுத்தவைகளாகவும் இருக்கின்றன. ஆகையால் அன்னிய ராஜ்யங்களுடனும், அரைகுறையான சுவாதீனமுடைய ஜாதிகளுடனும் சம்பந்த மேற்படுகிறது. இந்தியா கவர்ன்மெண்டின் அன்னிய இலாக்கா அன்னியக் காரியதரிசிக் குட்பட்டிருக்கிறது. அவர் கவர்னர் ஜெனராலுடைய நேரதிகாரத்திற் குட்பட்டு வேலை செய்கிறார். அவருடைய கடமைகள் அநந்தம். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தை அவர் கவனிக்கவேண்டும். ஏஜென்ஸிப் பிரதேசங்களில் வாழும் ஜனங்களுடைய விஷயங்கள் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டவை; வடமேற்கு மாகாணத்திலும் வேறு இடங்களிலும் அரை சுவாதீனமுள்ளவர்களாக இருக்கும் ஜாதிகளையும் அவர் கவனித்துக் கொள்ளவேண்டும். பாரஸீகக்குடா, ஏடன் ஆகிய பிரதேசங்களிலும் அவருக்கு அதிகாரமிருக்கிறது. அவருடைய அதிகாரத்திற்குட்பட்ட விஷயங்களில் சில—எல்லா மல்ல—சில சமயங்களில் சட்டசபையில் விவாதத்திற்கு வருகின்றன. அப்பொழுது அவர் இந்தியா கவர்ன்மெண்டின் போக்கை விளக்க வேண்டியவராகவோ அல்லது அதை ஆதரிக்க வேண்டியவராகவோ இருக்கிறார். ராஜ தந்திரம் சம்பந்தமான பெரிய விஷயங்கள் இங்கிலாந்தில் முடிவு செய்யப்படுகின்றன. நன்றாகப் பிணைக்கப்பட்டுள்ள சமராஜ்யத்தில் அந்தந்த ராஜ்யத்தின் சுவாதீனத்திற்குப் பங்க மேற்படாதபடி அன்னிய ராஜ்ய சம்பந்தப் போக்கானது ஒரு தன்மையுள்ளதாக இருக்கவேண்டுமென்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்த ஒரு தன்மையானது அந்தந்த ராஜ்யத்துடன் கலந்து பேசுவதால்

ஏற்படவேண்டுமே யல்லாமல் ஏகாதிபத்திய ஆணையால் உண்டாக முடியாது. அன்னிய ராஜ்ய சம்பந்தத்தைப்பற்றித் தென் ஆபிரிக்காவும் கானடாவும் ஆஸ்டிரேலியாவும் கொண்டாடும் சுவாதீனம் சென்ற சில வருஷங்களில் பெருகி யிருக்கிறது; அதன் பயனாக ஏகாதிபத்தியத்தின் பந்தோபஸ்து குறையவில்லை. அன்னிய ராஜ்ய சம்பந்தத்தில் ஒருவிதமான போக்கை அனுஷ்டிப்பதிலும் சிரமமேற்படவில்லை.

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் ஆசியாவிலுள்ள அடுத்த தேசங்களுக்குமுள்ள பரஸ்பர சம்பந்தத்தைப்பற்றிய கடமைகளை இந்தியா கவர்ன்மெண்டார் நிறைவேற்றி வருகிறார்கள். இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடையும்போது அதே கடமைகளை ஏன் செய்யக்கூடாதென்பது எங்களுக்குத் தெரியவில்லை. அன்னிய ராஜ்ய சம்பந்தத்தைப்பற்றிய விஷயங்கள் வெகு நாஸூக்கானவை என்பது எங்களுக்குத் தெரியும்; அவ்விஷயங்களைப்பற்றிச் சட்டசபையில் விவாதிப்பது யுக்தமல்ல வென்பதும் எங்களுக்குத் தெரியும்; மற்ற தேசங்களின் சட்டசபைகள் அவ்விஷயங்களைப்பற்றி விவாதிக்காமலிருப்பது போல் இந்தியாவின் சட்டசபையும் விவாதிக்காமல் முன்யோசனையுடன் ஏன் நடந்து கொள்ளாது?

அத்தியாயம் VI.

## இதர பிரேரணைகள்.

நாங்கள் யோசனை சொல்லியிருக்கும் அரசியல் அமைப்பின் முக்கியமான அம்சங்களை இனிக் கவனிப்போம். ஏற்கெனவே சொல்லியபடி குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் முறையை அனுசரித்து இந்தப் பிரேரணைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## ஜீவாதாரமான உரிமைகள்.

ஜீவாதாரமான உரிமைகளை அடிப்படையாகக் கொண்டதாக அரசியல்அமைப்பு இருக்கவேண்டுமென்று சென்னைக்காங்கிரஸ் தீர்மானம் செய்திருக்கிறது. இந்த விஷயம் முக்கியமாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் பரிசீலனை செய்த எல்லா நகல் திட்டங்களிலும் ஜீவாதாரமான உரிமைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. கானடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா இந்த தேசங்களில் இத்தகைய பாதுகாப்பு இருந்து வரவில்லை. ஆனால் சுவாதீன அயர்லாந்தின் அரசியல் அமைப்பில் ஜீவாதாரமான உரிமைகள் என்ற பொதுத் தலைப்பின்கீழ்வரக்கூடிய பல ஷரத்துகள் இருந்துவருகின்றன. இவ்விதம் அங்கு பாதுகாப்பை ஏற்படுத்தியதற்குக் காரணமின்னதென்பதைத் தெரிந்து கொள்ளுவது கஷ்டமில்லை. இப்பொழுது இந்தியாவிலிருந்து வருவது போன்ற நிலைமையே அயர்லாந்தில் உடன்படிக்கைக்கு முன் இருந்து வந்தது. இப்பொழுது இந்தியப் பிரஜைகள் ஜீவாதார உரிமைகளைப் பெறுவதில் சிரத்தையுடையவர்களாக இருப்பதுபோலவே, ஐரிஷ்காரர்களும் தங்களுக்கு மறுக்கப்பட்டிருந்த ஜீவாதாரமான உரிமைகளை ஸ்தாபித்துக்கொள்ளுவதை முதல் காரியமாக வைத்துக்கொண்டார்கள். இதர குடியேற்ற நாடுகள் ஆதிகாலத்தில் பிரிட்டிஷாரின் குடியேற்ற ஸ்தலங்களாகவிருந்து குடியேற்ற நாடுகளாக வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அங்கு குடியேறியவர்கள் இங்கிலாந்தில் அனுஷ்டானத்திலிருந்து வரும் சட்டங்களை அங்கு கொண்டுபோயிருப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் அயர்லாந்தைப் பிடித்துக்கொண்டு, ஐரிஷ்காரர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக இங்கிலாந்தின் ஆட்சியின்கீழ் அதை வைத்திருந்தார்கள். அது குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பெறுவத

ற்கு இங்கிலாந்தும் அதுவும் உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டியதாயிற்று. இந்தியாவும் இதே அரசியல் நிலையில்தானிருந்து வருகிறது. இந்தியாவானது கிரேட் பிரிட்டனின் சர்வாதிகாரத்திற் குட்பட்டதாக இருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. பலாத்காரம் அல்லது பரஸ்பரசம்மதம் ஆகிய இரண்டுவழிகளில் ஒன்றினுல் தான் அந்த நிலைமையை மாற்றிக்கொள்ளலாம். பிந்தின முறையை உத்தேசித்துத்தான் ஒரு அரசியல் அமைப்பைத்தயாரிக்கும்படி நாங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். இவ்விதம் செய்கையில் நமது ஜீவாதாரமான உரிமைகள் பிறகு எக்காரணத்தாலும் பறிமுதல் செய்யப்பட்டுவிடமுடியாத விதமாக அவைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திவிடுவது எங்களுடைய முக்கிய கடமையாகிறது. இந்தக் காரணங்களில்லாத ஐரோப்பிய நாடுகளின் நவீன கால அரசியல் அமைப்புகளிலும் பிரஜைகளின் ஜீவாதாரமான உரிமைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜீவாதாரமான உரிமைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திவிடவேண்டியது முக்கியமானதெனக் கருதப்படுவதற்கு இந்த தேசத்தில் துரதிஷ்டவசத்தினுல் வகுப்பு வேற்றுமைகள் இருந்துவருவது மற்ருெரு காரணமாகும். பரஸ்பரம் அவநம்பிக்கையும் சந்தேகமும் இருந்துவருவோர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக சில பாதுகாப்புகளும் பந்தோபஸ்துகளும் அவசியமாக இருக்கின்றன. அரசியல் அமைப்பில் அடிப்படையான தர்மங்களில் அவைகளைச் சேர்க்காமல் எல்லா சமூகங்களும் பூரண மத, சமூக உரிமைகளை அனுபவிப்பதற்கு சுதந்திரத்தை ஏற்படுத்துவது சாத்தியமில்லை.

ஜீவாதாரமான உரிமைகள் சம்பந்தமாக நாங்கள் வரைந்திருக்கும் பல பிரிவுகளையும் கவனித்தால் இந்த இரண்டு அம்சங்களையும் நாங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருப்பது புலப்படும்.

## ஷ்திரமான குடிபாத்தியம்.

சர்வகக்ஷி மகாநாடு முதன்முதலாக நியமித்த கமிட்டியானது இந்த விஷயத்தை ஜாக்கிரதையாகப் பரிசிலனை செய்திருந்தது. அதனுடைய சிபார்சுகளில் பலவற்றை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள், குடியானவர்கள் இவர்களுடைய பாத்திய விஷயமாக ஜீவாதாரமான உரிமைகளில் நாங்களாக ஒரு சிபார்சைச்

சேர்த்திருக்கிறோம். முதலாவது கமிட்டியும் இந்தச் சிபார்சைச் செய்திருந்தது. ஆனால் அந்தச் சிபார்சில் கிரமமான கூலியைக் கிடைக்கும்படியும் குடிகளுக்கு ஸ்திரமான குடிபாத்தியம் இருக்கும்படியும் பார்லிமெண்டு சட்டங்களை இயற்றவேண்டுமென்றிருந்த பாகத்தைமட்டில் அதிலிருந்து விட்டுவிட்டோம். குடிகளுக்கு ஸ்திரமான குடிபாத்யம்கொடுப்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளாததற்காக இந்தப்பாகத்தை நாங்கள் விட்டுவிடவில்லை; இதை ஒரு ஜீவாதாரமான உரிமையாகச் செய்துவிடின் குடிகளுக்கு இது பாதுகாப்பாக இருந்துவருவதற்குப் பதிலாக அவர்களுடைய முற்போக்குக்கு இது தடைக்கல்லாகி விடக்கூடுமென்ற காரணத்தினாலேயே இந்தப் பகுதியை நாங்கள் விட்டுவிட்டோம். இந்தியாவின் பல பாகங்களில் இப்பொழுது அனுஷ்டானத்திலிருந்துவரும் குடிபாத்திய முறையானது விரும்பத்தக்கதாக இல்லாமலிருப்பதோடு, விசேஷமான மாறுதல் செய்யப்படவேண்டியதாகவு மிருக்கிறது. இப்பொழுது குடிகள் மிகவும் வருந்தத்தக்க நிலைமையிலிருந்து வருகிறார்களென்றும், ஓரளவு குடிபாத்தியம் கொடுத்தாலும் அவர்களுக்கு அனுகூலமேற்படுமென்றும் நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இப்பொழுது சிறிது பரிகாரம் கிடைப்பதை உத்தேசித்து எதிர்காலத்தில் குடிகளுக்கு ஏற்படக்கூடிய பாத்தியத்தை விட்டுக் கொடுத்துவிடுவது குறுகிய புத்தியுள்ள செய்கையாக விருக்கும். தற்போதைய முறை அனுஷ்டானத்திலிருந்து வரும் வரையில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் காலக்ஷேபத்திற்குக் கட்டும்படியான வருமானம் கிடைக்கும்படி பார்லிமெண்டு சட்ட மியற்ற வேண்டுமென்று ஜீவாதாரமான உரிமைகளில் சேர்த்திருக்கும் பிரிவின் மூலமாகக் குடிகளுடைய பாத்தியங்களைப் பாதுகாத்து விடலாம்.

## ரஸ்தாக்கள் முதலியவைகளை உபயோகிக்கும் பாத்தியம்.

எல்லா பப்ளிக் ரஸ்தாக்களையும், பப்ளிக் கிணறுகளையும், பொது ஸ்தலங்களையும் உபயோகித்துக்கொள்ள எல்லா பிரஜைகளுக்கும் பாத்தியமுண்டென்று ஜீவாதாரமான உரிமைகளில் ஒரு பிரிவை நாங்கள் சேர்த்திருக்கிறோம். இந்தப்பிரிவு இல்லாமலே இந்த பாத்தியம் எல்லோருக்கும் உண்டென்று தோன்றக்கூடும். ஆனால் தேசத்தின் சில பாகங்களில் இருந்துவரும் அபூர்வமான நிலைமையையும், பழக்க

விழுக்கங்களையும் உத்தேசித்து இந்த அம்சத்தை வற்புறுத்த வேண்டியது அவசியமென்று நாங்கள் நினைக்கிறோம்.

## பாடசாலைகளில் ஜாதி வித்தியாசமில்லை.

இதர சில பிரிவுகளில் சில மாறுதல்கள் செய்திருப்பதுடன், சில விஷயங்களைப் புதிதாகவும் சேர்த்திருக்கிறோம். இலவச ஆரம்பக்கல்வியைப் பெற எல்லாருக்கும் பாத்திய முண்டென்பதைப்பற்றிய பிரிவில் "அரசாங்கத்தாரால் நடத்தப்படுகிறவைகளாகவாவது, அல்லது அரசாங்கத்தின் உதவியைப் பெறுகிறவைகளாகவாவது இருந்துவரும் பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் ஜாதி அல்லது வகுப்பு வித்தியாசங்களைப் பாராட்டக் கூடாது" என்னும் ஷரத்தைச் சேர்த்திருக்கிறோம்.

## ஹேபியஸ் கார்ப்பஸ்.

கோர்ட்டினுடைய உத்தரவன்னியில் சிறை வைக்கப்பட்டிருப்பவனைக் கோர்ட்டின் முன் ஆஜர் செய்யும்படி கேட்பதற்கு இருந்துவரும் பாத்தியத்துடன், யுத்தமாவது அல்லது கலகமாவது நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் மத்திய சட்ட சபையின் கூட்டம் நடந்து கொண்டிரா விட்டால் சமராஜ்ய கவர்ன்மெண்டின் நிர்வாகிகள் தற்காலிகமாக இந்த பாத்தியதையை சஸ்பெண்டு செய்து வைக்கலாமென்றும், ஆனால் மத்திய சட்டசபை தனக்கு யுக்தமாகத் தோன்றுகிற நடவடிக்கையை எடுத்துக் கொள்ளும் பொருட்டு சமீபத்தில் வாய்க்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு இதன் விவரத்தை அறிவிக்க வேண்டுமென்றும் நாங்கள் ஒரு ஷரத்தைச் சேர்த்திருக்கிறோம்.

## கிருபான்கள்.

எங்களுடைய சகாவான ஸர்தார் மங்களசிங்கின் வேண்டுகோளை அனுசரித்து எந்த சந்தர்ப்பத்திலும் கிருபான்களை எடுத்துப்போக சீக்கியர்களுக்கு உரிமையுண்டென்று ஜீவாதாரமான உரிமைகளில் ஒரு பிரிவைச் சேர்த்திருக்கிறோம்.

## சட்ட சபை

மத்திய கவர்ன்மெண்டில் ஒரு செனெட் சபையும், ஒரு ஜனப்பிரதிநிதி சபையுமாக இரண்டு சபைகள் இருந்துவர வேண்டுமென்று

நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மாகாணங்களில் ஒரே சபைதானிருந்துவரவேண்டும்.

## அங்கத்தினர்களின் சங்கியை

செனெட் சபை 200 அங்கத்தினர்கள் அடங்கியதாக இருக்கவேண்டு மென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். ஜனப்பிரதிநிதி சபையில் 500 அங்கத்தினர்கள் இருந்துவர வேண்டும். அவசியமானால் ஜனத்தொகை விதாசாரத்தின்பேரில் அந்தத் தொகையை அதிகப்படுத்திக்கொள்ள சுதந்திர மிருக்க வேண்டும். 100 லட்சம் ஜனங்களுக்குக்குறைவாக விருந்து வரும் மாகாணங்களில் 100 அங்கத்தினர்கள்வரை யிருக்கலாம்.

## ஓட்டு சுதந்திரம்

ஜனப்பிரதிநிதி சபைக்கும், மாகாண சட்ட சபைகளுக்கும் விரிவாக ஓட்டுச் சுதந்திரத்தைக் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். எங்களில் சிலர் 18-வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் ஓட்டுச் சுதந்திரத்தைக் கொடுத்துவிட வேண்டு மென்று அபிப்பிராயப்பட்டார்கள். மற்றவர்கள் அதுவே லக்ஷியமாக இருக்கவேண்டு மென்பதை ஒப்புக்கொண்டபோதிலும், ஆரம்பத்தில் அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில் பலவிதக் கஷ்டங்கள் ஏற்படு மென்று கருதினார்கள். 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டுச் சுதந்திரம் கொடுத்துவிடுவதுள்பட அடியிற்கண்ட பல பிரேரணைகளைப்பற்றி நாங்கள் யோசித்தோம்.—

1. வாக்காளர்களாக இருக்க விரும்புகிறவர்கள் பதிவுசெய்துகொள்ளுவதற்குட்பட்டு 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுத்தல்.

2. இப்பொழுது 60 லக்ஷம் பேர்களுக்கு இருந்துவரும் ஓட்டு சுதந்திரத்தை 600 லக்ஷம் பேர்களுக்குக் கொடுத்தல். இந்த நிலைமை ஏற்படுவதற்கு எத்தகைய ஓட்டு சுதந்திரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நிர்ணயம் செய்வதை ஒரு கமிட்டி நிர்ணயம் செய்யும்படி விட்டுவிடுதல்.

3. அடியிற்கண்டவைகளில் ஒன்று:—

(அ) வரி, குத்தகை அல்லது நிலவரி, வீட்டுவரி, செஸ்கள் அல்லது இதர வரிகள் செலுத்துகிற எல்லா ஜனங்களும்

(ஆ) எழுதப் படிக்கத் தெரிந்த எல்லா ஜனங்களும்.

(இ) சரீரப் பிரயாசைப்பட்டோ மூளை வேலை செய்தோ கால க்ஷேபத்திற்கு சம்பாதிக்கிறவர்கள்.

(ஈ) வேலையற்றிருப்பவர்களுக்காக கவர்ன்மெண்டார் வைத்திருக்கும் ஜாப்தாவில் பதிவாகியிருக்கிறவர்கள்.

(உ) அவிபக்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

(ஊ) புருஷ வாக்காளர்களின் மனைவிகள்.

மேலே குறிப்பிட்டவைகளில் மூன்றாவது பிரேரணையானது அனுபவத்தில் 18-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரத்தைக் கொடுப்பதற்கு அநேகமாக சரிசமத்துவமானதாக இருக்கும் எங்களில் சிலர் இரண்டாவது பிரேரணையை ஆதரித்தனர். இதன் மூலமாக ஓட்டர்களின் தொகை 600 லக்ஷமாகும். 18-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரத்தைக் கொடுப்பதற்கு இது முக்கியபடியாக இருக்கும். 18-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுத்தால் பிரிட்டிஷ் இந்தியாவில் 1200 லக்ஷம் ஓட்டர்கள் ஏற்படுவார்கள். இரண்டாவது பிரேரணையின்படி இவர்களில் பாதிப் பேர்களுக்கு ஓட்டு சுதந்திரம் ஏற்படும். இது ஒரு பெரிய அபிவிருத்தியாக இருக்கும். இருந்தாலும் இந்தப் பிரேரணையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில் பல சங்கடங்கள் இருந்து வருகின்றன. இப்பொழுது பல சமூகத்தினரின் ஜனத்தொகைகளுக்குத் தகுந்தபடி ஓட்டர்களின் வீதாசாரம் இருந்து வரவில்லை. உதாரணமாக, பஞ்சாபில் ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் காட்டிலும் அதிகமாக முஸ்லீம்கள் இருந்து வந்தபோதிலும், அந்த சமூக ஓட்டர்களின் தொகையானது ஹிந்து, சீக்கிய ஓட்டர்களின் தொகையை விடக் குறைவாக இருக்கிறது. பிந்தின கோஷ்டியினர் பொருளாதாரத்துறையில் அபிவிருத்தி அடைந்திருப்பதே இதற்குக் காரணம். இந்த நிலைமை ஒழிந்து போகவேண்டுமென்றும், ஜனத்தொகைக்குத் தகுந்தபடி ஓட்டர்களின் வீதாசாரம் இருந்து வரவேண்டுமென்றும்

நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். 18 வயதுக்கு மேற்பட்ட எல்லாருக்கும் ஓட்டு சுதந்திரத்தைக் கொடுத்துவிடின் சுதாவாகவே இவ்வித நிலைமை ஏற்பட்டுவிடும். ஆனால் வேறு வரையறைகளை ஏற்படுத்துவதாயின் பல சமூகத்தினருக்கும் பலவித போக்கியதைகளை ஏற்படுத்தினாலன்றி ஓட்டர்களின் வீதாசாரம் அந்தந்த சமூகத்தினரின் ஜனத்தொகைக்குத் தகுந்தபடி இருப்பது சாத்தியமில்லை. இவ்விதமாக எல்லா சமூகங்களின் பிரதிநிதித்துவ முறையும் ஒருவிதமானதாக இல்லாமற் போய்விடும். இதைச் சில சமூகங்கள் குறைபாகக் கருதலாம். ஆகவே 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுப்பதுதான் பரிகாரமாகுமாதலால் அவ்விதமே நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். ஸிலோன் அரசியல் கமிஷனும் இவ்வித முடிவுக்கே வந்திருக்கிறது. புருஷர்கள் சம்பந்தப்பட்டவரையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்றும், ஸ்திரீகள் சம்பந்தப்பட்டவரையில் 30-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கென்று வரையறுக்கவேண்டுமென்றும் அந்தக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. ஓட்டர்களின் தொகையை ஒரு கிரமமான எல்லைக்குட்படுத்துவதற்காக இந்த வரையறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வித அவசியம் எதுவும் இங்கு இருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. ஜனநாயக அமைப்பில் ஓட்டு சுதந்திரத்தை வரையறுப்பது ஜனநாயகமாகாது. 18 வயதுக்குமேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுத்துவிடுவது அனுபவத்தில் கஷ்டங்களை விளைவிக்குமென்று சொல்லுவது வேறு விஷயம். இந்தியாவில் ஏற்படுத்தவேண்டியது உண்மையான ஜவாப்தாரியான ஆட்சியாயின், இந்தக் கஷ்டம் எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும் இதைச் சமாளித்தே யாகவேண்டும். ஸிலோன் அரசியல் கமிஷனனது உலகில் எங்குமில்லாத அதிசய ஆட்சி முறையை சிபார்சு செய்திருக்கிறது. அது வேறு யாதாயினும், அது எந்த விதத்திலும் ஜவாப்தாரியான ஆட்சியன்று. நாங்கள் ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்துவதையே கவனிக்கிறோம். ஆகவே புருஷர்களுக்கு ஓட்டு சுதந்திர விஷயத்தில் இல்லாத எவ்வித நிர்ப்பந்தத்தையும் ஸ்திரீகளுக்கு ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை.

சிரோமணி குருத்துவாரா ப்ரபந்தக் கமிட்டி (மத்திய சீக்கிய கோயில்கள் கமிட்டி) விஷயத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீ,

புருஷர்களுக்கு ஓட்டு சுதந்திரமுறை அனுஷ்டானத்தி லிருந்து வரு கிறது. பஞ்சாப் முழுவதும் இந்தத் தேர்தல் நடந்து வருகிறது. இந்த முறையை விரிவாக ஏற்படுத்துவதால், தேர்தல் இயந்திரங்களை அதிகப்படுத்தத்தான் வேண்டி யிருக்கும். ஜவாப்தாரிபான ஆட் சிக்கு அஸ்திவாரத்தைப் போடுவதற்கு இந்த முறை அவசியமாக விருக்கையில் இதற்காக ஏற்படும் கஷ்டங்களையும், இதற்காக அதிக ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதையும் ஏன் அயுக்தமானவைகளென்று கருத வேண்டுமென்று எங்களுக்குத் தெரியவில்லை.

சாமான்ய ஜனங்கள் எழுதப் படிக்கத்தெரியாதவர்களாக இருக் கிறார்களென்றும், ராஜீய அனுபவம் அவர்களுக்கு இல்லாம லிருக்கிற தென்றும் சொல்லப்படும் ஆக்ஷேபத்தை நாங்கள் பொருட் படுத்த வில்லை. படித்தவர்களின் தொகை இந்த தேசத்தில் மிகவும் குறை வாக விருப்பதால், ஓட்டு சுதந்திரத்தை எந்த அளவுவரை யறுத்த போதிலும், பெரும்பாலான ஓட்டர்கள் சம்பந்தப்பட்டவரையில்இந்த ஆக்ஷேபம் பொருத்த முடையதாகவே இருக்கும். ஒரு குறிப்பிட்ட வருமானமுள்ளவருக்கு ராஜீய ஞானத்தைப் புகட்டுவதாகச் சொல் லிக்கொண்டு, அவர்களுக்கும் குறைந்தவருமானமுடையவருக்குராஜீய ஞானத்தை மறுப்பதில் நியாயமாவது, நேர்மையாவது இல்லை. ராஜீய ஸ்தாபனங்களில் அதிகமாக சம்பந்தப்படுவதால்தான் ராஜீய ஞானம் ஏற்படும். இது கல்வி அறிவையே பொறுத்ததாக இருக்க வில்லை. எல்லாருக்கும் இந்த ஞானத்தைப் பெறுவதற்கு சரி சமத்துவமான வசதியிருந்துவர வேண்டும். மிகவும் முற்போக்கடைந்துள்ள தேசங் களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டுச் சுதந்திரத்தைக் கொடுப்பதற்காக எல்லோரும் எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளும் வரையில் காத்திருக்கவில்லை. இந்தியாமட்டில் ஏன் காத்திருக்க வேண்டும்?

## செனெட்

செனெட் சம்பந்தப்பட்டவரையில் மாகாண சட்ட சபைகளை ஓட்டுத்தொகுதிகளாக இருக்கவேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய் கிறோம். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஜனத்தொகையின்பேரில் இத்தனை ஸ்தானங்களென்று நிர்ணயம் செய்துவிடவேண்டும். குறை ந்த பக்ஷம் ஒரு மாகாணத்திற்கு இத்தனை பிரதிநிதிகளென்றும் ஒரு எல்லையை ஏற்படுத்திவிடவேண்டும்.

முதலாவது சர்வ கக்ஷிக்கமிட்டியில் சிறுபான்மையோர் நாங்கள் இப்பொழுது சொல்லியுள்ள யோசனையை ஒப்புக்கொண்ட போதிலும், பெரும்பான்மையோர் ஒருவரையறைக்குட்பட்டு ஓட்டு சுதந்திரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். செனெட் சபை நேர்முகமாகத் தெரிந்தெடுக்கப்படுவதாயின், ஒரு வரையறைக்குட்பட்டு குறுகியதாகவுள்ள ஓட்டு சுதந்திரத்தின் மூலமாகவோ, அல்லது பிரதிநிதி சபையைப்போல் விரிவான ஓட்டு சுதந்திரத்தின் மூலமாகவோதான் தேர்தல் நடைபெற வேண்டும். பிந்தினமுறையை அனுஷ்டிப்பதாயின் அது பிரதிநிதி சபையைப் போன்றதாகவே இருக்கும், அத்தகைய சபை அவசியமில்லை; முதலாவது முறையை அனுஷ்டிப்பதாயின் அது சமூகத்தினரில் சிறுபான்மையோரின் பிரதிநிதிச்சபையாகவே இருக்கும். முட்டுக்கட்டைகளையும், மனஸ்தாபங்களையும் ஏற்படுத்தும் சுபாவமும் இருந்துவரும். அநாமதேயர்களும், தங்களுடைய நன்மையையே கவனித்துக் கொண்டு தாராளப்போக்குள்ள முறைகளை எதிர்க்கிறவர்களாகவுமுள்ளவர்கள் அடங்கிய செனெட் சபைக்கு அவசியமேயில்லை.

ஜனப்பிரதிநிதி சபையிலிருந்து வரும் எல்லாப் பிரேரணைகளையும் நிதானமாகவும், நிஷ்பக்ஷபாதமாகவும் கவனிக்க வேண்டுமென்பதே இந்த சபை யிருந்துவர வேண்டுமென்பதற்குக் காரணமாகும். ஜனப் பிரதிநிதி சபையில் தகராறுக்குரிய விஷயங்கள் கவனிக்கப்படுகையில் நிஷ்பக்ஷபாதமாக முடிவு செய்யப்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. இந்தியாவில் வகுப்பு உணர்ச்சி அதிகமாக இருந்து வருவதால் இத்தகைய பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. நேர்முகமாக செனெட் சபைக்குத் தேர்தல் நடைபெறின், அதன் அங்கத்தினர்கள் ஜனப்பிரதிநிதி சபை அங்கத்தினர்களுக்கு இருந்து வருவது போன்ற அபிப்பிராயமுடையவர்களாகவோ, அல்லது சில பிரத்தியேக உரிமைகளின் பிரதிநிதிகளான பிற்போக்காளர்களாகவோ இருக்க நேரிடும். நாங்கள் யோசனையுள்ள நேர்முகமான தேர்தல் இல்லாத முறையானது இந்த சங்கடத்தைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். நாங்கள் சொல்லியுள்ள ஏற்பாட்டின்படி செனெட் சபை அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கிறவர்கள் கூடியவரையில் புத்திசாலிகளாகவே இருக்கக்கூடுமாதலால் சரியான மனிதர்கள், அதாவது ஏராள

மான ஓட்டர்களுள்ள ஜனநாயக முறையில் நடைபெறும் தேர்தல்களில் ஏற்படக்கூடிய கூச்சல்களையும் இதர சங்கடங்களையும் சகித்துக் கொள்ளுவதற்கு இஷ்டப்படாத மனிதர்கள், தெரிந்தெடுக்கப்படலாலாமென்று எதிர்பார்ப்பதற்குச்சிறிதுஇடமிருக்கிறது. அவர்களைத் தெரிந்தெடுக்கும் ஓட்டுத் தொகுதியானது ஒருவரையறைக் குட்பட்டதாக இருந்தபோதிலும், அது அந்தஸ்தையோ, அல்லது விசேஷ உரிமைகளையோ, அல்லது வகுப்புகளையோ பொறுத்ததாக இராது. அது கூடியவரையில் வாக்காளர்களில் பெரும்பாலோருடைய அபிப்பிராயத்தை வெளியிடுவதாகவே இருக்கும். நாங்கள் சிபார்சு செய்துள்ளபடி வீதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அனுசரித்துத் தேர்தலை நடத்தினால் மைனாரிட்டிகளும், விசேஷ உரிமைகளுள்ளவர்களும், பிரதிநிதித்துவம் பெறுவதற்கு இடமேற்படும்.

இந்தப் பிரேரணையை ஒப்புக் கொள்ளுவதில் இன்னொரு அனுகூலமு மிருக்கிறது. மாகாணங்களுக்கு மத்திய சபையில் நேர்முகமான பிரதிநிதித்துவம் ஏற்படும். மாகாணங்களின் அபிப்பிராயம் செனெட் சபையில் தெரிவித்துக் கொள்ளப்படுவதற்கு இடமேற்படும். மாகாண சட்டசபைகளும் மத்திய சட்டசபைகளும் ஒரு வழியில் வேலை செய்யும்படி செய்யவும், அரசியல் இயந்திரமானது ஒற்றுமையாக வேலை செய்யும்படி செய்யவும் இது உபயோகமாகவிருக்கும்.

ஒரு மாகாணத்திற்கு இத்தனை ஸ்தானங்களுக்குக் குறைவாகப் பிரதிநிதித்துவ மிருக்கக் கூடாதென்ற ஒருவரையறைக்குட்பட்டு, ஜனத் தொகையின் பேரில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் எத்தனை ஸ்தானங்களென்று விதித்துவிட வேண்டுமென்று நாங்கள் யோசனை சொல்லியிருக்கிறோம். குறைந்த பக்ஷம் ஒரு மாகாணத்திற்கு எத்தனை பிரதிநிதி ஸ்தானங்கள் இருக்க வேண்டுமென்பதை நாங்கள் நிர்ணயம் செய்யவில்லை. ஸ்தானங்களை விதித்துக் கொடுப்பதில் ஜனத்தொகையையே ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டுமாயினும், சிறிய மாகாணங்களுக்கும் போதிய பிரதிநிதித்துவ மேற்படும் பொருட்டு ஜனத்தொகை வீதாசாரத்தையே முழுவதும் அனுஷ்டித்துவிடக் கூடாதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். யுனைட்டெட் ஸ்டேட்ஸ் போன்ற சில தேசங்களில் சிறிய அரசாங்கங்கள்

ஜனத் தொகையை ஆதாரமாக வைத்துக்கொள்ளாமல் சரிசமத்துவ மாகப் பிரதிநிதிகளை அனுப்பிவருகின்றன. இந்தியாவில் பல மாகாணங்களுக்கும் விஸ்தீரணத்திலும் ஜனத் தொகையிலும் இருந்து வரும் வித்தியாஸத்தை உத்தேசித்து, எல்லா மாகாணங்களுக்கும் சரி சமத்துவமான பிரதி நிதித்துவத்தைக் கொடுப்பது விரும்பத் தக்க தாக இராது. ஆனால் செனட் சபையில் ஒரு மாகாணத்திற்கும் மற் றொரு மாகாணத்திற்கும் பிரதி நிதித்துவ விஷயத்தில் அதிக வித்தி யாசமிருந்து வரக்கூடாது.

## சட்டசபைகளின் கால அளவு.

ஜனப் பிரதிநிதி சபை 5 வருஷங்களும் செனெட் சபை 7 வருஷங்களும் இருந்துவர வேண்டுமென்று நாங்கள் யோசனை சொல்லி யிருக்கிறோம்.

## அதிகாரப் பிரிவினை.

முதல் கமிட்டியினுடைய சிபார்சுகளில் பல்வற்றை நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அவைகளுடன் புதிதாகச் சிலவற்றைச் சேர்த்திருப்பதுடன் வேறு சிலவற்றில் சிலமாறுதல்களைச் செய்திருக்கிறோம். மாகாண சட்ட சபைகளுக்கும் மத்திய சட்டசபைக் கும் ஏக அதிகாரத்தை நாங்கள் ஏற்படுத்தவில்லை. இதனால் சங்கட மேற்படக்கூடும். ஆகவே இரண்டின் ஜோலிகளையும் பிரித்துவிட்டு, ஒன்றின் வேலையை இன்னொன்று செய்துவிடாமல் தடுத்து விடுவ தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

சட்ட சபைகள் சம்பந்தமான இதர ஏற்பாடுகள் குடியேற்ற நாடுகளின் சட்டங்களிலிருந்து வருவதை அனுசரித்திருக்கின்றன. மத்திய சட்டசபை சம்பந்தப்பட்டமட்டில் பண சம்பந்தமான மசோதாக்களைப் பைசல் செய்யும் அதிகாரத்தை ஏகதேசத்தில் பிரதி நிதிச் சபைக்குக் கொடுத்திருக்கிறோம்.

## நிர்வாகிகள்.

சமராஜ்ய கவர்ன்மெண்டின் நிர்வாக சபையானது ஒரு பிரதம மந்திரியும் ஆறு மந்திரிகளுக்கு அதிகப்படாதவர்களும் அடங்கிய

த்தாக இருக்க வேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். பல சமூகங்களுக்கும் பிரதி நிதித்துவம் கொடுப்பதற்காக மந்திரிகளின் தொகையைப் பெருக்கவேண்டுமென்ற மனோபாவம் ஏற்படலாம். இதை நாங்கள் ஒப்புக்கொள்ளமுடியாது. மாகாணங்களுக்கு சுய ஆட்சியைக் கொடுத்துவிடவேண்டுமென்று நாங்கள் ஏற்பாடு செய்திருப்பதால், மத்திய கவர்ன்மெண்டில் 7 மந்திரிகள் போதும். நிர்வாக சபையானது சட்டசபைக்குக் கூட்டுப் பொறுப்புடையதாக இருக்கவேண்டும்.

மாகாணங்களில் ஒரு பிரதம மந்திரியும் நான்கு மந்திரிகளுமாக ஐந்து மந்திரிகள் இருக்கவேண்டுமென்று நாங்கள் யோசனை சொல்லியிருக்கிறோம்.

குடியேற்ற நாடுகளில் மத்திய கவர்ன்மெண்டின் நிர்வாகிகளுக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளின் நிர்வாகிகளுக்கும் இருந்துவரும் அதிகாரங்களே இங்கும் இருதாரத்தினருக்கும் இருந்துவரவேண்டும்.

## நீதி பரிபாலனம்.

ஹைகோர்ட்டுகளைத் தவிர சுப்ரீம் கோர்ட்டு ஒன்று இருக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். நாங்கள் குறிப்பிட்டுள்ள சில நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருந்தாலன்றி சாதாரணமாக வேறு எந்த அப்பீலும் சபையுடன் கூடிய அரசருக்குப் போகக்கூடாதென்று நாங்கள் யோசனை சொல்லுகிறோம்.

## சுப்ரீம் கோர்ட்டு.

சுப்ரீம் கோர்ட்டின் அசல் அதிகார எல்லைக்குள் வரும் விபாஜ்யங்களின் விவரங்களைக் கவனிக்கும்படி நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம். சமராஜ்ய கவர்ன்மெண்டுக்கும் சுதேச சமஸ்தானங்களுக்கும் உடம்படிக்கைகள், ஒப்பந்தங்கள், சன்னதுகள் முதலியவைகள் சம்பந்தமாக ஏற்படும் தகராறுகள் சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரலால் சம்பந்தப்பட்ட சுதேச சமஸ்தானத்தின் சம்மதத்துடன் முக்கியமாக இந்த சுப்ரீம் கோர்ட்டின் முடிவுக்கு அனுப்பப்படும்.

## வரவு செலவு.

தேசத்தின் வருமானங்களை மத்திய கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் பிரிவினை செய்வதும், தேசப் பாது காப்பு, கல்வி, இதர முக்கியமான விஷயங்கள் இவைகளுக்காகப்பணம் ஒதுக்கி வைப்பதும் கஷ்டமான விஷயங்கள். இவைகள் சம்பந்த மாக விசேஷ கவனம் செலுத்தவேண்டி யிருக்கும்.

## விசாரணைக் கமிஷன்

சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்பட்டவுடன் அடியிற்கண்ட விஷ யங்களைப் பற்றி விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்:-

1. மத்திய கவர்ன்மெண்டுக்கு எந்தெந்த வருமான இனங்க ளையும், மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு எந்தெந்த வருமான இனங் களையும் பிரித்துக் கொடுப்பதென்பது ;

2. மத்திய கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுக ளுக்கும் பண விஷயத்தில் எவ்வித சம்பந்த மிருந்துவர வேண்டு மென்பது;

இந்தச் சிபார்சை செய்வதில் தென்னாப்பிரிக்கா யூனியன் கவர்ன்மெண்டு சட்டத்தின் 118-வது பிரிவே தகுந்த ஏற்பாடென்று நினைத்து அதைப் பின்பற்றி யிருக்கிறோம்.

(அ) கடற்படை, கப்பற்படை, ஆகாயப்படை இவைகளுக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களைப் பயிற்சி செய்விக்கும் விஷயத்தை யும், இந்தப் பயிற்சியைக்கொடுப்பதற்காக பாடசாலைகளையும் கலாசாலை களையும் ஏற்படுத்துவதையும் பரிசீலனை செய்வதற்காக ஒரு விசே ஷக் கமிட்டியை நியமிக்கும் வேலையையும்;

(ஆ) பொதுப்படையாக ஆரம்பக் கல்வியை ஏற்படுத்துவதற் காகவும், பிற் போக்கான நிலைமையிலிருந்து வரும் வகுப்பினருக்கு விசேஷக் கல்வி வசதிகள் செய்து கொடுப்பதன் சம்பந்தமாகவும் விசாரணை செய்து ரிபோர்ட்டு செய்வதற்காக மற்றொரு கமிட்டியை நியமிக்கும் வேலையையும்;

(இ) தனக்கு யுக்தமாகத் தோன்றுகிற வேறு கமிட்டிகளை நியமிக்கும் வேலையையும்; இந்தக் கமிஷனுக்கு நாங்கள் கொடுக்கிறோம்.

நிபுணர்களடங்கியதாக இருக்கக்கூடிய இந்தக் கமிட்டிகளின் உதவியின்றி இந்தக் கமிஷனானது எல்லா விவரங்களைப்பற்றியும் விரிவாக ரிபோர்ட்டு செய்ய முடியாது.

## ஸிவில் ஸர்விஸ்.

சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்பட்டதும், ஒரு பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமிக்கப்படவேண்டு மென்று நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம்.

சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்பட்டதும் முதன்மையாக அது சர்க்கார் உத்தியோக இலாகாக்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும். இந்தியாவானது பரம ஏழ்மையான தேசமாக இருந்தும் இங்கு நிர்வாகம் தலை கனத்ததாக இருக்கிற தென்பதும், உலகில் வேறெந்த தேசத்திலும் கொடுக்கப்படுவதைவிட அதிகமாக இங்கு உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிற தென்பதும் பிரசித்தம். தேசப் பாதுகாப்பு, கல்வி, தொழில்கள், சுகாதாரம் முதலிய பல காரியங்களுக்கு எவ்விதம் பணத்தைக்கண்டுபிடிப்பதென்பது இந்தக் குடியேற்ற நாட்டு கவர்ன்மெண்டின் முதல் ஜோலியாக விருக்கும். ஏராளமான சம்பளம் பெறும் ஸிவில், ராணுவ உத்தியோகஸ்தர்களை நாம் வைத்திருக்க முடியாது. தேசத்தை அபிவிருத்தி செய்வதற்காக தலைகனத்ததாக விருந்துவரும் நிர்வாகச் செலவைக் குறைக்க வழி தேடவேண்டும். நமது உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளத்தைக் கொடுப்பதை ஜனங்களும், முக்கியமாகப் படித்தவர்களும் பலமாக ஆக்ஷேபித்து வந்திருக்கிறார்கள். இதற்குப் பதிலாக லீ கமிஷன்தான் நமக்குக் கிடைத்தது. இந்தியர்களின் ஏகோபித்த எதிர்ப்பை லக்ஷியம் செய்யாமல் இந்தக் கமிஷனை நியமித்தார்கள். இந்தியா சட்ட சபையின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக இதனுடைய சிபார்சுகளை ஒப்புக்கொண்டார்கள். எந்தெந்த மூலாதாரங்களிலிருந்து எந்தெந்த வழிகளில் உத்தியோகங்களுக்கு நபர்களைப் பொறுக்க வேண்டு மென்பதையும், அவர்களுக்குக் கொடுபட வேண்டிய சம்பளம், உம்பளம், பென்ஷன், அலவுன்ஸ் முதலிய விஷ

யங்களையும் புதிய நிலைமைக்குத் தகுந்த வழியில் மாற்றுவதற்காகப் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்காக ஒரு ஸ்பெஷல் பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். உத்தியோக வர்க்கங்களைப் புனருத்தாரணம் செய்த பிறகு இந்தக் கமிஷன் கலைந்துபோய் விடவேண்டும். ஆனால் சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படும் காலத்தில் உத்தியோகங்களி லிருந்து வருகிறவர்கள் வேலையிலேயே இருப்பதாயினும், விலகி விடுவதாயினும், அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்புகளை நாங்கள் ஏற்படுத்தி யிருக்கிறோம். சமராஜ்ய கவர்ன்மெண்டு அனுஷ்டானத்திற்கு வரும் தேதி முதல் அவர்களுக்கு மூன்று வருஷ கெடு கொடுத்திருக்கிறோம். அந்த கெடுவுக்குள் அவர்கள் எந்தக்காலத்தில் விலகிக்கொண்டாலும் முதலிலேயே விலகிக் கொள்ளுகிறவர்கள் எந்தெந்த நிபந்தனைகளின் பேரில் விலகிக் கொள்ளுகிறார்களோ அந்த நிபந்தனைகளின் பேரில் அவர்களும் விலகிக் கொள்ளலாம்.

## ராணுவ உத்தியோக வர்க்கங்கள்.

இந்தியாவின் ராணுவம், கடற்படை, ராயல் இந்தியன் கடற்படை, ஆகாயப்படை இவைகளில் இந்தச் சட்டம் அமுலுக்கு வருங் காலத்தில் வேலையிலிருந்து வருகிறவர்களுக்கும் மேற்கண்ட பாதுகாப்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.

## தேசப் பாதுகாப்பு.

தேசப் பாதுகாப்பு சம்பந்தமாக அடியிற்கண்டவர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று நாங்கள் யோசனை சொல்லியிருக்கிறோம்:—

(1) பிரதம மந்திரி

(2) பாதுகாப்பு மந்திரி

(3) அந்நிய நாட்டு மந்திரி

(4) சேனாதிபதி

(5) ஆகாயப் படைத்தலைவர்

(6) கடற்படைத் தலைவர்

(7) ராணுவத்தின் பொதுத் தலைவர்

(8—9) வேறு இரண்டு நிபுணர்கள்.

இந்தக் கமிட்டியார் எத்தகைய கொள்கைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு யோசனை சொல்வதுடன், தேசப்பாதுகாப்புக்கு இடையூறன்றி எந்தெந்த வழிகளில் செலவைக் குறைப்பது சாத்தியமென்றும் யோசனை சொல்லவேண்டும். இந்தக் கமிட்டியின் சிபார்சுகளை அனுசரித்து செலவு திட்டத்தைத் தயாரிகக வேண்டுமென்றும் நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். ராணுவம் திறமையாக இருந்து வருவதற்கும் சரியாக நிர்வகிக்கப்படுவதற்கும் இந்த ஏற்பாடுகள் போதுமானவை யென்று நாங்கள் நினைக்கிறோம். எங்களுடைய இதர சிபார்சுகளை 7-வது அத்தியாயத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

அத்தியாயம் VII.

## சிபார்சுகள்.

சட்டசபையில் விவாதத்துக்குக் வரக்கூடியபடி ஒரு மசோதாவாக இந்த அரசியல் அமைப்பைத் தயாரிக்க நாங்கள் முயற்சி செய்யவேயில்லை. எங்கள் சிபார்சுகள் மொத்தத்தில் ஒரு மசோதாவின் பிரிவுகளைப்போல் அமைந்திருக்கின்றன. அப்படிப் பிரிவுகளாக அவைகளைக் கொள்ளவுங்கூடாது. சம்பந்தப்பட்ட கொள்கைகளைக் குறிப்பிடவே அவைகள் எழுதப்பட்டிருக்கின்றன. பார்லிமெண்டின் ராயஸக்காரர்கள் இவைகளுக்கு ஒரு உருவளிக்க வேண்டும். சம்பிரதாயமான பிரிவுகளைச் சேர்க்கவேண்டும். சில பிரிவுகளின் பலனாக ஏற்படக்கூடிய விஷயங்களையும், நாங்கள் விட்டுள்ள சில விவரங்களையும் சேர்க்கவேண்டும். எங்களிடம் கொடுக்கப்பட்ட சில நகல் திட்டங்கள் அரசியல் அமைப்பில் செய்ய வேண்டிய சில அதிகார மாறுதல்களைப் பற்றிக் குறிப்பிட்டன. இவை மிக முக்கியமானவையாகும், முடிவாக அரசியல் திட்டத்துக்குத் தக்க உருக் கொடுப்பவர்களே இவற்றை அதிகமாகக் கவனிக்கவேண்டும். சில விஷயங்களில் நாங்கள் மற்ற விஷயங்களைவிட மிக விரிவாக ஆராய்ந்து எழுதியிருக்கிறோம். அது எதிர்பாராத விதமாக ஏற்பட்டதேயாகும். குடியேற்ற நாடுகளின் அரசியல் திட்டங்களையும், டாக்டர் பெஸண்டு மசோதாவையும், ஸ்ரீமான்கள் விஜயராகவாச்சாரியார், ஸ்ரீனிவாச ஐயங்கார், ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஆகியவர்கள் தயாரித்த நகல் திட்டங்களையும், சுயேச்சைத் தொழிற்கட்சிக் கமிட்டி தயாரித்த திட்டத்தையும், இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தையும் துணையாகக்கொண்டே நாங்கள் இந்த திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். பல விடங்களில் வார்த்தைகளை மாற்றவேண்டியிருந்தது. சில விடங்களில் முக்கிய மாறுதல்களைச் செய்யவேண்டியிருந்தது. நாங்கள் பூர்வ பீடிகையையும் எழுதாமல் விட்டுவிட்டோம். "பிரஜை" என்ற வார்த்தைக்குத் தவிர மற்றவைக்கு வியாக்கியானமும் கூறவில்லை. அந்த வியாக்கியானமும் சர்வகட்சி மகாநாட்டில் முதலில்

நியமிக்கப்பட்ட கமிட்டியாலேயே முடிவு செய்யப்பட்டுவிட்டது. இனி சிபார்சுகளைத் தக்க தலைப்புகளுடன் கீழே குறிப்பிடுவோம்.

## இந்தியாவின் அரசியல் அந்தஸ்து.

1. பிரிட்டிஷ் சமாராஜ்யம் எனப்படும் தேசங்களின் கோஷ்டியில் கானடா, ஆஸ்திரேலியா, நியூஸீலந்து, தென்னாப்பிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளைப்போல் இந்தியாவும் அரசியல் அந்தஸ்துள்ளதாக இருக்கவேண்டும். இந்தியாவின் நல்லாட்சிக்கும், அமைதியும் சமாதானமும் நிலவும்படி செய்வதற்கும் ஏற்பாடுசெய்ய அதிகாரமுள்ள ஒரு பார்லிமெண்டு இருக்கவேண்டும். அந்தப் பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரியான ஒரு நிர்வாக சபையிருக்க வேண்டும். இவ்வரசியல் "இந்திய சமாராஜ்யம்" என வழங்கப்பட வேண்டும்.

2. இந்தச் சட்டமும் இந்திய சமாராஜ்யப் பார்லிமெண்டால் இயற்றப்படும் சட்டங்களும் இந்தியாவின் மத்திய சட்டசபைகளின் சட்டங்களிலும், மாகாண சட்ட சபைகளின் சட்டங்களிலும், ப்ரிட்டிஷ் இந்தியாவுக்குப் பிரயோக மாகும்படி ப்ரிட்டிஷ் பார்லிமெண்டு இயற்றி யிருக்கக் கூடிய எந்தச் சட்டத்திலும் வேறென்ன சொல்லப் பட்டிருப்பினும், ஒவ்வொரு மாகாண வாசிகளையும் கோர்ட்டுகளையும் சமாராஜ்யத்தின் ஒவ்வொரு பாகத்தையும் கட்டுப்படுத்தும். இந்திய சமாராஜ்யத்தின் சட்டங்கள் இந்தியாவின் அதிகாரத்திற் குட்பட்ட கடல்களிலும் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

## பிரஜை.

3. இந்திய சமாராஜ்ய எல்லையில் பிறந்து வேறு எந்த நாட்டிலும் பிரஜாவுரிமை பெறாத ஒவ்வொருவரையும் அல்லது இங்கு பிறந்து பிரஜாவுரிமை பெற்று மற்ற எந்தநாட்டிலும் பிரஜா உரிமை உடையவராக இராத தகப்பனைப்பெற்ற ஒவ்வொருவரையும் குறிக்கவே இந்த திட்டத்தில் ஆங்காங்கு 'பிரஜை' என்ற வார்த்தை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள சட்டப்படி இந்திய சமராஜ்யத்தில் பிரஜாவுரிமை பெற்றிருப்பவர்களும் இச்சட்டப்படி பிரஜைகள் ஆவர்.

அந்நிய நாட்டின் பிரஜை ஒருவர் சட்டப்படி அந்நாட்டுப் பிரஜா வுரிமையைத் துறந்து விட்டாலொழிய இந்திய சமராஜ்பத்தின் பிர ஜையாக விருக்க முடியாது.

## ஜீவாதாரமான உரிமைகள்.*

4. (1) கவர்ன்மெண்டுக்குள்ள எல்லாவல்லமைகளும், சட்ட மியற்றவும், நிர்வாகத்தை நடத்தவும், நீதி பரிபாலனத்தை நடத்த வும் வேண்டிய அதிகாரங்களும் ஜனங்களிடமிருந்தே பெறப்பட்டதா கும். இந்திய சமராஜ்பத்தில் இந்த திட்டப்படி ஏற்படும் ஸ்தாப னங்கள் மூலம் அந்த அதிகாரங்களைச் செலுத்த வேண்டும்.

(2) சட்டப்படியல்லாது எவருடைய சுதந்தரத்தையும் பிடுங்கி விடக் கூடாது, எவருடைய வீட்டிற்குள்ளும் நுழையக்கூடாது, எவருடைய சொத்தையோ வாசஸ்தலத்தையோ பறிமுதல் செய்யக் கூடாது.

(3) பொதுஜன அமைதியையும் ஸன்மார்க்கத்தையும் கவர்ன் மெண்டு பாதுகாக்க வேண்டியதற்குட்பட்டு, ஒவ்வொருவரும் அவ ரவர்களின் மத அநுஷ்டானங்களைச் செய்யவும் அவரவர்களின் மனச் சாக்ஷிப்படி நடந்து கொள்ளவும் உரிமையுள்ளவர் என்று இதன் மூலம் உறுதி கூறப்படுகிறது.

(4) பொதுஜன அமைதியையும் ஸன்மார்க்கத்தையும் கவர்ன் மெண்டு பாதுகாக்க வேண்டியதற்குட்பட்டு, தத்தம் அபிப்பிராயத் தை வெளியிடவும், ஆயுதமின்றி சாமாதானத்துடன் கூட்டம் கூட வும், சங்கம் ஸ்தாபித்துக் கொள்ளவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டென்று உறுதி கூறப்படுகிறது.

(5) கவர்ன்மெண்டு ஆதரவு பெற்றோ கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டோ வரும் கல்விச் சாலைகளில் ஜாதி மதபேதமின்றி யாவரும் சேர்த்துக் கொள்ளப்பட பாத்ய முடையவர்கள். இலவச ஆரம்பக் கல்வி எல்லாப் பிரஜைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

* ஜீவாதாரமான உரிமைகளுடன் மற்றொரு பிரிவை மகாநாடு சேர்த்திருக் கிறது. இது தனிப்பட்டவர் சொத்துக்களைப் பற்றியது. 17-வது உட் பிரி வில் குடியாத்தியம் நிலைத்திருக்கும்படி செய்யும் வாசகங்கள் சேர்க்கப்பட்டிருக் கின்றன. மகா நாட்டின் 10, 11-வது தீர்மானங்களைப் பார்க்கவும்.

(6) சட்டம் எல்லாப் பிரஜைகளையும் சமமாக பாவிக்கவேண்டும். எல்லோரும் சரி சமமானவர்களே.

(7) தண்டனை விஷயத்திலோ நடவடிக்கை விஷயங்களிலோ வித்தியாசம் காட்டக்கூடிய சட்டமெதுவும் இருக்கக்கூடாது.

(8) ஒரு குற்றம் செய்யப்பட்ட காலத்தில் சட்டப்படி அதற்குத் தண்டனை விதிக்கக் கூடாதானால், அதற்காகப் பிறகு தண்டிக்கப்படக்கூடாது.

(9) துன்புறுத்தக்கூடிய தண்டனை அல்லது சரீர ஹிம்சையான தண்டனை சட்ட சம்மதமானதல்ல.

(10) அடைத்து வைக்கப்பட் டிருக்கிற ஒருவனைக் கோர்ட்டில் ஆஜர் செய்யும்படி உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள எவருக்கும் பாத்ய முண்டு. யுத்த காலத்திலோ கலக காலத்திலோ மத்திய சட்டசபை சட்டமியற்றி அந்த உரிமையை நிறுத்திவிடலாம். ஆனால் அந்த சமயத்தில் சபைகூடி யிராவிட்டால் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் அந்த உரிமையைத் தடைப்படுத்தி விட்டு சபை கூடியவுடனே அதை அறிவித்து அதற்குத் தக்க சட்டம்செய்வித்துக் கொள்ளவேண்டும்.

(11) இந்திய சமராஜ்யத்திலோ அதிலடங்கிய மாகாணங்களிலோ கவர்ன்மெண்டின் மதம் என ஒன்றும் பாவிக்கப்படக் கூடாது. நேர்முகமாகவோ மறைமுகமாகவோ கவர்ன்மெண்டு எந்த மதக் கொள்கைக்கும் சலுகை காட்டக்கூடாது. ஒரு மதக் கொள்கையைப் பழிக்கத்தக்க காரியமும் செய்யக்கூடாது.

(12) கவர்ன்மெண்டு உதவியாலும் பொதுப் பணத்தாலும் நடைபெறும் எந்தப் பாடசாலையும் ஒரு குறிப்பிட்ட மதக்கல்வியைக் கற்கும்படி ஒருவரையும் கட்டாயப் படுத்தக் கூடாது.

(13) ஒரு குறிப்பிட்ட மதத்தைச்சேர்ந்தவர் என்பதற்காகவோ ஒருகுறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர் என்பதற்காகவோ ஒருவருக்கும்கவர்ன்மெண்டு உத்தியோகத்தைப் பெறும் விஷயத்திலோ ஒரு சவுரவத்தை அடையும் விஷயத்திலோ ஒரு வியாபாரத்தை நடத்தும் விஷயத்திலோ ஒரு அசவுகரியமும் இருக்கக்கூடாது.

(14) பொது ரஸ்தாக்களை உபயோகிக்கவும் பொதுக்கிணறுகளை உபயோகிக்கவும் பொதுஜன சம்பந்தமான மற்ற விடங்களில் செல்லவும் எல்லாப் பிரஜைகளுக்கும் சம உரிமையுண்டு.

(15) தொழிலாளர் அபிவிருத்திக்கும் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யவும் பலர் சேரவும் ஏகோபித்துக் காரியங்கள் செய்யவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இந்த சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவோ தடுக்கவோ செய்யப்படும் ஒப்பந்தங்களும் விதிகளும் சட்டப்படி செல்லத் தக்கவை யல்ல.

(16) ஊழியம் செய்ய ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை மீறி நடப்பதும் அதற்கு உடந்தையாகவிருப்பதும் கிரிமினல் குற்றமாகா.

(17) எல்லாப் பிரஜைகளும் சுகத்துடனிருக்கவும், அவரவர் வேலையைச் செய்வதற்கான தகுதி பெறவும், வேலை செய்யும் ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் ஜீவாதாரத்துக்கான சம்பளம் பெறவும், கர்ப்ப ஸ்திரீகளைக் காக்கவும், குழந்தைகளை சம்ரக்ஷிக்கவும், தள்ளாத வயதினரைக் காக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டமேற்படாமல் நிவர்த்திக்கவும் பார்லிமெண்டு தக்க சட்டங்களை இயற்ற வேண்டும்.*

(18) ஆயுதம் வைத்துக்கொள்ளுவது சம்பந்தமாக ஏற்படுத்தப்படும் சட்ட நிபந்தனைகளுக் கேற்ப ஒவ்வொருவருக்கும் ஆயுதம் வைத்துக் கொள்ள உரிமையுண்டு.

(19) ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிரஜைகள் என்ற முறையில் சம உரிமையுண்டு.

குறிப்பு:–4-வது உட் பிரிவில் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், சீக்கியர்களுக்கு கிருபான்களை எடுத்துச்சொல்ல உரிமையுண்டு.

## பார்லிமெண்டு.

5. இந்திய சமராஜ்யத்தில் சட்டஞ் செய்யும் உரிமை பார்லிமெண்டு வசமிருக்கவேண்டும். அதில் அரசர், செனேட், பிரதிநிதிகளின் சபை அடங்கியிருக்க வேண்டும். மொத்தத்தில் பார்லிமெண்டு என அழைக்கப்படவேண்டும்.

6. கவர்னர் ஜெனரல் அரசரால் நியமிக்கப்பட வேண்டும். இந்த அரசியல் திட்டத்துக்குட்பட்டு அரசர் அவருக்கு அளிக்கும்

* விவசாயக் குடிகளுக்கு குடிபாத்தியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மகாநாட்டின் 11-வது தீர்மானத்தைப் பார்க்க.

அதிகாரத்தையும் வேலைகளையும் அரசருடைய சம்மதமிருக்கும் வரையில் இந்த சமராஜ்பத்தில் கவர்னர் ஜெனரல் நடத்திவரலாம்.

7. (அ) இந்தியாவின் வருமானத்திலிருந்து கவர்னர் ஜெனரலின் சம்பளத்திற்காக வருஷாந்தரம் பின்னால் காட்டியுள்ள விகிதப்படி அரசருக்கு ஒரு தொகை கொடுக்கப்படவேண்டும். பார்லிமெண்டு வேறுவிதமாக ஏற்பாடு செய்யும்வரை அத்தொகை கொடுக்கப்பட்டு வரவேண்டும்.

(ஆ) கவர்னர் ஜெனரல் உத்தியோகத்திலிருக்கையில் அவரது சம்பளம் மாற்றப்படக்கூடாது.

8 செனேட்டில் 200 மெம்பர்களிருக்க வேண்டும். அவர்கள் மாகாண சட்ட சபைகளால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாகாணமும் ஒரு அளவுக்குக்குறையாமல் ஜனத்தொகைக்கேற்ப பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க வேண்டும். மாற்று ஒத்தை ஓட்டுகளால் (ஹேர்முறை) தேர்தல் நடைபெற வேண்டும்.

9. ஜனப்பிரதிநிதி சபையில் 500 பேரிருக்க வேண்டும். சட்டப்படி பிரிக்கப்படும் ஓட்டுத்தொகுதிகளால் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண்கள் அனைவரும் (சட்டப்படி தடுக்கப் பட்டவர்கள் தவிரப் பிறர்) ஓட் செய்ய பாத்ய முடையவராக இருக்கவேண்டும். அவசியமானால் பார்லிமெண்டு அவ்வப்போது அங்கத்தினர்களின் தொகையை உயர்த்திக் கொள்ளலாம்.

10. (1) ஜனப்பிரதிநிதி சபை ஐந்து வருஷ காலமிருக்கும். செனேட் சபை ஏழு வருஷ காலமிருக்கும். ஆனால் இரண்டு சபைகளில் எதுவும் இடையில் கவர்னர் ஜெனரலால் கலைக்கப்படலாம். விசேஷ சந்தர்ப்பங்களை யொட்டி கவர்னர் ஜெனரலுக்கு அவசியமெனத் தோன்றினால் அவர் இச்சபைகளின் காலவரையறையை உயர்த்தலாம். கவர்னர் ஜெனரல் சபையைக் கலைத்தபின் ஆறுமாதத்துக்கு அதிகப்படாமல் ஒரு தேதி குறிப்பிட்டு அடுத்த கூட்டம் கூடும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

(2) இச்சபைகளின் கூட்டம் கூடும் இடத்தையும் காலத்தையும் அவ்வப்போது கவர்னர் ஜெனரல் குறிப்பிட வேண்

டும். அவ்வப்போது அறிக்கை மூலமோ வேறுவழியிலோ சபையின் கூட்டத்தை முடிக்கவும் அவருக்கு உரிமை உண்டு.

(3) இந்தச் சபைகளின் கூட்டத்தில் தலைமை வகிப்பவர் சபைகளின் கூட்டத்தை ஒத்திவைக்கலாம்.

(4) 2 சபைகளிலும்(ஜனப்பிரதிநிதிசபை, செனேட் சபை) எல்லா விஷயங்களும், அக்கிராசனர் நீங்கலாகப் பிரசன்னமாக இருக்கும் அங்கத்தினர்களின் பெரும்பான்மையான வாக்கு (வோட்டு)ப்படி முடிவு செய்யப்படும். சரிசமமான வாக்குகள் கிடைக்கின்ற சமயங்களில் தமது வாக்கைப் பிரயோகிக்க அக்கிராசனருக்கு உரிமை உண்டு.

(5) 2 சபைகளிலும் ஏதேனும் காலிஸ்தானம் ஏற்பட்டிருந்தால் கூட இவ்விரண்டு சபைகளும் தமக்குரிய அதிகாரங்களை உபயோகிக்க உரிமை பெற்றிருக்கும்.

11. பார்லிமெண்டின் ஒவ்வொரு சபைக்கும் ஒரு அக்கிராசனர் இருப்பார். அவர் சபையின் மெம்பராக இருப்பதுடன் சபையினுல் அக்கிராசனர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவராகவு மிருக்க வேண்டும். ஒவ்வொரு சபைக்கும் ஒரு உப அக்கிராசனரு மிருப்பார். அவரும் சபையின் மெம்பராகவும் சபையினுல் உப அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்டவராகவு மிருக்க வேண்டும்.

12. செனேட் சபைக்கும், ஜனப்பிரதிநிதிச் சபைக்கும், அவற்றின் அங்கத்தினர்களுக்கும் இருக்கவேண்டிய பாத்தியதைகள், விதிவிலக்கு உரிமைகள், அதிகாரங்கள் முதலியன அவ்வப்போது சமராஜ்ய பார்லிமெண்டு செய்யும் சட்டங்களில் நிர்ணயிக்கப்பட்டபடி இருக்கும்.

13. சமராஜ்ய பார்லிமெண்ட் இந்த அரசிய லமைப்புச் சட்டத்தில் கண்ட முறைகளுக்கிணங்க அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றிச் சட்டங்கள் செய்ய அதிகாரம் பெற்றிருக்கும்:—

(அ) மாகாண சட்டசபைகளுக்கு இச்சட்டத்தினுல் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் சம்பந்தப்படாமலிருக்கும் இதர எல்லா விஷயங்கள் சம்பந்தமாக சமராஜ்யத்தின் அமைதி,

ஒழுங்கு, நல்லரசாட்சி இவற்றிற்காகச் சட்டஞ் செய்ய அதிகார முடையது.

(ஆ) இந்தியாவிற்குள்ளாகவேயுள்ள இதர பாகங்களிலும் இந்தியாவிற்கு வெளியிலேயும் இருக்கும் சமராஜ்யப் பிரஜைகள், ஊழியர்கள் இவர்களுக்காகப் பார்லிமெண்ட் சட்டஞ் செய்ய அதிகார முடையது.

(இ) இந்தியப் படைகளிலுள்ள கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், சிப்பாய்கள், ஆகாயவிமானிகள், வேலையாட்கள் இவர்கள் எங்கு சேவை செய்துகொண்டிருந்தபோதிலும் அவர்களுக்காக ராணுவச் சட்டம் அல்லது ஆகாயப் படைச்சட்டம் இவற்றில் கண்டவை நீங்கலான விஷயங்களில் பார்லிமெண்ட் சட்டஞ்செய்ய அதிகாரமுடையது.

(ஈ) இந்திய வியாபாரக் கப்பற்படையிலோ அல்லது இந்தியக் கப்பற்படையிலோ வேலை செய்கின்ற அல்லது சம்பந்தப்பட்டிருக்கின்றவர்களுக்காகச் சட்டஞ் செய்ய அதிகாரமுடையது.

1-வது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டிருக்கும் விஷயத் தொகுதிகளுக்குட்பட்ட சகல விஷயங்களிலும் சட்டஞ்செய்யப் பார்லிமெண்டிற்கு அதிகாரமுண்டு. அதை இந்தச் சட்டத்தில்கண்ட எந்த ஷரத்தும் பாதிக்காது. மேலே இந்த 13-வது பிரிவில் பொதுப்படையாகச் சொல்லப்பட்டிருக்கும் அதிகாரங்களை அந்த ஷெட்யூலில் காணப்பட்டிருக்கும் விஷயத் தொகுதிகள் எவ்விதத்திலும் பாதிக்கமாட்டா. ஆனால், நிச்சயமாகத் தெரிவதற்காகவே ஷெட்யூலில் இன்னின்ன விஷயங்களைப் பற்றிச் சட்டஞ்செய்யப் பார்லிமெண்டிற்கு உரிமை உண்டென்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

14. இந்திய சமஸ்தானங்கள் நீங்கலாக உள்ள அந்நிய நாட்டு விஷயங்களில் பார்லிமெண்டிற்குள்ள அதிகாரமானது சுய ஆட்சி உரிமை வாய்ந்த குடியேற்ற நாடுகள் உபயோகித்து வரும் அதிகாரங்களைப் போன்றே இருந்துவரும்.

15. இந்தியப் பார்லிமெண்டின் 2-சபைகளிலும் காரியங்களைச் செய்ய வேண்டிய நிபதியை நிர்ணயிக்கவும், ஒழுங்கைப் பாதுகாக்கவும், அக்கிராசனரும் உப அக்கிராசனருமில்லாத காலத்தில்

ஜனப் பிரதிநிதி சபையில் யார் யார் அக்கிராசனம் வகிக்கலாமென் பதை நிர்ணயிக்கவும், இச்சட்டத்தின்கீழ் விதிகள் செய்யலாம். சபை நடைபெறுவதற்கு அத்யாவசியமாக எத்தனை மெம்பர்கள் வேண்டுமென்பதை நிர்ணயிக்கவும், விதிகளில் குறிப்பிட்ட எந்த விஷயத்தைப் பற்றியாவது கேட்கப்படும் கேள்விகளையோ அன்றி அவற்றைப் பற்றிய விவாதத்தையோ தடுப்பதற்கும் ஒழுங்குப் படுத்து வதற்கும் விதிகள் ஏற்படுத்தப்படலாம்.

**16.** (i) சமராஜ்ய கவர்ன்மெண்டின் சாதாரணமான வருடாந்தர ஊழியங்களுக்காக வரிப்பணத்தை அல்லது இதர பணங்களைச் செலவு செய்ய எடுத்துக் கொள்ளும் எந்த மசோதாவும் அந்தப் பணத்தைச் செலவு செய்வதைப் பற்றியே பிரஸ்தாபிக்கவேண்டும்.

(ii) வரிகளை விதிக்கும் மசோதாக்கள் வரி விதித்தலைப் பற்றியே பிரஸ்தாபிக்கவேண்டும். அதில் ஏதேனும் வேறுவிஷயங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தால் அது செல்லுபடியுள்ள தாகாது.

(iii) கவர்ன்மெண்டின் கடனைப்பற்றிய மசோதாக்கள் அல்லது வரிப்பணம், இதர பணங்கள் இவற்றைச் செலவு செய்வதற்கான மசோதாக்கள், அல்லது வரி விதிப்பது பற்றிய மசோதாக்கள் இவற்றைநிர்வாக சபை மெம்பரே கொண்டுவரவேண்டும். அதுவும் முதலில் ஜனப்பிரதிநிதி சபையிலேயே கொண்டுவரப்படவேண்டும்.

**17.** 'பணமசோதா' என்றால் அடியிற்கண்ட எல்லா விஷயங்களையுமோ அல்லது அவற்றிலுள்ள ஏதேனுமொரு விஷயத்தையோ பற்றிய பிரிவுகளடங்கிய மசோதா என்றுதான் பொருள்:-வரியை விதித்தல், ரத்து செய்தல், வஜா செய்தல், மாற்றுதல், ஒழுங்குப்படுத்தல்; கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக வரிவிதித்தல், கவர்ன்மெண்ட் வரிப்பணம் அல்லது வருமானங்கள் இவற்றிலிருந்து பணமெடுத்துச்செலவிடவேண்டிய இனங்களுக்காக விதிக்கப்படும் வரிகள், அச் செலவினங்களை ரத்து செய்தல், அவற்றை மாற்றுதல், பொதுப் பணத்தை சப்ளை செய்தல், செலவிடுதல், வசூலித்தல், வைத்துக் கொண்டிருத்தல், செலவிடக்கொடுத்தல் கணக்குப் பரிசோதனை செய்தல், கடன் வாங்குதல், கடனைத் திருப்பிக்கொடுத்தல் இவை சம்பந்தமாக ஏற்படக்கூடிய சில்லரை விஷயங்கள். இங்கு "வரி"

"பொதுப்பணம்" "கடன்" என்று குறிப்பிட்டுள்ள வார்த்தைகளில் மாகாண அதிகாரிகளாலோ அல்லது ஸ்தாபனங்களாலோ மாகாண காரியங்களுக்காக விதிக்கப்படும் வரி, வசூலிக்கப்படும் பணம், அல்லது சேர்க்கப்படும் கடன் முதலியன சேர்ந்திருக்கவில்லை.

18. ஒரு மசோதா பணமசோதாவா இல்லையா என்பதை ஜனப்பிரதிநிதி சபையின் அக்கிராசனர் நிர்ணயிக்கவேண்டும்.

19. ஜனப்பிரதிநிதி சபையால் நிறைவேற்றப்படும் பணமசோதாவானது செனேட்சபைக்கு அதன் சிபார்சுக்காக அனுப்பப் படவேண்டும். அது ஜனப்பிரதிநிதிசபையிலிருந்து அனுப்பப்பட்ட தினத்திலிருந்து......தினங்களுக்குள் திருப்பியனுப்பப்படவேண்டும். ஜனப்பிரதிநிதி சபை செனேட் சபையின் எல்லா சிபார்சுகளையுமோ அல்லது அவற்றில் சிலவற்றையோ அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். இம்மாதிரி ஜனப்பிரதிநிதி சபையால் நிறைவேற்றப்பட்ட மசோதா 2 சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

20 (i) இந்தச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு பார்லிமெண்டின் இரு சபைகளில் ஏதேனுமொன்றில் ஒரு மசோதா கொண்டு வரப்படலாம். முதலில் எந்த சபையில் அது கொண்டுவரப்பட்டதோ அந்த சபையில் அம்மசோதா நிறைவேறிய பிற்கு அது இன்னொருசபையில் கொண்டுவரப்படவேண்டும்.

(ii) இந்தச் சட்டத்தின் கீழ் வேறு விதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, இரண்டு சபைகளாலும் திருத்தப் பிரேரணைகளின்றியோ, அல்லது இரண்டு சபைகளாலும் ஒப்புக்கொள்ளப்படும் திருத்தப் பிரேரணைகளுடனோ ஒப்புக்கொள்ளப்பட்ட மசோதாவே பார்லிமெண்டினல் நிறைவேற்றப்பட்ட மசோதாவாகக் கருதப்படும்.

(iii) ஜனப்பிரதிநிதி சபையால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவானது அது நிறைவேறிய 6 மாத காலத்திற்குள் திருத்தங்களில்லாமலோ, அல்லது 2 சபைகளும் ஒத்துக்கொள்ளக்கூடிய திருத்தங்களுடனோ செனேட் சபையால் அங்கீகரிக்கப்படாவிட்டால், இவ்விரு சபைகளில் ஏதேனும் ஒன்று இவ்விஷயத்தை 2 சபைகளின் கலப்புக் கூட்டத்தில் ஆலோசிக்க வேண்டுமென்று தீர்மானிப்பின் இம்மசோதாவை 2 சபை அங்கத்தினருமடங்கிய கலப்புக் கூட்டத்தில் முடிவு

செய்யும்படி கவர்னர் ஜெனரல் அனுப்பவேண்டும். இக்கலப்புக் கூட்டத்தில் பிரசன்னமாக இருக்கும் மெம்பர்கள்ஜனப்பிரதிநிதி சபையில் கடைசியாக நிறைவேறியபடியுள்ள மசோதாவைப்பற்றியும், அதற்கு ஏதேனும் ஒரு சபையில் செய்யப்பட்டுமற்றொருசபையினால் ஏற்றுக்கொள்ளப் படாமலிருக்கும் திருத்தப்பிரேரணை யிருந்தால் அதைப்பற்றியும் விவாதிக்கலாம். அவர்கள் சேர்ந்தும் வாக்களிக்கலாம். இக்கூட்டுக் கூட்டத்தில் பெரும்பான்மையோரது வாக்குப்படி ஊர்ஜிதம் செய்யப்படும் திருத்தப்பிரேரணைகள் பார்லிமெண்டின் 2 சபைகளினாலும் நிறைவேற்றப்பட்டவைகளாகக் கருதப்படும்.

21. (i) இருசபைகளினாலும் மசோதா நிறைவேற்றப்பட்டவுடன், அல்லது நிறைவேற்றப் பட்டதாகக் கருதப்பட்டவுடன், அது அரசரின் பெயரால் அரசரது சம்மதத்தைப் பெற்றதைத் தெரிவிக்கும்படி செய்யப்படுவதற்காக கவர்னர் ஜெனராலுக்கு அனுப்பப்படவேண்டும். கவர்னர் ஜெனரல் அரசரது சம்மதத்தை அதற்கு அளிக்கலாம்; அல்லது அதற்குச் சம்மதமே அளிக்காமலிருக்கலாம்; அல்லது அரசருக்கு இஷ்டப்பட்டபோது அதற்குச் சம்மத மளிக்கும்படி அதனை ஒதுக்கிவைத்து விடலாம்.

(ii) பார்லிமெண்டின் 2 சபைகளினாலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு அரசருடைய பெயரால் கவர்னர் ஜெனரல் தமது சம்மதத்தைத் தெரிவிக்காதவரை அது சட்டமானதாகக் கருதப்படமாட்டாது. அரசருடைய அங்கீகாரத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட மசோதாவானது, அரசர் ஒவ்வொரு சபைக்கும் பிரசங்க மூலமோ அல்லது செய்தி மூலமோ தமது சம்மதத்தைத் தெரிவிக்கும்வரையிலோ அல்லது சபையுடன்கூடிய அரசரது சம்மதத்தைப் பெற்று விட்டதாகப் பிரகடனம் செய்யப்படும் வரையிலோ சட்டமானதாகக் கருதப்படமாட்டாது.

ஆனால் கவர்னர் ஜெனரல் அரசரது பிரதிநிதி என்ற ஹோதாவில் தமது சம்மதத்தைப் பெறுவதற்காக அனுப்பப்பட்ட மசோதாவையோ அல்லது அரசர் அங்கீகாரத்திற்காகத் தம்மால் ஒதுக்கி வைக்கப்பட்ட மசோதாவையோ தம்மால் சிபார்சு செய்யப்படும் திருத்தங்களுடன் புனராலோசனை செய்ய வேண்டுமென்று பார்லிமெண்டுக்குத் திருப்பி அனுப்பலாம்.

(iii) இம்மாதிரி எந்த மசோதாவேனும் திருப்பி யனுப்பப்பட்டால், கவர்னர் ஜெனரல் சிபார்சு செய்த திருத்தங்களுடன் அது

பார்லிமெண்டினால் ஆலோசிக்கப்பட வேண்டும். அதனைத் திருத்தங்களுடனே அல்லது திருத்தங்களில்லாமலோ பார்லிமெண்ட் ஊர்ஜிதம் செய்யலாம். ஊர்ஜிதம் செய்த பிறகு அரசரது பெயரால் அரசரது சம்மதத்தை யளிக்கும்படி அதை கவர்னர் ஜெனரலுக்கு மீண்டும் அனுப்ப வேண்டும்.

## சமராஜ்ய கவர்ன்மெண்டு நிர்வாகிகள்.

22 சமராஜ்ய நிர்வாக அதிகாரம் அரசரிடமிருக்கும். அரசருடைய பிரதிநிதி என்ற ஹோதாவில் கவர்னர் ஜெனரல் இந்த நிர்வாக அதிகாரத்தை இந்த சட்டத்திற்கண்ட ஏற்பாடுகளுக்கும் சமராஜ்யத்தின் சட்டங்களுக்கு முட்பட்டு நிர்வாக சபையின் யோசனைகளுக்கிணங்க செலுத்தி வரவேண்டும்.

23 (அ) பிரதம மந்திரியையும் 6-பேருக்கு அதிகப்படாத சமராஜ்ய மந்திரிகளையும் கொண்ட ஒரு நிர்வாக சபை இருந்துவர வேண்டும். பார்லிமெண்டு வேண்டுமானால் மந்திரிகளின் தொகையை உயர்த்தவோ அல்லது குறைக்கவோ செய்யலாம்.

(ஆ) பிரதம மந்திரியைக் கவர்னர்ஜெனரலே நியமிக்கவேண்டும். பிரதம மந்திரியின் ஆலோசனைக்கிணங்க இதரமந்திரிகளையும் அவரே நியமிக்கவேண்டும்.

(இ) நிர்வாக சபையின் அங்கத்தினர்களால் நிர்வகிக்கப்படும் சமராஜ்ய இலாகாக்களைப்பற்றிய எல்லா விஷயங்களிலும் சட்ட சபைக்கு நிர்வாக சபை ஜவாப்தாரியாக இருக்கும்.

24. பார்லிமெண்ட் வேறு விதமாக உத்தரவிட்டிருந்தாலொழிய, சமராஜ்ய நிர்வாக கவர்ன்மெண்டின் இதர உத்தியோகஸ்தர்கள் எல்லோரையும் நியமிக்கவும் வேலையைவிட்டு நீக்கவும் கவர்னர் ஜெனரலுக்கே அதிகாரமிருக்கும். ஆனால் தமது நியமன அதிகாரங்களைச் சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் வேறு எவருக்காவது மாற்றிக்கொடுக்கலாம். இந்த நியமன அதிகாரம் சமராஜ்யத்தின் சட்டத்தின் மூலம் வேறு எந்த அதிகாரிக்காவது கொடுக்கப்படலாம்.

25. ராஜப்பிரதிநிதி என்ற ஹோதாவில் கவர்னர் ஜெனரலே சமராஜ்யத்தின் நில, ஆகாய, கப்பற்படைகளின் தலைவராக இருப்பார்.

## ஹைகமிஷனரும் அந்நிய நாட்டுப்பிரதிநிதிகளும்.

26. ஹைகமிஷனர்களையும் மற்றுமுள்ள அந்நிய நாட்டுப் பிரதிநிதிகளையும் நியமிக்கும் விஷயத்தில் சமராஜ்ய கவர்ன்மெண்டுக்கு கானடாவிற்கும் சுய ஆட்சி உரிமைவாய்ந்த இதர குடியேற்ற நாடுகளுக்குமுள்ள அதிகாரமிருந்துவரும். அத்தகைய நியமனங்களை சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் செய்யவேண்டும். அந்நியமனங்களுக்கான சம்பளம், அதிகாரங்கள், கடமைகள், வேலை நிபந்தனைகள் இவற்றைப் பற்றிய விதிகளைச் செய்ய சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் அதிகாரமுடையவராவார்.

## பணக் கட்டுப்பாடு.

27. (1) இந்தியாவின் ஆடிட்டர் ஜெனரலை சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் நியமனம் செய்ய வேண்டும். அவர் விதிகள் மூலம் அவரது சம்பளம், அதிகாரங்கள், கடமைகள், வேலை நிபந்தனைகள் இவற்றை நிர்ணயிக்க வேண்டும். ஆடிட்டர் ஜெனரல் ரஜாவில் சென்றிருந்தாலும் சரி, அல்லது அவரது பதவி தாற்காலிகமாகக் காலியாக இருந்தாலும் சரி, அவரது வேலையைச் செய்வதற்கான ஏற்பாட்டையும் சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரலை செய்ய வேண்டும்.

(2) சபையுடன்கூடிய கவர்னர் ஜெனரலால் செய்யப்படும் விதிகளில் குறிப்பிடப்படுகின்ற அத்தகைய மாகாண அல்லது சமராஜ்ய வரவு செலவு அதிகாரியைக் கலந்து யோசிக்காமல் கவர்ன்மெண்ட் ஊழியர்களின் தொகையையும் சம்பளத்தையும் பெருக்கவோ அல்லது குறைக்கவோ கூடாது. சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் செய்யும் விதிகளுக்குட்பட்டு வரவு செலவு அதிகாரியைக் கலந்துகொண்டு கவர்ன்மெண்டு ஊழியர்களின் தொகையையும் சம்பளத்தையும் குறைக்கவோ அல்லது பெருக்கவோ செய்யலாம்.

## மாகாண சட்டசபை.

28. ஒரு மாகாணத்திற்குச் சட்டஞ் செய்யுமதிகாரம் அரசரிடமும் மாகாண சட்டசபையினிடமுமிருக்கும்.

29. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு கவர்னர் இருந்துவருவார். அவர் அரசரால் நியமிக்கப்படுவார். அவர் மாகாணத்தில் அரசரது பிரதிநிதியாக இருப்பார்.

30. மாகாணத்தின் வரிப்பணத்திலிருந்து கவர்னருடைய சம்பளத்திற்காக வருஷம்..........ரூபாய் அரசருக்குக் கொடுத்துவிட வேண்டும். அந்தத் தொகையானது சமராஜ்ய பார்லிமெண்டு வேறு விதமாக முடிவுசெய்தாலொழிய......ஷெட்யூலில் கண்டபடி.........ரூபாயாக இருக்கவேண்டும்.

31. (i) மாகாணத்தின் ஜனசங்கியையில் லக்ஷம் பேருக்கு ஒரு மெம்பர் வீதம் மாகாண சட்டசபையில் பிரதிநிதிகளிருக்க வேண்டும். ஒரு கோடி ஜனங்களுக்குக் குறைவான ஜனத்தொகையையுடைய மாகாணங்களில் உயர்ந்த பக்ஷம் 100 மெம்பர்களே மாகாண சட்டசபையில் இருக்கலாம்.

(ii) சட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் வாக்காளர் தொகுதிகளில் ஒன்றினால் ஒவ்வொரு மெம்பரும் தெரிந்தெடுக்கப் படவேண்டும். 21-வயதிற்கு மேற்பட்டவர்களாயும் சட்டத்தினால் அருகதையற்றவர்களென அறிவிக்கப்படாதவர்களாகவுமுள்ள ஸ்திரீ புருஷர்கள் அனைவரும் வாக்களிக்க (வோட்செய்ய) உரிமை பெற்றிருப்பார்கள்.

32. (i) ஒவ்வொரு மாகாண சட்டசபையும் அதன் முதல் கூட்டத்திலிருந்து 5 வருஷகாலம்வரை நீடித்திருக்கும். ஆனால்—

(அ) 5 வருஷ கெடுதீருவதற்கு முன்னதாகவே கவர்னர் சபையைக் கலைத்துவிடலாம்.

(ஆ) கவர்னர் சிலவிசேஷ சந்தர்ப்பங்களில் உசிதமெனக்கருதின் அதன் காலவரையறையை 5வருஷங்களுக்கதிகமாகவும் உயர்த்தலாம்.

(இ) சட்டசபை கலைக்கப்பட்ட பிறகு 6 மாதங்களுக்குள் சட்டசபையின் அடுத்த கூட்டம் கூடுவதற்கான தேதியை கவர்னர் குறிப்பிட வேண்டும்.

(ii) கவர்னர் தமக்கு உசிதமெனத் தோன்றுகிறபடி சட்டசபைக் கூட்டங்கள் கூடுவதற்கான காலம், இடம் இவற்றை நிர்ணயிக்கலாம். அடிக்கடி அறிக்கை மூலமோ அல்லது வேறு வழிகளிலோ சட்டசபைக்கூட்டங்கள் முடிவடையும் படியும் செய்யலாம்.

(iii) சட்டசபையின் எந்தக் கூட்டத்தையும் அக்கிராசனர் ஒத்திவைத்து விடலாம்.

(iV) சட்டசபையில் ஆலோசனைக்கு வரும் எல்லா விஷயங்களும் அக்கிராசனர் நீங்கலாகப் பிரசன்னமாக இருக்கும் அங்கத்தினர்களின் பெரும்பான்மையான வாக்கு எப்படிக் கிடைக்கின்றதோ அப்படி முடிவு செய்யப்படும். சாதகபாதகமான வாக்குகள் சரிசமமாக இருக்கும் காலத்தில் வாக்களிக்க அக்கிராசனருக்கு உரிமை உண்டு.

(V) சட்டசபையில் காலிஸ்தானம் இருந்தால்கூட சட்டசபை தனது அதிகாரத்தைச் செலுத்தலாம்.

33. ஒவ்வொரு மாகாண சட்டசபைக்கும் ஒரு தலைவர் இருந்துவரவேண்டும். அவர் சட்டசபை மெம்பராக இருப்பதுடன் சட்டசபையினால் தெரிந்தெடுக்கப்பட்டவராயு மிருக்க வேண்டும். ஒரு உப அக்கிராசனரும் இருக்கவேண்டும். அவரும் சபையின் மெம்பராக இருப்பதுடன் சபையினால் தெரிந்தெடுக்கப்பட்டவராகவு மிருக்கவேண்டும்.

34. தற்காலம் மாகாணமெனக் குறிப்பிடப்படும் பிரதேசத்தில் இச்சட்டத்தின் பிரிவுகளை யநுசரித்து அமைதியும் சரியான கவர்ன்மெண்டுமிருந்து வரவேண்டி சட்ட திட்டங்கள் செய்துகொள்ள மாகாண சட்டசபைக்கு அதிகாரமுண்டு.

35. இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ எந்த அதிகாரிகளால் செய்யப்பட்டதாக விருந்த சட்டமாயினும், அது மாகாண கவர்ன்மெண்டுக்கு உட்பட்டதாக விருப்பின் அதை மாகாண சட்டசபை ரத்துசெய்யவோ திருத்தவோ அதிகாரமுடையதாக இருக்கும்.

36. கவர்ன்மெண்டு வருமானத்தைப் பாதிக்கக்கூடியதாகவோ அல்லது கவர்ன்மெண்டு வருமானத்தில் செலவுண்டு பண்ணுவதாகவோ கொண்டுவரப்படும் பிரேரணைகளெல்லாம் கவர்னரின் நிர்வாக சபையிலுள்ள அங்கத்தினரால் தான் கொண்டுவரப்பட வேண்டும்.

37. ஒரு மசோதா மாகாண சட்டசபையில் நிறைவேற்றப்படும் பக்ஷத்தில் கவர்னர் அதை அங்கீகரிப்பதாக அறிவிக்கலாம்; அல்லது அதற்கு அநுமதியளிக்க மறுக்கலாம்,

38. அத்தகைய ஒரு மசோதாவை கவர்னர் அங்கீகரிக்காவிட்டால் அம்மசோதா சட்டமாகாது.

39. கவர்னர் அவ்விதம் ஒரு மசோதாவை அங்கீகரிக்கும் பக்ஷத்தில் அவர் உடனே அந்த சட்டத்தின் பிரதியை கவர்னர்ஜெனரலுக்கு அனுப்பிவைக்கவேண்டும். கவர்னர் ஜெனரல் அச்சட்டத்தை அங்கீகரித்து அவ்வங்கீகாரத்தைக் கவர்னருக்குத் தெரிவித்து அவரும் அதை வெளியிட்டாலல்லது அச்சட்டம் செல்லுபடி யுள்ளதாகாது.

40. கவர்னர் ஜெனரல் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை அங்கீகரிக்க மறுத்தால் அதற்கு அவர் எழுத்து மூலம் தகுந்த காரணத்தை கவர்னருக்கு அறிவிக்க வேண்டும்.

41. ஒரு சட்டம் கவர்னர் ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்டாலும் அச்சட்டத்தைத் தாம் நிராகரிப்பதாகக் கூற சபையுடன் கூடிய மன்னர்பிரானுக்கதிகாரமுண்டு. அதன் பின்னர் அவ்விஷயம் வெளிப்படுத்தப்பட்ட தேதிமுதல் அச்சட்டம் செல்லுபடியற்றதாகப் போய்விடும்.

## மாகாண நிர்வாக அதிகாரம்.

43. மாகாண நிர்வாக அதிகாரம் மாகாண நிர்வாக சபையின் ஆலோசனைப்படி நடக்கும் கவர்னரிடமிருந்து வரும்.

44. கவர்னரால் நியமிக்கப்படும் ஐந்து பேர்களுக்கு மேற்படாத மந்திரிகளையுடைய ஒரு நிர்வாகசபை ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்து வரவேண்டும்.

45. நிர்வாக சபையை நியமிக்கும் விஷயத்தில் கவர்னர் பிரதம மந்திரியை நியமித்து அந்தப் பிரதம மந்திரிசொல்லும் யோசனைப்படி இதர மந்திரிகளை நியமிக்க வேண்டும்.

## நீதி பரிபாலனம்.

46. ஒரு சுப்ரீம் கோர்ட்டு இருந்துவர வேண்டும்; பார்லிமெண்டு விதிக்கும் வண்ணம் இதற்கு அதிகாரம் இருக்க வேண்டும். இந்த சுப்ரீம் கோர்ட்டுக்கு ஒரு லார்டு பிரஸிடெண்டும், பார்லிமெண்டு நிர்ணயிக்கும் தொகையினரான ஜட்ஜுகளும் இருந்து வர வேண்டும்,

47. இந்திய சமராஜ்பம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் லார்டு பிரஸிடெண்டும் மற்ற சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜுகளும் கவர்னர்ஜெனரலால் நியமிக்கப்பட வேண்டும். பார்லிமெண்டு விதிக்குமளவு சம்பளம் அவர்களுக் களிக்கப்படும். அவர்களுடைய சம்பளம் அவர்கள் உத்தியோகத்தி லிருக்கும்பொழுதே குறைக்கப்படக் கூடாது.

48. சமராஜ்பத்தின் லார்டு பிரஸிடெண்டோ மற்ற சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜுகளோ ஒழுங்கீனமாகவோ அல்லது திறமைக்குறைவாகவோ நடந்து கொண்டதற்காக அவர்களை விலக்க வேண்டுமென்று ஒரே கூட்டத்தில் இரண்டு பார்லிமெண்டு சபைகளும் கேட்டுக் கொண்டால் கவர்னர் ஜெனரல் அவர்களை வேலையினின்று நீக்கலாமே யன்றி வேறு விதமாக அவர்களை நீக்குவதற்கில்லை.

49. சுப்ரீம் கோர்ட்டுக்குக் கீழ்க்கண்ட விஷயங்களில் அசல் அதிகாரமுண்டு.—

(i) 85-வது பிரிவின்படி சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரலால் சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பப்படும் விஷயங்கள்.

(ii) சமராஜ்பமோ, அல்லது சமராஜ்பத்தின் பொருட்டு பிரியாது கொடுப்பவரோ அல்லது பிறரால் சமராஜ்யத்தின் பொருட்டு பிரியாது தொடுக்கப்படுபவரோ சம்பந்தப்பட்ட வழக்குகள்.

(iii) பிறதேச கான்ஸல்களையோ அல்லது மற்றப் பிரதிநிதிகளையோ பாதிக்கக்கூடிய வழக்குகள்.

(iv) மாகாணங்களுக்குள்ளாக ஏற்படக் கூடிய வழக்குகள்.

(v) இச்சட்டத்தின் கீழ் ஏற்படும் வழக்குகளும் இச்சட்டத்தின் கருத்தைப் பற்றிய வழக்குகளும்.

50. (அ) பார்லிமெண்டு செய்யும் விலக்கு விதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றிற்குட்பட்டு, சுப்ரீம் கோர்ட்டில் அசல் தரப்பு அதிகாரத்தைச் செலுத்தும் ஜட்ஜ் அல்லது ஜட்ஜிகளின் அசல்தரப்புத் தீர்ப்புகள், உத்தரவுகளின் மேல் அப்பீல்களை விசாரித்து முடிவு கூற சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

(ஆ) எந்த மாகாணத்தின் ஹைகோர்ட்டும் கூறும் தீர்ப்பல்லது தண்டனையைப் பற்றியும், சமராஜ்ப மேற்படும் காலத்தில் ப்ரிவி

கவுன்ஸில் சபையுடன் கூடிய மன்னர் முன் எந்தக் கோர்ட்டின் தீர்ப்பின் மேல் அப்பீல் செய்து கொள்ளலாமோ அந்தக் கோர்ட்டின் தீர்ப்பின் மேலும் சுப்ரீம் கோர்ட்டு விசாரித்து முடிவு செய்யலாம்.

51. அம்மாதிரி வழக்குகளில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பே முடிவானது. வேறெந்தக் கோர்ட்டும் சரி, அதிகாரியும் சரி அதைப் பரிசிலனை செய்ய அதிகாரம் கிடையாது.

## சபையுடன் கூடிய மன்னருக்கு அப்பீல்.

52. (i) சமராஜ்யத்தின் அரசியல் அமைப்பின்படி ஏற்படும் அதிகாரம் அல்லது ஒன்றல்லது பல மாகாணங்களுக்கு அரசியல் அமைப்பின்படி ஏற்படும் அதிகாரம் ஆகியவற்றின் வரையறையைப் பற்றிய வழக்குகளில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்துகொள்ள வேண்டுமானல் ப்ரிவிகௌன்ஸில் சபையுடன் கூடிய மன்னரால் இவ்விஷயம் விசாரிக்கத் தகுந்ததென சுப்ரீம் கோர்ட்டே ஒரு அத்தாக்ஷிப் பத்திரமளித்தால்தான் சபையுடன் கூடிய மன்னரிடம் இதைப்பற்றி அப்பீல் செய்துகொள்ளலாம்.

(ii) விசேஷ காரணங்களுக்காக அவ்விதம் அத்தாக்ஷிப் பத்திரம் கொடுக்கலாமென்று சுப்ரீம் கோர்ட்டார் நினைக்கும் பக்ஷத்தில் அவர்கள் அத்தாக்ஷிப்பத்திரம் கொடுக்கலாம். அதன்பேரில் வேறெவ்வித அநுமதியுமின்றி சபையுடன் கூடிய மன்னருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(iii) அவ்விதம் அப்பீல் செய்துகொள்ளக்கூடிய விஷயங்கள் என்னவென்பதை வரையறுத்துப் பார்லிமெண்டு சட்டங்கள் செய்யலாம். ஆனல் மன்னர் தமது விசேஷ அதிகாரத்தைக் கொண்டு சுப்ரீம் கோர்ட்டிலிருந்து சபையுடன் கூடிய தம்மிடம் அப்பீல் செய்துகொள்ள அநுமதிகொடுக்க அவர் மனது வைக்கும்பக்ஷத்தில் இந்தியப் பார்லிமெண்டின் சட்டங்கள் அதை பாதிக்கமாட்டா.

## ஹைகோர்ட்டுகளின் அமைப்பு.

53. இச்சட்டத்தில் ஹைகோர்ட்டுகள் என வழங்கப்படுவன இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்துவரும் நீதி பரிபாலன ஹைகோர்ட்டுகளாகும்.

54. ஒவ்வொரு ஹைகோர்ட்டிலும் ஒரு சீப் ஜஸ்டிஸும் சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் தீர்மானிக்குமளவு மற்ற ஜட்ஜுகளும் இருந்து வருவார்கள்.

(i) ஆனால், அடிஷனல் ஜட்ஜுகளாக இரண்டு வருஷங்களுக்கு மேற்படாத காலத்திற்கு சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் சிலரை நியமிக்கலாம். அவ்விதம் வேலைபார்க்கும் ஜட்ஜுகளுக்குச் சபையுடன் கூடிய கவர்னர் ஜெனராலால் நியமிக்கப்படும் மற்ற ஹைகோர்ட்டு ஜட்ஜுகளைப் போன்றே அதிகாரமிருந்து வரும்.

(ii) சீப்ஜஸ்டிஸ், அடிஷனல் ஜட்ஜுகள் ஆகிய எல்லோருடைய தொகையும் சேர்ந்து இருபதுக்கு மேற்படக்கூடாது.

55. ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்படுபவர் ஒரு ஹைகோர்ட்டின் அட்வொகேட்டாகப் பதியப்பட்டு 10-வருஷங்களுக்குக் குறையாமல் வக்கீல் வேலையிலிருந்திருப்பவராக விருக்கவேண்டும். ஆனால் இச்சட்டம் அமுலுக்கு வரும் காலத்தில் ஹைகோர்ட்டு ஜட்ஜுகளாக விருப்பவர்கள் விஷயத்தில் இச்சட்டத்தின் பிரிவுகள் எவ்விதத்திலும் பிரயோகமாகமாட்டா.

56. (i) ஒழுங்காக நடந்துகொள்ளும் வரையில்ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஒவ்வொருவரும் தமது பதவியை வகித்து வரலாம்.

(ii) எந்த ஜட்ஜும் தமது பதவியை மாகாண கவர்ன்மெண்டிடம் ராஜிநாமாச் செய்துவிடலாம்.

57. மாகாண சட்டசபை வேண்டிக்கொண்டாலன்றி ஹைகோர்ட்டின் சீப் ஜஸ்டிஸோ மற்ற ஜட்ஜுகளோ சபையுடன் கூடிய கவர்னர் ஜெனராலால் நீக்கப்படக்கூடாது.

58. (i) சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் இவர்களுடைய சம்பளம், அலவன்ஸ், நீண்டகால ரஜா, பென்ஷன் ஆகிய விஷயங்களை முடிவு செய்யலாம். அவற்றை மாற்றவும் மாற்றலாம். ஆனால் அவ்விதம் மாறுதல் செய்யும் தேதிக்கு முன்னதாகச் செய்யப்பட்ட நியமனங்களை இம்மாறுதல்கள் பாதிக்கக்கூடாது.

(ii) இந்தப் பிரிவின்படி ஒரு ஜட்ஜுக்கு விதிக்கப்பட்டுள்ள சம்பளம் அவர் அப்பதவியை பேற்கும் காலம் முதற்கொண்டே கொடுக்கப்படும்.

59. (i) ஒரு ஹைக்கோர்ட்டின் சீப் ஜஸ்டிஸ் பதவியில் காலி யேற்பட்டாலோ அல்லது சீப் ஜஸ்டிஸ் ரஜாவிலிருந்தாலோ கவர்னர் ஜெனரல் வேறொருவரை சீப் ஜஸ்டிஸாக நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படுபவர் அப்பதவியை யேற்கும் வரையிலோ அல்லது ரஜாவினின்று சீப் ஜஸ்டிஸ் திரும்பும் வரையிலோ ஹைகோர்ட்டி னுள்ள ஜட்ஜுகளில் ஒருவரையே மாகாண கவர்ன்மெண்டார் சீப் ஜஸ்டிஸாக வேலை பார்க்க நியமிக்கலாம்.

(ii) ஹைகோர்ட்டின் மற்ற ஜட்ஜுகளுடைய ஸ்தானம் காலி யானாலோ, அல்லது ஜட்ஜுகள் ரஜா எடுத்துச் சென்றாலோ, அல்லது ஒரு ஜட்ஜ் சீப் ஜஸ்டிஸாக நியமிக்கப்பட்டாலோ ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்படக் கூடிய யோக்யதையுள்ளவ ரொருவரை மாகாண கவர்ன்மெண்டார் நியமிக்கலாம். சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் ஒருவரை இப்பதவிக்கு நியமித்து அவர் பதவி யேற்கும் வரையிலுமோ ரஜாவில் சென்ற ஜட்ஜ் திரும்பிவரும் வரையிலுமோ ஆக்டிங் ஜட்ஜ் அப்பதவியிலிருந்துவரலாம்; அல்லது மாகாண கவர்ன்மெண்டார் அவர் நியமன உத்தரவை ரத்து செய்யும் வரையில் ஆக்டிங் ஜட்ஜ் வேலை பார்த்து வரலாம்.

## ஹைகோர்ட்டுகளின் அதிகாரம்.

60. (i) பல ஹைகோர்ட்டுகளுக்கும் அசல், அப்பீல் அதிகாரங்களுண்டு. கடலில் செய்யப்படும் குற்றங்களைப் பற்றிய கடல் பிரதேச அதிகாரமு முண்டு. தவிர நீதிபரிபாலனத்திற்கான அதிகாரமும், குமாஸ்தா முதலிய கோர்ட்டு உத்தியோகஸ்தர்களை நியமிக்கவும்; கோர்ட்டு வழக்கங்களை நிர்ணயிக்க விதிகள் செய்யவும் அதிகாரமு முண்டு. தவிர இச்சட்டம் அமுலுக்கு வரும் காலத்திலுள்ள ஹைகோர்ட்டுகளுக்குள்ள எல்லா அதிகாரங்களும் இவற்றிற்கும் இருந்து வரும்

(ii) ஹைகோர்ட்டின் எல்லை, அதிகாரம் முதலிய சம்பந்தப்பட்ட லெட்டர்ஸ் பேடண்டுகளைப் புதிய லெட்டர்ஸ் பேடண்டுகளால் திருத்தலாம்.

61. அப்பீல் விஷயத்தில் ஹைகோர்ட்டிற்குட்பட்ட எல்லாக் கோர்ட்டுகள் விஷயத்திலும் ஒவ்வொரு ஹைகோர்ட்டும் மேன்பார்வையிடவும் பின்கண்ட காரியங்களைச் செய்யவும் அதிகாரமுண்டு:—

(அ) புள்ளி விவரங்கள் கேட்பது.

(ஆ) ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு சமமான அல்லது உயர்ந்த் கோர்ட்டிற்கு வழக்கு அல்லது அப்பீல்களை மாற்றுவது.

(இ) அம்மாதிரிக் கோர்ட்டுகளின் நடவடிக்கை முறை முதலிய விதிகளைத் தயாரித்து வெளியிடுவது.

(ஈ) அம்மாதிரிக் கோர்ட்டுகளின் அதிகாரிகள் கணக்கு முதலிய புஸ்தகங்களைத் தயாரித்து வைக்கவேண்டிய முறைகளைத் தீர்மானிப்பது.

(உ) ஷெரீப், அட்டர்ணி, கோர்ட்டு குமாஸ்தா, அதிகாரிகள் ஆகியோருடைய கட்டண விகிதத்தை நிர்ணயிப்பது.

இம்மாதிரிச் செய்யப்படும் விதிகளும் கட்டண முறைகளும் அப்பொழுது அமுலிலிருக்கும் விதிகளுக்கும் கட்டணங்களுக்கும் முறண்பாடன்னியி லிருக்க வேண்டும். அதனுடன் முன்னதாக மாகாண கவர்ன்மெண்டின் அநுமதியையும் அவற்றிற்குப் பெற வேண்டும்.

62. (i) ஹைகோர்ட்டானது விதிகளின்மூலமாக தனக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி அசல் அப்பீல் அதிகாரங்களை ஒரு ஜட்ஜ் அல்லது ஜட்ஜுகள் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(ii) எங்கெந்த ஜட்ஜுகள் தனித்து வேலை பார்ப்பது, எங்கெந்த ஜட்ஜுகள் தம்முடன் சேர்ந்தோ, சேராமலோ வேலைபார்ப்பதென்பதை அந்தந்த கோர்ட்டு சீப் ஜஸ்டிஸ் முடிவு செய்யலாம்.

63. சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் உத்தரவின் மூலமாக ஒரு ஹைகோர்ட்டின் அதிகார வரம்பிற்குட்பட்டட்ட பிரதேசத்தை மற்றொரு ஹைகோர்ட்டின் அதிகார வரம்புற்குள் மாற்றவோ, ஒரு ஹைகோர்ட்டானது எந்தப் பிரதேசத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப் பிரதேசத்திற்கு வெளிப்பட்ட இடங்களிலும் அந்த ஹைகோர்ட்டானது தனது அதிகாரம் முழுவதையுமோ அல்லது அதில் ஒரு பகுதியையோ செலுத்தும்படி அனுமதிக்கவோ, தாற்காலிகமாக இந்தியாவில் சமாராஜ்ய கவர்ன்மெண்டின் ஆதிக்கத்திற்கு வெளிப்பட்ட பிரதேசத்தில் இருந்துவரும் பிரிட்டிஷ் பிரஜை விஷயத்திலும் அத்தகைய அதிகாரம் எதையும் செலுத்த அனுமதிக்கவோ செய்யலாம்.

64. (அ) கவர்னர் ஜெனரல், கவர்னர், சமராஜ்ய நிர்வாக சபை அங்கத்தினர், மாகாண கவர்ன்மெண்டு நிர்வாக சபை அங்கத்தினர் ஆகியோர் அந்த ஹோதா சம்பந்தப்பட்ட வரையில் செய்யும்படி உத்தரவிட்ட காரியங்களுக்காகவோ, செய்யும்படி யோசனை சொன்ன காரியங்களுக்காகவோ, அல்லது செய்த காரியங்களுக்காகவோ அவர்கள் மீது எந்த ஹைகோர்ட்டின் அசல் அல்லது அப்பீல் தரப்புகளிலும் வழக்குக் கொண்டுவருவதற்கில்லை.

(ஆ) இந்த விலக்கு விதி ஹைகோர்ட்டு சீப் ஜஸ்டிஸ் மற்ற ஜட்ஜுகள் ஆகியோர் விஷயத்திலும் செல்லுபடியுள்ளதாக இருக்கும்.

65. சமராஜ்யத்தின் எந்தப் பாகத்திலும், ஏற்கெனவே உள்ள இன்னொரு ஹைகோர்ட்டின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் தமக்கு அவசியமெனத் தோன்றினல் லெட்டர்ஸ் பேடெண்டு மூலம் ஒரு ஹைகோர்ட்டை ஏற்படுத்தி, அந்த ஹைகோர்ட்டுக்கு இந்தச் சட்டத்தின் ஆரம்பத்தில் எந்த ஹைகோர்ட்டுக்கும் அளிக்கப்படக் கூடிய அதிகாரங்களை அளிக்கலாம். ஏற்கெனவே இன்னொரு ஹைக்கோர்ட்டின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அப்படி ஒரு ஹைகோர்ட்டு ஏற்படுத்தப்பட்டால் கவர்னர் ஜெனரல் லெட்டர்ஸ் பேடெண்டு மூலம் அந்த எல்லைகளை மாற்றி அதற்கவசியமான இதர மாறுதல்களையும் செய்யலாம்.

## அட்வொகேட் ஜெனரல்.

66. ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாண கவர்ன்மெண்டு ஒரு அட்வொகேட் ஜெனரலை நியமிக்கலாம். அட்வொகேட் ஜெனரல் ஸ்தானம் காலியானாலும், அவர் வேறு வேலையாக வெளியில் போயிருந்தாலும், அவருக்கு பதிலியாக வேலை பார்க்க வேறு ஒருவரை நியமிக்கலாம்; சபையோடு கூடிய கவர்னர் ஜெனரலால் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் அந்த வேலையை ஏற்றுக்கொள்ளும் வரையிலோ, அல்லது ஸ்தலத்திலிருந்து போயிருந்த அட்வொகேட் ஜெனரல் திரும்பிவரும் வரையிலோ, அல்லது மாகாண கவர்ன்மெண்டு அந்த நியமனத்தை ரத்துசெய்யும் வரையிலோ அப்படி நியமிக்கப்பட்டவர் அட்வொகேட் ஜெனரலின் அதிகாரங்களைச் செலுத்தி வரலாம்.

## சொத்து, வருமானம், வரவு செலவு.

67. 1858, 1915, 1919-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டுச் சட்டங்களின்படி மன்னர் பிரானிடமோ, சபையோடு கூடிய இந்தியா மந்திரியிடமோ இருந்துவரும் எல்லா சொத்துக்களும், உரிமைகளும் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் வசத்தில் இருந்து வரவேண்டும்.

68. இந்தியாவின் வருமானங்கள் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரலிடம் இருக்கவேண்டும். அவை இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு சமராஜ்யத்திற்காக மாத்திரமே உபயோகிக்கப்பட வேண்டும்.

69. இந்தச் சட்டத்தில் "இந்தியாவின் வருமானங்கள்" என்பதில் பிரிட்டிஷ் இந்தியாவில் கிடைக்கக்கூடிய எல்லா வருமானங்களும், முக்கியமாகப் பின்கண்ட வருமானங்களும் சேர்ந்திருக்கின்றன.—

(i) 1858-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டுச் சட்டம் நிறைவேற்றப் படாதிருந்தால் கிழக்கிந்தியக் கம்பெனியால் பெறப்பட்டிருக்கக்கூடிய எல்லாக் கப்பங்களும், பிரதேசங்களின் வருமானங்களும்;

(ii) பிரிட்டிஷ் இந்தியாவில் எல்லாக் கோர்ட்டுகளாலும் விதிக்கப்படும் அபராதத் தொகைகளும், குற்றம் செய்ததற்காகப் பிரிட்டிஷ் இந்தியாவில் பறிமுதல் செய்யப்படும் எல்லா ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும்;

(iii) பிரிட்டிஷ் இந்தியாவில் வார்சு இல்லாத ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும், சரியான சொந்தக்காரர் இல்லாமல் இருக்கும் எல்லா சொத்துக்களும்.

70. பார்லிமெண்டானது ரயில்வே, துறைமுக நிதி ஒன்றை ஏற்படுத்தவேண்டும். ரயில்வேக்கள், தபால் இலாகா, துறைமுகங்கள் முதலியவற்றின் நிர்வாகத்தால் சபையோடு கூடிய கவர்னர் ஜெனராலுக்குக் கிடைக்கும் எல்லா வருமானங்களும் அவர் விதிக்கும் வரிகளும் இந்த நிதியில் சேர்க்கப்பட வேண்டும். ரயில்வேக்களுக்கும் தபால் இலாகாவுக்கும் துறைமுகங்களுக்கும் பார்லிமெண்டு கூறும் வழியில் அது ஏற்படுத்தும் நிபந்தனைகளின்

படி இந்த நிதி உபயோகிக்கப்படவேண்டும். பொதுவாக வருமான நிதியொன்றும் ஏற்படுத்தப்பட்டு சபையோடுகூடிய கவர்னர் ஜெனரல் வசூலிக்கும் அல்லது அவருக்குக் கிடைக்கும் வருமானங்களெல்லாம் அதில் செலுத்தப்படவேண்டும். அந்த நிதி சமராஜ்யத்தின் உபயோகத்திற்காக இந்தச் சட்டத்தில் கூறப்பட்ட வழியில் அல்லது இதற்காக ஏற்படுத்தப்படும் விதிகளின்படி அதன்மூலம் ஏற்படும் பொறுப்புகளுக்குட்பட்டு பார்லிமெண்டால் செலவழிக்கப் படவேண்டும்.

71. இந்தியாவின் வருமானங்களிலிருந்தே பின்கண்டவற்றைக் கொடுக்கவேண்டும்:—

(அ) கிழக்கிந்தியக் கம்பெனியின் எல்லாக் கடன்களும்;

(ஆ) 1858ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டுச் சட்டம், 1915-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டுச் சட்டம், 1919-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டுச் சட்டம் முதலியவை நிறைவேற்றப்படாமலிருந்தால், உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், கண்டிராக்டுகள் முதலியவற்றின் காரணமாகக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவின் வருமானத்திலிருந்து கொடுத்திருக்கக் கூடியஎல்லாச் செலவுகளும் பணமும்;

(இ) இந்தியா கவர்ன்மெண்டுக்காக சட்ட பூர்வமாக ஏற்பட்ட எல்லாச் செலவுகளும், கடன்களும், பொறுப்புகளும்;

(ஈ) இந்தச் சட்டத்தில் வேறுவிதமாகக் கூறப்பட்டவை போக பாக்கியேற்படக்கூடிய எல்லாச் செலவுகளும்:

72. (i) சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படுத்தப்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்தில் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் பின்கண்ட விஷயங்களைப் பற்றி விசாரணை நடத்துவதற்காக ஒவ்வொரு மாகாணத்திலிருந்து ஒரு பிரதிநிதியும் சமராஜ்ய கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு கமிஷனைச் சமராஜ்யத்தின் உத்தியோகஸ்தர் ஒருவருடைய தலைமையின் கீழ் நியமிக்கவேண்டும். (அ) திறமையான நிர்வாகம், அபிவிர்த்தி முதலியவற்றில் தக்க கவனம் செலுத்தி எந்தெந்த வருமான மூலங்களை முறையே சமராஜ்ய கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் பிரித்துக்கொடுக்கலாமென்றும், (ஆ) சமராஜ்ய

கவர்ன்மெண்டுக்கும் ;மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் எத்தகைய பண சம்பந்தமிருந்துவர வேண்டு மென்றும், (இ) இத்தகைய சம்பந்த மேற்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்றும், அந்தக் கமிஷன் விசாரிக்க வேண்டும்.

(ii) சமராஜ்யத்தின் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, முதலியவற்றிற்கு உத்தியோகஸ்தர்களைப் பயிற்சி செய்விப்பதைப் பற்றிய பூராவிஷயத்தையும், ராணுவ போதனைக்கு அவசியமான பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்துவதைப் பற்றியும் பரிசீலனை செய்ய அந்தந்தக் கமிஷன் ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும்.

(iii) அப்படி நியமிக்கப்படும் கமிட்டி அம்மாதிரி ஏற்படுத்த படவேண்டிய பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், ஆசிரியர்கள் முதலியவற்றின் தொகை, அவற்றை யேற்படுத்தக்கூடிய ஸ்தலம், போதிக்கப்படவேண்டிய கல்வியின்தரம், அவற்றை ஏற்படுத்த ஆரம்பச் செலவும், பின்னால் நிவர்த்திக்க நிரந்தரச் செலவும் முதலிய விவரங்களைக் கமிஷனுக்கு அறிவிக்க வேண்டும்.

(iv) சமராயஜ்யத்தில் பொது ஆரம்பக் கல்வியை ஏற்படுத்தவும், முன்னேற்றமடையாத வகுப்புகளுக்குப் பிரத்தியேகக் கல்வி வசதியளிக்கவும் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை விசாரித் தறிவிக்குமாறு இன்னொரு கமிட்டியை அக்கமிஷன் நியமிக்க வேண்டும்.

(v) தனது விசாரணைக்கவசியமாகத் தோன்றும் இதர கமிட்டிகளையும் நியமிக்க அந்தக் கமிஷனுக்கு அதிகாரமிருக்கவேண்டும்.

(vi) அந்தக் கமிஷன் முதலாவது பிரிவில் கூறப்பட்ட விஷயங்களைப் பற்றி சபையோடுகூடிய கவர்னர் ஜெனராலுக்கு யாதாஸ்து அனுப்புவதுடன், 2, 3, 4-வது பிரிவுகளில் கூறப்பட்ட காரியங்களுக்காகக் குறைந்தபக்ஷம் சமராஜ்யமும் மாகாணங்களும் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்துத் தனிபாகச் சிபார்சு செய்யவேண்டும்.

73. சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் அந்தக் கமிஷனின் முழு யாதாஸ்தையும் தமது சிபார்சுகளுடன் பார்லிமெண்டு முன்

சமர்ப்பித்து அவசியமான சட்டமியற்றுமாறோ வேறு தக்க நடவடிக்கை யெடுத்துக் கொள்ளுமாறோ விட்டுவிடவேண்டும்.

**74.** அம்மாதிரி விசாரணை நடந்து முடிவுபெற்று, 68-வது பிரிவுப்படி பார்லிமெண்டு நடவடிக்கை யெடுத்துக் கொள்ளும் வரையில் இப்போதைய வருமான மூலங்களும் வரவு செலவு சம்பந்தமுமே அமுலிலிருந்து வரவேண்டும்.

## தேசத்தின் பாதுகாப்பு.

**75.** (அ) 1. பிரதம மந்திரி, 2. தேசப் பாதுகாப்பு மந்திரி, 3. அன்னிய நாட்டிலாகா மந்திரி, 4. சேனாதிபதி, 5. ஆகாயப்படைத் தலைவர், 6. கடற்படைத் தலைவர், 7. பிரதம ராணுவ நிர்வாக அதிகாரி, இன்னும் இரண்டு நிபுணர்கள் ஆகிய 9 பேர்களடங்கிய தேசப் பாதுகாப்புக் கமிட்டி ஒன்றை சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் நியமிக்கவேண்டும்.

(ஆ) பிரதம மந்திரி இக்கமிட்டியின் தலைவராக விருக்கவேண்டும். ஒரு காரியதரிசி உள்பட இந்தக்கமிட்டிக்கு நிரந்தரச் சிப்பந்திகளிருக்கவேண்டும்.

(இ) தேசப்பாது காப்பைப்பற்றியும், பொதுவான கொள்கையைப்பற்றியும் கவர்ன்மெண்டுக்கும் சம்பந்தப்பட்ட பல இலாகாக்களுக்கும் இக்கமிட்டி யோசனை கூறவேண்டும்.

(ஈ) இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டவுடன் இந்தியாவின் பந்தோபஸ்துக்குப் பாதகமில்லாமல் ராணுவச்செலவைக் குறைப்பது சாத்தியமா என்பதைப்பற்றியும், அதை யெப்படி நடத்திவைப்பதென்பதைப்பற்றியும் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் அதை யோசனை கேட்கலாம். அந்தக் கமிட்டியின் சிபார்சுகளின்படி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

**76.** வருமானத்திலிருந்து தேசப்பாது காப்புக்காகச் செலவழிக்க சபையோடு கூடிய கவர்னர்ஜெனரல் கூறும் யோசனைகள் ஜனப்பிரதிநிதி சபையின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**77.** முன் சொன்ன பிரிவுகளில் வேறுவிதமாக இருந்தபோதிலும், அன்னியர்கள் எவராவது இந்தியாவைத் தரை மூலமாகவோ

கடல் மூலமாகவோ ஆகாயமூலமாகவோ தாக்கினாலும், அல்லது அம் மாதிரி தாக்கப் போவதாக நினைக்கப் போதுமான காரணமிருப்பதாக அவருக்குத் தோன்றினாலும், பிரிட்டிஷ் இந்தியா அல்லது அதன் ஒரு பாகத்தினுடைய பந்தோபஸ்துக்கு அவசியமென்று தோன்றுகிற செலவிற்குச் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் அனுமதி கொடுக்கலாம். அம்மாதிரி கவர்னர் ஜெனரல் செய்யும் பக்ஷத்தில் சட்டசபைக் கூட்டம் அப்பொழுது நடந்துகொண்டிருக்கும் பக்ஷத்தில் அதை உடனே அறிவித்து விடவேண்டும். சட்ட சபைக் கூட்டம் அப்போது நடந்துகொண்டிராவிட்டால் கூடிய சீக்கிரத்தில் ஒரு விசேஷக் கூட்டத்தை அதற்காகக் கூட்ட வேண்டும்.

78. சமராஜ்யத்தின் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை முதலியவற்றின் கண்டிப்பு, நிர்வாகம் முதலியவற்றை பாதிக்கக் கூடிய எந்தப் பிரேரணையும் இந்த திட்டத்தின்படி அமைக்கப்படும் தற்காப்புக் கமிட்டியின் சிபார்சில்லாமல் பார்லிமெண்டில் கொண்டு வரப்படக்கூடாது.

## ஸிவில் சர்விஸ்கள்.

79. அடுத்த பிரிவில் கூறப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு எல்லா உத்தியோகஸ்தர்களும் சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படுத்தப்பட்டவுடன் சமராஜ்ய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாகி விடவேண்டும்.

80. சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படுத்தப்பட்டபின் கூடிய சீக்கிரத்தில் உத்தியோக வர்க்கங்களைத் திருத்தியமைப்பதற்கு அவசியமான சிபார்சுகளைச் செய்வதற்காகச் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் ஒரு பப்ளிக் சர்விஸ் கமிஷனை நியமிக்கவேண்டும்.

81. இந்தியாவில் ஸிவில் சர்விஸ்களை எவ்விதம் பாகுபாடு செய்யவேண்டுமென்றும், எங்கெங்கிருந்து எப்படி நியமனம் செய்வதென்றும், அவர்களுடைய வேலை, நிபந்தனை, சம்பளம், படி, கண்டிப்பு, நடத்தை முதலியவற்றைப் பற்றியும் பார்லிமெண்டு சட்டமியற்றலாம். அந்தச் சட்டங்களின்படி விதிகளை இயற்றுவதற்கான அதிகாரத்தைப் பார்லிமெண்டு தனக்கிஷ்டமான அளவுக்குச் சபை

யோடு கூடிய கவர்னர் ஜெனரலுக்கோ மாகாண கவர்ன்மெண்டுகளுக்கோ கொடுக்கலாம்.

82. (i) சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படுத்தப்பட்ட பின் வேலைக்கு நியமிப்பது, கண்டிப்பு, வேலையிலிருந்து விலகுவது, வயதான பின் விலகுவது முதலியவற்றை ஒட்டிப் பார்லிமெண்டு தீர்மானிக்கும் அதிகாரங்களுடன் ஒரு நிரந்தர பப்ளிக் சர்விஸ் கமிஷனை சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் நியமிக்கவேண்டும்.

(ii) நிரந்த பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பர்கள் தாங்கள் நியமிக்கப்பட்டதிலிருந்து 5-வருஷகாலம் உத்தியோகப் பதவியிலிருக்க வேண்டும்.

83. சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படுத்தப்பட்டதிலிருந்து மூன்று வருஷ காலத்திற்குள் வேலையிலிருக்க விரும்பாத உத்தியோகஸ்தர்களும் வேலையில் வைத்துக்கொள்ளப்படாதவர்களும் சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படுத்தப்படாவிட்டால் அதே நிலைமையில் பெறக்கூடிய பென்ஷன், உபகார தனம் அல்லது இதர பரிகாரங்களைப் பெற உரிமையுடையவர்களாவார்கள்.

## ராணுவ உத்தியோகங்கள்.

84. புதிய அரசியலின் ஆரம்பத்தில் இந்தியாவில் ராணுவம், கடற்படை, ஆகாயப்படை முதலியவற்றில் உள்ள எல்லா பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் இந்திய உத்தியோகஸ்தர்களும் இப்போது உள்ள சம்பளம், படி, பென்ஷன் முதலிய உரிமைகளைப் பெற்றிருக்க வேண்டும்; அல்லது சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் நியாயமானதென்று கருதும் பரிகாரத்தைப் பெற வேண்டும்; அல்லது சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படாவிட்டால் இந்த நிலைமையில் பெற்றிருக்கக்கூடிய பரிகாரத்தைப் பெற வேண்டும்.

மேலும் புதிய அரசியலின் ஆரம்பத்தில் பென்ஷன் பெற்றுக்கொண்டிருந்த எல்லா பிரிட்டிஷ் அல்லது இந்திய உத்தியோகஸ்தர்களும் இந்தியாவின் வருமானங்களிலிருந்து அதே பென்ஷன்களைப் பெற்றுக்கொண்டு வர வேண்டும்.

## இந்திய சமஸ்தானங்கள்.

85. இந்திய சமஸ்தானங்கள் விஷயத்தில் உடன்படிக்கைகளின் பயனாகவோ வேறு வழியிலோ இதுவரையில் இந்தியா கவர்ன்மெண்டார் செலுத்திவந்த உரிமைகளையும் கடமைகளையும் சமராஜ்ய கவர்ன்மெண்டு செலுத்தி வரவேண்டும்.

சமராஜ்யத்திற்கும் ஏதாவது ஒரு இந்திய சமஸ்தானத்திற்கும் உடன்படிக்கை, ஒப்பந்தம், ஸன்னது அல்லது வேறு தஸ்தாவேஜுகளை யொட்டி அபிப்பிராயபேத மேற்பட்டால், சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் சம்பந்தப்பட்ட சமஸ்தானத்தின் சம்மதத்தின் பேரில் அவ்விஷயத்தைச் சுப்ரீம்கோர்ட்டு முடிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளலாம்.

## புதிய மாகாணங்கள்.

86. எந்தப் பிரதேசத்திலாவது அங்கு வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் கேட்கும் பக்ஷத்தில் வரவு செலவு நிர்வாக விஷயங்களை நன்றாக ஆராய்ந்து பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரித்து வைக்க வேண்டும்.

## அரசியல் திருத்தம்.

*87. அரசியலின் எந்தப் பிரிவையும் பார்லிமெண்டு சட்டமியற்றுவதன் மூலம் ரத்து செய்யவோ திருத்தவோ கூடும். ஆனால் அம்மாதிரி ரத்து செய்யும் அல்லது மாற்றும் சட்டம் பார்லிமெண்டின் இரு சபைகளும் சேர்ந்த கலப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவேண்டும். மூன்றாவது தடவை மசோதா படிக்கப்படும்போது அந்த இருசபைகளின் மெம்பர்களில் மூன்றில் இருபாகத்தினருக்குக் குறையாத மெஜாரிட்டியால் அது அங்கீகரிக்கப்படவேண்டும். அப்படிக் கலப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் மசோதா பார்லிமெண்டின் இருசபைகளாலும் சரியாக நிறைவேற்றப்பட்டு விட்டதாகப் பாவிக்கப்படவேண்டும்.

குறிப்பு:—விவாதத்திற்கிடமான வகுப்பு விஷயம் முதலியவற்றைப் பற்றிப் பின்கண்ட சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

---

*இந்த பிரிவைத் திருத்துவதற்காக சர்வக்கக்ஷி மகாநாடு இதை நேரு கமிட்டிக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறது.

## * வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

1. இந்தியா முழுவதிலும் ஜனப்பிரதிநிதி சபைக்கும் மாகாணசட்ட சபைகளுக்கும் கலப்பு தொகுதிகள் இருந்துவரவேண்டும்.

II. முஸ்லீம்களுக்கு அவர்கள் குறைந்த தொகையாக உள்ள ஸ்தலங்களிலும், முஸ்லீம்களல்லாதாருக்கு வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் தவிர வேறெங்கும் ஜனப்பிரதிநிதி சபைக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்படக்கூடாது. முஸ்லீம்கள் குறைந்த தொகையாக உள்ள மாகாணங்களில் அவர்களுடைய ஜனத்தொகைப்படியும், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் முஸ்லீம்களல்லாதாருக்கு அவர்களுடைய ஜனத் தொகைப்படியும் ஸ்தானங்கள் ஒதுக்கப்படவேண்டும். முஸ்லீம்களோ முஸ்லீம்களல்லாதவர்களோ அவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்ட விடங்களில் அதிகப்படி ஸ்தானங்களுக்குப் போட்டிபோட உரிமையுடையவர்களாவார்கள்.

III. மாகாணங்களில்—

(அ) பஞ்சாபிலோ வங்காளத்திலோ ஒரு வகுப்பிற்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்படக் கூடாது.

(ஆ) பஞ்சாபையும் வங்காளத்தையும் தவிர இதர மாகாணங்களில் குறைந்த தொகையாக உள்ள முஸ்லீம்களுக்கு ஜனத்தொகைப்படி ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு அதிகப்படி ஸ்தானங்களுக்குப் போட்டிபோட அவர்களுக்கு உரிமையிருக்க வேண்டும்.

(இ) வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் முஸ்லீம்களல்லாதாருக்கு இதேமாதிரி ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு அதிகப்படி ஸ்தானங்களுக்குப் போட்டிபோட அவர்களுக்கு உரிமையிருக்கவேண்டும்.

IV. ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவது அனுமதிக்கப்படும் இடங்களில், அது 10 வருஷ காலத்திற்குத் தான் அமுலிலிருக்க வேண்டும்.

---

* இந்தப் பிரிவுகளில் சிலவற்றை சர்வகக்ஷி மகாநாடு மாற்றியிருக்கிறது. சர்வகக்ஷி மகாநாட்டின் 4, 6 தீர்மானங்களைப் பார்க்க.

## மாகாணப் பிரிவினையும் அந்தஸ்தும்.

V. வரவு செலவு நிலைமை சம்பந்தமாக அவசியமாகத் தோன்றுகிற விசாரணையை நடத்திவிட்டு ஸிந்துப் பிரதேசத்தைப் பம்பாயிலிருந்து பிரித்து ஒரு தனி மாகாணமாக அமைக்க வேண்டும்.

VI- மைசூர் சமஸ்தானத்தின் இன்னொரு பக்கத்திலிருக்கும் சிறிய தீவுகளைத் தவிர கர்நாடகப் பிரதேசங்கள் இதேமாதிரி அவை இப்போது உள்ள மாகாணங்களிலிருந்து பிரிக்கப்பட்டு ஒரு தனி மாகாணமாக அமைக்கப்பட வேண்டும்.

VII. வடமேற்கு எல்லைப்புற மாகாணமும், இதர மாகாணங்களிலிருந்து பிரித்தமைக்கப்படும் எல்லாப் புதிய மாகாணங்களும் இந்தியாவில் உள்ள மற்ற மாகாணங்களைப் போன்ற ஆட்சி முறையைப் பெறவேண்டும்.

மோதிலால் நேரு.
எஸ். அலி இமாம்.
டேஜ்பகதூர் ஸாப்ரு.
எம். எஸ். அனே.
மங்களஸிங்.
ஷுவாயிப் குரேஷி.*
சுபாஷ் சந்திரபோஸ்.
ஜி. ஆர். பிரதானி.

---

* ஜனாப் ஷ்வாயிப் குரேஷி துரதிர்ஷ்டவசத்தினால் நகல் யாதாஸ்தைப்பற்றி யோசித்த கமிட்டியின் கூட்டத்திற்கு வர முடியவில்லை. இருந்தாலும் நகல் யாதாஸ்தானது அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 3 வது அத்தியாயத்தில் கண்டுள்ள சிபார்சுகள் சம்பந்தப்பட்டவரையில், மத்திய சட்டசபையில் மூன்றிலொரு பாக ஸ்தானங்களை முஸ்லீம்களுக்கு ஒதுக்கி வைக்கவேண்டுமென்று தாம் அபிப்பிராயப்படுவதாக அவர் தெரிவித்திருக்கிறார். மேலும் "ஜூலை மாதம் 7-ந்தேதி நடந்த தலைவர்கள் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதில் குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்களையும் ஆதாரங்களையும் நான் ஒப்புக் கொள்ளவில்லை"யென்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

கமிட்டியின் கடைசிக்கூட்டத்தில் ஸர் அலி இமாம், ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸ், ஸ்ரீமான் ஆர். ஜி. பிரதானி இவர்களும் பிரசன்னமாக இருக்கமுடியவில்லை. ஆனால் நகல் யாதாஸ்தைப் படித்துப் பார்த்து விட்டு, அதை ஒப்புக்கொள்ளுவதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

# தலைவர்கள் மகா நாட்டைப்பற்றிய குறிப்பு.

---

இந்த யாதாஸ்தின் 60-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் தலைவர்கள் மகாநாட்டுத் தீர்மானமானது 7-7-28ல் செய்யப்பட்டது. அதில் டாக்டர் எம். ஏ. அன்ஸாரி, பண்டித மோதிலால் நேரு, பண்டித் மதன்மோஹன மாளவியா, ஸர் அலி இமாம், ஸர் டேஜ்பகதூர் ஸாப்ரு, ஸ்ரீமான்களான அபுல் கலாம் அஸாத், சச்சிதானந்த ஸின்ஹ, ஸி. ஒய். சிந்தாமணி, டி. ஏ. கே. ஷர்வானி, மங்கள் சிங், முகம்மது ஷாபிதாவுதி, எம். எஸ். ஆனே, எஸ். டி. கிச்சுலு, சுபாஷ் சந்திரபோஸ், ஷ்வாயிப் குரேஷி, கலிகுஸ்மான், டி. ஆர். ரஞ்சித சிங், சையது மகமத், ஏ. எம். குவாஜா, ஜவஹர்லால் நேரு இவர்கள் கையெழுத்திட்டார்கள். இந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகவிருந்த வேறு சிலரும் இத்தீர்மானத்தை ஒப்புக்கொண்டார்கள். ஆனல் கையெழுத்து வாங்கிய சமயத்தில் அவர்கள் இல்லை.

இந்தத் தீர்மானத்தைப்பற்றி சர்வ கக்ஷி மகாநாட்டுக் கமிட்டியாலும், கமிட்டியால் அழைக்கப்பட்டிருந்த வேறு சிலராலும் பிறகு ஆலோசிக்கப்பட்டது. கமிட்டி நடவடிக்கைகளின் சாராம்சம் கீழே காணப்படுகிறது:—

## 8-ம் தேதி கூட்ட நடவடிக்கை சங்கிரகம்.

### காலைக் கூட்டம்.

ஆஜர்:

பண்டித மோதிலால் நேரு
ஸ்ரீமான் எம். எஸ். ஆனே
ஜனப் ஷ்வாயிப் குரேஷி
ஸர்தார் மங்கள சிங்
ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ்

அழைப்பின்பேரில் அங்கத்தினர்களல்லாத அடியிற்கண்டவர்களும் பிரசன்னமாகயிருந்தனர்:—

டாக்டர் எம். ஏ. அன்ஸாரி
மௌலான அபுல்கலாம் அஸாத்
ஜனப் டி. ஏ. கே. ஷர்வானி
ஜனப் முகமது ஷாபிதாவுதி
டாக்டர் எஸ். டி. கிச்சுலு
ஜனப் கலிகுஸ்மான்
டாக்டர் சையது முகம்மது
ஸ்ரீமான் ஜவஹர்லால் நேரு

மத்திய சட்ட சபையில் முஸ்லீம் மைனுரிட்டிக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும் விஷயம் ஆலோசிக்கப்பட்டது. நேற்றைய ஒப்பந்தத்தின் (முதல் பிரிவின்)படி மைனுரிட்டிகளுக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க முடியாதென்று தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் ஸ்தானங்களை ஒதுக்கி வைக்காவிடில் 500 பேர்கள் அடங்கிய மத்திய சட்ட சபையில் 30 அல்லது 40 முஸ்லீம்கள் தான் ஸ்தானங்கள் பெற முடியுமென்று தெரிவித்துக் கொள்ளப்பட்டது. முஸ்லீம்கள் சிறுபான்மையினராக இருந்து வரும் மாகாணங்களில் மாகாண சட்ட சபைகள் விஷயத்திலும் இதே நிலைமைதான் ஏற்படுமென்று எடுத்துக் காட்டப்பட்டது. சிறிய மைனுரிட்டிகளுக்கு மத்திய, மாகாண சட்ட சபைகளில் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதால் இந்தக் கஷ்டத்தைச் சமாளித்துக்கொண்டு விடலாமென்றும், மெஜாரிட்டியாகவுள்ள சமூகங்களுக்கு ஒதுக்கிவைக்க வேண்டியதில்லை யென்றும் ஒரு யோசனை சொல்லப்பட்டது. இவ்விதம் செய்வது நேற்று ஏற்பட்ட உடம்பாட்டைத் திருத்துவதாகும். இது சம்பந்தமாக ஒரு முடிவும் ஏற்படாமல் மாலைவரை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

## 8—7—1928.

### மாலைக் கூட்டம்.

டாக்டர் எஸ் டி கிச்சுலுவையும், டாக்டர் சையதுமுகம்மதையும் தவிர காலையில் பிரசன்னமாக விருந்த மற்றவர்கள் வந்திருந்தார்கள். ஸர் டேஜ் பகதூர் ஸாப்ருவும் வந்திருந்தார். சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் விஷயமாகக் காலைக் கூட்டத்தில் முடிவு பெருமலிருந்த விஷயம் மறுபடியும் எடுத்துக்கொள்ளப்பட்டது சிறுபான்மையினராகவுள்ள சமூகத்தினருக்கு ஜனத்தொகையின் வீதாசாரப்படி ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதற்கு இடமேற்படும்படி 7-ந்தேதி நடந்த தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்தின் முதல் பாகத்தை மாற்றுவதென்று ஏகோபித்து முடிவு செய்யப்பட்டது.

மிகச்சிறுபான்மையினரான சமூகத்தினருக்கு மாகாண சட்டசபைகளில் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் விஷயம் அடுத்தாற்போல் கவனிக்கப்பட்டது. ஜனுப் ஷ்வாயிப் குரேஷியைத் தவிர மற்றவர்கள் மத்திய சட்டசபையில் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதற்குரிய காரணம் இதற்கும் பொருந்துமென்று அபிப்பிராயப்பட்டார்கள். கூட்டத்திற்கு வந்திருந்த அங்கத்தினர்களெல்லாதவர்களும் இதை ஆதரித்தார்கள். ஆகவே, அதிகப்படியான ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களாக நிற்பதற்கு உரிமையுடன், மிகச் சிறுபான்மையினரான சமூகங்களுக்கு அவர்களுடைய ஜனத்தொகையின் வீதாசாரப்படி ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று சர்வகக்ஷி மகாநாட்டுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதென்று முடிவு செய்யப்பட்டது.

# ஷெட்யூல் I.

## மத்திய கவர்ன்மேண்டு இலாக்காக்கள்.

1. வியாபாரக் கம்பெனிகள், பாங்கிகள், அந்நிய நாட்டுக் கம்பெனிகள் இவைகளைப் பதிவு செய்வதுள்பட இந்தியாவிற்குட்பட்டும், இதர நாடுகளுடனும் வியாபாரம்.

2. இந்த சட்டத்தின்படி மாகாணங்களுக்கோ, அல்லது மாகாணங்களின் சில பகுதிகளுக்கோ எந்தெந்த இனங்களில் வரி விதிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த இனங்கள் நீக்கி பாக்கி இனங்களில், அதாவது கடற்சுங்கம், எதிர் வரி, வருமான வரி, சூப்பர்வரி, கம்பெனிகள் லாப வரி, அபின் வரி இவைகளை விதிப்பதும், அபினி சாகுபடி, உற்பத்தி இவைகளைக் கட்டுப்படுத்துவதும், ஏற்றுமதி வரிகளை விதிப்பதும்.

3. ஏற்றுமதி செய்யப்படும் சாமான்கள் மீது பவுண்டிகள்.

4. சமராஜ்ய கவர்ன்மெண்டின் பொறுப்பிலும் அதனுடைய சொத்துக்களின்பேரிலும் கடன் வாங்குதல், சமராஜ்ய கவர்ன்மெண்டின் பொதுக்கடன்.

5. கோட்டடித்தலும், நாணய மடித்தலும்.

6. பாங்கிகள், இன்ஷியூரென்ஸ் கம்பெனிகள், சேவிங்ஸ்பாங்குகள்; பாங்கிகளை அமைத்தல்; நோட்டுகளை வெளியிடுதல்; பங்குப்பரிவர்த்தனைச் சங்கங்கள்.

7. மாற்றுபில்கள், செக்குகள், உண்டியல்கள், பிராம்சரி நோட்டுகள்.

8. தேசியமுக்கியமான உள்நாட்டுஜலாதாரங்களில் கப்பல் போக்குவரத்து உள்பட கப்பல் போக்குவரத்து; துறைமுகங்கள், முக்கியத் துறைமுகங்கள்; லைட் ஹவுஸ்கள், பேக்கன்கள், லேசான கப்பல்கள், பூவாய்கள்.

9. ரயில்வேக்களும், அகில இந்தியாவுக்கும் பொதுவாகவும், ராணுவத்திற்கு முக்கியமாகவும் உள்ள ரஸ்தாக்களும்.

10. ஆகாயப் போக்குவரத்தும், அது சம்பந்தமான இதர விஷயங்களும்.

11. தபால், தந்தி, டெலிபோன் இவைகளும், கம்பியில்லாத் தந்தியும் அவைகளின் ஸ்தாபனங்களும்.

12. இந்தியாவின் பாதுகாப்பும், ராணுவத்திற்கு ஆள் சேர்த்தல், இந்திய வியாபாரக் கப்பல் உத்தியோக கோஷ்டி, மாகாண கவர்ன்மெண்டுகளால் சவரக்ஷணை செய்யப்படும் இதர படைகள் இவைகளுள்பட ராணுவம், கப்பற்படை, ஆகாயப்படை இவைகள்; கப்பற்படை, ராணுவப்படை ஸ்தானங்களும், தண்டுகளும்; ராணுவப் பயிற்சி, கப்பல்படைப் பயிற்சி, ஆகாயப் போக்கு வரத்துப் பயிற்சி இவைகள் சம்பந்தமான பாடசாலைகளும், கலாசாலைகளும்.

13. சுதேச சமஸ்தானங்களுடன் சம்பந்தமும், அந்நியநாடுகளுடன் சம்பந்தமும்; க்ஷிராபாகக் குடியேறுவோர் விஷயம்; பிரஜா உரிமை விஷயம்; அந்

னியர் விஷயம்; பிரயாணச்சீட்டுகள்; இந்தியாவுக்கு வெளியே நடத்தும் புண்ய க்ஷேத்திர யாத்திரைகள்.

14. இந்தியாவில் குடியேற்றமும், வெளிநாடுகளில் இந்தியர்கள் குடியேற்றமும்.

15. துறைமுக கோரண்டினும், கப்பற்படை ஆஸ்பத்திரிகளும்.

16. சமராஜ்ய கவர்ன்மெண்டின் உத்தியோகவர்க்கமும், சமராஜ்ய கவர்ன்மெண்டின் பப்ளிக் சர்விஸ் கமிஷனும்.

17. சமராஜ்ய கவர்ன்மெண்டின் கணக்குப்பரிசோதனை இலாகா.

18. சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டுகள் சம்பந்தமாக சட்டமியற்றுவது.

19. அந்தஸ்து, ஒப்பந்தம், சொத்துக்கள், ஸிவில் உரிமைகள் சம்பந்தமான சட்டங்கள் உள்பட ஸிவில் சட்டங்களும் ஸிவில்கோர்ட்டு நடைமுறைகளும்.

20. கிரிமினல் புரொஸிஜர், குற்றம்செய்தவர்களை வெளியேற்றுதல் உள்பட கிரிமினல் சட்டம்.

21. கடனிறுக்கச் சக்தியற்றவர்கள் விஷயம்.

22. விவாகம், விவாகரத்து, பெற்றோர் பாத்தியம், மைனர்களுடைய கார்டியன் பாத்தியதை, அவர்களுடைய அந்தஸ்து, மெஜாரிட்டி வயது இவைகள் சம்பந்தமாகச் சட்டமியற்றுதல்.

23. காபிரைட் உரிமை; பத்திரிகைகளும் புத்தகங்களும்; புதிதாக உற்பத்திசெய்யப்படும் வஸ்துக்களுக்கு உரிமை ஏற்படுத்துதலும் வியாபாரக் குறிகளும்.

24. சமராஜ்ய கவர்ன்மெண்டின் தேவைகளுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்தல்.

25. பத்திரங்கள் பதிவு சம்பந்தமாகச் சட்டமியற்றுதல்.

26. ஜனன, மரண, விவாகப் பதிவுகளைப்பற்றிச் சட்டமியற்றுதல்.

27. ஜனகணிதியும் புள்ளிவிவரங்களும்.

28. ஆயுதங்கள், வெடிமருந்துகள் கண்காணிப்பு.

29. (ஏ) பெட்ரோலியம், வெடிக்கத்தக்க வஸ்துக்கள் இவைகளின்மீது ஆதிக்கம்.

(பி.) விஷப்பதார்த்தங்களின் கட்டுப்பாடு.

30. அளவைகளும் நிறைகளும்.

31. சமுத்திரத்தில் 3 மைல் எல்லைக்கப்பால் பாசிக்குத்தகை.

32. இந்தியாவின் பூமிதத்துவ, வான சாஸ்திர, சீதோஷ்ண சர்வே.

33. பார்லிமெண்டு எலெக்ஷன்.

34. சமராஜ்ய கவர்ன்மெண்டின் தலைநகர் எங்கிருக்க வேண்டுமென்று நிர்ணயிப்பது.

35. பல மாகாணங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

36. தொழிற்சாலைகள் சம்பந்தமாகச் சட்டமியற்றுதல்.

37. தொழிலாளர் விஷயங்கள்:—

1. தொழிலாளரின் க்ஷேமம்.

2. பிராவிடெண்டு பண்டு.

3. தொழில் இன்ஷியூரென்ஸ். தொழிலாளர்களின் ஆரோக்கியம், விபத்துகள்.

38. சுரங்கங்களின்மீது அதிகாரம்.

39. வைத்திய யோக்கியதை நிஷ்கரிஷை.

40. சமராஜ்ய கவர்ன்மெண்டுக்கு வேண்டிய ஸ்டோர்களும், ஸ்டேஷனரி சாமான்களும்.

41. மத்திய பிரசுர இலாகாவும், இரகசியப் போலீஸ் இலாகாவும்.

42. மிருக சர்வே, செடி சர்வே, கல்வெட்டு சம்பந்தமான விஷயங்கள்.

43. மத்திய ஆராய்ச்சிச் சாலைகளும், ஸ்பெஷல் பயிற்சிப் பாடசாலைகளும்.

44. ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கல்லாத பிரதேச மாறுதல்களும், அப்பிரதேசங்கள் சம்பந்தமாகச் சட்டமியற்றுதலும்.

45. சமராஜ்ய கவர்ன்மெண்டின் சொத்துக்கள்.

46. வனங்கள் சம்பந்தமாக சட்டமியற்றுதல்.

47. கோர்ட்டு ஸ்டாம்புகள் அல்லாதவைகளைப்பற்றி சட்டமியற்றுதல்.

# ஷெட்யூல II.

## மாகாண இலாகாக்கள்.

நிஷ்காரினவுஷ செய்யப்பட்டுவிட்ட நிலவரி உள்பட, விவசாயத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து இதர வரிகள் விதித்தல்; தண்ணீர் தீர்வை; சர்வே, செட்டில்மெண்டு; கவர்ன்மெண்டு நில விநியோகமும் கவர்ன்மெண்டு எஸ்டேட்டு பரிபாலனமும்.

2. கலால் அதாவது மதுஸாரங்கள், போதைத் தரத்தக்க வஸ்துக்கள் இவைகளின் உற்பத்தி, போக்குவரத்து, இருப்பு, விற்பனை இவைகளும், இத்தகைய சாமான்கள் சம்பந்தமாகக் கட்டணங்களை விதித்தலும்.

3. சுங்கான் வரி, லாண்டு செஸ் முதலிய ஸ்தல வரிகள்; கட்டிட வரிகள்; வண்டிகள், படகுகள் இவைகளுக்கு வரி விதித்தல்; மிருகங்களின் மீது வரி; போக்குவரத்து சாமான் மீது சுங்கான் வரி; தொழில், வியாபார வரிகள்; பிரைவேட் மார்க்கெட்டுகள் மீது வரி, விளம்பரத்தின் மீதுவரி, நாமாவுதாக்கள் மீது வரி, சூதாட்டத்தின் மீது வரி; ஸ்தல ஸ்தாபனங்கள் செய்யும் காரியங்களுக்காக விதிக்கப்படும் வரிகள்.

4. மாகாணத்திற்குள் நில ஆர்ஜிதம்.

5. வனங்களின் பரிபாலனமும், வேட்டைவசதிகளைப் பாதுகாத்தலும்.

6. மாதிரிப் பண்ணைகள், பரீக்ஷைப் பண்ணைகள் இவைகளுள்பட விவசாயம்.

7. சமராஜ்ய கவர்ன்மெண்டைச் சேர்ந்ததாக இல்லாத பாசிக்குத்தகை இனங்கள்.

8. ஜலாதாரங்கள், பாய் வாய்க்கால்கள், வடி வாய்க்கால்கள், கரைகள், இரண்டு மாகாணங்களுக்குச் சம்பந்தப்பட்டதாக இல்லாத மின்சார உற்பத்தி.

9. மாகாணத்தில் மராமத்திலாகாவுக்குட்பட்ட கட்டிடங்கள், ரஸ்தாக்கள், பாலங்கள், படகுத்துறைகள், கணவாய்கள், ஆறுகளில் தரைப்பாலங்கள், டிராம் வேக்கள், லைட் ரயில்வேக்கள், கிளைப்பாதைகள், உள் மாகாண ஜலாதாரப் போக்குவரத்துகள். இவைகளிலிருந்து அடியிற்கண்டவைகள் விலக்கு செய்யப்பட்டிருக்கின்றன:

(எ) மத்திய கவர்ன்மெண்டுக்குட்பட்ட ரயில் பாதைகளும், ஜலாதாரங்களும்.

(பி) மாகாணத்தின் எல்லைக்கு வெளிப்பட்ட வேலைகள்.

(ஸி) இந்தியாவுக்குப் பொதுவானதென்று பார்லிமெண்டால் குறிப்பிடப்படும் அம்சங்கள்.

10. கூட்டுறவுச் சங்கங்கள்.

11. உலோக உற்பத்திகளைப் பெருக்குதல்.

12. பஞ்ச நிவாரணம்.

13. இந்தியாவிற்குட்பட்டு க்ஷேத்திராடனம்.

14. ஸ்தல சுயஆட்சி, முனிசிபல் கார்ப்பொரேஷன்கள், லோகல் போர்டுகள், கிராமப் பஞ்சாயத்துகள், அபிவிருத்திச் சபைகள், நகர நிர்மாண சபைகள், இதர ஸ்தல ஸ்தாபனங்கள் இவைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அதிகாரமும், லோகல்பண்டு கணக்குப் பரிசோதனையும்.

15. ஆஸ்பத்திரிகள், வைத்தியசாலைகள், ஆசிரமங்கள் இவைகளுள்பட வைத்திய பரிபாலனமும், வைத்தியக் கல்விக்குப் பணம் ஒதுக்கிவைத்தலும்.

16. பொது ஜன சுகாதாரம், ஜனன மரணப் பதிவு.

17. சர்வ கலாசாலைகள், தொழிற்கலாசாலைகள் உள்பட கல்வி இலாகா.

18. கோர்ட்டு ஆப்வார்ட்ஸ், கடனில் மூழ்கிய அல்லது பந்தகத்தில் வைக்கப்பட்ட எஸ்டேட்டுகள்.

19. நில அபிவிருத்தியும் விவசாயக் கடனும்.

20. மிராசுதார்களும் குடிகளும், குடிபாத்தியமும், குத்தகைச்சட்டமும்.

21. மத்திய சட்டசபையால் இயற்றப்படும் சட்டத்திற்குட்பட்டு அட்மினிஸ்டிரேட்டர் ஜெனரலும், அபீஷியல் டிரஸ்டிகளும்.

22. தொழில் ஆராய்ச்சி உள்பட தொழில் அபிவிருத்தி.

23. ராணுவ, ஆயுதந் தாங்கிய போலீஸ் உள்பட போலீஸ் இலாகா, பார்லிமெண்டு இயற்றிவைக்கும் சட்டத்திற்குட்பட்டு ரயில்வே போலீஸ்.

24. உணவுப் பொருள்கள் முதலியவைகளின் கலப்படம்.

25. (ஏ) மோட்டார் வண்டிகள் சம்பந்தமாக மத்திய சட்டசபை இயற்றும் சட்டங்களுக்குட்பட்டு வண்டிப்போக்கு வரத்தின் கட்டுப்பாடு.

(பி) டிராமாக்கள், ஸினிமாக்கள் இவைகளின் கட்டுப்பாடு.

26. சிறைச்சாலைகள், கைதிகள், சீர்திருத்தச்சாலைகள், ஜீவிப்பதற்கு வழியில்லாதவர்கள்.

27. பிற்போக்கான ஜாதியினரும், அவர்களைக் குடியேற்றியிருக்கும் பிரதேசங்களும்.

28. புஞ்சைநிலங்கள்.

29. நீதி பரிபாலனமும், ஸிவில் கிரிமினல் கோர்ட்டுகளின் அமைப்பு, பராமரிப்பு முதலியவைகளும்.

30. மாகாண சட்டசபைக்குத் தேர்தல்.

31. மாகாண சம்பந்தமான சட்டங்களை மீறி நடப்பவர்களுக்கு சிக்ஷை விதிக்க சட்டமியற்றுதல்.

32. மத்திய கவர்ன்மெண்டின் அனுமதிக்குட்பட்டு மாகாணத்தின் பொறுப்பின் பேரில் கடன் வாங்குதல்.

33. ஜனன, மரண, விவாகப்பதிவு சட்ட பரிபாலனம்.

34. மாகாண லா ரிபோர்ட்.

35. சில்லரைத் துறைமுகங்கள்.

36. பொதுப் புத்தகசாலைகள், மியூஸியங்கள், சங்கங்களின் பதிவு.

37. பவுண்டுகளும் கால்நடைகளின் துராகிருதப் பிரவேசத்தைத் தடுத்தலும்.

38. மிருக வைத்திய இலாகாவும், மிருக வைத்தியப் பயிற்சியும், கால் நடைகளிடையே வியாதிகள் பரவாமல் தடுத்தலும்.

39. மத்திய சட்டசபை இயற்றிவைக்கும் சட்டத்திற்குட்பட்டுத் தொழிற்சாலைகள்.

40. தொழிலாளர் முதலாளிகள் தகராறுகளைத் தீர்த்துவைத்தல்.

41. புகைகளும், மின்சார சக்தியும்.

42. பாயிலர்கள்.

43. புகை அசுசி.

44. தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி.

45. கரோனர்கள் (பிரேதவிசாரணைசெய்வோர்கள்.)

46. மாகாண ஸ்டோர்களும் ஸ்டேஷனரியும்.

47. மாகாண கவர்ன்மெண்டு அச்சுக்கூடம்.

48. மாகாண உத்தியோகவர்க்கங்களும் மாகாண சிவில் சர்விஸ் கமிஷனும்.

49. மாகாண கவர்ன்மெண்டின் தலைநகரை நிர்ணயம்செய்தல்.

50. மத்திய கவர்ன்மெண்டார் இயற்றும் சட்டத்திற்குட்பட்டுத் தேர்தல்களை நடத்துதல்.

51. கோர்ட்டு பீஸ் உள்பட இதர பீஸ்கள்; புரோபேட் டியூட்டிகள்; வார்சுரிமை டியூட்டிகள்.

52. மத்திய சட்டசபை இயற்றும் விதிகளுக்குட்பட்டு உற்பத்தியும், சப்ளையும், விநியோகமும்.

53. மத்திய கவர்ன்மெண்டார் இயற்றும் விதிகளுக்குட்பட்டுத் தொழில் அபிவிருத்தி.

54. மத்திய சட்டசபை இயற்றும் சட்டங்களுக்குட்பட்டு மதஸ்தாபனங்களின் பரிபாலனம்.

55. மத்திய சட்டசபை இயற்றும் சட்டத்திற்குட்பட்டுப் பந்தயம் வைத்தல், சூதாடுதல் இவைகளைக் கட்டுப்படுத்தல்.

56. ஜீவஹிம்சை நிவாரணமும், காட்டு மிருகங்கள் பக்ஷிகள் இவைகளின் பராமரிப்பும்.

57. மத்திய சட்டசபை இயற்றும் சட்டத்திற்குட்பட்டு நீதிபரிபாலன சம்பந்தமில்லாத ஸ்டாம்புகள்; ஜூடிஷியல் ஸ்டாம்புகள்.

58. மத்திய சட்டசபை இயற்றும் சட்டத்திற்குட்பட்டுப் பத்திரங்களின் பதிவு.

59. மத்திய சட்டசபை இயற்றும் சட்டத்திற்குட்பட்டு அளவைகளும் நிறைகளும்.

60. விஷப் பதார்த்தங்கள், ஆயுதங்கள், வெடி மருந்துகள், பெட்ரோலியம், வெடிக்கக்கூடிய வஸ்துக்கள் இவைகள் மீது மத்திய சட்டசபை இயற்றும் சட்டங்களுக்குட்பட்டு ஆதிக்கம்.

61. மத்திய சட்டசபை இயற்றும் சட்டத்திற்குட்பட்டுப் பத்திரிகைகள் மீது ஆதிக்கம்.

62. மத்திய சட்டசபை இயற்றும் சட்டத்திற்குட்பட்டு வைத்திய யோக்கியதை முதலியவைகளை நிர்ணயித்தல்.

63. லோகல்பண்டு கணக்குத் தணிக்கை.

# அநுபந்தங்கள்.

## வி. அநுபந்தம்

**பஞ்சாப் ஜனத் தொகையின் மத வாரியான புள்ளி விவரங்கள்.**

[பல மதத் தொகுதிகளும் சட்டசபையில் பெறக் கூடிய பிரதிநிதித்துவத்தைக் காட்டுவதற்காக பஞ்சாப் ஜனத்தொகையைப்பற்றித்தயாரித்த குறிப்பு]

இந்தக் குறிப்பானது அடியிற் கண்ட ஹேஷ்யங்களின் மேல் தயார் செய்யப்பட்டிருக்கிறது:

1. கலப்பு அல்லது கூட்டுத் தொகுதிகளின் மூலமாகவும், எந்த சமூகத்தினருக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்காமலும் சாதாரண பிரதேச வாரியான பிரதிநிதித்துவம் ஏற்படுத்தப்படுகிறது.

2. 18-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுக்கப்படுகிறது; அல்லது ஒவ்வொரு சமூகத்தினரும் ஜனத் தொகையில் எந்த வீதாசாரம் இருந்து வருகிறார்களோ அதே வீதாசாரப்படி அந்த சமூகங்களுடைய ஓட்டர்களின் தொகையும் இருந்து வரும்படி செய்யக் கூடிய ஓட்டு சுதந்திரம் ஏற்படுத்தப்படுகிறது.

1921-ம் வருஷத்திய ஜன கணிதிக்கணக்கிலிருந்து இதில் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாபில் ஹிந்துக்களின் தொகை பெருகிவரும் வீதாசாரத்தைவிட முஸ்லீம்களுடைய தொகை பெருகிவரும் வீதாசாரமானது சிறிது அதிகமாக இருக்கிறது. இது மத மாற்றுதலால் ஏற்படவில்லையென்றும், விதவா விவாகம், முஸ்லீம்களிடையே விவாக வயதை உயர்த்தியது முதலிய சமூகச்சீர்திருத்தக் காரணங்களால்ஏற்பட்டிருக்கிறதென்றும் ஜன கணிதி ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிந்துக்களுக்குள் பால்ய விவாக முறை அனுஷ்டானத்திலிருந்து வருவதால், அந்த சமூகத்தில் சிசுக்களின் மரண விகிதம் அதிகமாக இருந்து வருகிறது. ஆகவே 1921-ம் வருஷத்திய ஜன கணிதிபின்படி இருந்து வந்த முஸ்லீம்களின் வீதாசாரம் இப்பொழுது சிறிதளவு அதிகரித்திருக்கலாம். அடுத்த ஜன கணிதியில் இவ்விதம் அவர்களுடைய ஜனத்தொகை அதிகரித்திருப்பது தெரியலாம். இதிலிருந்து முஸ்லீம்கள் சம்பந்தப்பட்டவரையில் இதில் கண்டிருக்கும் தொகை விவரங்கள் குறைவானவையென்றும், உண்மையில் அவர்களுடைய தொகை அதிகமாக இருக்கவேண்டுமென்றும் ஏற்படுகிறது.

ஒரு ஜன கணிதி ரிபோர்ட்டிலிருந்து ஜனத்தொகைக்குத் தகுந்தபடி சட்டசபைகளில் பிரதிநிதித்துவமேற்படுத்துவதைப் பற்றி சரியான முடிவுக்கு வருவதற்கில்லை. இது தொகுதிகளைப் பாகுபாடுடுத்துவதைப்

பெரும்பாலும் பொறுத்ததாக இருக்கும். ஒரு கலப்புத்தொகுதியில் ஒரு ஹிந்து ஓட்டர் ஹிந்து அபேக்ஷகருக்குத் தான் ஓட்டு செய்வாரென்பது நிச்சயமில்லை. அவ்விதம் செய்வது விரும்பத் தக்கதுமன்று. ஆனல் இந்தக் கணக்குகளில் இதற்காக எதையும் தள்ளிப் பார்ப்பது சாத்தியமில்லை. வகுப்பு அம்சத்தை அனுசரித்து இந்தப் பிரச்சினை கவனிக்கப்படுவதால், பொதுப் படையாக வகுப்புக் காரணங்களை அனுசரித்தே ஓட்டுக் கொடுக்கப்படுமென்று நாம் வைத்துக்கொள்ளவேண்டும். தொகுதிகள் ஏற்பட்டிராததால், ஜில்லா வாரியாகப் புள்ளி விவரங்களை அலசிப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு ஜில்லா முழுவதுமோ, அதில் ஒரு பாகமோ ஒரு தனித்தொகுதியாகவிருக்கலாம்.

1921-ம் வருஷத்திய ஜன கணிதிபின்படி சுதேச சமஸ்தானங்களை நீக்கி பஞ்சாபின் ஜனத்தொகை 20,685,024. சமூக வாரியான விவரம் பின் வருமாறு:—

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 11,444,321 | 55·3% |
| ஹிந்துக்கள் | 6,579,260 | 31·8% |
| சீக்கியர்கள் | 2,294,207 | 11·1% |
| இதரர்கள் (பெரும்பாலும் கிறிஸ்தவர்கள்) | 367,236 | 1·8% |
| | 20,685,024 | 100·0% |

எல்லா இதர சமூகங்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கையில் முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையோராக இருந்துவராதபோதிலும், அவர்கள் மெஜாரிட்டியாகஇருந்துவருகின்றனர். ஜனத்தொகையின் விநியோகத்தைஇன்னும் சிறிது ஊன்றிக் கவனிப்பின்,பஞ்சாபின் மொத்தப்புள்ளி விவரங்களிலிருந்து வெளிப்படுவதைக் காட்டிலும் முஸ்லீம்கள் அதிக வலுவுடையவர்களாக இருக்கிறார்களென்பது புலப்படும். ஹிந்துக்களும், சீக்கியர்களும் மாகாணத்தின் தென்பாகத்தில், அதாவது அம்பாலா, ஜலந்தர் டிவிஷன்களிலேயேஇப்பொழுது அதிகமாக இருந்துவருவதுதான் இதற்குக்காரணம். முஸ்லீம்கள் இந்த இரண்டு டிவிஷன்களிலும் மைனாரிட்டியாக இருந்துவருகின்றனர். இருந்த போதிலும் இதர இடங்களில் அவர்கள் மெஜாரிட்டியாக இருந்துவருவது இதைஈடுசெய்துவிடுகிறது.

பஞ்சாபை மூன்று தொகுதிகளாகப் பிரிவினை செய்யலாம். அவைகளாவன:—(1) முஸ்லீம்கள் மிகப்பெரும்பான்மையோராக இருந்துவரும் பிரதேசங்கள்; (2)முஸ்லீம்கள் மெஜாரிட்டியாகவுள்ள பிரதேசங்கள்; (3)ஹிந்துக்களும் சீக்கியர்களும் இருந்துவரும் பிரதேசங்கள். இப்பொழுது இருந்துவரும் டிவிஷன்கள் இந்தத் தொகுதிகளைக் குறிப்பிடுவதாக வைத்துக்கொண்டால், மூன்று தொகுதிகள் ஏற்படுகின்றன.

1. ராவல் பிண்டி, மூல்டான் டிவிஷன்கள் முஸ்லீம்கள் பிரதேசங்களாக இருந்துவருகின்றன. முஸ்லீம்கள் இங்கு மிகப்பெரும்பான்மையோராக, அதாவது முறையே 86.9%ம், 76.9% இருந்துவருகின்றனர்.

2. லாகூர் டிவிஷன் நடஸ்தமான இடம். இருந்தாலும் இந்தப் பிரதேசத்தில் முஸ்லீம்கள் 57% இருந்துவருகின்றனர். அதாவது, மற்ற எல்லா சமூகங்களின் தொகையையும்விட இவர்களுடைய தொகை அதிகமாக இருந்து வருகிறது.

3. அம்பாலா, ஜலந்தர் டிவிஷன்கள். இவை ஹிந்துக்களும், சீக்கியர்களும் அதிகமாக இருந்துவரும் இடங்கள். இங்கு முஸ்லீம்கள் முறையே 26 3%ம், 32.8%ம் இருந்துவருகின்றனர்.

இவ்விதம் வகுப்புவாரியாகப் பிரதேசங்கள் இருந்து வருவதிலிருந்து சட்டசபைப பிரதிநிதித்துவ விஷயத்தில் கூடமாக ஒரு முடிவுக்குவரக்கூடும். லட்சம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதியென்று வைத்துக்கொண்டால் பின்வருமாறு பிரதிநிதித்துவம் ஏற்படுகிறது:

| | | ஜனத்தொகை லக்ஷக்கணக்கில் | சட்டசபை அங்கத்தினர்கள் | |
|---|---|---|---|---|
| பஞ்சாப்...... | | 20,685 | 207 | |
| 1. | ராவல்பிண்டி டிவிஷன் | 3,461 | 35 | 77 |
| | மூல்டான் டிவிஷன் | 4,218 | 42 | |
| 2. | லாகூர் டிவிஷன் | 4,997 | 50 | 50 |
| 3. | அம்பாலா டிவிஷன் | 3,827 | 38 | 80 |
| | ஜலந்தர் டிவிஷன் | 4,182 | 42 | |
| | | | | 207 |

முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையோராக இருந்துவரும் பிரதேசங்களில் எல்லா ஸ்தானங்களையும் அவர்கள் கைப்பற்றிவிடுவார்களென்றும், ஹிந்துக்களும் சீக்கியர்களும் அதிகமாக இருந்துவரும் பிரதேசங்களில் எல்லா ஸ்தானங்களையும் அவர்கள் பிடித்துக்கொண்டு விடுவார்களென்றும் வைத்துக் கொள்ளலாம். ஆனல் இவ்விதமே முழுவதும் நடந்துவிடுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஒவ்வொரு டிவிஷனிலும் ஒவ்வொரு சமூகத்தினரே பிரதிநிதித்துவம் பெறுவது விரும்பத்தக்கதன்று. ஆனல் கூடமாக கணக்குப் போடுகையில் ஹிந்து - சீக்கிய பிரதேசத்தில் முஸ்லீம்கள் கைப்பற்றிக்கொள்ளும் ஸ்தானங்களுக்கு ஈடாக முஸ்லீம் பிரதேசத்தில் ஹிந்து-சீக்கியர்கள் பிடித்துக்கொண்டுவிடுவார்களென்று வைத்துக்கொள்ளலாம். வாஸ்தவத்தில் முஸ்

லீம் பிரதேசத்தில் ஹிந்து - சீக்கியருக்கு ஸ்தானங்களைக் கைப்பற்றுவதற்கு இருந்துவருவதைவிட அதிகவசதி ஹிந்து - சீக்கிய பிரதேசத்தில் முஸ்லீம்களுக்கு ஸ்தானங்களைக் கைப்பற்றுவதற்கு இருந்துவருகிறது. ஏனெனில் ராவல்பிண்டி, மூல்டான் டிவிஷன்களில் முஸ்லீம்கள் முறையே 86·9%ம், 76·9%ம் மிகப் பெரும்பான்மையோராக இருந்துவருகின்றனர்.

இவ்விதமாக முஸ்லீம்கள் தங்களுடைய பிரதேசத்தில் 77 ஸ்தானங்களையும், ஹிந்து - சீக்கியர்கள் தங்களுடைய பிரதேசத்தில் 80 ஸ்தானங்களையும் கைப்பற்றுவார்களென்ற முடிவுக்கு வருகிறோம். மூன்றாவதாகிய லாகூர் டிவிஷன் ஸ்தானங்கள் இருதொகுதியினருக்குள் பிரிவினையாகும். ஆனால் இங்கும் முஸ்லீம்களுக்கே அதிக ஸ்தானங்கள் கிடைக்கும். இங்கு முஸ்லீம்கள் 57% இருந்துவருகின்றனர். ஹிந்துக்கள் 20·7%ம், சீக்கியர்கள் 16·2%ம் தான் இருந்துவருகின்றனர். கிறிஸ்தவர்கள் முதலியவர்கள் 6·1% இருந்துவருகின்றனர். ஆனால் அவர்களுக்குப் பெரும்பான்மையோரான சமூகங்களுடன் எவ்விதத்தொடர்பும் இல்லாததாலும், அவர்கள் முஸ்லீம்களுக்கு எதிரிடையானவர்களென்றாவது, அல்லது ஹிந்து சீக்கியத் தொகுதியைச்சேர்ந்தவர்களென்றாவது நினைப்பதற்கு இடமில்லாததாலும், அவர்களைக் கணக்கிலிருந்துவிட்டுவிடலாம். முஸ்லீம்கள் 57% இருந்துவருகையில், ஹிந்துக்களும் சீக்கியர்களும் சேர்ந்து 36·9%தான் இருந்துவருகின்றனர். இவ்விதமாக முஸ்லீம்கள் ஹிந்துக்களையும் சீக்கியர்களையும்விட $1\frac{1}{2}$ பங்கு அதிகமாக இருந்துவருகின்றனர். இருதரத்தினருக்கும் வித்தியாசம் அதிகமாக இருப்பதால், முஸ்லீம்களுடைய சக்தியானது தேர்தலில் பிரதிபிம்பிக்காமலிருக்கமுடியாது. இந்தடிவிஷனிலிருந்து முஸ்லீம் மெஜாரிட்டியார் தங்களுடைய ஜனத்தொகைக்குரியதைவிட அதிக ஸ்தானங்களையே சாமான்யமாகப் பெறவேண்டும். ஆனால் ஜனத்தொகையின் வீதாசாரத்திற்குத் தகுந்தபடியே இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைப்பதாக வைத்துக்கொண்டாலும் இவர்களுக்கு 29 ஸ்தானங்கள் கிடைக்கும். இவர்கள் மிகப் பெரும்பான்மையோராக இருந்துவரும் பிரதேசத்தில் இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய 77 ஸ்தானங்களையும் சேர்த்துக்கொள்ளின், 207 அங்கத்தினர்களிருந்துவரும் சட்டசபையில் இவர்களுக்கு 106 ஸ்தானங்கள், அதாவது மற்றெல்லா சமூகத்தினருக்கும் சேர்த்துக்கிடைப்பதைவிட அதிக ஸ்தானங்கள் கிடைக்கும். ஹிந்து-சீக்கியர் அல்லாத இதர சமூகத்தினர் மைனாரிட்டியாகவே இருந்துவருவார்களாதலால், ஹிந்து, சீக்கிய அங்கத்தினர்களைவிட முஸ்லீம் அங்கத்தினர்களுடைய தொகை மிகவும் அதிகமாகவிருக்கும்.

ஹிந்து, சீக்கியருடைய உரிமைகள் ஒன்றுபட்டவையென்றும், எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்கள் ஒன்றுசேர்ந்துகொள்ளுவார்களென்றும் வைத்துக்கொள்ளுகையில்தான் இவ்வித நிலைமை ஏற்படுகிறது. இவ்விதம் நடைபெறுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. அவர்கள் எப்பொழுதும் ஒன்று சேர்ந்து

கொள்ளாமலிருப்பதும் சம்பாவிதம். இவ்வித நிலைமையில் முஸ்லீம்களுக்கு இருந்துவரும் மெஜாரிட்டி பலம் நன்றாகத் தெரியக் கூடியதாக இருக்கும்.

லாகூர் டிவிஷனை சந்தேகத்திற்குரிய விஷயமாதலால் அதை இன்னும் சிறிது விரிவாகப் பரிசீலனை செய்வோம். இந்த டிவிஷனிலுள்ள 6 ஜில்லாக்களில் ஸியால்கோட், குஜரான்வாலா, ஷேக்குபுரா இந்த ஜில்லாக்களில் முஸ்லீம்கள் அதிக மெஜாரிட்டியாக இருந்து வருகின்றனர். இந்த ஜில்லாக்களில் இதரர்கள் (கிறிஸ்தவர்கள் முதலியவர்கள்) பலர் இருந்து வருவதால், ஹிந்து—சீக்கியர் தொகையையும், முஸ்லீம்களின் தொகையையும் ஒப்பிடுகையில் முஸ்லீம்கள் தொகை பெருமிதமான மெஜாரிட்டியாக இருந்து வருகிறதென்றே சொல்லவேண்டும். இது சம்பந்தமான புள்ளி விவரங்களைக் கீழே காண்க:—

ஸியால்கோட் ஜில்லா

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 61·9% | . . 9½ ஸ்தானங்கள். |
| ஹிந்துக்கள் | 19·5% | |
| சீக்கியர்கள் | 8·0% | |
| இதரர்கள் | 10·5% | |

முஸ்லீம்கள் 61% இருந்துவருகையில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் சேர்ந்து 27·5% தான் இருந்து வருகின்றனர். அதாவது, ஹிந்துக்கள், சீக்கியர்கள் ஆகிய இருவரும் சேர்ந்து இருந்துவரும் தொகைக்கு இரட்டிப்புமடங்கு முஸ்லீம்கள் இருந்து வருகின்றனர்.

குஜரான்வாலா ஜில்லா

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 71·0% | . . 6¼ ஸ்தானங்கள். |
| ஹிந்துக்கள் | 15·8% | |
| சீக்கியர்கள் | 8·2% | |
| இதரர்கள் | 5·1% | |

முஸ்லீம்கள் 71% இருந்துவருகையில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் சேர்ந்து 24% தான் இருந்து வருகின்றனர். அதாவது, ஹிந்துக்கள் சீக்கியர்கள் இவர்களுடைய ஜனத்தொகைக்கு 3 பங்கு முஸ்லீம்கள் இருந்து வருகின்றனர்.

ஷேக்குபுரா ஜில்லா

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 63·3% | . . 5¼ ஸ்தானங்கள் |
| ஹிந்துக்கள் | 16·0% | |
| சீக்கியர்கள் | 15·9% | |
| இதரர்கள் | 4·8% | |

முஸ்லீம்கள் 63·3% இருந்துவருகையில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் 31·9% தான் இருந்துவருகின்றனர். இவ்விதமாக ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் இரட்டிப்பு மடங்கு முஸ்லீம்கள் இருந்துவருகின்றனர்.

இந்த மூன்று ஜில்லாக்களிலும் முஸ்லீம்கள் அசைக்கமுடியாத நிலைமையிலிருந்துவருகின்றனர். இவைகள் முஸ்லீம் பிரதேசத்தின் ஒருபகுதியாகவே இருக்கின்றன. ஆகையால் அதனுடனேயே இவைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த ஜில்லாக்கள் சட்டசபைக்கு 21 அங்கத்தினர்களை அனுப்ப சுதந்திரமுடையவைகளாக இருக்கும். முஸ்லீம்கள் பெருமிதமாக இருந்துவரும் பிரதேசங்களிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய 77 ஸ்தானங்களுடன் இந்த 21 ஸ்தானங்களையும் சேர்த்துக்கொண்டால் 98 ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைத்து விடுகின்றன.

லாகூர் டிவிஷனைச்சேர்ந்த இதர ஜில்லாக்களின் நிலைமை பின்வருமாறு:—

லாகூர் ஜில்லா

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 57·3% | .. 11 ஸ்தானங்கள் |
| ஹிந்துக்கள் | 21·5% | |
| சீக்கியர்கள் | 15·9% | |
| இதரர்கள் | 5·3% | |

இந்த ஜில்லாவில் முஸ்லீம்கள் 57·3% இருந்துவருகையில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் சேர்ந்து 37·4% தான் இருந்துவருகின்றனர். வடஜில்லாக்களைப் போல் முஸ்லீம்கள் அதிக மெஜாரிட்டியாக இந்த ஜில்லாவிலிருந்துவரவில்லை. இருந்தாலும் அவர்களுக்கு நல்ல மெஜாரிட்டி இருந்துவருகிறது. ஹிந்துக்கள், சீக்கியர்கள் இவர்களுக்கு 1½ மடங்கு முஸ்லீம்கள் இருந்துவருகின்றனர்.

அமிர்தசரஸ் ஜில்லா

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 45·6% | .. 9 ஸ்தானங்கள் |
| ஹிந்துக்கள் | 21·6% | |
| சீக்கியர்கள் | 30·9% | |
| இதரர்கள் | 1·8% | |

இந்த ஜில்லாவில் முஸ்லீம்கள் 45·6% இருந்துவருகையில், ஹிந்துக்களும் சீக்கியர்களும் சேர்ந்து 52·5% இருந்துவருகின்றனர். அதாவது, அவர்கள் முஸ்லீம்களைவிட அதிகத் தொகையினராக இருந்துவருகின்றனர்.

குருதாஸ்பூர் ஜில்லா

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 49·6% | .. 8½ ஸ்தானங்கள் |
| ஹிந்துக்கள் | 26·0% | |
| சீக்கியர்கள் | 16·2% | |
| இதரர்கள் | 8·2% | |

இங்கு ஹிந்துக்கள், சீக்கியர்கள் இவர்களைவிட அதிகமாக முஸ்லீம்கள் இருந்துவருகின்றனர். அதாவது அவ்விரு சமூகத்தினரும் 42·2% இருந்துவருகையில் முஸ்லீம்கள் 49·6% இருந்துவருகின்றனர். அமிர்தசரஸ் ஜில்லாவின் நிலைமை இங்கு தலைகீழாகமாறியிருக்கிறது. 'இதரர்களும்' பலர் இங்கு இருந்துவருகின்றனர்.

இவ்விதமாக இந்தமூன்று ஜில்லாக்களில் லாகூரில் முஸ்லீம்கள் அதிகசக்தியுடையவர்களாகவும், குருதாஸ்பூரில் கூடியவரையில் சக்தியுடையவர்களாகவும், அமிர்தசரஸில் பலஹீனமான ஸ்திதியிலும் இருந்துவருகின்றனர். இருந்தாலும் கடைசி ஜில்லாவிலும் அவர்கள்தான் அதிகத் தொகையுள்ள ஒரு சமூகத்தினர்.

இந்த ஜில்லாக்களிலும், முக்கியமாக லாகூரிலும், முஸ்லீம்கள் சில ஸ்தானங்களைக் கைப்பற்றிவிடக்கூடும்.

ஆகவே லாகூர் டிவிஷன் பிரதிநிதிகளில் முஸ்லீம்களே அதிகமாக இருப்பார்கள். இந்தத் தொகையுடன் முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையோராகவுள்ள வட பிரதேசம், மேல்பிரதேசம் இவைகளிலிருந்து அவர்களுக்குக்கிடைக்கும் ஸ்தானங்களையும் சேர்த்துக்கொண்டால் அவர்களுக்கு நிச்சயமான மெஜாரிட்டி கிடைத்துவிடும்.

வேறொரு வழியிலும் இந்தப் பிரச்சினையைக் கவனிக்கலாம். டிவிஷன் வரியாகக் கவனிக்காமல் ஜில்லாக்கள் வாரியாக எடுத்துக் கொள்ளலாம். இதனால் இன்னும் தெளிவாக இப்பொழுது இருந்துவரும் நிலைமை தெரியும். பஞ்சாபில் 29 ஜில்லாக்கள் இருந்து வருகின்றன. இவைகளை (1) முஸ்லீம்கள் அசைக்க முடியாத நிலைமையிலிருந்து வரும் பிரதேசம், (2) 1-வது தொகுதியிலிருப்பது போல் அவ்வளவு பெருமிதமாக முஸ்லீம்கள் இல்லாத போதிலும் அவர்கள் மெஜாரிட்டியாக இருந்துவரும் பிரதேசம், (3) எந்த சமூகத்தினரும் அதிகத் தொகையினராக இல்லாமலிருந்துவரும் பிரதேசம், (4) ஹிந்து-சீக்கியர்கள் பெரும்பாலோராக இருந்துவரும் பிரதேசம் என்று நான்கு பகுதிகளாகப் பிரிவினை செய்யலாம்.

## I முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையோராக இருந்து வரும் ஜில்லாக்கள்.

| | ஜில்லா | முஸ்லீம் ஜனத்தொகையின் வீதாசாரம் | சட்ட சபையில் ஸ்தானங்கள் |
|---|---|---|---|
| 1. | குஜராத் | 86·2 | 8 |
| 2. | ஷாப்பூர் | 82·8 | 7 |
| 3. | ஜீலம் | 88·7 | 5 |
| 4. | ராவல்பிண்டி | 82·6 | 6 |
| 5. | அட்டாக் | 90.9 | 5 |
| 6. | மியான்வாளி | 86·3 | 4 |
| 7. | மாண்ட் கோமரி | 71·8 | 7 |
| 8. | லியால்பூர் | 60·7 | 10 |
| 9. | ஜாங்க் | 83.3 | 6 |
| 10. | மூல்டான் | 82·2 | 9 |
| 11. | முஸபர்கார் | 86.8 | 5½ |
| 12. | டேராகாஸிகான் | 88.3 | 5 |
| 13. | ஸியால்கோட் | 61·9 | 9½ |
| 14. | குஜரான் வாலா | 71·0 | 6 |
| 15. | ஷேக்கு புரா | 63.3 | 5 |
| | | | 98 |

## II. முஸ்லீம்கள் பெரும்பான்மையோராக இருந்துவரும் ஜில்லாக்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | லாகூர் | | |
| | ஹிந்துக்கள் | 21·5 | |
| | முஸ்லீம்கள் | 57·3 | ... ... 11 |
| | சீக்கியர்கள் | 15·9 | |
| | இதரர்கள் | 5·3 | |
| 2. | குருதாஸ்பூர் | | |
| | ஹிந்துக்கள் | 26.0 | |
| | முஸ்லீம்கள் | 49.6 | ... ... 8½ |
| | சீக்கியர்கள் | 16.2 | |
| | இதரர்கள் | 8.2 | |
| | | | 19½ |

III. எந்தசமூகத்தினரும் பெரும்பான்மையோர்ராக இருந்துவரா்த் ஜில்லாக்கள்.

1. ஜலந்தர்

| | | |
|---|---|---|
| ஹிந்துக்கள் | 29.4 | |
| சீக்கியர்கள் | 25.1 | |
| முஸ்லீம்கள் | 44.5 | ... ... 8 |
| இதரர்கள் | 1.0 | |

2. பெரோஸ்பூர்

| | | |
|---|---|---|
| ஹிந்துக்கள் | 27.6 | |
| சீக்கியர்கள் | 27.6 | |
| முஸ்லீம்கள் | 43.9 | ... ... 11 |
| இதரர்கள் | .9 | |

3. அமிர்தசரஸ்

| | | |
|---|---|---|
| ஹிந்துக்கள் | 21.6 | |
| சீக்கியர்கள் | 30.9 | |
| முஸ்லீம்கள் | 45.6 | ... ... 9 |
| இதரர்கள் | 1.8 | |

28

இந்த மூன்று ஜில்லாக்களிலும் முஸ்லீம்களே அதிகத்தொகையுள்ள தனிப்பட்ட சமூகத்தினராக இருந்து வருகிறார்கள்.

IV. ஹிந்து - சீக்கியர்கள் மிகப் பெரும்பான்மையினராகவோ பெரும்பான்மையினராகவோ இருந்துவரும் ஜில்லாக்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஹிஸ்ஸார் | ஹி. | 66.1 | 8 |
| 2. | ரோடக் | ஹி. | 78.0 | 8 |
| 3. | குர்கான் | ஹி. | 66.7 | 7 |
| 4. | கர்னல் | ஹி. | 67.5 | 8 |
| 5. | அம்பாலா | ஹி. | 53.8 | 7 |
| 6. | ஸிம்லா | ஹி. | 71.2 | ½ |
| 7. | காங்க்ரா | ஹி. | 94.0 | 8 |
| 8. | ஹோஷியார்பூர் | ஹி. | 53.3 | 9 |
| 9. | லூடியானா | ஹி. | 23.6 | |
| | | சீ. | 41.5 | |
| | | மு. | 34.0 | . . 6 |
| | | இ. | .9 | |
| | | | | 61½ |

| | |
|---|---|
| இக்கணக்கின்படி முஸ்லீம்களுக்கு அவர்களை அசைக்க முடியாத நிலைமையிலிருந்துவரும் 15 ஜில்லாக்களிலிருந்து | 98 |
| அவ்விதம் ஹிந்துக்கள் இருந்துவரும் ஜில்லாக்களிலிருந்து | 61½ |
| பெரும்பான்மையோர் முஸ்லீம்களாக இருந்துவரும் இரண்டு ஜில்லாக்களிலிருந்து | 19½ |
| எந்த சமூகத்தினரும் மிகப் பெரும்பான்மையோராக இருந்துவராதபோதிலும் இதர எந்த சமூகத்தினரையும்விட அதிகத் தொகையினராக முஸ்லீம்கள் இருந்துவரும் மூன்று ஜில்லாக்களிலிருந்து | 28 |
| | 207 |

104 ஸ்தானங்கள் கிடைத்தால் சட்டசபையில் மெஜாரிட்டி ஏற்பட்டு விடும்.

ஜில்லா வாரியாகப் புள்ளி விவரங்களை அலசிப் பார்த்ததிலிருந்து அடியிற்கண்ட முடிவுக்கு வருகிறோம்:—

| | |
|---|---|
| 1. முஸ்லீம்கள் அசைக்கமுடியாத நிலைமையிலிருந்து வரும் ஜில்லாக்களிலிருந்துமட்டில் அவர்களுக்கு 98 ஸ்தானங்கள் கிடைக்கின்றன. அதாவது, மொத்தத் தொகையில், | 47·3% |
| 2. ஹிந்துக்களும் சீக்கியர்களும் அதிகமாக இருந்து வரும் பிரதேசங்களிலிருந்து அவர்களுக்கு 61½ ஸ்தானங்கள் கிடைக்கின்றன. அதாவது மொத்த ஸ்தானங்களில் | 29·8% |
| 3. முஸ்லீம்கள் அதிகமாக இருந்துவரும் இரண்டு ஜில்லாக்களுக்கு 19½ ஸ்தானங்கள் இருக்கின்றன. அதாவது மொத்த ஸ்தானங்களில் | 9·4% |
| 4. எல்லா சமூகத்தினரும் கூடியவரையில் நிரவியிருந்தும், முஸ்லீம்கள் தனிப்பட்ட அதிகத் தொகையுள்ள சமூகத்தினராக இருந்துவரும் 3 ஜில்லாக்களிலிருந்து 28 ஸ்தானங்கள், அதாவது மொத்தத்தில் | 13·5% |
| | 100·0% |

முஸ்லீம்கள் அதிகமாகவுள்ள 2-வது தொகுதிக்குள்ள 19½ ஸ்தானங்களில் 10 ஸ்தானங்களாவது முஸ்லீம்களுக்குக் கிடைக்கும். அவர்கள் மிகப் பெரும்பான்மையினராக இருந்துவரும் பிரதேசங்களிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஸ்தானங்களுடன் இவைகளையும் சேர்த்தால் அவர்களுக்கு 108 ஸ்தானங்கள் கிடைத்து விடுகின்றன. அதாவது, அவர்களுக்கு நிச்சயமாக மெஜாரிட்டி கிடைத்து விடுகிறது. 3-வது தொகுதியிலும் அவர்களே அதிகத் தொகையினரான தனிப்பட்ட சமூகத்தினராக இருந்து வருவதால் அவர்களுக்கு அதிலும் சில ஸ்தானங்கள் கிடைக்கும். 28 ஸ்தானங்களில் 12 ஸ்தானங்களையாவது அவர்கள் இந்தத் தொகுதியில் எதிர்பார்க்கலாம். இதனால் மொத்தம் 207 ஸ்தானங்களில் அவர்களுக்கு 120 ஸ்தானங்கள் கிடைத்து விடுகின்றன; அதாவது மொத்தத்தில் 58% ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைத்து விடுகின்றன. இவ்விதமாக மிகவும் அடக்கமாகக் கணக்குப் பார்த்தும் சட்டசபையில் அவர்களுக்கு 58% ஸ்தானங்கள் கிடைத்து விடுகின்றன.

## பஞ்சாப் (பிரிட்டிஷ் பிரதேசம்.)

### விவரமான ஜனத்தொகைக் கணக்கு.

பஞ்சாப்

| | | | |
|---|---|---|---|
| மொத்த ஜனத்தொகை | 20,685,024 | ... | 100 |
| முஸ்லீம்கள் | 11,444,321 | ... | 55·3% |
| ஹிந்துக்கள் | 6,579,260 | ... | 31·8% |
| சீக்கியர்கள் | 2,294,207 | ... | 11·1% |
| இதரர்கள் (பெரும்பாலும் கிறிஸ்தவர்கள்) | 367,236 | ... | 1·8% |

## பஞ்சாப் டிவிஷன்கள்.

(ஜனத்தொகை ஆயிரக்கணக்கில்.)

அம்பாலா டிவிஷன்

| | ஜனத்தொகை | வீதாசாரம் | லட்சத்திற்கு ஒரு ஸ்தானம் வீதம் சட்ட சபையில் ஸ்தானங்கள் |
|---|---|---|---|
| மொத்தம் | 8827 | 100 | .. 38 |
| ஹி | 2556 | 66·6 | |
| மு | 1006 | 26·3 | |
| சி | 158 | 4·2 | |
| இ | 106 | 2·8 | |

ஜலந்தர் டிவிஷன்

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 4128 | 100 | . 42 |
| ஹி | 1893 | 45 | |
| மு | 1370 | 32.8 | |
| சீ | 880 | 21.0 | |
| இ | 40 | ·9 | |

லாகூர் டிவிஷன்

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 4997 | 100 | . . 50 |
| ஹி | 1033 | 20 7 | |
| மு | 2849 | 57.0 | |
| சீ | 813 | 16.2 | |
| இ | 308 | 6.1 | |

ராவல்பிண்டி டிவிஷன்

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 3461 | 100 | . . 35 |
| ஹி | 296 | 8·5 | |
| மு | 2973 | 86·0 | |
| சீ | 153 | 4·4 | |
| இ | 38 | 1·1 | |

முல்டான் டிவிஷன்

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 4218 | 100 | . . 42 |
| ஹி | 602 | 14·3 | |
| மு | 3246 | 76·9 | |
| சீ | 290 | 6·9 | |
| இ | 80 | 1·9 | |

குறிப்பு— ஹி = ஹிந்துக்கள் மு = முஸ்லீம்கள் சீ = சீக்கியர்கள்
இ = இதரர்கள்

# பஞ்சாப் ஜில்லாக்கள்.

## 1. பெரும்பான்மையோர் முஸ்லீம்களாக வுள்ள ஜில்லாக்கள்.

| ஜில்லா. | | ஜனத்தொகை ஆயிரக்கணக்கில் | வீதாசாரம் | சட்ட சபையில் ஸ்தானங்கள் |
|---|---|---|---|---|
| 1. குஜராத் | மொ | 824 | 100 | 8·2 |
| | ஹி | 59 | 7·2 | |
| | மு | 710 | 86·2 | |
| | சீ | 49 | 6·0 | |
| | இ | 6 | ·7 | |
| 2. ஷாப்பூர் | மொ | 720 | 100 | 7·2 |
| | ஹி | 79 | 11 | |
| | மு | 596 | 82·8 | |
| | சீ | 30 | 4·2 | |
| | இ | 15 | 2·1 | |
| 3. ஜீலம் | மொ | 477 | 100 | 4·8 |
| | ஹி | 33 | 6·9 | |
| | மு | 423 | 88·7 | |
| | சீ | 19 | 4·0 | |
| | இ | 2 | ·4 | |
| 4. ராவல்பிண்டி | மொ | 569 | 100 | 5.7 |
| | ஹி | 55 | 9·7 | |
| | மு | 470 | 82·6 | |
| | சீ | 32 | 5.6 | |
| | இ | 12 | 2·1 | |
| 5. அட்டாக் | மொ | 512 | 100 | 5.1 |
| | ஹி | 25 5 | 5·0 | |
| | மு | 465 5 | 90·9 | |
| | சீ | 20 | 3 9 | |
| | இ | 1 | ·2 | |
| 6. மியான்வாளி | மொ | 358 | 100 | 3·6 |
| | ஹி | 45 | 12 6 | |
| | மு | 309 | 86·3 | |
| | சீ | 3 | ·8 | |
| | இ | 1 | ·3 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | மாண்ட்கோமரி | மொ | 714 | 100 | |
| | | ஹி | 92 | 12·9 | |
| | | மு | 513 | 71·8 | .. 7·1 |
| | | சீ | 96 | 13·4 | |
| | | இ | 13 | 1·8 | |
| 8. | லியால்பூர் | மொ | 980 | 100 | |
| | | ஹி | 177 | 18.1 | |
| | | மு | 595 | 60 7 | .. 9 8 |
| | | சீ | 161 | 16.4 | |
| | | இ | 47 | 4.8 | |
| 9. | ஜாங்க் | மொ | 570 | 100 | |
| | | ஹி | 84 | 14 7 | |
| | | மு | 475 | 83 3 | .. 5.7 |
| | | சீ | 9 | 1·6 | |
| | | இ | 2 | .4 | |
| 10. | மூல்டான் | மொ | 890 | 100 | |
| | | ஹி | 129 | 14.5 | |
| | | மு | 732 | 82.2 | .. 8.9 |
| | | சீ | 18 | 2 0 | |
| | | இ | 11 | 1.2 | |
| 11. | முஸபர்கார் | மொ | 568 | 100 | |
| | | ஹி | 66 | 11.6 | |
| | | மு | 493 | 86.8 | .. 5·7 |
| | | சீ | 5 | . 9 | |
| | | இ | 4 | ·7 | |
| 12. | டேரா காஸிகான் | மொ | 496 | 100 | |
| | (பிலோக் பிரதேசம் | ஹி | 54 | 10·9 | |
| | உள்பட ) | மு | 438 | 88·3 | .. 5.0 |
| | | சீ | 1 | ·2 | |
| | | இ | 3 | .6 | |
| 13. | ஸியால்கோட் | மொ | 938 | 100 | |
| | | ஹி | 183 | 19·5 | |
| | | மு | 581 | 61·9 | .. 9·4 |
| | | சீ | 75 | 8·0 | |
| | | இ | 99 | 10·5 | |
| 14. | குஜரன்வாலா | மொ | 623 | 100 | |
| | | ஹி | 98 | 15 8 | |
| | | மு | 443 | 71 0 | .. 6·2 |
| | | சீ | 51 | 8·2 | |
| | | இ | 31 | 5.1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. ஷேக்குபுரா | மொ | 523 | 100 | .. 5 2 |
| | ஹி | 84 | 16·0 | |
| | மு | 331 | 63·3 | |
| | சீ | 83 | 15 9 | |
| | இ | 25 | 4·8 | |

15 ஜில்லாக்கள் — 97·6 அங்கத்தினர்கள்

II. முஸ்லீம்கள் அதிகமாகவுள்ள ஜில்லாக்கள்.

(1-வது தொகுதியிலிருப்பதைப்போல் அவ்வளவு அதிகமாக இல்லாத போதிலும், ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் சேர்த்துக் கூட்டுதல் கும் தொகையைவிட அதிகமாக முஸ்லீம்கள் இருந்துவரும் இடங்கள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. லாகூர் | மொ | 1131 | 100 | .. 11·3 |
| | ஹி | 243 | 21 5 | |
| | மு | 648 | 57 3 | |
| | சீ | 180 | 15·9 | |
| | இ | 60 | 5 3 | |
| 2. குருதாஸ்பூர் | மொ | 852 | 100 | .. 8·5 |
| | ஹி | 222 | 26·0 | |
| | மு | 423 | 49·6 | |
| | சீ | 137·5 | 16·2 | |
| | இ | 69.5 | 8·2 | |

2 ஜில்லாக்கள் — 19·8 அங்கத்தினர்கள்

III. எந்த சமூகத்தினரும் அதிகத்தொகையினராக இல்லாத போதிலும் முஸ்லீம்கள் அதிகத் தொகையினரான தனிப்பட்ட சமூகமாக இருந்துவரும் ஜில்லாக்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஜலந்தர் | மொ | 822.5 | 100 | .. 8 2 |
| | ஹி | 242 | 29·4 | |
| | மு | 366·5 | 44.5 | |
| | சீ | 206 | 25·1 | |
| | இ | 8 | 1·0 | |
| 2. பெரோஸ்பூர் | மொ | 1098 | 100 | .. 11 |
| | ஹி | 303 | 27·6 | |
| | மு | 482 | 43·9 | |
| | சீ | 303 | 27·6 | |
| | இ | 10 | ·9 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | அமிர்தசரஸ் | மொ | 929 | 100 | |
| | | ஹி | 201 | 21·6 | |
| | | மு | 424 | 45·6 | .. 9·3 |
| | | சீ | 287 | 30·9 | |
| | | இ | 17 | 1·8 | |
| 3 ஜில்லாக்கள் | | | | 28·5 அங்கத்தினர்கள் | |

IV. ஹிந்து-சீக்கியர்கள் மிகப் பெரும்பான்மையினராகவோ, மெஜாரிட்டியாகவோ இருந்துவரும் பிரதேசங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஹிஸ்ஸார் | மொ | 817 | 100 | |
| | | ஹி | 540 | 66·1 | |
| | | மு | 216 | 26·4 | .. 8·2 |
| | | சீ | 46 | 5-6 | |
| | | இ | 15 | 1·8 | |
| 2 | ரோடாக் | மொ | 772 | 100 | |
| | | ஹி | 602 | 78·0 | |
| | | மு | 125 | 16·2 | .. 7·7 |
| | | சீ | 1 | ·1 | |
| | | இ | 44 | 5·7 | |
| 3 | குாகான் | மொ | 682 | 100 | |
| | | ஹி | 455 | 66·7 | |
| | | மு | 217 | 31·8 | .. 6·8 |
| | | சீ | 1 | ·1 | |
| | | இ | 9 | 1·3 | |
| 4 | கர்னல் | மொ | 829 | 100 | |
| | | ஹி | 560 | 67·5 | |
| | | மு | 236 | 28·5 | .. 8·3 |
| | | சீ | 12 | 1.4 | |
| | | இ | 21 | 2·6 | |
| 5 | அம்பாலா | மொ | 682 | 100 | |
| | | ஹி | 367 | 53·8 | |
| | | மு | 206 | 30·2 | .. 6·8 |
| | | சீ | 98 | 14·4 | |
| | | இ | 11 | 1·6 | |
| 6 | ஸிம்லா | மொ | 45 | 100 | |
| | | ஹி | 32 | 71·2 | |
| | | மு | 7 | 15·5 | .. ·4 |
| | | சீ | 1 | 2·2 | |
| | | இ | 5 | 11·1 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | காங்ரா | மொ | 766 | 100 | |
| | | ஹி | 722.3 | 94.0 | |
| | | மு | 38.3 | 5.0 | .. 7.7 |
| | | சீ | 2 | ·3 | |
| | | இ | 3.4 | ·7 | |
| 8. | ஹோஷியாப்பூர் | மொ | 927 | 100 | |
| | | ஹி | 494 | 53.3 | |
| | | மு | 289 | 31.2 | .. 9.3 |
| | | சீ | 133 | 14.3 | |
| | | இ | 11 | 1.2 | |
| 9. | லூடியாணு | மொ | 568 | 100 | |
| | | ஹி | 134 | 23.6 | |
| | | மு | 193 | 34.0 | .. 5.7 |
| | | சீ | 236 | 41.5 | |
| | | இ | 5 | ·9 | |
| 9 ஜில்லாக்கள் | | | | | 60.9 ஸ்தானங்கள் |

நாமாக ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதில்லாமல் இயற்கையாகவே பஞ்சாபின் முக்கால்பாகத்தில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. நாலிலொரு பாகத்திற்குக் குறைவாகவுள்ள பிரதேசத்தில்தான் அவரவர்கள் தங்களுடைய சாமர்த்தியத்தைக்கொண்டு ஸ்தானங்களுக்குப் போட்டிபோடக்கூடும். ஜனத்தொகை விநியோகமாகியிருக்கும் வழியானது மெஜாரிட்டி சமூகத்தினரான முஸ்லீம்களுக்கு அதிக அனுகூலத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது.

# பி. அநுபந்தம்

**வங்காளத்தின் ஜனத்தொகையில் மதவாரியான பிரிவைப் பற்றிய குறிப்பு.**

1921-ம் வருஷத்திய ஜன கணிதிபின்படி வங்காளத்திலிருந்து வரும் பிரிட்டிஷ் பிரதேசத்தின் ஜனத்தொகை 46,695,536. இந்தத் தொகையின் மத வாரியான பிரிவினை பின் வருமாறு:—

| | | |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 25,210,802 | 54·0% |
| ஹிந்துக்கள் | 20,203,527 | 43·3% |
| இதரர்கள் | 1,281,207 | 2·7% |

“இதரர்கள்” கோஷ்டியில் முக்கியமாக மலைச் சாதியினரும் கிறிஸ்தவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். மலைச்சாதியினர் பெரும்பாலும் மலைப்பிரதேசங்களிலேயே வசித்துவருகிறார்கள். ஜெயினர்கள், புத்தர்கள் இவர்களும் இந்த இதரர்களில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் அதிகமாக இருந்துவரவில்லை.

முஸ்லீம்கள் மற்றெல்லா சமூகத்தாரையும்விட 4% அதிகமாக இருந்து வருகிறார்கள். இம்மெஜாரிட்டியானது எங்கும் நிரவி இருக்கவில்லை. ஹிந்துக்கள் மாகாணத்தின் ஒருபாகமாகிய பர்ட்வான் டிவிஷனிலும் பிரஸிடென்ஸி டிவிஷனில் ஒருபாகத்திலும் அதிகமாக இருந்து வருகிறார்கள். இதனால்முஸ்லீம்களின் மெஜாரிட்டியானது இதர இடங்களில் 4%க்கு அதிகமாக இருந்து வருகிறது. இந்த டிவிஷன்களைப்பொதுப்படையாகப்பரிசீலனை செய்கையில் 3 டிவிஷன்கள் பெரும்பாலும் முஸ்லீம்களே அடங்கியதாக இருக்கின்றனவென்றும், ஒரு டிவிஷன்பெரும்பாலும் ஹிந்துக்களே அடங்கியதாக இருக்கிறதென்றும், இன்னொரு டிவிஷனில் நிரவியிருந்த போதிலும் ஹிந்துக்கள் 4% மெஜாரிட்டியாக இருந்துவருகிறார்களென்றும் தெரிகிறது.

| அ முஸ்லீம் பிரதேசம். | லட்சத்திற்கு ஒருவர் வீதம் சட்டசபைப் பிரதிநிதிகள். |
|---|---|
| 1. சிட்டகாங் டிவிஷன் | 60 |
| முஸ்லீம்கள்... 72· 6% | |
| ஹிந்துக்கள்... 23· 8% | |
| 2. டாக்கா டிவிஷன் | 128 |
| முஸ்லீம்கள் 69·7% | |
| ஹிந்துக்கள் 29·7% | |

| | |
|---|---|
| 3. ராஜஷாஹி டிவிஷன் | 103 |
| முஸ்லீம்கள்... 61·4% | |
| ஹிந்துக்கள்... 33·7% | |

ஆ. ஹிந்துக்கள் அதிகமாக இருந்துவரும் பிரதேசம்;

| | |
|---|---|
| 4. பர்ட்வான் டிவிஷன் | 80 |
| முஸ்லீம்கள் 13·4% | |
| ஹிந்துக்கள் 82·4% | |

(இ) ஹிந்துக்கள் மிதமாக இருந்துவரும் பிரதேசம்.

| | |
|---|---|
| 5. பிரசிடென்ஸி டிவிஷன் | 95 |
| முஸ்லீம்கள் 47·5% | |
| ஹிந்துக்கள் 51.4% | |
| இந்த வீதாசாரப்படி மொத்த ஸ்தானங்கள் | 466 |

முஸ்லீம் பிரதேசங்களுக்காக 291 ஸ்தானங்கள் இருந்துவருகின்றன; ஹிந்துக்கள் அதிகமாக இருந்துவரும் பிரதேசங்களுக்காக 80 ஸ்தானங்களும், ஹிந்துக்கள் சமமாக இருந்துவரும் பிரதேசங்களுக்காக 95 ஸ்தானங்களும் இருந்துவருகின்றன. லட்சம் ஜனங்களுக்கு ஒரு ஸ்தானம் வீதம் பிரதிநிதித்துவம்கொடுத்தால் சட்டசபையில் 466 ஸ்தானங்கள் ஏற்படுகின்றன. இந்தத் தொகையில் 234 மெஜாரிட்டியாகிவிடும். முஸ்லீம்கள் அதிகமாக இருந்துவரும் பிரதேசங்களுக்குமட்டில் 291 ஸ்தானங்கள் இருந்துவருகின்றன; அதாவது, மெஜாரிட்டிக்கு வேண்டியதைவிட 57 ஸ்தானங்கள் அதிகமாக இருந்துவருகின்றன. பிரசிடென்ஸி டிவிஷனில் முஸ்லீம்கள் 47·5% இருந்துவருகின்றனர். ஆகையால் அவர்களை அலக்ஷியம் செய்துவிடலாமென்று நினைப்பதற்கில்லை. இங்கு பல ஸ்தானங்களை அவர்கள் கைப்பற்றுவார்கள். ஜனத்தொகையானது விநியோகமாகியிருக்கும் நிலைமையில் அவர்களுடைய ஜனத்தொகைக்குரியதைவிட அதிக ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைக்கும். பொருளாதாரத்துறையிலோ, அல்லது கல்வித்துறையிலோ அவர்கள் பின்னடைந்த நிலைமையில் இருக்கலாம். ஆனால் முஸ்லீம்கள் அதிகமாகவிருந்துவரும் பிரதேசங்களிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தைஇது அடித்துவிட முடியாது.

ஜனத்தொகையின் விவரத்தை ஜில்லாவாரியாக இன்னும் விரிவாகப் பரிசீலனை செய்யலாம். மதவாரியான புள்ளி விவரங்களை இந்தக் குறிப்பின் கடைசியில் கொடுத்திருக்கிறோம். இந்த விவரங்களைப் பின்வருமாறு வகுக்கலாம்:—

அ- முஸ்லீம்கள் மிகவும் அதிகமாகவுள்ள ஜில்லாக்கள்.

| | | சட்ட சபை ஸ்தானங்கள் |
|---|---|---|
| சிட்டகாங் | ... | 16 |
| நோக்கஹாலி | ... | 15 |
| டிப்பரா | ... | 27 |
| மைமன்சிங் | ... | 48 |
| பாக்கர்கஞ்ச் | ... | 26 |
| பரீட்பூர் | ... | 23 |
| டாக்கா | ... | 31 |
| பாப்னு | ... | 14 |
| போக்ரா | ... | 10 |
| ரங்க்பூர் | ... | 25 |
| ராஜஷாஹி | ... | 15 |
| ஜெஸ்ஸூர் | ... | 17 |
| நாடியா | ... | 15 |
| | | 282 |

ஆ. முஸ்லீம்கள் அதிகமாகவுள்ள ஜில்லாக்கள்.

| | | |
|---|---|---|
| மூர்ஷிடாபாட் | ... | 13 |
| மால்டா | ... | 10 |
| | | 23 |

இ. ஹிந்துக்கள் மிகவும் அதிகமாக இருந்துவரும் ஜில்லா.

| | | |
|---|---|---|
| ஜல்பெய்குரி | ... | 9 |

ஈ. நிரவியிருக்கும் ஜில்லாக்கள்.

| | | |
|---|---|---|
| குல்னு | ... | 14 |
| டினஜ்பூர் | ... | 17 |
| சிட்டகாங் மலைப்பிரதேசங்கள் | | 2 |
| | | 33 |

உ. ஹிந்துக்கள் அதிகமாக இருந்துவரும் ஜில்லாக்கள்.

| | | |
|---|---|---|
| பர்ட்வான் | ... | 14 |
| பிர்பம் | ... | 8 |
| பாங்கூரா | ... | 10 |
| மிதுனபுரி | ... | 27 |
| ஹூக்ளி | ... | 11 |
| ஹௌரா | ... | 10 |
| 24 பர்கானுக்கள் | ... | 26 |
| கல்கத்தா | ... | 9 |
| டார்ஜிலிங் | ... | 3 |
| | | 118 |

டிவிஷன்கள்வாரியான புள்ளி விவரங்களைப் பரிசீலனை செய்ததில் ஏற்பட்ட முடிவே ஜில்லாவாரியாகப் பரிசீலனை செய்வதாலும் ஏற்படுகிறது. முஸ்லீம்களும், ஹிந்துக்களும் அதிகமாக இருந்துவரும் பிரதேசங்கள் அந்தந்த சமூகத்தினருடைய பிளாக்குகள். மதவாரியாக ஓட்டுக் கொடுப்பதெனில் அந்தந்த இடங்களில்தான் அவரவர்கள் சமூகத்தினருக்கு அதிக ஓட்டுகள் கிடைக்கும். முஸ்லீம்கள் அதிகமாகவுள்ள அ, ஆ பிரதேசங்களில் அவர்களுக்கு 305 ஸ்தானங்கள் கிடைத்துவிடுகின்றன. ஆ தொகுதியை விட்டுவிட்டாலும் அவர்களுக்கு 282 ஸ்தானங்கள் கிடைத்துவிடுகின்றன. மெஜாரிட்டிக்கு வேண்டியதைவிட அதிக ஸ்தானங்கள் அங்கேயே அவர்களுக்குக் கிடைத்துவிடுகின்றன.

## வங்காளத்தில் மதவாரியாக ஜனத்தொகை.

அ. வங்காள டிவிஷன்கள்.

| | ஜனத்தொகை ஆயிரக்கணக்கில் | வீதாசாரம் | சட்ட சபையில் ஸ்தானம் |
|---|---|---|---|
| **பர்ட்வான் டிவிஷன்** | | | |
| மொத்தம் | 8050 | 100 | 80 |
| ஹிந்துக்கள் | 6607 | 82·1 | |
| முஸ்லீம்கள் | 1082 | 13.4 | |
| இதரர்கள் | 361 | 4·5 | |
| **பிரசிடென்ஸி டிவிஷன்** | | | |
| மொத்தம் | 9461 | 100 | 95 |
| ஹிந்துக்கள் | 4864 | 51.4 | |
| முஸ்லீம்கள் | 4476 | 47·5 | |
| இதரர்கள் | 120 | 1·2 | |

**ராஜஷாஹி டிவிஷன்**

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 10345 | 100 | 103 |
| ஹிந்துக்கள் | 3487 | 33 71 | |
| முஸ்லீம்கள் | 6349 | 61.4 | |
| இதரர்கள் | 508 | 4.9 | |

**டாக்கா டிவிஷன்**

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 12837 | 100 | 128 |
| ஹிந்துக்கள் | 3813 | 29·7 | |
| முஸ்லீம்கள் | 8946 | 69·7 | |
| இதரர்கள் | 78 | ·6 | |

**சிட்டகாங் டிவிஷன்**

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 6000 | 100 | 60 |
| ஹிந்துக்கள் | 1432 | 23·8 | |
| முஸ்லீம்கள் | 4356 | 72·6 | |
| இதரர்கள் | 212 | 3·5 | |

**மொத்த பிரிட்டிஷ் பிரதேசம்**

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 46695 | 100 | 467 |
| ஹிந்துக்கள் | 20203 | 43·3 | |
| முஸ்லீம்கள் | 25211 | 54·0 | |
| இதரர்கள் | 1281 | 2·7 | |

## ஆ. வங்காள ஜில்லாக்கள்.

| ஜில்லாக்கள் | | ஆயிரக்கணக்கில் ஜனத் தொகை | வீதாசாரம் | சட்டசபை ஸ்தானங்கள் |
|---|---|---|---|---|
| **பர்ட்வான் டிவிஷன்** | | | | |
| 1. பர்ட்வான் | மொ | 1439 | 100 | .. 14 |
| | ஹி | 1122 | 78 0 | |
| | மு | 266 | 18·5 | |
| | இ | 50 | 3·5 | |
| 2. பிர்பாம் | மொ | 848 | 100 | .. 8 |
| | ஹி | 577 | 68·1 | |
| | மு | 213 | 25·1 | |
| | இ | 58 | 6·8 | |
| 3. பாங்கூரா | மொ | 1020 | 100 | .. 10 |
| | ஹி | 880 | 86·3 | |
| | மு | 47 | 4·6 | |
| | இ | 93 | 91 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | மிதனபுரி | மொ | 2667 | 100 | |
| | | ஹி | 2352 | 88·2 | |
| | | மு | 181 | 6·8 | .. 27 |
| | | இ | 134 | 5·0 | |
| 5. | ஹூக்ளி | மொ | 1080 | 100 | |
| | | ஹி | 885 | 81·9 | |
| | | மு | 173 | 16·0 | .. 11 |
| | | இ | 22 | 2·1 | |
| 6. | ஹௌரா | மொ | 997 | 100 | |
| | | ஹி | 791 | 79·3 | |
| | | மு | 202 | 20·3 | .. 10 |
| | | இ | 4 | ·4 | |

பிரஸிடென்ஸி டிவிஷன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | 24 பர்கானக்கள் | மொ | 2628 | 100 | |
| | | ஹி | 1687 | 64·2 | |
| | | மு | 910 | 34.6 | . 26 |
| | | இ | 31 | 1·2 | |
| 8. | கல்கத்தா | மொ | 908 | 100 | |
| | | ஹி | 643 | 70·8 | |
| | | மு | 209 | 23·0 | .. 9 |
| | | இ | 56 | 6·2 | |
| 9. | நாடியா | மொ | 1487 | 100 | |
| | | ஹி | 582 | 39·1 | |
| | | மு | 895 | 60·2 | .. 15 |
| | | இ | 10 | ·7 | |
| 10. | மூர்ஷிடாபாட் | மொ | 1262 | 100 | |
| | | ஹி | 569 | 45·1 | |
| | | மு | 676 | 53·6 | .. 13 |
| | | இ | 17 | 1·3 | |
| 11. | ஜெஸ்ஸூர் | மொ | 1722 | 100 | |
| | | ஹி | 656 | 38·2 | |
| | | மு | 1063 | 61·7 | .. 17 |
| | | இ | 2 | ·1 | |
| 12. | குல்னு | மொ | 1453 | 100 | |
| | | ஹி | 727 | 50·0 | |
| | | மு | 728 | 49·8 | .. 14 |
| | | இ | 3 | .2 | |

**ராஜஷாஹி டிவிஷன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 13. ராஜஷாஹி | மொ | 1489 | 100 | |
| | ஹி | 318 | 21·3 | |
| | மு | 1140 | 76·6 | |
| | இ | 31 | 2·1 | .. 15 |
| 14. டினஜ்பூர் | மொ | 1705 | 100 | |
| | ஹி | 752 | 44·1 | |
| | மு | 837 | 49·1 | .. 17 |
| | இ | 116 | 6·8 | |
| 15. ஜல்பெய்குரி | மொ | 936 | 100 | |
| | ஹி | 515 | 55·0 | |
| | மு | 232 | 24 8 | .. 9 |
| | இ | 189 | 20·2 | |
| 16. ரங்க்பூர் | மொ | 2507 | 100 | |
| | ஹி | 791 | 31.5 | |
| | மு | 1706 | 68.1 | .. 25 |
| | இ | 10 | ·4 | |
| 17. போக்ரா | மொ | 1048 | 100 | |
| | ஹி | 174 | 16·6 | |
| | மு | 865 | 82.5 | .. 10 |
| | இ | 9 | .9 | |
| 18. டார்ஜிலிங் | மொ | 283 | 100 | |
| | ஹி | 201 | 71·0 | |
| | மு | 9 | 3·2 | .. 3 |
| | இ | 73 | 25·8 | |
| 19. பாப்னு | மொ | 1389 | 100 | |
| | ஹி | 334 | 24·1 | |
| | மு | 1055 | 75·8 | .. 14 |
| | இ | 1 | .1 | |
| 20. மால்டா | மொ | 985 | 100 | |
| | ஹி | 400 | 40 6 | |
| | மு | 508 | 51 6 | .. 10 |
| | இ | 77 | 7·8 | |

**டாக்கா டிவிஷன்**

| | | | | |
|---|---|---|---|---|
| 21. டக்கா | மொ | 3125 | 100 | |
| | ஹி | 1069 | 34 2 | |
| | மு | 2043 | 65.4 | .. 31 |
| | இ | 13 | .4 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22. | பரீட்பூர் | மொ | 2250 | 100 | .. 23 |
| | | ஹி | 816 | 36.3 | |
| | | மு | 1428 | 63.5 | |
| | | இ | 6 | .3 | |
| 23. | பச்கார் கஞ்ச் | மொ | 2623 | 100 | .. 26 |
| | | ஹி | 754 | 28·7 | |
| | | மு | 1851 | 70·6 | |
| | | இ | 18 | .7 | |
| 24. | மைமன்ஸிங் | மொ | 4838 | 100 | .. 48 |
| | | ஹி | 1174 | 24·3 | |
| | | மு | 3624 | 74·9 | |
| | | இ | 40 | .8 | |
| **சிட்டகாங் டிவிஷன்** | | | | | |
| 25. | திப்பரா | மொ | 2743 | 100 | .. 27 |
| | | ஹி | 708 | 25·8 | |
| | | மு | 2033 | 74·1 | |
| | | இ | 2 | ·1 | |
| 26. | நோக்க ஹாலி | மொ | 1472 | 100 | .. 15 |
| | | ஹி | 329 | 22·3 | |
| | | மு | 1142 | 77 6 | |
| | | இ | 1 | ·1 | |
| 27. | சிட்டகாங் | மொ | 1611 | 100 | 16 |
| | | ஹி | 364 | 22·6 | |
| | | மு | 1172 | 72·8 | |
| | | இ | 74 | 4·6 | |
| 28. | சிட்டகாங் மலைப்பிரதேசங்கள் | மொ | 173 | 100 | 2 |
| | | ஹி | 32 | 18.5 | |
| | | மு | 7 | 4·1 | |
| | | இ | 134 | 77·4 | |
| | | | | மொத்தம் | 465 |

மொ = மொத்தம்
ஹி = ஹிந்துக்கள்
மு = முஸ்லீம்கள்
இ = இதரர்கள்

# ஸி. அநுபந்தம்.

## வங்காள ஜில்லா போர்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்களின் விவரம்

(1927—28)

| ஜில்லாக்களின் பெயர் | மொத்த ஸ்தானங்கள் | ஹிந்து அங்கத்தினர்களின் தொகை | முஸ்லீம் அங்கத்தினர்களின் தொகை |
|---|---|---|---|
| 1. 24 பர்காணுக்கள் | 20 | 16 (64·2) | 4 (34·6) |
| 2. போக்ரா | 15 | 4 (16·6) | 11 (82·5) |
| 3. பக்கார்கஞ்ச் | 20 | 5 (ஒரு கிறிஸ்தவர்) (28 7) | 15 (70·6) |
| 4. மிதுனபுரி | 22 | 21 (88·2) | 1 (6·8) |
| 5. ராஜஷாஹி | 18 | 7 (21·3) | 11 (76·6) |
| 6. ரங்க்பூர் | 18 | 7 (31·5) | 11 (68·1) |
| 7. குல்னு | 16 | 11 (50·0) | 5 (49·8) |
| 8. ஹூக்ளி | 20 | 17 (81·9) | 3 (16·0) |
| 9. டார்ஜிலிங் | 20 | 18 (முஸ்லீம்களல்லாதவர்கள்) (71·0) இதரர்கள் 25·8 | 2 (3·2) |
| 10. மைமன்சிங் | 22 | இல்லை (24 3) | 22 (74·9) |
| 11. டாப்கு | 16 | 3 (24·1) | 13 (75·8) |
| 12. நோக்காஹ்லி | 16 | 6 (22·3) | 10 (77·6) |
| 13. ஜல்பெய்குரி | 16 | 14 (55 0) இதரர்கள் 20·2 | 2 (24 8) |
| 14. டிப்பரா | 19 | 13 (25 8) (சாந்தபுரி டிவிஷனில் எலக்ஷன் உபயோக மற்றுப் போய்விட்டதால் மூவர் நியமனம் செய்யப்பட்டனர்) | 6 (74.1) (இருவர் நியமனம்) |
| 15. நாடியா | 20 | 15 (39·1) | 5 (60·2) |

| | | | |
|---|---|---|---|
| 16. பர்ட்வான் | 16 | 14 (78·0) | 2 (18·5) |
| 17. மூர்ஷிடாபாட் | 15 | 7 (45·1) | 8 (53·6) |
| 18. பரீட்பூர் | 20 | 8 (36 3) | 12 (63·5) |
| 19. மால்டா | 15 | 8 (40·6)<br>(தேர்தல் பிரயோஜனப்படாமற் போய்விட்டதால் எல்லோரும் நியமனம் செய்யப்பட்டார்கள்) | 7 (51·6) |
| 20. ஹௌரா | 12 | 10 (79·3) | 2 (20·3) |
| 21. பீர்பம் | 16 | 15 (68 1) | 1 (?)(25·1) |
| 22. பாங்குரா | 10 | 9 (86·3) | 1 (4·6) |
| 23. ஜெஸ்ஸூர் | 16 | 1 (38·2) | 15 (61·7) |
| 24. டாக்கா | 22 | 16 (34·2) | 6 (65·4) |
| 25. சிட்டகாங் | 20 | இல்லை (22·6) | 20 (72·8) |
| 26. டிஞஜ்பூர் | 18 | 4 (44·1) | 14 (49·1) |

குறிப்பு:-வளைவுகளுக்குள் கொடுக்கப்பட்டிருக்கும் விவரமானது அந்தந்த சமூகத்தினரின் ஜனத்தொகை வீதாசாரம்.

# சர்வகக்ஷி மகாநாடு.

---

## நடவடிக்கைகளின் விவரம்.

28—8—1928——31—8—1928.

# சர்வகக்ஷி மகாநாடு.

## லட்சுமணபுரி, 28-8-28—31-8-28.

---

நடவடிக்கைகளின் சங்கிரகம்.

சர்வகக்ஷி மகாநாட்டின் நான்காவது கூட்டம் லட்சுமணபுரி கெயிஸர்பாக் பாராடாரியில் 1928-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 28-ந்தேதி முதல் 31-ந்தேதி வரையில் நடைபெற்றது. காங்கிரஸ் காரியக்கமிட்டியைத் தவிர அடியிற்கண்ட ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்:

அகில இந்திய லிபரல் பெடரேஷன்
அகில இந்திய முஸ்லீம் லீக்
ஹிந்து மகாசபை
மத்திய கிலாபத் கமிட்டி
மத்திய சீக்கிய லீக்
ஹோம்ரூல் லீக்
அகில இந்தியக் கிறிஸ்தவர்களின் மகாநாடு
ஜமெயதுல் உலமா
அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு
இந்தியா சட்டசபை காங்கிரஸ் கக்ஷி
இந்தியா சட்டசபை தேசியக்கக்ஷி
அயோத்தி பிரிட்டிஷ் இந்தியன் அஸோஸியேஷன்
கல்கத்தா இந்தியன் அஸோஸியேஷன்
மகாராஷ்டிர வியாபாரச் சங்கம்
ஸிந்து நாஷனல் லீக்
தக்ஷிண சபை
சுவாதீன பாரத சங்கம்

ஆஜ்மீர், ஆந்திரா, பீஹார், வங்காளம், பர்மா, மத்திய மாகாணங்கள் (ஹிந்துஸ்தானி), மத்திய மாகாணங்கள் (மராத்தி), டில்லி, கூர்ஜரம், கர்னாடகம், கேரளம், பஞ்சாப், ஸிந்து, ஐக்கிய மாகாணங்கள், உத்கல் இந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

கூட்டத்திற்குவர முடியாமைக்கு வருந்தியும் மகாநாடு செவ்வனே நடைபெற வேண்டுமென்று விரும்பியும் பல பிரதிநிதிகள் செய்திகள் அனுப்பி

யிருந்தனர். இந்த மகாநாடு வெற்றிபெற வேண்டுமென்று விரும்பி இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பலர் தந்திகளும் செய்திகளும் அனுப்பியிருந்தனர்.

ஆகஸ்டு மாதம் 28-ந்தேதி மத்தியானத்திற்குமேல் கான்பரென்ஸ் தலைவரான டாக்டர் அன்ஸாரி தலைமையின்கீழ் நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

மாமுதாபாத் மகாராஜா பிரதிநிதிகளை வரவேற்றார். 1916-ம் வருஷத்திய லட்சுமணபுரி ஒப்பந்தத்தை அவர் ஞாபகப்படுத்தி, இந்த மகாநாட்டின் நடவடிக்கைகளிலும் அதே உணர்ச்சி காட்டிக்கொள்ளப்படுமென்று நம்புவதாகச் சொன்னார். நேரு கமிட்டி யாதாஸ்துக்கு சர்வகக்ஷியினரும் பூரண ஆதரவு அளிப்பார்களென்று தாம் நம்புவதாகவும் சொன்னார்.

அக்கிராசனர் பிறகு பேசினார். நேரு கமிட்டியை அவர் பாராட்டி, இந்த மகத்தான வேலையில் கமிட்டியின் தலைவரும், அதன் அங்கத்தினர்களும் மனப்பூர்வமாக ஈடுபட்டிருந்ததை எடுத்துச்சொன்னார். இந்த யாதாஸ்தின் விசேஷங்களைப்பற்றி அவர் பேசுகையில் சொல்லியதாவது:—

“சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவானது பலதரப்பட்ட பல அவஸ்தைகளை அனுபவித்திருக்கிறதாயினும், பல வழிகளில் வழி மறிக்கப்பட்டிருக்கும் இந்தப் போராட்டத்தின் சரித்திரத்தில் எல்லா ராஜீயக் கக்ஷிகளின் பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்து ஒரு நிர்ணயமான அரசியல் திட்டத்தைத்தயார் செய்ததில்லை. அந்த வேலையை இப்பொழுது இந்தக் கமிட்டிசெய்திருக்கிறது. இதுவே சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய ஒரு முக்கியமான சம்பவம். சென்ற சில வருஷங்களின் துர்ப்பாக்கியமான சரித்திரத்தில் நமது லக்ஷியங்களும் நோக்கங்களும் இன்னவையென்று தெரியாமல் இருந்து வந்த குழப்பத்தை நிவர்த்தி செய்வதற்காக நடந்துவந்த முயற்சி பலனற்றுப் போயிருப்பதையும், இந்த தேசத்திலிருந்தும் வெளியிலிருந்தும் பலர் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய திட்டமொன்றைத் தயாரியுங்களென்று அலக்ஷியபாக அறை கூவியழைத்திருப்பதையும் கவனிக்கையில், இந்த யாதாஸ்தானது மகா முக்கிய ஸ்தானத்தைப் பெறுகிறதென்பதை நான் உங்களுக்குச் சொல்லத்தேவையில்லை. இந்த மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் அங்கத்தினர்களே, இன்று நாம் செய்யும் காரியங்களின் பலாபலனானது நாளையாவது, நாளை மறுதினமாவது அழிந்து போய்விடக்கூடியதில்லை. அது எக்காலும் நிலைத்திருக்கும். எதிர்காலத்தில் நாம் உன்னத ஸ்திதியைப் பெறுவதோ அல்லது பெறாமற்செய்து கொண்டு விடுவதோ நம்முடைய கைகளிலிருக்கிறது. நாம் இன்று செய்யும் காரியங்களால் ஏற்படக்கூடிய பலாபலன்களைப்பற்றி எவருக்கும் தப்பிப்பிராயமும் இருந்துவரவேண்டாம்.”

மேலே பிரசிடெண்டு பேசுகையில் அன்னியர் ஆதிக்கம், உள் நாட்டில் வேற்றுமை ஆகிய இருவிதத்தொல்லைகளால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் 30 கோடி ஜனங்களுடைய கதிமோக்ஷத்திற்கு நேரு திட்டமானது கடைசி வழியாக இருக்கிறதென்றும், இதில் எவ்வித குற்றங் குறைகளும் இருந்தவா வில்லையென்று தாம் சொல்லவில்லையென்றும் சொன்னார்.

முடிவாகப்பின்கண்ட வேண்டுகோளை அவர் செய்துகொண்டார்:-"இந்தியா சந்துஷ்டியுடையதாக இருக்கும்படி செய்யக்கூடிய வாயிலைத்திறந்துவிடும் சாவி இங்கு கூடியிருக்கும் உங்களிடம் இருப்பது போலவே எந்நாளும் இந்தியர் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்படி செய்யும் வாயிலைத் திறந்துவிடும் சாவியும் உங்களிடத்திலிருக்கிறது. இரண்டுக்குள் எந்தச்சாவியை உபயோகிப்பதென்பதை முடிவு செய்யும் மகத்தானபொறுப்பு உங்களுடையதாக இருக்கிறது. இந்தியாவின் எதிர்கால வாழ்வு அதன் மூலமாகவே நிர்ணயமாகவேண்டும். நீங்கள் சரியான வழியைப் பின்பற்றுவீர்களென்று நம்புகிறேன்" என்று சொன்னார்.

பிறகு கமிட்டியின் யாதாஸ்தை ஆஜர் செய்யும்படி பண்டித மோதிலால் ருவை தலைவர் கேட்டுக்கொண்டார். அவர் கமிட்டியின் யாதாஸ்தை மகாநாட்டின்முன் ஆஜர் செய்தார்.

## பாராட்டுதல்.

லாலா லஜபதிராய் பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபணை செய்தார்:—

"இந்தியாவின் அரசியல் அமைப்பின் நியமங்களை நிர்ணயம் செய்வதற்காக இந்த மகாநாடு நியமனம் செய்த கமிட்டியின் தலைவரான பண்டித மோதிலால் நேருவும், அவருடைய சகாக்களான ஸர் அலி இமாம், ஸர் டேஜ்பகதூர் ஸாப்ரு, ஸ்ரீமான் ஆனே, ஸர்தார் மங்கள் சிங், ஜனாப் ஷ்வாயிப் குரேஷி, ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ், ஸ்ரீமான் ஜி. பிரதானி இவர்களும் செய்திருக்கும் வேலையை இந்த மகாநாடு மிகவும் பாராட்டுவதைப் பதிவு செய்கிறது."

மௌலானா அபுல் கலாம் அஸாத் இதை ஆமோதித்தார். தீர்மானத்தை ஆதரித்து பண்டித மதன்மோஹன மாளவியா, மௌலானா ஷவ்கத் அலி, டாக்டர் அன்னிபெஸண்டு, ஸ்ரீமான் ஜே. எம். ஸென்குப்தா, மௌல்வி முகம்மது யாகூப், ஸ்ரீமதி ஸரோஜினி தேவி, ஸ்ரீமான் வி. விஜயராகவாச்சாரியார், கியானிஷர் சிங், ராஜா ஸர் ரம்பால் சிங், மௌலானா அகம்மது சையது, ஸ்ரீமான் ஸி. ஒய். சிந்தாமணி, ஜனாப் எம். சாக்ளா, சௌத்ரி பீஹாரிலால், ஜனாப் டுபெயில் அகமது இவர்கள் பேசினார்கள்.

பிரதிநிதிகளில் ஒருவராகிய மௌலானு ஹஸரத்மோஹானி தீர்மானத்தை எதிர்த்தார். ஒருவர் தவிர மற்றவர்கள் தீர்மானத்திற்குச் சாதகமாக ஓட்டுக் கொடுத்தனர்.

கமிட்டியின் சார்பாக பண்டித மோதிலால் நேருவும், ஸர் அலி இமாமும் மகாநாட்டுக்கு வந்தனம் செலுத்தினுர்கள்.

## குடியேற்ற நாட்டு அந்தஸ்து.

இரண்டாவது தீர்மானத்தை பண்டித மதன்மோஹன மாளவியா பிரேரணே செய்தார். அது வருமாறு:—

"பூரண சுதந்திரத்தை லட்சியமாகக் கொண்டுள்ள ராஜீயக் கட்சிகள் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவதில் எவ்வித நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தாமல்,

(1) இந்தியாவில் ஏற்படுத்தப்பெறும் ஆட்சி முறையானது ஜவாப்தாரியானதாக இருக்க வேண்டுமென்றும், அதாவது, மகா ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டதும், பூரணமானதாகவும் எவ்வித வரையறையில்லாததாகவுமுள்ள அதிகாரங்களுடையதுமான சட்டசபைக்கு நிர்வாகிகள் ஜவாப்தாரியாக இருக்கக்கூடிய ஆட்சி முறையாக அது இருக்கவேண்டுமென்றும்;

(2) அத்தகைய ஆட்சி முறையானது சுய ஆட்சிபெற்ற குடியேற்ற நாடுகளில் இருந்து வருவதுபோன்ற ஆட்சி முறைக்கு எவ்விதத்திலும் குறைந்ததாக இருக்கக் கூடாதென்றும்;

இந்த மகாநாடு அறிவிக்கிறது"

ஸர் ஸி. பி. ராமசுவாமி அய்யர் இத்தீர்மானத்தை ஆமோதித்தார். ஸர் டேஜ்பகதூர் ஸாப்ரு இதை ஆதரித்தார். இன்று மகாநாடு கலைகையில் இந்தத் தீர்மான சம்பந்தமான விவாதம் முடிவு பெறவில்லை.

## இரண்டாம் நாள்—29—8—1928.

---

குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப்பற்றி பண்டித மதன்மோஹன மாளவியர் முதல் நாள் பிரேரணை செய்த தீர்மானத்தின்மேல் விவாதம் நடந்தது.

பண்டித ஜவஹர்லால் நேரு குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஒப்புக்கொள்ளு வதை ஆக்ஷேபித்து, பூரண சுவாதீனமே லக்ஷியமாக இருக்க வேண்டு மென்று சொன்னார். பூரண சுவாதீனத்தை ஆதரிப்போர் சார்பாக அவர் அடியிற்கண்ட ஸ்டேட்டுமெண்டைப் படித்தார்:—

"இந்த அறிக்கையில் கையொப்பமிட்டிருக்கும் நாங்கள் இந்தியா வின் அரசியலானது பூரண சுவாதீனத்தை அஸ்திவாரமாகக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறோம். சர்வ கக்ஷி மகாநாட்டின் முன் கொண்டுவரப்பட்டிருக்கும் தீர்மானமா னது அதை ஆதரிப்போர்கள் குடியேற்ற நாட்டு ஆட்சி முறை யென அழைக்கப்படும் முறையை அனுசரித்த திட்டத்தை ஒப்புக் கொள்ளும்படி அவர்களைக் கட்டுப்படுத்தி விடுகிறது. இதை ஒப்புக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கவில்லை. ஆகையால் இந்தத் தீர் மானத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளவாவது, ஆதரிக்கவாவது முடி யாது. இந்தத் தீர்மானத்தின் பூர்வ பீடிகையானது பூரண சுவா தீனத்திற்காக வேலை செய்து வருவதற்கு எங்களுக்கு சுதந்திரம் கொடுத்திருப்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். இருந்தாலும், இந்தப் பூர்வபீடிகையானது தீர்மானத்தின் இரண்டாவது பாகத்தை ஒப்புக்கொள்ளுவதால் ஏற்படக்கூடிய நிர்ப்பந்தத்தைக் குறைத்துவிட வில்லை.

ஆயினும், இந்த மகாநாட்டின் வேலையைத் தடைப்படுத்தவாவது, முட்டுக்கட்டை போடவாவது நாங்கள் விரும்பவில்லை. ஆகையால் எங்களுடைய தீர்மானமான அபிப்பிராயத்தைத் தெரிவித்து, இந்தத் தீர்மானம் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்குக் கட்டுப்படுத் தும் அளவு அதில் எங்களுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத தைத் தெளிவுப்படுத்திவிட விரும்புகிறோம். இந்தத் தீர்மானத்திற் குத் திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவருவதன் மூலமாகவாவது, அல்லது இதன்மேல் ஓட்டு செய்வதன் மூலமாகவாவது இது சம் பந்தமான விவாதத்தில் நாங்கள் எவ்விதத்திலும் சம்பந்தப்படப் போவதில்லை. பூரண சுவாதீனத்திற்காக எங்களுக்கு கிரமமானதாக

வு்‌, அவசியமானதாகவும்‌ தோன்றுகிற முயற்சிகளை நாங்கள்‌ செய்து வர உத்தேசித்திருக்கிறோம்‌''

மௌலானா ஹிபாயதுல்லா, மௌல்வி முகம்மது ஷாபி, ஸ்ரீமான்‌ சுபாஷ்‌ சந்திர போஸ்‌, பண்டித ஹிருதயநாத குன்ஸ்ரு, டாக்டர்‌ கிச்சுலு, டாக்டர்‌ முகமமது ஆலம்‌, ஸ்ரீமான்‌ டி. விசுவனாதன்‌, ஸர்தார்‌ ஸார்தூல்சிங்‌ இவர்களும்‌ விவாதத்தில்‌ கலந்து கொண்டார்கள்‌.

தீர்மானத்தின்‌ இரண்டாவது பாகத்தை விட்டுவிட வேண்டுமென்று ஒரு திருத்தத்தை மௌலானா ஹஸரத்‌ மோஹானி பிரேரணை செய்தார்‌. ஒருவரும்‌ அதை ஆமோதிக்காததால்‌ அது அடிபட்டுப்‌ போயிற்று.

பண்டித மாளவியா பதிலளித்த பிறகு தீர்மானம்‌ ஓட்டுக்கு விடப்பட்டு, ஒருவருடைய எதிர்ப்புமின்றி கரகோஷத்தினிடையே நிறைவேறியது.

மகாநாடு அடுத்த நாள்‌ வரை ஒத்தி வைக்கப்பட்டது.

---

மூன்றும்நாள்‌—30—8—28.

---

## சுதேச சமஸ்தானங்கள்‌

மகாநாட்டின்‌ மூன்றாவது தீர்மானத்தை ஸ்ரீமான்‌ மணிலால்‌ கொத்தாரி பிரேரணை செய்தார்‌. அது இந்திய சமஸ்தானங்களைப்‌ பற்றியது. அது வருமாறு:—

> 3. இந்திய சமஸ்தானங்கள்‌ சம்பந்தமாக கமிட்டி செய்திருக்கும்‌ சிபார்சுகளை இந்த மகாநாடு ஒப்புக்‌ கொள்ளுகிறது.

இத்தீர்மானத்தை ஸ்ரீமான்‌ பாத்திக்‌ ஆமோதித்தார்‌. ஸர்‌ டேஜ்பகதூர்‌ ஸாப்ரு, மௌலானா ஸாபர்அலிகான்‌, பண்டித மதன்மோஹன மாளவியா இவர்களும்‌ தீர்மானத்தின்மேல்‌ பேசினார்கள்‌. தீர்மானம்‌ ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

## ஸிந்து விஷயம்‌.

இந்த சமயத்தில்‌ ஸிந்து விஷயமாக ராஜி ஏற்பட்டு விட்டதென்று அக்கிராசனர்‌ அறிவித்தார்‌. பிரதிநிதிகள்‌ மிகுந்த குதூகலத்துடன்‌ கரகோஷம்‌ செய்தனர்‌. அக்கிராசனர்‌ இந்த ராஜி ஏற்பாட்டைத்‌ தீர்மானமூலமாகசபை முன்‌ பிரேரணை செய்தார்‌. அது வருமாறு:—

4. நேரு கமிட்டி யாதாஸ்தின்படி இந்தியாவில் ஆட்சி முறையை ஏற்படுத்துகையில் ஸிந்து பிரதேசத்தை பம்பாயிலிருந்து பிரித்து அதை ஒரு தனி மாகாணமாக அமைத்துவிட வேண்டும்.

(1) ஆனால் விசாரணைக்குப்பிறகு

(அ) ஸிந்து பிரதேசமானது பணவிஷயத்தில் வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டிக் கொள்ளக்கூடியதாக இருக்கிறதென்று கண்டு கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) பணவிஷயத்தில் வரவுக்கும் செலவுக்கும் அது சரிக்கட்டிக் கொள்ளக் கூடிய நிலைமையிலில்லாம லிருந்தால், இந்தப் பிரிவினை திட்டத்தையும் இதன் மூலமாகப் பண விஷயத்திலும் நிர்வாக விஷயத்திலும் ஏற்படக்கூடிய நிலைமையையும் ஜனங்களுக்குத் தெரிவிப்பதன்மேல் அந்தப் பிரதேச வாசிகளில் பெரும்பாலோர் இந்தத் திட்டத்தை ஆதரித்து, புதிய ஏற்பாட்டினால் ஏற்படக்கூடிய பணப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

(2) ஸிந்து பிரதேசத்தில் ஏற்படுத்தும் ஆட்சி முறையானது இந்தத் திட்டத்தின்படி இதர மாகாணங்களில் ஏற்படுத்தப்படும் ஆட்சி முறையைப் போன்றதாகவே இருக்கவேண்டும்.

(3) முஸ்லீம்கள் மைனாரிட்டியாக இருந்து வரும் பிரதேசங்களில் நேருகமிட்டி யாதாஸ்தின்படி மாகாண, மத்திய சட்டசபைகளில் பிரதிநிதித்துவ விஷயத்தில் அவர்களுக்கு எவ்வித உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அதேவிதமான உரிமைகள் ஸிந்து பிரதேசத்திலிருந்து வரும் முஸ்லீம்களல்லாத மைனாரிட்டிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானமானது ஏக மனதாக கரகோஷத்துடன் அங்கீகரிக்கப்பட்டது.

## மாகாணங்களின் மறு பிரிவினை.

ஐந்தாவது தீர்மானமானது மாகாணங்களின் மறு பிரிவினை சம்பந்தமானது. பண்டித துவாரகநாதமிச்ரா இதைப் பிரேரணை செய்தார். மௌல்வி அப்தல் மஜீது இதை ஆமோதித்தார். பல திருத்தப் பிரேரணைகள் கொண்டு வரப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. முடிவாக எல்லோரும் ஒப்புக் கொண்ட சில திருத்தப் பிரேரணைகளைப் புகவிட்ட தீர்மானமானது மகா நாட்டின் முன் கொண்டுவரப்பட்டது. அது வருமாறு:—

5. மாகாணங்களின் மறு பிரிவினை, அவைகளின் அந்தஸ்து இவைகள் சம்பந்தமாக நேரு கமிட்டி யாதாஸ்தில் அடங்கியுள்ள சிபார்சுகளை இந்த மகாநாடு ஆலோசித்து, எல்லோரும் ஒப்புக்கொள்ளும் திட்டத்தின் ஒரு அங்கமாக அதை அங்கீகரிக்கிறது.

நகல் திட்டத்தின் 72-வது பிரிவில் கண்ட கமிஷனானது அந்தச் சிபார்சுகளின் நியமங்களை அனுசரித்தும், அது யுக்தமானதென்று நினைத்து நியமனம் செய்யும் கமிட்டி அல்லது கமிட்டிகளுடைய உதவியைக் கொண்டும்—

(அ) கர்னாடகத்தையும், ஆந்திர தேசத்தையும் தனி மாகாணங்களாக அமைப்பதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும்;

(ஆ) பல மாகாணங்களிலும் ஒரியா பாஷை வழங்கிவரும் பிரதேசத்தினர் அந்தப் பிரதேசத்தைப் பிரித்து தனி மாகாணமாக அமைத்து விடுவதால் ஏற்படக்கூடிய பணப் பொறுப்புகளைத் தாங்கிக்கொள்ளக் கூடியவர்களாகவோ, அல்லது தாங்கிக்கொள்ள இஷ்டமுடையவர்களாகவோ இருந்தால், அந்தப் பிரதேசங்களை ஒன்றுசேர்த்து, தனிமாகாணமாக அவைகளை அமைத்து விடுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

(இ) தனி மாகாணங்களாகப் பிரித்துவிட விரும்பும் மத்திய மாகாண ஹிந்துஸ்தானி பிரதேசம், கேரள பிரதேசம், இதர பிரதேசங்கள் இவைகளைப்பற்றி ரிபோர்ட்டு செய்யவேண்டும்;

(ஈ) இந்தக் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கும் நியமங்களை அனுசரித்து அஸ்ஸாம்—வங்காளம், பீஹார்—ஒரிஸா, மத்திய மாகாண ஹிந்துஸ்தானி பிரதேசம், கேரளம், கர்னாடகம் இவைகளின் எல்லைகளை மறுபடியும் நிர்த்தாரணம் செய்யவேண்டும்,

அக்கிராசனர் இத்தீர்மானத்தைப் பிரேரணை செய்தார். இது ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பட்டது.

நேரு கமிட்டி யாதாஸ்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தின் நியமங்களை ஒப்புக் கொள்ளுவதாகக் குறிப்பிடும் தீர்மானத்தை லாலா லஜபதிராய் பிரேரணை செய்தார். இதை ஸ்ரீமான் ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார் ஆமோதித்தார். ஸ்ரீமான் விபினசந்திர பாலர் இதை ஆதரித்தார். அரசியல் திட்டத்தைத் திருத்தும் விஷயத்தைப் பற்றி ஜனாப் சாக்ளா ஒரு திருத்தத்தைப் பிரேரணை

செய்தார். அவருடைய திருத்தமானது மறுபடியும் திருத்தப்பட்டு 31-ம் தேதி ஒரு தனித் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. அன்றைய நடவடிக்கைகளில் இதைக் காணலாம்.

மகாநாடு 31-ம் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

நான்காம் நாள்—31-8-28.

---

லாலாலஜபதியின் தீர்மானத்தின் மேல் விவாதம் நடந்தது. நேரு கமிட்டி ரிபோர்ட்டின் நியமங்களைப் பொதுவாக ஒப்புக்கொள்ளுவதைக் காட்டிலும், அதைப் பிரிவு பிரிவாக யோசனைக்கு எடுத்துக்கொள்ளலா மென்று ஸ்ரீமான் வி. விஜயராகவாச்சாரியார் பிரேரணை செய்தார். ஸ்ரீமான் விசுவநாதம் இதை ஆமோதித்தார். ஸ்ரீமான் விபின சந்திரபாலர் இதை எதிர்த்துப் பேசினர்.

பஞ்சாப் விஷயத்தில் பஞ்சாப் பிரதிநிதிகள் ஒரு ராஜி ஏற்பாட்டைச் செய்துகொண்டு விட்டதாக இந்த சந்தர்ப்பத்தில் சமாசாரம் கிடைத்ததால் லாலா லஜபதிராயின் தீர்மானத்தின் மேல் விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. அவருடைய தீர்மானம் திருத்தப்பட்டு பிறகு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பஞ்சாப் ராஜியைப்பற்றி பிரசிடெண்டு அறிவித்த விவரத்தை நீண்ட நேர கரகோஷத்துடன் மகாநாட்டினர் வரவேற்றனர். இந்த ராஜி ஏற்பாடானது டாக்டர் எஸ். டி. கிச்சுலு, மௌலானா ஸாபர் அலிகான், டாக்டர் மூகம்மது ஆலம், ஜனாப் அப்தல் ரஹிமான் காஸி, ஜனாப் எம். தாவுத் கஸ்நாவி' ஜனாப் அஸ்பல் ஹக், ஜனாப் ஸிராஜ்டின் பிராச்சா, ஜனாப் என். அப்தல்காதர், ஜனாப் எஸ். ஹுஸாமுட்டீன், ஸர்தார் ஸார்தூல் சிங் கவீஷர், லாலாலஜபதி ராய், லாலா துனிசந்த், பண்டித ஹரதத் தசர்மா, டாக்டர் சத்யபால், லாலா கிரிதார் லால் இவர்களால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

ஸ்ரீமான் டாரா சிங்கும், ஸ்ரீமான் கியானிஷர் சிங்கும் இந்த உடம்படிக் கையுடன் ஒரு குறிப்பைச் சேர்த்திருந்தனர்.

அக்கிராசனர் இந்த உடம்படிக்கையையும், இந்தக்குறிப்பையும் சபை முன் ஆஜர் செய்தார். உடம்படிக்கை, குறிப்பு இவைகளின் விவரமாவது:—

6. 21வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுக்கும்பக்ஷத்தில் பஞ்சாப் முஸ்லீம்கள் நேரு கமிட்டி யாதாஸ்தில்

சிபார்சு செய்யப்பட்டிருக்கும் திட்டம் அனுஷ்டானத்திற்கு வருகையில் பஞ்சாபில் எந்த சமூகத்தினருக்கும் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்காமல் கலப்புத் தொகுதிகளை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லியிருப்பதுள்பட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ சம்பந்தமாகக் கமிட்டி செய்திருக்கும் சிபார்சுகளை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

ஆனால் புதிதாகச் சிபார்சு செய்திருக்கும் இந்த திட்டத்தை 10 வருடகாலம் அனுஷ்டித்தபிறகு எந்த சமூகத்தினரேனும் வேண்டிக் கொண்டால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயம் புனராலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

ஸ்ரீமான்களான டாராசிங்கும், கியானிஷர் சிங்கும் தங்களுடைய கீழ்க்கண்ட அறிக்கையைப் படித்தார்கள்:—

1. கீழே கையொப்பமிட்டிருக்கும் சீக்கியர்களாகிய நாங்கள் பஞ்சாபில் வீதாசாரப் பிரதிநிதித்துவ மூலமான தேர்தல் முறையை ஏற்படுத்துவதாயின் நேரு கமிட்டி யாதாஸ்தை ஆதரிக்க ஒப்புக் கொள்ளுகிறோம்.

2. 21-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுப்பதே தகுந்த ஜனநாயக முறையென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். ஆனால் இப்பொழுது இருந்துவரும் நிலைமையில் அது சாத்தியமில்லையென்றும், அது அவசரப்பட்ட செய்கையாகுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

3. இருந்தாலும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுக்கும் முறையை உடனே அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதென்று தீர்மானம் செய்வதாக இருந்தால், நாங்கள் மேலே தெரிவித்துள்ள அபிப்பிராயத்தைக் கவனிக்க வேண்டும்.

ஆனால் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுப்பது தகுந்த ஜனநாயக முறையானதால், அதை ஏற்படுத்துவதாயின் நாங்கள் அதை ஒரு குறையாகக் கருதப் போவதில்லையென்பதை நாங்கள் தெளிவுப்படுத்தி விட விரும்புகிறோம். அவ்விதம் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் கொடுப்பதால், எந்த வழியிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தர்மத்தை, நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒப்புக்கொள்ளுவதாகாதென்று நாங்கள் நினைக்கிறோம். இதற்கு நாங்கள் எதிரிடையாக இருக்கிறோம்.

பஞ்சாப் உடம்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் சம்பந்தமாக மத்திய கிலாபத்கமிட்டி தனது ஆதி தீர்மானத்தை இதுவரையில் மாற்றிக்கொள்ள வில்லையென்று மௌலானு ஷவுகத் அலி தெரிவித்துக்கொண்டார். அந்தத் தீர்மானம் டில்லி முஸ்லீம் பிரேரணைகளை அனுசரித்திருக்கிற தென்றும், கமிட்டியார் அதே அபிப்பிராய முடையவர்களாகவே இப்பொழுதும் இருந்து வருகிறார்களென்றும் அவர் தெரிவித்துக்கொண்டார். டாக்டர் முகம்மது ஆலமும், ஜனுப் அப்தல் காதரும் மௌலானு ஷவ்கத் அலி தெரிவித்துக்கொண்டதை ஆதரிக்காததோடு, மத்திய கிலாபத் கமிட்டி இவ்வித அபிப்பிராயத்தை தெரிவித்துக்கொள்ள மௌலானு ஷவ்கத் அலிக்கு அதிகாரம் கொடுக்கவில்லை யென்றும் தெரிவித்துக் கொண்டார்கள். பஞ்சாப் விஷயத்தை பஞ்சாப் பிரதிநிதிகளே முடிவுசெய்து கொள்ளும்படி கமிட்டி விட்டிருப்பதாகவும், பஞ்சாப் பிரதிநிதிகள் ஒரு முடிவுக்கு வந்திருப்பதால் அவர்களுடைய அபிப்பிராயமே கிலாபத் கமிட்டியின் முடிவெனக்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்துக்கொண்டார்கள்.

பிறகு மகாநாடு பஞ்சாப் உடம்படிக்கையை ஒப்புக்கொள்ளுவதாகத் தெரிவித்து அதைக் கரகோஷத்துடன் ஏற்றுக்கொண்டது.

டாக்டர் அன்னிபெஸண்டும், ஸ்ரீமதி ஸரோஜினி தேவியும் பிறகு பேசினார்கள். பழைய தகராறு இவ்விதம் சந்துஷ்டிகரமாகத் தீர்ந்துவிட்டதற்கு அவர்கள் எல்லாக் கட்சிகளையும் தேசத்தையும் பாராட்டினர். இந்திய ஒற்றுமையும் இந்திய சுதந்திரமும் வகுப்பு உணர்ச்சியையும் ஜாதி உணர்ச்சியையும் வென்று விட்டனவென்று டாக்டர் பெஸண்டு சொன்னர்.

வங்காள சம்பந்தமாக யாதாஸ்தில் அடங்கியிருந்த சிபார்சுகளை வங்காள முஸ்லீம்கள், ஹிந்துக்கள் இவர்கள் சார்பாக முறையே ஜனுப் அக்ரம் கானும், ஸ்ரீமான் ஜே. எம். ஸென்குப்தாவும் ஒப்புக்கொண்டார்கள்.

## அரசியல் சட்டத்திருத்தம்.

அரசியல் திட்டத்திருத்த விஷயமாக ஜனுப் சாக்ளா கொண்டுவந்த பிரேரணையின் மேல் சிறிது விவாதம் நடந்தது. கடைசியாக அடியிற்கண்ட தீர்மானம் செய்யப்பட்டது:—

7. நேருகமிட்டியானது அவர்களுடைய சிபார்சின் 87-வது பிரிவைப் புனராலோசனை செய்து, அரசியல் சட்டத்திருத்த விஷயத்தில் மத்திய சட்டசபையில் எல்லா மைனரிட்டி சமூகங்களின் உரிமைகளையும் பாத்தியங்களையும் பாதுகாக்கத்தக்க வழியில் அதைத் திருத்துவதற்கு இந்த மகாநாடு அதிகாரம் கொடுக்கிறது.

## சமஸ்தானங்களின் பிரஜை.

பிறகு அடியிற்கண்ட தீர்மானத்தை மகாநாடு ஏகோபித்து நிறைவேற்றியது:—

சமராஜ்ய கவர்ன்மெண்டின் எந்தப் பிரதேசத்திலும் தொழில் செய்து வருகிறவராகவோ, அல்லது வசித்து வருகிறவராகவோ இருந்து வரும் சுதேச சமஸ்தானங்களின் ஒவ்வொரு பிரஜையும் சமராஜ்ய கவர்ன்மெண்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் இருந்துவரும் உரிமைகளுடையவர்களாவார்.

## சமராஜ்ய கவர்ன்மெண்டின் பாஷை.

மௌல்வி ஷாபிதாவுதி இந்திய சமராஜ்ய கவர்ன்மெண்டின் பாஷையானது ஹிந்திலிபியிலாவது, உருதுலிபியிலாவது எழுதப்படும் ஹிந்துஸ்தானி பாஷையாக இருக்கவேண்டுமென்று பிரேரணை செய்தார். இது சம்பந்தமாக சிறிது விவாதம் நடந்து பல திருத்தங்கள் யோசனை சொல்லப்பட்டன. முடிவாக அடியிற்கண்ட தீர்மானம் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது.—

9. சர்வகக்ஷி மகாநாட்டுக் கமிட்டியானது அடியிற்கண்ட விஷயங்களைப் பற்றி ஆலோசித்து ரிபோர்ட்டு செய்யவேண்டும்:—

(1) மைனாரிட்டியாக விருந்துவரும் சமூகங்களுக்கு பள்ளிக்கூடங்களில் படிக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கு அவர்களுடைய சொந்த பாஷை மூலமாகவும், அவர்களிடையே அனுஷ்டானத்திலிருந்து வரும் லிபியின் மூலமாகவும் போதனை செய்விப்பதற்குள்ள பாத்தியதைக்குப் பாதுகாப்பு ஏற்படுத்துவது;

(2) ஆங்கில பாஷை அனுமதிக்கப்படுவதுடன், ஹிந்தி அல்லது உருதுலிபியை உபயோகிக்கும் உரிமையுடன் ஹிந்துஸ்தானி பாஷை சமராஜ்ய கவர்ன்மெண்டின் பாஷையாக உபயோகிக்கப்பட வேண்டிய விஷயம் ;

(3) ஹிந்துஸ்தானியையாவது, ஆங்கிலத்தையாவது உபயோகித்துக் கொள்ளும் உரிமையுடன் ஒவ்வொரு மாகாணமும் அதனுடைய தாய்ப்பாஷையை உத்தியோக பாஷையாக உபயோகித்துக் கொள்ளும் விஷயம்.

## சொத்துரிமைகள்.

பண்டித மாளவியா பிறகு அடியிற்கண்ட பிரிவை ஜீவாதாரமான உரிமைகள் சம்பந்தமான பிரிவுகளுடன் சேர்க்கவேண்டுமென்று பிரேரணைசெய்தார்:

10. சமராஜ்ய கவர்ன்மெண்டு ஏற்படும் காலத்தில் சட்ட பூர்வமாக ஸ்வீகரிக்கப்பட்டதும் அனுபவிக்கப்பட்டு வருவதுமான எல்லா சொந்த அல்லது தனிப்பட்டச் சொத்துகளுக்கும் எவ்வித அபாயமும் விளையாதபடி இதன் மூலமாகப் பாதுகாக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானம் எதிர்க்கப்பட்டது. சிறிது விவாதத்திற்குப் பிறகு இது பெரும்பாலோரால் அங்கீகரிக்கப்பட்டது.

## ஸ்திரமான குடிபாத்தியம்.

மகாநாட்டில் மெஜாரிட்டியாரால் அடியிற்கண்ட தீர்மானமும் செய்யப்பட்டது:—

11. ஜீவாதாரமான உரிமைகள் சம்பந்தமான 17-வது பிரிவில் "வேலையற்றவர்கள்" என்பதற்குப் பிறகு "நியாயமான குத்தகையும், விவசாயக் குடிகளுக்கு ஸ்திரமான குடி பாத்தியமும் ஏற்படும்படி பார்லிமெண்டு சட்ட மியற்றவேண்டும்" என்பதைச் சேர்க்கவேண்டும்.

## பெலுஜிஸ்தானம்.

அடியிற்கண்ட தீர்மானமும் ஏகமனதுடன் நிறைவேறியது:—

12. ரிபோர்ட்டின் 124 வது பாராவில் 7 வது சிபார்சில் பெலுஜிஸ்தானத்தையும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திற்குப் பிறகு சேர்த்துக் கொள்ளவேண்டும்.

## கமிட்டியின் மறு நியமனம்.

நேருகமிட்டி யாதாஸ்தின் தர்மங்களை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று லாலா லஜபதிராய் கொண்டு வந்திருந்த தீர்மானத்தின்மேல் பிறகு விவாதம் நடந்தது. இந்தத் தீர்மானத்தில் புதிதாகச் சில விஷயங்கள் புகுத்தப்பட்டன. இதற்குக் கொண்டுவரப்பட்ட பல திருத்தப்பிரேரணைகள் தோற்றுப் போயின. முடிவாக அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறியது. ஒருவரே எதிரிடையாக ஓட்டுக் கொடுத்தார்.

13. இந்த மகாநாடானது நேரு கமிட்டி அனுப்பிய யாதாஸ்தை ஆலோசனைசெய்து, அது சிபார்சு செய்திருக்கும் அரசியல் முறையின் தர்மங்களை ஒப்புக்கொள்ளுகிறது.

இன்னும் சிலரைச் சேர்த்துக்கொள்ளும் அதிகாரத்துடன் இந்த மகாநாடானது அந்தக் கமிட்டியை மறுபடியும் நியமனம்செய்து,

மசோதாவைத் தயாரிக்கக்கூடியவராயுள்ளவரைக்கொண்டு அது செய்திருக்கும் சிபார்சுகளை அவசியமான இதர உப பிரிவுகளுடன் ஒரு மசோதாவாகத் தயார் செய்யும்படி கேட்டுக்கொள்ள கமிட்டிக்கு இந்த மகாநாடு அதிகாரம் கொடுக்கிறது. இந்த மசோதாவானது எல்லா ராஜீயா, வியாபார, தொழிலாளர் ஸ்தாபனங்கள், இந்த மகாநாட்டின் முன் ஆஜராகியிருக்கும் ஸ்தாபனங்கள், இரண்டு வருஷ காலத்திற்கு அதிகமாக இருந்துவரும் இதர ஸ்தாபனங்கள் இவைகளின் பிரதிநிதிகள் அடங்கிய மகாசபையின்முன் ஆஜர்ப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த மகாநாட்டில் ஏற்பட்டுள்ள உடம்படிக்கைகளுக்கும், செய்யப்பட்டுள்ள தீர்மானங்களுக்கும் விரோதமான எந்த ஷரத்துக்களையும் சேர்க்கவோ அல்லது இப்பொழுது இருந்துவரும் ஷரத்துக்களை மாற்றவோ கூடாது.

இந்தக் கமிட்டியானது அதனால் குறிப்பிடப்படும் தேதியில் மேற்குறித்த மகாசபையைக் கூட்டுவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதம் மசோதாவைத் தயார்செய்கையில் யாதாஸ்தின் 1, 2 ஷெட்யூல்களைப் பரிசீலனை செய்து அதில் கமிட்டிக்கு யுக்தமாகத் தோன்றுகிற மாறுதல்களைச் செய்ய இந்த மகாநாடு அதிகாரம் கொடுக்கிறது.

இந்தத் தீர்மான சம்பந்தமாக ஸ்ரீமான்களான டாராசிங்கும் கியானி ஷர்சிங்கும் பின்வரும் விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்:—

"பஞ்சாப் ராஜியின் ஒருஅங்கமாக நாங்கள் தெரிவித்துக்கொண்டிருப்பதற்குட்பட்டு இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம்"

அகில இந்தியக் கிறிஸ்தவர்களின் சார்பாக ஸ்ரீமான் இ. அஹமதுஷா பின் வரும் விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டார்:—

"அகில இந்தியகிறிஸ்தவர்களின் மகாநாடானது தனது கட்சியை அழுத்தமாக சர்வ கட்சி மகாநாட்டின் முன் தெரிவித்துக்கொள்ளுவதுடன், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மைனாரிட்டியாக இருந்து வரும் (ஹிந்து) சமூகத்தினருக்குத் தனிப்பிரதிநிதித்வம் வேண்டுமென்பதை ஒப்புக்கொண்டிருப்பதாலும், எல்லா மாகாணங்களிலும் அதிக சக்தியுள்ள மைனாரிட்டி சமூகமாகிய முஸ்லீம்களுக்குத் தனிப்பிரதிநிதித்வம் வேண்டுமென்பதை ஒப்புக்